# என் கனா



வைகறை வெளியீடு

மேலாண்மை பொன்னுச்சாமி

# என் கனா

ஆசிரியர்

**மேலாண்மை பொன்னுச்சாமி**

வைகறைப் பதிப்பகம்
பெஸ்கி கல்லூரி
திண்டுக்கல் - 624 001

வைகறை வெளியீடு - 155

| | |
|---|---|
| புத்தகத்தின் பெயர் | : **என் கனா** |
| முதற்பதிப்பு | : அக்டோபர் 1999 |
| ஆசிரியர்கள் | : மேலாண்மை பொன்னுசாமி |
| மொழி | : தமிழ் |
| பொருள் | : சிறுகதை |
| உரிமை | : வைகறைப் பதிப்பகம் திண்டுக்கல் |
| பைண்டிங் | : ஆர்ட்போர்டு |
| தாள் | : 10.6 kg வெள்ளைத் தாள் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| பக்கங்கள் | : 160 |

**வெளியீட்டாளர் : சிரில், சே.ச.**

**விலை ரூ. 30.00**

அச்சிட்டோர் : பயனியர் அச்சகம், சிவகாசி.

# வைகறை வானத்திலிருந்து

என் கனா. இவர் காண்பது நல்ல கனாவா! கெட்ட கனாவா! நல்ல கனா காண்பவர்கள்தானே சமூக செயல்பாட்டாளர்களாக விளங்க முடியும்.

நல்ல கனாவை நம்பிக்கையோடு எதிர்நோக்கி வாழ்பவர்தான் திரு. மேலாண்மை பொன்னுச்சாமி அவர்கள். இவர் பல சிறு கதைகளுக்குச் சொந்தக்காரார். சிந்திக்கின்ற வாசகர்களுக்கு உறவுக் காரரும் கூட. தனக்கென்று ஒரு கணிசமான வாசக வலைப் பின்னல்களை உருவாக்கிக் கொண்டவர். இவரது கதை வருகைக்காக காத்திருப்பவர்கள் ஏராளம்.

இவரது கதைகளில் சமூக எதார்த்தம் எரிமலைக் கொழும்பாக வெடித்து சிதறும். எளிய நடை, நளினமான எழுத்து ஓட்டம், மக்கள் மொழியைக் கையாளும் திறன், வேரோட்டமான கருத்தியல் சித்தாந் தங்கள், அடிமைப் பாரம்பரிய மதிப்பீடுகளையும் கருத்தியல் களையும் 'சம்மட்டி' எழுத்து கொண்டு அடிக்கின்ற வீரம், உள்ளக் குமுறல்கள், வேதனைகள், ஏக்கங்கள், கோபக் கனல்கள் நம்பிக்கை உணர்வுகள் அனைத்தும் இவரது கதைகளில் சரளமாக நடனமாடும். வாசிப்பவரின் சிந்தனைகளையும் நடனமாடவைக்கும். நிதானமாக்கும். மனதை நிசப்தப்படுத்தும்.

குழந்தைகள், பெண்கள், தலித் மக்கள், தொழிலாளர்கள், இயற்கை போன்றவர்கள்தான் இவரது சிறுகதைகளில் வரும் கதாநாயகர்கள்.

பணத்துக்காக எழுதுபவர்கள் பேசுபவர்கள், குலுங்க குலுங்கச் சிரிக்க வைப்பவர்கள் தமிழ் மண்ணில் வளர்ந்து வருகின்ற வேளையில், சமூகத்திற்காக எழுதுகிற திரு. மேலாண்மை அவர்களை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துவதில் வைகறை ஆனந்தம் கொள்கிறது.

பண்பும், பாசமும்; உறவும் உணர்வும்; திடனும், திறமையும்; மதிப்பீடும் மாற்றுச் சிந்தனையும் கொண்ட ஆசிரியர் மேலாண்மை அவர்கள் வளரவேண்டும். இழந்த உலகத்தை எட்டிப் பார்க்க கனா காணும் பெண்கள், குழந்தைகள், தலித் மக்கள் போன்றோரின் உணர்வுகளைப் புரிந்து மதித்து மறுபடியும் அவர்களை மனிதர்களாக வாழ வைக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு எழுதும் ஆசிரியரின் கனா நனவாக வாழ்த்துகிறேன்.

கனவுகள் மலரும் நம்பிக்கையில்

சிரில்

# அணிந்துரை

மேலாண்மை பொன்னுச்சாமி ஓர் சமூக உணர்வுக் கூர்மை மிக்க அற்புதப் படைப்பாளர். பதமான சலவைக்கல்லை - உளியால் தட்டிப்பார்த்தும் அந்தக் கல்லுக்குள்ளே சிறைப்பட்டுக் கிடக்கிற வானதூதரை விடுவித்து வெளியே சிற்பவடிவில் கொண்டுவிடுகிற மைக்கேல் ஆஞ்சலோவைப் போல . . . அவரது பேனா முனை . . .

வாழ்க்கை முள் மீது கிடந்து நடந்து குருதி கொட்டுகிற சாமானியர்கள்தான் இவரது கதை மாந்தர்கள் ! மனிதர்களைப் போலவே இவர் இயற்கையையும் உயிர்கள் ஒவ்வொன்றையும் ஆத்மார்த்தமாக நேசிக்கிறவர் ! அவருடைய சொற்செட்டும், நடைச்சித்திரமும், கதை வார்ப்பும், உத்தி முறைகளும், உணர்வுச் சூழல்களின் பதிவுப் பரிணாமங்களும் மனிதத்தின் சிகரத்தைத் தொடுகின்றன !

இந்தத் தொகுப்பில் உள்ள ஒருசில கதைகளைப் பற்றி எனது மனப்பதிவு அணுகுமுறையில் சொல்வதென்றால் . . .! ஒரு தேசம் நாகரிகத்தில் உயர்ந்து நிற்கிறது என்றால் அங்கு உழைக்கிறவர் களுக்குப் பயனுள்ள விளையாட்டு, பொழுது போக்கிற்குப் போதிய நேரத்தை அனுமதிக்கவேண்டும். மயில்த்தாய், தனது குழந்தைப் பருவத்திலேயே தீப்பெட்டித் தொழிலில் தள்ளப்படுகிறாள். அவள் ஞாயிறு விடுமுறையில்கூட தூக்கம், அவள் தொலைக்காட்சியில் படம் பார்க்க வேண்டும் என்கிற ஏக்கத்தைப் பறித்துக்கொள்கிற சோகத்தை குழந்தைத் தொழிலாளிகளின் இழந்த உலகமாக நம் முன் நிறுத்துகிறது **இழந்த உலகம்** *சிறுகதை.*

எழுதத்தொடங்கிவிட்டேன் என் கதையை! என்று கதை முடிகிறது. அது முடிவல்ல! மீண்டும் நம்மைக் கதையின் ஆரம்பத்திற்குக் கொண்டுபோய் நிறுத்தி மறுவாசிப்புச் செய்யத் தூண்டுகிறது **என் கதை !** ஆழ்ந்த கவலைகளும் வேதனைகளும் மூழ்கடிக்கிற கலைஞனது காயங்களும் ரணங்களும் தான் சுவையான அவனது கதைகளின் ரிஷி மூலம்! தன்னையே கதைச் சிற்பமாகப் பொன்னுச்சாமி செதுக்கிக்கொள்கிற கதை!

கவர்மெண்ட் அதிகாரமையமான கச்சேரியில் கொடிகட்டிப் பறக்கும் கர்ணம் ! கர்ணம் சாமி ! கடவுள் சாமியாகவே தொழப் படுகிற அதிகார மேலாண்மை மிக்கவர். வரி வசூலிக்கத் தாழ்த்தப்

பட்டோர் தெருவுக்குப் போனால்கூடத் தன்மானமும் சுய நன் மதிப்பும் மரியாதையும் பாதிக்கப்பட்டுவிடும் என நம்புகிறவர். தன் அடிமட்ட சேவகப் படையான தலையாரி வெட்டியான்கள் மூலமாக ஆணைச்சரகத்தை வெற்றிகரமாகச் செலுத்தியவர். ஆனால் அவரது தீண்டாமை அதிகாரத்துக்கு எதிராகவும் அறைக்கூவல் விடுக்கிறான் தேவசகாயம். கல்வியறிவும் சட்ட உணர்வும் கர்ணத்தின் முன் தலை நிமிர்ந்து நேருக்கு நேர்படப் பேச வெடிப்புறப் பேசவைக்கிறது. மற்றவர்போல் கூனிக்குறுகி, வளைந்து, நெளிந்து குன்னிக் குனிந்து குமைந்து குட்டுப்படுகிற சராசரி சேரி மனிதனாக அவன் இல்லை! வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்து வலிமையை உரமாய் மனசில் ஏற்றுகிற வீராப்புக் கதை! அது சரி... அதென்ன **கண்ணகி** கதைத் தலைப்பு? கண்ணகியின் மறுபிறப்பு அவதாரம் தான் தேவசகாயமா?

சிலர் கவிதையில் கதை எழுதுவார்கள்; பொன்னுச் சாமி **என் கனா** என்கிற கதை மூலம் கவிதை எழுதுகிறார். நெஞ்சைக் கொள்ளை கொள்ளும் பொன்னுச்சாமியின் முத்திரை பதித்த நடை! ஒரு வேப்பமரத்தின் கனா ... வேப்பமரத்தை ஆளாக்கிய சின்னக்கனியின் கடைசி மூச்சுடன் வேம்பும் வெட்டப்பட்டு அதன் கதையும் முடிந்துவிடுமோ என்கிற கவலை நெஞ்சைக் குடைகிறது. ஆனால் கதை முடிவு வேம்பின் வடிவில் தன் தந்தையையே கண்டு அவர் மகன் வாழவைக்கத் தீர்மானிக்கிற போது நம் நெஞ்சில் பாறையாகி அழுத்திப் பாரம் தரையிறக்கப்படுகிறது. சுற்றுச்சூழல் விழிப்பை நம் முன் பதியம் போடுகிற கதை ... *என் கனா*

இப்படியே இதன் ஒவ்வொரு கதையாய் **கள்வம், உறவியின் நிஜம், கைநாட்டு, இந்தக் காலத்துத் தாய், மண்** ஆகிய சிறு கதைகளும், **அதிதம்** குறுநாவலும் . . . எடுத்து வாசிக்கத் தொடங்கினால், குழந்தையை அள்ளி அணைத்துக் கீழே இறக்கி விட்டால் ஏற்படும் மனசின் வலி போல் கீழே நூலை வைக்க மனசு மறுக்கும் . . . உலக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டால் பொன்னுச்சாமியின் கதைகள் சிகரங்களைத் தொட்டுவிடும் நாள் தொலைவில் இருக்காது . . . உங்களுக்கு இன்னமும் குறுக்கே இருக்கலாமா நான்? விடை கொடுங்கள் . . . வெல்க வைகறைப் பதிப்புகள்!

இளைய நந்தன்

**முனைவர் அ. அந்தோணி குருசு**

*தூய வளனார் கல்லூரி, திருச்சி*

# என்னுரை

'கிளிப்பிள்ளையைப் போல பேசுவான்' என்ற ஆங்கிலப் பேரறிஞரின் பொன்மொழியை பொய்யாக்கிக் காட்டியவர் **கவிஞர் சூரியதாஸ்.**

அவரது **அதற்கு அப்பாலும்** என்ற இரண்டாவது கவிதைத் தொகுதியின் வெளியீட்டு விழா திண்டுக்கல்லில் நடந்தது. நானும் கலந்துகொண்டு, உளமார ரசித்த கவிதானுபவங்களைப் பகிர்ந்து வாழ்த்திவிட்டு வந்து விட்டேன். அத்துடன் முடிந்தது என்று முற்றுப்புள்ளியாக நினைத்தேன். அது ஓர் உறவுக்கோலப் பின்னலின் முதற் புள்ளியாகும் என்று நான் நினைக்கவேயில்லை. ஆனால், அப்படியே நிகழ்ந்தது.

அந்த நூலை வெளியிட்டிருந்த வைகறைப் பதிப்பகத்தின் பொறுப்பாளர் **ஆ.சிரில்,சே.ச.** அவர்களின் வித்தியாசமான குணம், பழகிய சுபாவ இங்கிதம், ஞான நிறைகுடத் ததும்பலான இனிய புன்னகை, வைகறைப் பதிப்பகத்தை நிர்வகித்து வருகிற தனிச்சிறப்பான வகை எல்லாமே என்னைப் பிரமிக்க வைத்தது. என் மனசின் முக்கிய இடத்தில் உட்கார்ந்து கொண்டார்.

த.மு.எ.ச. நடத்திய அந்த நூல் வெளியீட்டு விழாவின் நாயகன் சூரியதாஸ் மனசுக்குள் அரும்பிய ஒரு பூ இதழ் விரித்தது. விருப்பம் மகரந்தமாக வாசம் வீசியது.

'வைகறைப் பதிப்பக வெளியீட்டு மூலமாக தங்கள் கதைத் தொகுப்பு ஒன்று வெளிவரவேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஆர்வத்துடன் அதற்காக வைகறைப் பதிப்பகப் பொறுப்பாளர்களிடம் அணுகலாம் என்றிருக்கிறேன். நீங்கள் ஒத்துழைப்பீர்களா?' என்று கவிஞர் சூரியதாஸ் ஒரு கடிதம் எழுதினார்.

அந்தக் கவிஞரின் கடிதம் தான் முதற்புள்ளி. அதன் கோல ஓவியமாக... இதோ **என் கனா** என்ற கதைத் தொகுதி உங்கள் கையில்.

'வைகறைப் பதிப்பகம் மூலமாக வருகிறது, எனது கதைத் தொகுதி. இதுவே முதற்புள்ளியாக இருக்க வேண்டும்,

முடிவற்ற உறவின் கோலப்பின்னல் ஓவியமாக எதிர்காலம் அமைய வேண்டும்' என்று உளமார விரும்புகிறேன்.

இதிலுள்ள கதைகள் ஆனந்த விகடன், கல்கி, செம்மலர், தாமரை, அமுதசுரபி போன்ற இதழ்களில் பிரசுரமானவை.

இந்தக் கதைகள் பற்றி நான் எதுவும் சொல்லவேண்டிய தில்லை. அவையே தம்மை உரியமுறையில் அறிமுகம் செய்து கொள்ளும். அதற்காக வலிமையும் நட்பும் அவற்றுக்கு உண்டு.

'உறவின் நிஜம்', 'மண்,' 'இந்தக் காலத்துத்தாய்' ஆகிய மூன்று கதைகளும் எனது ஆரம்ப நாளைய கதைகள். 'மண்' தாமரையிலும், பிற இரண்டும் செம்மலரிலும் பிரசுரமானவை. ஏன் இந்தக் கதைகளை இதில் சேர்த்திருக்கிறேன்?

ஒரு படைப்பாளி ஒரே மாதிரி மாற்றமின்றி இருப்பதில்லை. தினந்தோறும் மாறுகிறான். காலந்தோறும் வளர்கிறான். 'செந்தமிழும் நாப்பழக்கம், சித்திரமும் கைப்பழக்கம்' என்பதைப் போல பழகப் பழக தூரிகை வளர்கிறது. சித்திரத்தின் தரமும் மாறுகிறது.

மாறுவதும் வளர்வதுமாக இயங்குகிறான். வளர்கிற கரும்பில் வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டமும், கணுவாக தம்மை அடையாளப்படுத்திக் கொள்வதில்லையா? அப்படித்தான் படைப்பாளியும்.

படைப்பின் காலத்தில் படைப்பாளி எப்படி இருந்தான் என்பதை படைப்பே சொல்லும். ஆமாம்.....மேற்கண்ட கதைகள் மூன்றும் எனது பழையகணு. கடந்த ஒரு காலக்கட்டம். மேலாண்மையினுள் இருந்த பழைய முகம்.

என் படைப்புகளில் எம்ஃபில் ஆய்வு செய்தோர் சிலர். செய்து கொண்டிருப்போர் பலர், முனைவர் பட்டத்திற்கான ஆய்வில் தற்போது நால்வர். இவர்களுக்கெல்லாம் பயன்பட வேண்டும் என்பதால் தான், இந்த மூன்று கதைகள்.

இதில் 'மண்' கதை எனக்கு மிகவும் பிடித்த கதை. 'மாமிச ருசியை பிராணிகள் வளர்ந்த மண் நிர்ணயிக்கிறது' என்கிறது கதை. ஆனால் இப்போதுள்ள மேலாண்மை மண்ணின் தன்மையையும் நிர்ணயிப்பது நிலத்தடி நீர்தான் என்று புதிதாகப்

புரிந்திருக்கிறான் என்பதை இந்த என்னுரையில் பதிவு செய்தாக வேண்டும். போதும்... கதைத் தொகுப்பும் நீங்களுமாய்... இனி...

என் கதைகளைப் பிரசுரம் செய்து எனக்கு முகவரி தந்த **தாய் பூமி செம்மலர், சகோதர பூமி தாமரை**, என் முகவரிக்கு கூடுதல் வெளிச்சம் தந்த **கல்கி, ஆனந்த விகடன், அமுத சுரபி** ஆகிய இதழ்களுக்கும், அவர்கள் காட்டிய பேரன்புக்கும், கதைகளைத் தொகுப்பாக வெளியிட வழங்கிய அனுமதிக்கும்...

கதைத் தொகுப்பு வெளியிட பேருதவியும், கடின உழைப்பும் தந்த **கவிஞர் சூரியதாஸ்** அவர்களுக்கும்....

கதைத் தொகுப்பை பொறுப்பேற்று வெளியிட முன் வந்து, எனக்குள் சிகரமாய் உயர்ந்திருக்கும் வைகறைப் பதிப்பகப் பொறுப்பாளர் **அ. சிரில்** அவர்களுக்கும்... அட்டைப்பட ஓவியத்தை வழங்கிய **கவிஞர் ஸ்ரீரசா** அவர்களுக்கும்... கதைத் தொகுப்பை ஆதரித்து விற்பனை செய்கிற,தமிழ் கூறுநல்லுலக முற்போக்காளர்களுக்கும்...

வாசித்து முடித்தபின்பு மௌனமாகிவிடாமல், உள்ளதை உள்ளபடி - உணர்ந்த படி - பாராட்டி என்னை உற்சாகப் படுத்துவோருக்கும், இருக்கும் குறைகளைச் சுட்டிக்காட்டி என்னைக் கூர்மைப்படுத்துவோருக்கும்... எல்லோருக்குமே...

எனது இதய பூர்வமான நன்றிகள் என்றென்றும் உரித்தாகும்.

நன்றி !

என்றும் உங்கள்,

**மேலாண்மை. பொன்னுச்சாமி**
**மேலாண் மறைநாடு - 626127**
**விருதுநகர் மாவட்டம்.**

# 1. இழந்த உலகம்

"அண்ணாச்சி, அண்ணாச்சி... சீக்கிரமா சிட்டையைப் பதிஞ்சிட்டுக் குடுங்க..." என்று நச்சரிப்பாகக் கெஞ்சுகிற மயில்த் தாய் பிடுங்கப் போகிறவளைப் போல கைநீட்டுகிறாள். நாலெட்டு தள்ளி கும்பலாய்ப் போகிற ஏழெட்டுச்சிறுமிகள். அவர்களைப் பார்த்து ஒரு கத்தல்.

"ஏய்ய்... கொரங்குகளா, கொஞ்சம் நில்லுங்களேன். கொள்ளையா போகுது"

குச்சியடுக்கிய கட்டைகளின் எண்ணிக்கை சரிபார்த்து ஒற்றையெழுத்தில் கையெழுத்துப் போட்ட கணக்குப் பிள்ளை, அவர் தருவதற்குள் பிடுங்கிக்கொண்டு பரபரப்பாய் ஓடுகிற மயில்த்தாய். அடிப்பாவாடை சடசடக்கஎறிபட்ட கல்லாக ஒரே ஓட்டம். தீப்பெட்டி யாபீஸ் வெளிக்கதவைத் தாண்டுவதற்குள் வந்து சேர்ந்து கொண்ட மயில்த்தாய்க்கு "தஸ்ஸூ, புஸ்ஸ்" ஸென்று இரைத்தது.

*"அடியே மயிலு, நாம நாலைஞ் சுநாளா பொழுதையே பாக்கலே இல்லே?"*

*"எங்குட்டுப் பாக்க? விடியறதுக்கு முந்தி இங்க வந்துருதோம். பொழுது அடைஞ்ச பெறகுதானே வீடுபோய்ச் சேருதோம்?"*

*இபொழுது மொகத்தைப் பாக்கக்கூட நமக்குக் குடுத்து வைக்கலை... ம்ள்ச்சு!"*

"எதுக்குடி இப்படி ஓடித் தவிக்குறே? மெள்ள வரவேண்டியது தானே?"

"நீங்க என்னத்துக்கு இந்தப் பறப்பு பறந்து போறீக ? நின்னு வரவேண்டியதுதானே? வேன் இன்னும் வரல்லே?"

"வர்ற நேரம்தான்."

தீப்பெட்டியாபீஸின் பிரம்மாண்டம். பகாசுரத்தனம். புகையும், கந்தக நெடியும், பசை நாற்றமும் காற்றையே தின்று ஜீரணித்திருந்தன. விரிந்த வெளிமுற்றம். வரிசையாக வேப்ப மரங்கள். கும்பல் கும்பலாய்ச் சிறுமிகள். பாவாடைச் சிறுமிகள். தாவணிச் சிறுமிகள்.

ஏற்கெனவே பொழுது அடைந்திருந்தது. மேலடிவார மேகங்களின் கனிந்த சிவப்பு, இருண்ட கருமைக்குள் மூழ்கிக் கொண்டிருந்தது.

"அடியே மயிலு, நாம நாலைஞ்சு நாளா பொழுதையே பாக்கலே இல்லே?"

"எங்குட்டுப் பாக்க? விடியறதுக்கு முந்தி இங்க வந்துருதோம். பொழுது அடைஞ்ச பெறகுதானே வீடு போய்ச் சேருதோம்?"

"பொழுது மொகத்தைப் பாக்கக் கூட நமக்குக் குடுத்து வைக்கலை.. ம்ள்ச்சூ !"

சோகத்தைச் சுமந்த அந்தச் சலிப்பு, மயிலைத் தொடவேயில்லை. அவள் மனசு முழுக்கக் குதூகலம். விளையாட்டுத்தனம். பூவுக்குப் பூவாக மாறிமாறி உட்கார்ந்து விளையாடுகிற வண்ணத்துப் பூச்சித்தனம். பார்த்தவர்களுக் கெல்லாம் பற்றிக்கொள்கிற மழலைத்தனம்.

"ஏய் மாரி, காலையிலே வர்றப்ப வேன் டிரைவரு இந்தியன் பாட்டைப் பாதியிலே நிறுத்திட்டாருல்லே ?"

"கேஸட்டு சிக்கிக்கிட்டு நைஞ்சி போச்சுன்னா... அவரு என்ன செய்வாரு ?"

"அதை இப்பப் போடச் சொல்லணும், விடக்கூடாது."

"அதெல்லாம் முடியாது... முத்துலேதா பாட்டுப் போடச் சொல்லணும். ரஜினி பாட்டு."

"இந்தியன்லேதான் போடணும். புதுப்பாட்டு, நல்லா யிருக்கும். உனக்குத் தடால்லாம்' சூப்பர்ப் பாட்டு."

"முத்துதான் போடணும்"

"இந்தியன்தான்."

"ஏய்... வாலு, வாயைப் பொத்து."

"நீதான் கொரங்கு. வாலைச் சுருட்டு."

வேப்பமர இலைக் கூடாரத்திற்குள் மைனாக்களின் உல்லாசச் சண்டைகள். சந்தோஷச் சர்ச்சைகள். இரைதேடிய அலுப்பை மறந்துவிட்ட குதூகலக் கூப்பாடு. 'கீச்சடி... மூச்சடி' என்கிற கூட்டுக் கலவைக் கூச்சல்.

லோடுவேன் வந்தது. தீப்பெட்டியாபீஸின் வெளிக்கதவு அகலமாய்த் திறக்க, உள்ளே போனது.

நிறைய்ய லோடு. அட்டைக்கட்டுகளும், தாள்க்கட்டுகளும் சதுர சதுர மூட்டைகளாகச் சரிந்துகிடந்தன. அவசர அவசரமாய் இறக்கப்பட்டன. டிரைவர் பதற்றமும் பரபரப்புமாய் உள்ளே ஓடினார். மேனேஜரைப் பார்த்து முடித்த வேகத்தில்... துரத்தப் பட்டவராக ஓடிவந்தார். ஏன் லேட்? என்று 'தாட் பூட்'டென்று விரட்டியிருப்பார் போலும்.

டிரைவர் முகத்தில் அதன் வெக்கை. நேரில் காட்ட முடியாத கோபத்தையெல்லாம் கெட்டவார்த்தை முணு முணுப்புகளாகக் கசியவிட்டார்.

கேபினுக்குள் ஏறிக் கதவை அறைந்து சாத்திய சத்தத்தில் கோபம் முகம் காட்டியது. வேன் வட்டமடித்துத் திரும்பி... வெளியே வந்து உறுமலோடு நின்றது.

"ம்...ம்...சீக்கிரம் ஏறுங்க" என்று சிறுமிகளை அதட்டினார்."

வெளிமுற்றம் முழுக்க சிரிப்பும் விளையாட்டுமாக இருந்த சிட்டுக் குருவிகள் விழுந்தடித்துக்கொண்டு ஏறின. 'காச், மூச்' சென்று கத்தல்கள். ஏறுவதில் -இடம் பிடிப்பதில் - போட்டி, தள்ளுமுள்ளு. 'போடி, வாடி' என்ற ஏசல்கள். வேப்பமரத்து மைனாக்களாக ஒரே சண்டைக்காடு. சத்தக்காடு.

வேன் டிரைவருக்கு இதையெல்லாம் சகித்துக்கொள்கிற மன நிலை இப்போது இல்லை. இந்தச் சிட்டுகளையெல்லாம் மேனேஜரைப் பார்ப்பது போல கடுப்போடு வெறித்தார்.

“ஏய்... அறிவுகெட்ட கொரங்குகளா... என்னத்துக்கு இந்த ஆட்டம் போடுதீக? அரவமில்லாம ஏறித் தொலையுங்களேன்...” என்று காட்டுக் கத்தலாய் அலறினார்.

வேன் நகர்ந்து வேகமெடுத்தவுடன் உள்ளுக்குள் நேர்ந்த அலைக்கழிப்பு. ஒருவர் மேல் ஒருவர் சாய்ந்து சரிந்த அலங்கோலம். “ஹோய்... ஹோய்ய்...” என்று பயங்கர கூவல்காடு.

டிரைவரின் எரிச்சல். தீயில் எண்ணெய் கொட்டியதுபோல ஒரு தகிப்பு.

“இப்படி கந்தகக் கெடங்குல போட்டு வறுத்தெடுக்குறப்பவே... இதுகளுக்கு இம்புட்டு ஆட்டமும் பாட்டமுமா? இதுகளையெல்லாம் வயசுக்கேத்த மாதிரி படிக்க வைச்சு... வெளையாடவுட்டா... ஊரையே குட்டைப் புழுதியாக்கிருமே... ச்சேய்!”

அவரது எரிச்சல் வண்டியின் அசுரவேகத்தில் தெரிந்தது. ஹெட்லைட்டின் கற்றை வெளிச்சத்தில் பூச்சிகள் பறந்தன.

வண்டிக்குள் ஒரே கூச்சல்.

“டேப்பு போடுங்கண்ணே.”

“இந்தியன்லே பாட்டு...”

“முத்துலே பாட்டு...”

“உள்ளத்தை அள்ளித்தாதான் சூப்பர் பாட்டு. அந்தக் கேஸட்டைப் போடுங்கண்ணே...”

டிரைவருக்கிருந்த எரிச்சலில்...கைக்குக் கிடைத்த கேஸட்டை எடுத்துச் சொருகினார். சுவிட்சைத் தட்டிவிட்டார்.

மயில்த்தாய் கம்பிவலை ஜன்னலில் கன்னம் பதித்து மௌனத்தில் உறைந்து கிடந்தாள். நகர்ந்து கரையும் இருட்டையே வெறித்தாள்.

வேன் ஏறுகிற வரைக்கும் குதூகலவெள்ளமாய்க் கரைபுரண்டவள், சண்டைகளிலும் சர்ச்சைகளிலும்

கலந்துகொண்டவள், அர்த்தம் இருந்தோ... இல்லாமலோ சளசளத்தவள், வேன் ஏறி... கம்பிவலை ஜன்னல் பக்கத்தில் இடம் கிடைத்து நின்றவுடன்-

அவள் கண்ணில்பட்ட காட்சி. சற்று தூரத்தில் - ரோட்டுக்கு அந்தப் பக்கம் - ஒரு சிறுமி. மயில்த்தாய் வயசுதானிருக்கும். பள்ளி யூனிபார்ம் டிரஸ்ஸோடு டயர்ச் சக்கரத்தை உருட்டி உருட்டி சுற்றி வந்தாள். சைக்கிள் டயர். வெறும் டயர். கையில் கட்டைக் குச்சியோடு... துவண்டு நெளியும் அந்த டயர்ச் சக்கரத்தை, ‘டப், டப், டப்’பென்று அடித்துக்கொண்டே சுற்றினாள். அவளது சின்ன முகம் பீர்க்கைப் பூவாகச் சுடர் விட்டுப் பிரகாசித்தது. மனசின் மகிழ்ச்சி, கண்ணில் மின்னல்களாக... மின்னலின் அசலான பேரொளியாக... நிஜமான குதூகலத்தின் வெளிச்சமாய்...

அதைப் பார்த்த கணத்தில் -

மயில்த்தாய்க்குள் எனனவோ நிகழ்ந்தது. அவளுக்குள் நுரை பொங்கி வழிந்த குதூகலம், சட்டென்று வடிந்து, உலாந்து, மாயமாகிவிட்டது. வாடிச்சாம்பிப் போன முகம். இழந்த உலகத்தின் ஏக்கத்தில் நைந்து போகிற மனசு, நனைந்த காகிதமாக.

வேனுக்குள் புளிச்சிப்பமாக அடைபட்டிருக்கிற சிறுமிகள். ஏழெட்டு கிராமத்துச் சிறுமிகள். ஒருத்தர் மூச்சு, ஒருத்தரைச் சுட்டது. “நீ தள்ளிக்கோ... ஏங்காலை மிதிக்காதேடி..., மேலே இடிக்காதேடி...,” “காட்டுப் பன்னி,” “குட்டிநாய்” என்று ஏகமாய்க் கோபச் சத்தங்கள். குமைச்சல். ஒரே கூவல்காடு. எதையும் கவனிக்க முடியாத மனச்சுமையில், மயில்த்தாய். ஜன்னலின் கம்பி வலைப்பின்னல் கன்னத்தில் அழுத்த, இருட்டையே பார்க்கிற அவள். மனசுக்குள் டயர்ச் சக்கரம், டப், டப், டப் பென்று அடிக்கிற சத்தம். டயரின் பின்னால் ஆட்டுக் குட்டியாய்த் துள்ளித் துள்ளி ஓடிய அந்தச் சிறுமி.

போன வருஷம். ஆறாப்புப் படித்தாள் மயில்த்தாய். சாயங்காலம் ஆகிவிட்டால் வகுப்பில் மனசு இருக்காது. ரெக்கையை விரித்துவிடும்.

எப்படா பெல் அடிக்கும்... எப்படா வெளையாடப் போகலாம் என்று மனசு கிடந்து ஆலாய்ப் பறக்கும். மணியடித்த மாயத்தில்

மயில்த்தாய் பைக் கட்டோடு முதல் பிள்ளையாய் வெளியே வருவாள். ஒரே ஓட்டம். தெருப் புழுதி கிளம்பும். தீயாய்ப் பறப்பாள்.

பைக் கட்டைப் போடுவாள். தண்ணீரை 'மடக், மடக்' கென்று அவசரகதியில் குடிப்பாள். அம்மா என்னமோ சொல்லுவாள். புலம்புவாள். "ஆடுகாலிக் கழுதை... ஓங்காலை ஒடிச்சு அடுப்புலே வைக்கணும். சனியன்" என்றெல்லாம் திட்டித் தீர்ப்பாள். எதுவும் காதில் ஏறாது. மறுபடியும் ஒரே ஓட்டம். மேற்கே... களத்தில்தான் வந்து நிற்பாள், விளையாட.

ஊரின் மேற்கு விளிம்பில் அந்த விரிந்த களம். மைதானம். இந்த இடம் இவளுக்கு ரொம்ப உயிர். தாய்மடி மாதிரி சுகமா யிருக்கும். கண்மூக்கு தெரியாமல் வெறிகொண்ட மகிழ்ச்சியில் விளையாடுவாள்.

அவளை மாதிரியே... ஏழெட்டுச் சிறிசுகள் வந்துவிடும். ஓடிப்பிடித்து விளையாட்டு. கல்போகுது விளையாட்டு. நொண்டியடித்து விளையாட்டு. தட்டாங்கல் விளையாட்டு. இன்னது என்று கணக்கில்லை. எல்லா விளையாட்டுகளும்.

விளையாட விளையாட ஆசையாயிருக்கும். திகட்டவே செய்யாது. நேரம் போவதே தெரியாது. பசியும் தெரியாது. ஒரே விளையாட்டு வெறி.

இதுதான் அவள் உலகம். அந்த வயசுக்கான உலகம். பூக்களின் உலகம். பூஞ்சிட்டுகளின் உலகம். சிரித்து சிரித்து சிறகடிக்கிற மன உலகம்.

இருட்ட ஆரம்பித்தால்... மயிலுக்குப் பதைப்பு. விளையாட்டை நிறுத்தியாகணுமே என்கிற சங்கடம். அணையும் கங்குகளாக கருமைபடியும் மேகங்களைக் கடுப்புடன் பார்ப்பாள்.

கருகருவென்று மயங்கும். மெல்ல மெல்லக் கவிகிற இருள். பாவாடைப் பூ மறையும். முகங்கள் மறையும். ஒவ்வொன்றாக மறைய மறைய பிள்ளைகள் மனசு பதறும்.

"வீட்டுக்குப் போவணும்."

"கொஞ்சம் நில்லு."

"அம்மா வைவா. அடிப்பா..."

"அதெல்லாம் அடிக்க மாட்டாக."

"ஐயய்யோ ! அடி பின்னிருவா."

"இரு... இரு... இன்னும் ஒரே ஆட்டம்."

"ம் ஹூம் வேண்டாம்."

மயில்த்தாய்க்கு என்னவோ போலிருக்கும். இந்தப் பிரிவைத் தாங்கவே முடியாது. கிள்ளப்பட்ட பூமனசாக வாடும். இந்த உலகத்தை விட்டு விலகவே மனசிருக்காது.

"அவரவரு வூட்டுக்கு, அவரைக்கஞ்சி குடிக்கப்போங்க..." என்று கூட்டுப் கோரஸ். விளையாட்டுக்கு" ஜன கன மண..."

துவண்ட நடையாக உயிரில்லாமல் வீடு போவாள், மயில். அரை மனசாக நடப்பாள். எல்லாச் சிட்டுகளும் சிறகு விரித்த பிறகு... கடைசியாளாகத்தான் புறப்படுவாள். அதுவும் ஏக்கப் பெருமூச்சோடு.

...வேன், மெட்டல் ரோட்டில் தடதடத்தது. அதன் தகரத் திரேகம் தாறுமாறாய்க் கலகலத்தது. ரோட்டோர வேலி மரங்களின் விளார்கள், வேன் தகரத்தில் 'டர், பர்' ரென்று இழுக்கிறது. ஒரு சின்னக் கிராமம். வேன் நின்றது. இறங்கிய டிரைவர், பின் கதவைத் திறந்துவிட்டு..."ம், எறங்குங்க" என்றார். ஏழெட்டுச் சிறுமிகள், நாலைந்து தாவணிப் பெண்கள் இறங்கினர். கைளிலிருந்த வெற்றுத் தூக்குச் சட்டிகள் கலகலத்தன.

'போய்ட்டு வரட்டா' என்கிற பிரிவு வார்த்தைகளெல்லாம் கிடையாது. "கொரங்கு... நாயி... போடி... வாடி" என்ற விளையாட்டான வசவுகளும், கேலிகிண்டல்களுமாய்... சிரிப்புச் சத்தமுமாய்...

டிரைவர் மறுபடியும் கதவைத் தூக்கிச் சாத்தினார். டேப்-ரிக்கார்டு பாட்டுச் சத்தம். வேனுக்குள் இருக்கிற ஒரு சிறுமி, தெருவில் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு போகிறவர்களைப் பார்த்து... பாட்டுச் சத்தத்தை மீறிக் கொண்டு கத்தினாள்.

"அடியே...ய், நாளைக்கு ஞாயிற்றுக்கெழமை. டி.வி.யிலே 'கமல்' படம்டி. மைக்கேல் மதன காமராசன். பாக்காம இருந்துராதே ...டீ."

வேன் மறுபடியும் உறுமிக் கொண்டு உயிர்பெற்றது. வட்ட மடித்துத் திரும்பி வேகமெடுத்தது.

மயிலுக்குள் மெல்லச் சலனம். வருகிற உயிர். இருட்டி லிருந்து கண்ணைப் பிடுங்கினாள். கத்திய அந்தச் சிறுமியைப் பார்த்தாள்.

"பம்பம்பம்... ஆரம்பம்" என்று பாடிக்கொண்டே ஆடினாள், உட்கார்ந்த நிலையில்.

'நாளைக்கு ஞாயிறு'

இந்த நிஜம், மயில்த்தாய்க்குள் இறங்கியது. சலனமுற்ற மனசு. ஏக்க வேதனையிலிருந்து மெல்ல மீண்டது. ஒடித்துப் போடப்பட்ட சிறகுகளை எடுத்துப் பொருத்திப் பார்த்தாள். பறந்து பார்க்கலாமா... என்று நினைத்த கணத்தில்... உள்ளுக்குள் குப்பென்று பொங்கியெழுகிற ஆசைகள், விளையாட்டு ஆசைகள்.

'நாளைக்கு விடிஞ்சவுடனே வெளையாடப் போவணும்' என்று மனசுக்குள் குறித்துக்கொண்டாள். குதூகலமாக இருந்தது.

'நொண்டியடிப்பு...' 'தட்டாங்கல் ...' 'கல் போகுது... கண்ணா மூச்சி...' விளையாட்டுகள்.

மனசு ரெக்கையடித்துப் பறந்தது அவளுக்குள். டயர்ச் சக்கரம் உருட்டினாள். மனசுக்குள் தீவிரம். அடைகாத்து குஞ்சு பொறிக் கிற நினைவுகள்.

'எப்ப வெளையாடப் போவணும்... வெளையாட்டுலே யார் யாரைச் சேர்க்கக்கூடாது... என்னென்ன வெளையாட்டு வெளை யாடலாம்... எப்படியெப்படி வெளையாடலாம்...' என்று ஒரே நினைவுத் தீவிரம். நினைக்க நினைக்க இனிக்கிற மனசு. இனிக்கும் தேனில் சிக்கிய எறும்பின் சுகமயக்கம்.

"அடியே... மயிலு, ஏங் கண்ணு... ஏந்தங்கம்... அடியே என் வைரப் பெட்டி..."

உசுப்புற அம்மாவின் சத்தம். பிரிய மறுக்கிற கண்கள். முகத்தில் விழும் வெயிலுக்குப் பிடறியைக் காட்டி குப்புறப் படுத்துக் கொண்டு சிணுங்குகிற மயில்.

"ஏம்மா மயிலு... இங்க பாரு... ஏஞ்செல்லம்... நா காட்டு வேலைக்குப் போவணும்டி."

"ஆமா... போ."

"எந்திச்சுச் சாப்புட்டுக்கடி..."

"ஆட்டும்."

உறக்கச் சடவில் உணர்வில்லாமல் சொல்லுகிற மயில்த்தாய்.

"மோட்டார் ஓடுச்சுன்னா... ஓம் பாவாடை சட்டைகளைத் தொவைச்சுக்கடி..."

"ம்...ம்..."

"காலைக் கரண்டு. நாலு கொடம் தண்ணி எடுத்து வைச்சிருடி..."

"போ... போ... அதெல்லாம் முடியாது. போ."

"சரி... ஞாபகமா சாப்புட்டுக்கோ."

"ஆட்டும்."

மாறி மாறி நச்சரிக்கிற அம்மா போய்விட்டால் தேவலை என்று அவளுக்குள் ஓர் எரிச்சல். உறக்கத்தை இழக்க விரும்பாத அயற்சி.

அம்மா... போய்விட்டாள்.

அவளாக உறங்கி முழித்தபோது... மணி ஒன்பதரை. காலை வெய்யில் சுள்ளென்று அறைந்தது. கண்கொண்டு பார்க்கவே முடியவில்லை. கண் கூசியது.

காலைக் கரண்டு. பத்து மணிவரைக்கும் தான் த்ரீபேஸ் கரண்டு. மோட்டார் ஓடும். அப்புறம் கிடையாது.

அவள் ஆறு நாளாய் உடுத்திக் கழற்றிப் போட்ட அழுக்குப் பாவாடைகள். சட்டைகள். இன்றைக்குத் துவைத்தால்தான்... நாளைக்குத் தீப்பெட்டியாபீஸுக்கு உருப்படியான பாவாடை உடுத்திப் போக முடியும்.

பதறிப் பதைத்துப் போய் எழுந்தாள். “மோட்டார் ஓடுமா... கிணற்றில் தண்ணீர் இருக்குமா?”

ஒரே ஓட்டமான ஓட்டம். ‘தக், தக், தக்’கென்று தரையதிர வேக வேகமாய் நடந்தாள். ஊருக்கு வடக்கே... ரெண்டு ஓடைகளைத் தாண்டினால்... மோட்டார் கிணறு.

இவள் ஓடிய வேகத்தில் பதறிப் போய் கலைந்தோடிய, காட்டு மயில்கள்.

நல்லவேளை... பம்ப்ஷெட் மோட்டார் ஓடிக் கொண்டிருந்தது. அரக்க பரக்க சோப்பு போட்டாள். ஏறு வெயில், தொட்டித் தண்ணீருக்குள் ஊதா நிற வானவில்லை உருவாக்கியிருக்கிறது. வெள்ளிக் கற்றையாக அள்ளி ஊற்றுகிற குழாய்.

குளித்து முடித்து வீட்டுக்கு வந்தாள். துணிமணிகளைக் காயப் போட்டாள். அவளுக்குள் ஆயாசமாக வந்தது. கிறு கிறுப்பு. இன்னும் காலைக்கஞ்சி குடிக்கவில்லை. குடிக்க மனசு மில்லை.

சோம்பலாயிருந்தது. அம்மா சோறு வைத்துக் கொடுத்து... சாப்பிடுடி... சாப்பிடுடி என்று கெஞ்சினால்... அதட்டினால்... நல்லாயிருக்கும். சாப்பிடலாம்.

வீட்டிலுள்ள வெறுமை. ஒற்றைச் சீவனாய் உட்காந் திருக்கிற தனிமை. அதன் பாரச்சுமையின் அழுத்தம். வயிறு பசியெடுத்தாலும். சாப்பிடத் தோன்றவில்லை. ஆனாலும் சாப்பிட்டாகணும், சாப்பிட்டு முடிக்கிற போது, சரிமதியமாகி விட்டது. நிழல், காலடிக்குள் மிதிப்பட்டது.

இந்நேரம்வரை சாப்பிடாமலிருந்துவிட்டு... இப்போது சாப்பிட்டது... என்னவோ போலிருந்து. நஞ்சடித்த கெண்டையாக ஒரு கிறுகிறுப்பு. தாளமுடியாத அயர்சி. பட படப்பு.

அப்படியே, கதவை ஒட்டிய நடையில் சரிந்து, சாய்ந்து உட்கார்ந்தாள். சொருகிக்கொண்டு வருகிற கண்கள். அவளுக்குள் ஏதோ ஒரு நப்பாசை.

அம்மா இருந்தால் திட்டுவாள்.' நல்ல வேளை. ஆசையாக வலது கைக்கட்டை விரலை வாய்க்குள் திணித்தாள். ஏதோ ஒரு

சுகம். தாய் மடியில் முகம் புதைத்த மனப்பரவசம். ஆசை ஆசையாக விரலைச் சூப்பினாள்.

கட்டை விரல் வாய்க்குள் இருக்க... சுட்டுவிரல் கண் புருவத்தை வருடிக் கொடுக்க... கண்ணைச் சொருகிக் கொண்டு ‘சிப், சிப்’ பென்று சூப்பினாள்.

மனசுக்குள் வேன். பாட்டுச் சத்தம். சிறுமிகளின் கூவல்காடு. தினம் தினம் விடியற்காலம் நாலுமணிக்கு முழித்தாக வேண்டிய கட்டாயம். நாய்கூட உறங்குகிற இருட்டில்... கோழி கூவும் முன்பே எந்திரிக்கணும். வேனுக்கு ஓடணும். ராத்திரி ஒம்பது மணிக்குத்தான் ஒறங்க முடியும்... ச்சேய் !

நித்தம் நித்தம் சாமக்கூத்தாகிப் போன பிழைப்பு...எதைஎதையோ நினைத்துக் கொண்டேயிருந்தவள், அப்படியே உறங்கிப் போனாள்.

மயில்த்தாய் முழித்துப் பார்க்கிற போது, அம்மா அடுப்பங்கரையில் இருந்தாள். தலைக்குத் துணிப் பொட்டலம் இருக்கிறது. அம்மா வைத்திருப்பாள்.

காலை-கையை நீட்டி நெட்டி முறித்தாள். நல்ல உறக்கம். கடைவாயில் ஒழுகியிருந்த எச்சிலை கையாலேயே வழித்து இழுவிக்கொண்டாள்.

“என்னடி... முழிச்சிட்டீயா...?”

“ம்.”

“மதியச் சோறு சாப்புடல்லேடி?”

“காலைக்கஞ்சியே மதியந்தான் குடிச்சேன். ஏம்மா, என்னை உசுப்பலே?”

“அரை ஒறக்கமும் கொறை ஒறக்கமுமா நெதம் நெதம் ஓடிய லைஞ்சு குச்சியடுக்குதே. இன்னிக்கு ஒரு நாளாச்சும் நல்லா ஒறங்கட்டுமேன்னு நெனைச்சேன். சரி மயிலு, அம்மா சோறு வைக்கட்டா...? சாப்புடுதீயா?”

“ம்...”

“சோறு சாப்புடுதீயா, காப்பி குடிக்கீயா?”

எழுந்து உட்கார்ந்தாள். கை, கால்களில் ரத்த ஓட்டம் நின்று போன மாதிரி ஒரு மதமதப்பு.

“ஏதாச்சும்...” என்று அசமந்தமாய்ச் சொன்ன மயில்த்தாய், எதையோ நினைத்துக் கொண்டவளாய் சுதாரித்தாள். பதறிப் போய்க் கேட்டாள்.

“ஏம்மா... இப்ப நேரம் எம்புட்டு இருக்கும்?”

“மணி அஞ்சரைக்கு மேலேயிருக்கும் மயிலு, பால்வண்டி அப்பவே போயிருச்சு.”

“அஞ்சரையா? ஐயய்யோ.”

துல்லியமாய்ப் பதைத்தாள்.

“என்னடி?” அம்மாளும் அதிர்ந்துபோய்க்கேட்டாள்.

“ஐயய்யோ... டீ.வி.யிலே படம் நாலரைக்கே போட்டுருப்பானே...”

“போட்டுப் போகட்டும். நீ காப்பியைக் குடி.”

துள்ளியடித்து எழுந்தாள்.

“முக்காப் படம் முடிஞ்சிருக்குமே...” என்று புலம்பிய மயில்த் தாய், அவசர அவசரமாய் முகத்தைக் கழுவினாள். அவள் உடம்பெல்லாம் பரபரப்பு.

“அடியே... காப்பியைக் குடிடி. ஒறக்கச் சடவு போகும்.”

“நீதான்... குடி...” என்று அலட்சியமும் கோபமுமாய் உதறியெறிந்து பேசிவிட்டு, ஓட்டமாய் ஓடினாள்.

பஞ்சாயத்து டீ.வி. நடுத்தெருவில் இருக்கிறது. எதையோ பறி கொடுத்த வருத்தம். ஓசி டீ.வி.யும் பார்க்கக் கொடுத்து வைக்கலியே, தவற விட்டுட்டோமே... என்கிற எரிச்சல். கோபம், ஆத்திரம்.

யார் மீது? தெரியவில்லை. கண்டமேனிக்கு எல்லாரையும் திட்டினாள். மனசுக்குள். அம்மாவை, தீப்பெட்டியாபீஸை - வேன் டிரைவரை - எல்லாரையும் திட்டிக் கொண்டே தெருவில் ஓடினாள்.

மேற்கே... களம். விரிந்து பரந்த களம். வெறுமையாகிக் கிடந் த களம். தெருவைப் போலவே வெறிச்சோடிப் போய்... ஒரு சுடு குஞ்சுகூட இல்லாமல்.

எல்லோரும் டீ.வி.யில் படம் பார்ப்பார்கள்.

அப்போதுதான் -

நேற்றைய திட்டம் சுரீரென்று ஞாபகத்தில் வந்தது. ஆசை தீர விளையாடணும் என்ற திட்டம்.

ஓடிய ஓட்டத்தில் அடிப்பாவாடை 'டப், டப்,' பென்று அடித்தது. விளையாடாமல் போன - விளையாட முடியாமல் போனதை நினைத்தவுடன் - அவளுக்குள் சப்பென்று அறைகிற ஏமாற்றம். கற்றையாக நெஞ்சுக்குள் ஏறிக்கொண்ட வருத்த அடர்த்தி.

தூங்கிக் கழிந்துபோன பொழுதை நினைத்து மனசுக்குள் நைந்தாள்.

'பாழாய்ப் போன உறக்கச் சனியனாலே... வெளையாட முடியாமல் போச்சே. சேய்ய், இன்னிக்கு ஒரு நாளாச்சும் வெளையாடலாம்னு பாத்தா... அதுவும் இப்படியாயிப் போச்சே...'

மனசுக்குள் துவண்டாள், மயில்த்தாய். இழந்த உலகத்தை எட்டிப் பிடிக்க முடியாவிட்டாலும், எட்டிப் பார்க்கவும் இயலாமற் போய்விட்டதே...

இந்த வேதனையின் அவஸ்தையை டீ.வி. படம் குறைக்க முடியவில்லை. டீ.வி. பார்க்கணும், என்கிற ஆசை கூட மட்டுப் பட்டது.

'செத்த நாய்க்கு சினிமாதான் கொறைச்சலாக்கும்' என்கிற விரக்தி. வயசுக்கு மீறின உணர்வு.

ஓட்டம், நடையாகி... நடை மெதுநடையாக மெலிந்தது. உயிரற்ற நடை.

மயில்த்தாயின் மெல்லிய அரும்பு மனசுக்குள் காயத் தழும்பாகக் கரடு தட்டிக் கொண்டிருக்கிறது, கசந்த நினைவு.

◆ *1996, 'கல்கி' தீபாவளி மலர்*

# உ. என் கதை

முடியுமா? இந்த மனநிலை யிலே கதை எழுத முடியுமா? இப்படி யொரு சூழலிலா? சாத்தியமா? நடக்குமா? இயலக்கூடிய விஷயமா?

கதையே எழுத முடியுமான்னு யோசிக்கிற நெலையில... ரெண்டு கதை கேட்டுக் கடிதம். கையில் அந்த வெள்ளைத்தாள். டைப் அடிக்கப்பட்ட கடிதம். 'ரெண்டு கதைகளா' என்று நினைத்த கணத்தி லேயே என்னுள்ளிருந்து வெடித்து உதிர்கிற கசந்த சிரிப்பு. என்னை நானே பரிகசித்துக்கொள்கிற மாதிரி. என் நிலைமைக்கு நானே பரிதாபப் பட்டுக் கொள்கிற மாதிரி ஒரு கசந்த சிரிப்பு.

"என்னப்பா" என்று என் மகனைக் கேட்க வைக்கிறது, அந்தக் கசந்த சிரிப்பில் கசிந்த வேதனை. ப்ளஸ் டூ பரீட்சை எழுத முடியாமல் போன மூத்த மகள்.

> *சூழலின் வரம்பை உடைத்து, சூழலைப் புதுப்பிப்பவன்தானே, மனிதன்! சூழலின் வரம்புக் குட்பட்டு வாழும் மிருகங்களிலிருந்து மனிதனை வேறுபடுத்துவதே... இந்த மீறல்தானே! சூழலை மாற்றும் வல்லமைதானே! சூழலை எதிர்த்துப் போரிடுகிற ஆற்றல் தானே... மானுட ஆற்றல்?*

“ரெண்டு கதை வேணுமாம்... கடிதம் வந்துருக்கு.”

“செம்மலருக்கு வேற அனுப்பணும்லே?”

“ஆமா.. அவுகளுக்கு ஒண்ணுவேணும்.”

“எழுதுங்கப்பா...”

அவள் உதடு மட்டுமே சொல்கிறது. ஒப்புக்குச் சொல்கிறது. அவள் மனசுக்குத் தெரியும். என்னால் எழுத இயலாது என்று.

என் இயலாமையை அவளும் அறிந்துவிட்டாள் என்று உணர்ந்த கணத்தில் எனக்குள் கவிகிற விரக்தி. என்னைக் கவிழ்க்கிற அவநம்பிக்கை. உள்ளுக்குள் ரம்பமாய் அறுக்கிற வெட்க வேதனை.

“என்னத்தை எழுத?”

இயலாமையின் பலவீனமும், வெறுப்பும் கலந்த உச்சத்தில் நான். கையிலிருக்கும் வெள்ளைத் தாளையே வெறிக்கிறேன். ஏதோ புரியாத மொழியில் எழுதப்பட்டிருப்பதைப் பார்ப்பதைப் போல... புரிய முயலாத வெறுமையோடு. நோக்கின்றி நோக்குகிறேன்.

மனசே சரியில்லை. ரொம்பக் குழப்பமாக இருக்கிறது. மனசுக் குள் எல்லாக் கணங்களிலும் நச்சரிக்கிற கவலைகள். வேலி முள் சொருகின மாதிரியான நிரந்தர ரணம். நொம்பலமான நினைவுகள்.

கடிதத்தை உறையில் போட்டு அசிரத்தையாகப் போட்டேன். தரையில் படுத்திருக்கிற பிள்ளைகள். வெறும் துணியை விரித்துப் படுத்திருக்கிறார்கள். கண் முழிக்க முடியவில்லை. துவண்ட துணிக் கந்தல்களாகப் பிள்ளைகள். அவர்கள் உடம் பெல்லாம் வைசூரிக் கொப்பளங்கள். கண்பட்டை, நெற்றி, கன்னம் கழுத்தடி, திரேகம் பூராவும் அம்மையின் கண்கள். மீனா, ராச அன்னத்திற்காவது பரவாயில்லை.

அதிலும் மகன், வெண்மணி, அவன் மீது ஏராளம். அரிசியை அள்ளியிறைத்த மாதிரி அடர்த்தியாக அம்மையின் கண்கள். நாக்கில் உதட்டில் உள்ளங்கை எல்லாம். கண் இமைகளிலும் ‘கண்கள்’. பார்த்தாலே என் உடம்பு பதறுகிறது. மனசு கூசி

நடுங்குகிறது. டென்த் பரீட்சை எழுதி முடித்திருக்கிறவன். கெட்டிக்காரன். கவிதைகள் கூட எழுதுவான். சுயமானவன். சில கவிதைகள் கூட இலக்கிய இதழ்களில் பிரசுரமாகியிருக்கின்றன.

அப்பேற்பட்டவன் கண் திறக்க முடியாமல் நனைந்த துணியாகக் கிடப்பதைப் பார்க்கிற போது படுக்கவும் முடியாமல், புரளவும் முடியாமல், நேராக உட்காரவும் முடியாமல் அவன் தவிக்கிற தவிப்பையும், திணறலையும் மனசால் உணர்கிற போது. ஒரு தகப்பன் மனசு என்னமாய்த் துடிக்கிறது ! வெட்டுப்பட்ட சதைச்சிதறலாய் ரத்தம் கசிகிற ரணத்தில் மனசு துடிக்க... அதிலிருந்து கதையா ? கதை எழுதுகிற மன அமைதியா ? மனநிதானமா? குவிமையமாகிற உணர்வா? உணர்வின் குழைவா ? நிறம் மாறும் ரசாயனமா ? நடக்கிற கதையா ? ஹே !

மார்ச் மாசத்திலிருந்தே ஆரம்பித்துவிட்ட துன்பங்கள். நச்சரிப்பான கவலைகள். மனசுக்குள் நிரந்தர நமைசசல், எத்தனை பெருமூச்சுகளை விட்டாலும் அடங்காத நமைச்சல்.

மார்ச் மாசமே துரதிருஷ்டத்தின் அவலக் கூச்சலாகத்தான் கண் விழித்தது. ஓடியாடி, வீட்டு வேலை முழுவதையும் செய்து... ஒரு கப்பலின் மாலுமி போலத் திகழ்ந்தவள் என் மனைவி. திடுதிப்பென்று மயக்கம் போட்டு விழுந்தாள். வீடே பதறியது. பிள்ளைகள் கதறியழுதனர்.

“அம்மா... அம்மா..” என்று கலங்கினர். வீடு முழுக்கப் பதற்றம். எனக்கும் நடுக்கம்.

தெரு அல்லோல கல்லோலப்பட்டது. உறவுக்காரர்கள் ஓடி வந்தனர். டி.வி.எஸ். 50களில் ஏற்றி டவுனுக்குப் பறந்து... ஆஸ்பத்திரியில் விழுந்து... மனசுகள் கலங்கித் தவித்து... சகஜமாக...

அப்புறமும்... மயக்கம் வந்துவிடுமோ என்ற திகில், நிரந்தரமாக.

மூத்த மகள் வைகறை. இத்தனை அமளியிலும் +2 பரீட்சைக்கு விழுந்து விழுந்து படித்தாள். ராவிலும் பகலிலுமாய் படிப்பு. 12ந் தேதி பரீட்சை. எட்டாம் தேதியில் அவள் முகத்தில்

தெரிந்த முத்து. வைசூரியின் 'முத்து.' மனசுக்குள் தீவைத்த மாதிரியிருந்தது.

'முத்து தானா.. முத்துதானா...' என்று நப்பாசையோடு ஆராய்ச்சி.

'முத்தே தான் என்ற இடி.'

எனக்குள் கனவுகள் உடைந்து நொறுங்கி உதிர்கிற ரணம். இவளை டாக்டருக்குப் படிக்க வைக்கணும் என்ற கனா. அதற்காகவே இந்த ஆண்டு முழுவதும் ட்யூஷன் மூலம் அவளைத் தயாரித்தது. நுழைவுத் தேர்வு ஃபாரத்திற்கு இப்போதே அலைந்த அலைச்சல்.

எல்லாம் போச்சு. சுக்குநூறாயிருச்சு. கதையே கந்தலாயிருச்சு. சிற்பம் புழுதியாயிருச்சு. என்ன செய்ய?

"மாரியாத்தா விளையாண்டுட்டா..." என்கிற பெண்கள். முகமெல்லாம் அம்மை முத்துகள். மகளின் தோற்றமே விகாரமாகி... அயற்சியும் சோர்வுமாய் துவண்ட காகிதமாகி...

இந்த நிலையிலும் தேர்வு எழுதிவிட முடியுமா? ஒரு நப்பாசை. அதற்கான பேயலைச்சல். நாய் படாத பாடு. தலைமையாசிரியரைப் பார்த்து... கல்வியதிகாரிகளைத் தேடிக் கண்டடைந்து... பேசி...

எல்லாம் வீண். எழுதும் நிலையில் அவள் உடம்பு இல்லை. உக்ரமாகிவிட்ட அம்மை. எழுந்து உட்காரக்கூட முடியாத நிலைமை.

இழப்பின் கன பரிமாணத்தை உணர்ந்த என் வேதனை. யாரிடம் சொல்லியழ? என்ன சொல்லியழ? துரதிருஷ்டத்திற்கு யார் மருந்து தருவார்?

இதில் வீட்டுப் பெண்கள் வருத்தப்படக்கூடாது என்று சொல்கிற கண்டிஷன்.

"ஆத்தா எறங்கிட்டா. அவ இஷ்டம் போலிருந்துட்டு, ஆசைதீர விளையாடிட்டுப் போகட்டும். ஆத்தா வந்துட்டா... ஆனந்தம்தான். யாரும் வருத்தப்படக் கூடாது. ஆத்தா... கோவிச்சுக்குவா..."

ஒருபக்கம் இது உண்மைதான். பங்குனி, சித்திரை கோடையில் மட்டுமே வருகிற வைசூரி, மாரி(மழை)யாத்தா விளையாட்டுதான். வராமல் கண்ணாமூச்சி காட்டுகிற மாரியாத்தா. வெக்கை. மண்ணின் கொதிப்பு. வைசூரி முத்துகளாகத் தோலில் வெடிக்கிற அதன் கோபம்.

வீடெல்லாம் வேப்பிலைகள். தாளிதமில்லாத பத்தியச் சாப்பாடு எல்லோருக்கும். காலையும் மாலையும் வைகறைக்கு அம்மன் காப்புவிழுங்கித் தண்ணீர் குடிக்கிறாள்.

பரீட்சை கடந்து போகிற ரணம். எனக்குள் ஏமாற்ற வலி. ஏக்க வேதனை. ஒரு வருஷம் போகிறதே... படிப்பின் தொடர் சங்கிலி அறுபடுகிறதே என்கிற பயம்.

“என்ன செய்ய? தாங்கித்தான் ஆகணும். தலைச்சுமையா? அடுத்தவர் தலைக்கு மாற்றிக்கொள்ள. நோய், துரதிருஷ்டம். அவரவர்தான் அனுபவித்தாகணும். வேற வழி ?”

பதிமூன்று நாள் ரணம், எனக்குள்.

அவளுக்குத் தலைக்குத் தண்ணீர் ஊற்றி... எழுப்பிய ரெண்டாவது நாளில் தம்பி மகன் இளவேனிலுக்கு வைசூரி. அப்புறம் என் மகள் தென்றலுக்கு. அவளுக்கும் முத்துகள். அம்மை முத்துகள்.

“என்னடா இது, பெரிய கொடுமையாப் போச்சே” என்று புலம்பினேன்.

இன்னும் மூன்று பிள்ளைகள். நான், மனைவி, தம்பி, தம்பி மனைவி, இவர்களுக்காச்சும் வைசூரி வராமல் தடுத்தாகணும் என்கிற வேட்கை.

எட்டு மைல் தள்ளியிருக்கிறது கிராம நல மருந்தகம். ஓடினேன். அவநம்பிக்கை தெரிவிக்கிற அதிகாரிகள்.

“அம்மையை ஒழிச்சாச்சுன்னு கவர்மெண்ட் டிக்ளர் பண்ணியாச்சே... அம்மைப்பால் வைக்கிற டிபார்ட் மெண்டையே கலைச்சாச்சே...” என்கிறார்கள்.

அம்மையை ஒழித்துவிட்டார்களா? எங்கே? ஃபைலிலா? இதென்ன கொடுமை? அம்மையை ஒழித்து விட்டதாக அரசு முடிவு செய்தால்... என் வீடு அரசின் கணக்கில் இல்லையா? அம்மை விழுந்த என் குழந்தைகள் அரசின் ஜெனனப் பதிவில் இல்லையா?

கடைசியில் -

அம்மைப்பால் இல்லவே இல்லை என்று சாதித்து விட்டார்கள். இங்கு மட்டுமல்ல... எங்குமே இல்லையாம். தனியார் மருத்துக்கடைகளில் கிடைக்குமா? பணம் தந்து பெற்றுக்கொள்கிறேன்... என்றும் கேட்டுப் பார்த்தேன். எங்குமே கிடைக்காதாம் !

என்னாடா...யிது, கூத்து? 20-ஆம் நூற்றாண்டு விஞ்ஞானம் என்னாயிற்று? எய்ட்ஸ் எனும் ஈனத்தின் முன்னால் கைபிசைந்து, தலைகுனிந்து நிற்கிற விஞ்ஞானம். அம்மைக்கு முன்னாலும் கையாலாகாத பலவீனத்தில் வீரியமிழந்து விழுந்து கிடக்கிறதா? அரசின் ஃபைல் புரட்சி, விஞ்ஞானத்தின் காலை ஒடித்து, சின்ன அம்மையின் காலடியில் முடக்கிப் போட்டு விட்டதா? பரவும் தன்மையுள்ள இந்த நோயைக் கட்டுப் படுத்துகிற பொறுப்பிலிருந்து அரசு நழுவிக் கொண்டதா? நோயின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறார்களா?

டாக்டர்களிடம் ஓடினேன்.

மாத்திரை மருந்து எதுவும் கிடையாது. இருந்தாலும் பிரயோசனம் ஆகாது. ஒதுங்கியிருக்கிறது மூலமா மட்டும்தான் தவிர்க்க முடியும். வேற வழியே கிடையாது.

புகலற்றுப் போனேன். இன்று போய் நாளைவா என்கிற ராமனின் விளிம்பு நிலைப் பெருந்தன்மைகூட எனக்கு எதிர்ப்படவில்லை. நிராயுதபாணியாகிப் போன நிலையிலும் மூர்த்தண்யமாகத் தாக்கப்படுகிற கொடூரம். ராட்சஸம்.

வெந்து நொந்து போனேன். நொந்து நூலாகிப் போய் விட்டேன்.

உள்ளுக்குள் உடைந்து போனேன். ஆணி வேர் அறுபட்ட மரமாய் நான். ஒப்புக்கொண்டிருந்த கூட்டங்களுக்குப் போக மனமில்லை. மனசில் சுரத்தில்லை.

வருகிற கடிதங்களுக்குப் பதில் எழுத மனமில்லை. மிகப் பெரிய மனிதர்களின் பாராட்டுக் கடிதங்களுக்குக்கூட சந்தோஷப்பட மனசில் தெம்பில்லை.

எப்படித் சந்தோஷப்பட? நனைந்த காகிதத்தில் பேனாவினால் எப்படி எழுத முடியும்? துவண்ட மனசில் எந்தக் காகிதம் மகிழ்ச்சியை உருவாக்கிவிட முடியும்?

தென்றலுக்கு முத்து இறங்கி... கைபடாத தண்ணீரை வெங்கலப் பானையில் பிடித்து, வேப்பிலைகள் போட்டு ஏறு வெயில், இறங்கு வெயில் எல்லா வெயிலுக்கும் வெளியே வைத்து... சாயங்காலம் இறங்கு பொழுதில் தலைக்குத் தண்ணீர் ஊற்றிவிட்டார்கள்.

நாலே நாலு நாள்தான். மூன்றாம் தண்ணீர் ஊற்றுவதற்குள்.

பொன் மீனா முகத்தில் முத்து. வெண்மணி உடம்பில் முத்து. இதோ... ராச அன்னமும், ஏககாலத்தில் மூவருக்கும். அதிலும்...

வெண்மணிக்கு ரொம்ப. இடைவிடாமல் முத்துகள். தட்டைப் பயறு மாதிரி முத்துக்கள். புரளமுடியவில்லை. படுக்க முடியவில்லை. உட்கார்ந்திருக்கவும் முடியவில்லை. காந்தல் வேறு. பாவம்... அவன் தத்தளிக்கிற தத்தளிப்பு. அவன் கண்ணில் மிதக்கும் அச்ச உணர்வு. மிரட்சி. அயற்சி சோர்வு.

எனக்குப் பார்க்கவே சகிக்கவில்லை. மனசு கிடந்து அதிர்கிறது. நடுங்கி நடுங்கிக் குளிர்கிறது.

பார்க்காமல்... தெருவில் போய் நிற்கலாம் என்றால்... தெருநிறைய சாதித் தகராறு. எல்லா மனிதர்கள் கண்களிலும் புகலற்ற பீதி, கிலி உணர்வு. என்னாகுமோ, ஏதாகுமோ... என்கிற பதைப்பு. பேச்சு பூராவும் வெக்கை. கோடை வெக்கை. மனசுகளில் வெடிக்கும் அம்மைக் கொப்புளங்களாக சாதி உணர்ச்சி. உஷ்ண உணர்ச்சி.

கிராமத்துக்கு பஸ் வரத்து நிறுத்தப்பட்டு பன்னிரண்டு நாட்களாகி விட்டது. வெட்டும் குத்தும், வதந்தியும் அலறலுமாய் நாட்கள். வன்முறையாளர்கள் கையில் மாவட்டத்தையே ஒப்படைத்துவிட்டு... இத்தனை நாளாய் வேடிக்கை பார்க்கிற பொறுப்பான நிர்வாகம்.

தெருவுக்குப் போக முடியவில்லை. எங்குமே சவக்களை. மயான நெடி. கறுத்த முகங்களில் அப்பிக் கிடக்கும் அச்ச இருட்டு. என்னத்தைப் பேச? எவரிடம் பேச? எப்படிப் பேச?

அங்கே வெட்டு... இங்கே சாவு... அங்கே பிரேதம் என்று அலறலான பீதி. வதந்தி கொஞ்சம் நிஜம்.

பிரசவத்துக்கு அவஸ்தைப்படும் பெண்ணை நகரத்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போக முடியவில்லை. கோயில் குளத்துக்கு, கல்யாணம் காட்சிக்குப் போக முடியவில்லை. போனவர்கள் திரும்பவில்லை. இருக்கிறார்களா, செத்தார்களா என்று இங்குள்ளவர்களுக்கு மிரட்சி. பயம். கவலை.

இதில் போய் எப்படிப் பேச? என்ன நிம்மதியில் பேச? ரோம் நகரம் தீப்பற்றி எரியும் போது, நீரோ மன்னன் மலர்க் கண் காட்சியை ரசிக்க முடியும். என்னால் முடியவில்லை. இதயம் இருக்கிறது. அதில் ஈரமிருக்கிறது. கவலை இருக்கிறது. என் சகமனிதர்களின் வேதனை கண்டு கலங்குகிற கலை மனசு இருக்கிறது.

இந்தக் கவலையில் நான் எப்படி உட்கார்ந்து... ஒரு மனசாகக் கதை எழுத? உணர்வுகளைக் குவித்து எப்படி எழுத? என்ன சிந்திப்பது? எங்கிருந்து வரும் நிம்மதி?

மதிப்புரை கேட்டு வந்திருந்த நாவல்கள் இரண்டும்... திறக்கப்படாமல் கிடக்கின்றன. என் பக்கத்தில் ஒரு பேடு. கிளிப்பில் கற்றையாகக் காகிதம். அதில் முதல் பக்கத்தில்–

193 என்று பக்க எண் இடப்பட்டிருந்தது. அதன் இடது மூலையில் 30 என்று எண்ணிட்டு அதைச் சுற்றிய வட்டக் கோடு. 193-ஆம் பக்கத்தில் துவங்குகிற 30வது அத்தியாயம்.

தூசி படிந்து கிடந்தது. நாள்ப்பட்ட நீர்த் துளிக் கறைகள்.

இது ஒரு கட்டுரை நூல். பெரிய புத்தகம். அதற்கான தயாரிப்பு. தொடர் அறுந்து போய்க் கிடக்கிறது. ரெண்டு மாசமாய்.

என்னாச்சு? எனக்குள் வற்றிப் போச்சா? கதை ஊற்று அடைபட்டுப் போச்சா? இனி எழுதவே முடியாதா, என்னால்?

சூழலின் கைதியாகச் சுருண்டு கிடக்கிறேனா? பலவீனமுற்று வீழ்ச்சியுற்று, சூழலின் அடிமையாகி விட்டேனா? சூழலின் இறுக்கத்தால் சூறையாடப்பட்டு... அந்தரத்துக் காற்று வெளியில் மிதக்கும் துரும்பாகிப் போனேனா?

சூழலின் வரம்பை உடைத்து, சூழலைப்புதுப்பிப்பவன் தானே, மனிதன் ! சூழலின் வரம்புக்குட்பட்டு வாழும் மிருகங்களிலிருந்து மனிதனை வேறுபடுத்துவதே... இந்த மீறல் தானே! சூழலை மாற்றும் வல்லமைதானே! சூழலை எதிர்த்துப் போரிடுகிற ஆற்றல் தானே... மானுட ஆற்றல்?

அதை நான் தொலைத்துவிட்டேனா? உடைந்து நொறுங்கிப் போனேனா? நொறுங்கி நொ(ய்)த்தவிடாகிப் போனேனா? சோர்ந்து துவண்டு விட்டேனா...?

எனக்குள் ஆயாசப் பெருமூச்சு. மகனைப்பார்க்கிறேன். அவன் முகமெல்லாம் அம்மை முத்துகள். கையில் உள்ளங்கையில், கால்களில், பிருஷ்டத்தில் முதுகில் எல்லா இடத்திலும் முத்துகள். நீக்கமற நிறைந்திருந்த முத்துகள்.

எனக்குள் பயப் படபடப்பு. நரம்புகளில் பரவுகிற பயக்கூச்சம். அச்சப் புல்லரிப்பு.

அவனும் பயப்படுகிறான்.

சோகமாய் சிரிக்கிறான். சிரிக்க முயல்கிறான். முடியவில்லை.

"என்னப்பா...?" என்கிறான். எனக்கு ஆறுதல் சொல்ல விரும்புகிற கண்கள்.

"என்னடா...?"

"தலகாணிக்கு அடியிலே ஒரு கவிதை எழுதி வைச்சிருக்கேன்..."

"ஏண்டா... இந்த நெலையிலே எதுக்கு எழுதுற? ஏன் ஸ்ட்ரெயின் பண்றே?" அன்புக் கண்டிப்பு.

"சும்மாதா..."

"என்ன... சும்மாதான்?"

"நாலு வரிதாப்பா. படிச்சுப் பாருங்க..."

*"எனக்குள் என்னைத் தேடினேன்*
*காலைக் கவ்வும் முதலைக் குணம்,*
*ஆளைக் கொல்லும் புலிக்குணம்*
*ஏய்த்துப் பிழைக்கும் நரிக்குணம்*

*எல்லாம் இருந்தன.*
*எங்கே மனிதம்?*
*இந்தக் கேள்வியின்*
*ஏக்கத்தில் புதைந்து கிடந்தது*
*என் மனிதம்."*

- பொ. வெண்மணி.

"அற்புதம்டா."

நிஜமாகவே பாராட்டினேன். மனப்பிரமிப்பின் அசல் வெளிப்பாடாய் என் பாராட்டு. அவனது கோணல் மாணலான பேனா எழுத்துகளையே திரும்பத் திரும்பப் பார்க்கிறேன்.

இந்தக் கவிதை, எனக்குள் வேறொரு பரிமாணத்தில். பளீரென்று வெட்டி மின்னுகிற புது மின்னலாய்.

இந்தக் கேள்வியின்

ஏக்கத்தில் புதைந்து கிடந்தது.

என் மனிதம்.

எழுத முடியலியே என்கிற ஏக்கத்தில் - மன அழுத்தத்தில் தான் என் கதைகள் புதைந்து கிடக்கின்றனவா? இனம் புரியாத இந்தக் கவலைக்குள்தான் என் கதை ஊற்றுகளா?

இந்த மின்னலே எனக்குள் வெளிச்சமாக - ஊற்றுகள் உடைத்துக்கொண்டு பீறிட கரையைப் புதுப்பிக்கும் நதியாக நடை போட...

எந்தக் கருவை எழுத?

இதுவா பிரச்னை? இப்போதைய என் மனநிலையையே எழுத வேண்டியது தானே.

எழுதத் துவங்கிவிட்டேன், என் கதையை.

***08.06.97, கல்கி***

# 3. ரோஷாக்னி

புளுகாண்டிக்குள் ஒரே செம்மாளம். ஆதாளி, ஆர்வக் குதூகலத்தில் அலைபாய்ந்து வந்தான். இருப்புக் கொள்ளாமல் துள்ளித் துள்ளிக் குதித்தான். எப்படா விடியும் என்று மனசு கிடந்து துடித்தது. தவியாகத் தவித் தலைந்தான்.

'இன்னும் பொழுது அடையலே. மஞ்ச வெயில் அடிக்கிற சாயங் காலத்துலேயே பொழுது எப்ப விடியும்னு தவிச்சா... எப்படி? சரியான கோட்டிக்காரப் பயதான்!'

தன்னைத்தானே பரிகாசித்துக் கொள்கிற புளுகாண்டி. இளக் காரமான ஒரு புன்னகை மின்னல் உதட்டில் மின்னி மறைந்தது.

அப்பவும்... அவன் நெஞ்சு ஆவல் பறப்பில் துடிப்பதை அவனால் நிறுத்தவே முடிய வில்லை. அவன் மனசு, நினைப்பு, உயிர் எல்லாமே எப்ப விடியும் என்ற ஏக்கத்திலேயே குவிந்து கிடந்தது.

*"ஏன்... நாம எதுவே தாழ்ந்துட்டம்? கொழுப்பான வளர்ப்புப் பன்னின்னு ஆசைப் பட்டுத்தானே எல்லோரும் தேடி வந்து, நின்று வாங்கிட்டுப் போறாக? அப்படித்தானே இருவது கிலோ வித்துருக்கு? இவருக்கு மட்டும் என்னத்துக்குக் குடுத்தனுப் பணும்?"*

விடிந்தால்... பங்குனிப் பொங்கல். ஊரெல்லாம் பலகார வாசம். ஓய்வில்லாமல் 'கடபுட' வென்று சுற்றிக்கொண்டேயிருக்கிற ஆட்டுரல்கள். ஊர் ஜனம் முகத்தில் கொண்டாட்ட கும்மாள வெளிச்சம். பிள்ளைகள் தரையில்கால் பாவாமல் சிட்டுக் குருவிகளாக... கொழுக்கட்டைகளைக் கவ்விக் கொண்டு...

புளுகாண்டிக்கு இதிலெல்லாம் நாட்டமில்லை. விடிந்தால்... கறி திங்கலாம். அதில்தான் அவன் குறி. கறிஎன்றால் அவனுக்கு உசுர். அவனுக்கு மட்டும்தானா?

கவிச்சிவாடை கண்டு ரொம்ப நாளாயிற்று. ரெண்டு மூணு மாசமிருக்கும். மேலத்தெரு அப்பைய நாயக்கர் வீட்டு எருமை மாடு மண்டையைப் போட்டது.

கிழட்டு மாடு என்னத்தைத் தின்னதோ... எதுல போய் மேய்ஞ்சதோ... வயிறு உப்பிக்கொண்டேயிருந்தது. மூச்சுத் திணறியது. புல்லரித்துப் புல்லரித்து நடுங்கியது.

ஓடி ஓடி வைத்தியம் பார்த்தனர். எல்லா கைப் பக்குவமும் செய்து பார்த்தனர். எதுக்கும் மசியாமல் மண்டையைப் போட்டது.

புளுகாண்டியும் கூடப்போனான் தூக்க. செத்த மாட்டைக் கொண்டுவந்து, சேரியில் அறுத்துக் கூறுபோட்டார்கள். இவன் பங்குக்கு ரொம்பதான் வந்தது. ரெண்டு கிலோவுக்குக் குறையாது.

புளுகாண்டியின் அம்மா மசாலா அரைத்துக் கணிசமாக ஊற்றி கூடுதலாக எண்ணெய் விளாவி, இஞ்சித் துண்டெல்லாம் தட்டிப்போட்டு வேக வைத்தாள். கறியை ருசி பார்த்துரணும் என்று நாக்கில் எச்சில் ஊற காத்துக்கிடந்தான். 'இப்ப வெந்துரும், பெறகு வெந்துரும்' என்று கிடையாய்க் கிடந்தான்.

நினைக்க நினைக்க மனசுக்குள் துடிப்பு; தவிப்பு; பரபரப்பு. கறிவேகிற குழம்பு வாசம் கம்மென்று நாசியைத் துளைத்தது. கபகபாவென்று வயிறு பசித்தது. உயிரைக் கவ்வுகிற பசி. மனசிலிருந்துதான் பசி இறங்குகிறதா?

“என்னம்மா... வெந்துருச்சா?”

நொடிக்கொரு தடவை எட்டிப் பார்த்தான். ஏக்கமாகக் கேட்டான்... கேட்டான்... கேட்டுக் கேட்டு நச்சரித்தான்.

“பொறுடா சனியனே, கறி வேகவே மாட்டேங்குது. கெழட்டுக்கறி, வேகமாட்டாத சவ்வு. உசுரை வாங்குது. சித்தப் பொறுடா... கண்ணு.”

எரிந்து விழுந்து, ஆசைப்படுகிற மகனின் நியாயத்தில் கனிந்து, குழைந்து... சனியன் - கண்ணுவில்கெஞ்சலோடு முடிந்தது, அம்மா வின் குரல்.

ரொம்ப நேரமான பிறகுதான்... சோறு வைத்து, கொதிக்கக் கொதிக்கக் குழம்பு ஊற்றினாள். உயிரே நாக்குக்கு வந்த மாதிரி மனப்பரபரப்பு, புளுகாண்டிக்கு. கை விரல்கள் நடுங்கிற்று.

வெள்ளைச் சோற்றில் அரைத்த சந்தன நிறத்தில் குழம்பு. ஆசை மூட்டுகிற கறித்துண்டுகள். சுடச்சுடக் கொதித்தது.

ஆவி பறக்கிற கறித்துண்டு ஒன்றை எடுத்து, உள்ளங்கையில் வைத்து ஊதி ஊதி ஆற்றிவிட்டு வாயில் போட்டான்.

கறி சக்கை மாதிரியிருந்தது. மென்று மென்று பார்க்கிறான். ரப்பரை மெல்லுகிற மாதிரி இருக்கிறது. ‘நச் நச்’சென்று சத்தம்தான் வருகிறது. கறி பல்லில் கடிபடவில்லை! நொறுங்க வில்லை. நாக்கில் ருசியாக உரசி உள் இறங்கவில்லை.

சப்பென்று அறைகிற மாதிரியோர் ஏமாற்ற உணர்வு.

“ச்சேய் ! கெழட்டுக் கறி. சதைப்பிடிப்பு இல்லாத வெறும் சவ்வு. கறி மாதிரியே ருசி தட்டலியே... கைக்கு எட்டி வாய்க்கு எட்டி நாக்குக்கு எட்டாமப் போச்சே.”

வெறுப்பும் எரிச்சலுமாக நிறம் மாறுகிற ஏமாற்ற உணர்வு. தக்கிமுக்கி சாப்பிட்டு முடித்தான். உயிரில்லாத உணவு. கறி சாப்பிட்ட உணர்வோ... நிறைவோ எதுவுமில்லை.

மனசுக்கு ருசியாய் அனுபவித்துச் சாப்பிட்ட வேறு வேறு நாட்கள். பழைய மாமிச நாட்கள். அதன் ருசி. அதன் வாசம். எல்லாம் நினைவில் உரசி, இன்றைய நிராசை உணர்வைப் பெரிதாக்கியது.

அதுதான் கடைசியாகத் தின்ற கறி. அதற்குப் பிறகு கறி என்ற பேச்சே இல்லை. கண்ணில் தட்டும் வாய்ப்பே வரவில்லை.

என்ன செய்யறது? எளிய சாதிக்காரன். அன்னாடக் கூலி. திண்டாடிய பிழைப்பு. காட்டில் போய் உசிரைச் சிந்தினால் வீட்டில் உலை கொதிக்கும் . இல்லையென்றால்... அடுப்புச் சாம்பலைக் கோழி கிண்டி மேயும்.

இந்தப் பிழைப்பு லட்சணத்தில் கவிச்சி எங்கிருந்து கிடைக்கும்? எண்ணிக்கூடப் பார்க்க முடியுமா?

நாளைக்கு விடிந்தால்... பங்குனிப் பொங்கலுக்குக் கறி திங்கலாம். ஆசை ஆசையாகத் திங்கலாம். ஆசை தீரத் திங்கலாம். நிச்சயமாகிப் போன விஷயம்.

அதில் அப்பீலே இல்லை.

கட்டைக்கால், கனத்த உருப்படி, நெய்யாய் வடியும் கொழுப்பு. கறி, மரச்சிறாய் மாதிரி இருக்கும். அதிலும் சந்தேகமேயில்லை.

இவனது குடிசைக்குப் பின்னால்தான் ரெண்டு ரெண்டு கால்களாகச் சேர்த்துக் கட்டுப் போடப்பட்டுக் கிடக்கிறது. நல்ல கட்டைக்கால். வகையான சரக்கு. செழித்த வளர்ப்பு. கூரை நிழலில் படுத்துக்கிடப்பதைப் பார்த்தாலே... ஏதோ ஒரு கறுப்பு மலை சாய்ந்து கிடக்கிற மாதிரியிருக்கிறது. கிட்ட ஆள் போனால், 'ர்ர்ருக், ர்ர்ருருக்க்'கென்று சீறிச் சினந்து உறுமுகிறது.

அந்த உறுமல் சத்தம் கேட்டாலே... குலை பதறுகிறது.

புளுகாண்டி குடிசைக்குள் நுழைந்தான். அடுக்குப் பானையில் ஓலைக் கொழுக்கட்டை கிடந்தது. ஓலையை உருவிப் போட்டுவிட்டு... கொழுக்கட்டையைக் கடித்தான். கடைவாய்ப் பற்களில் தேன்பாகாய் உடைந்து, கரைந்து நாவில் தித்திப்பாகப் பரவிப் படர்ந்தது. இனிமைக் கரைசலாக உள்ளுக்குள் இறங்கியது.

ஆட்டுரலில் அரிசிமாவைப் போட்டு ஆட்டிக் கொண்டிருந்தவள் முனியம்மா. வலது கையில் முன்பகுதி முழுக்க மாவு அப்பியிருந்தது, வெள்ளை உறை மாட்டிய மாதிரி.

"என்னடா... கொழுக்கட்டை திங்கீயா?"

"ஆமாம்மா..."

"தேங்காய்ச் சில்லும் சேத்துக் கடிச்சுத் தின்னுபாரு. இன்னும் ருசியாயிருக்கும்."

"சில்லு எங்க இருக்கும்மா?"

"தண்ணிச்சால் இருக்குல்லே ? அதுலேயிருக்கும். எடுத்துக்க."

இடதுகையில் ஒரு கை உப்பை அள்ளிக்கொண்டு, வந்த வேகத்தில் வெளியேறுகிற முனியம்மா.

"என்னம்மா... நாளைக்குத் தோசையா?"

"ஆமாடா..."

"அப்ப... கறி எப்ப?"

"போடா பறப்பெடுத்த பயலே ! விடியற்காலம் கறியை வதக்கித் தாரேம்ப்பா. மதியத்துக்குக் கொழம்பு வெச்சித் தாரேன். என்னப்பா?"

வெளிச்சமாகிற புளுகாண்டி முகம். மகிழ்ச்சி மின்னல் கண்ணில்.

"ஹைய்ய் ! அம்மான்னா... அம்மாதான்... தங்க அம்மா!"

சின்னப்பிள்ளை மாதிரி துள்ளித் துள்ளிக் குதிக்கிற புளுகாண்டி. 'அய்யக் சக்கை... அய்யக் சக்கை' என்று சொல்லிக் கொண்டே குதியாளம் போடுகிறான். மடக்கிய கைகளால் கட்கத்தில் அடித்துக்கொள்கிற உல்லாசம். உற்சாகப் பெருக்கு. றெக்கையடித்து மகிழ்கிற ஒரு மயிலைப் போலிருந்தது.

"போடா... கிறுக்குப் பய மவனே" என்று செல்லக் கோபமாகக் கண்டித்துவிட்டு... சிணுங்கல் சிரிப்பாக சிரித்துவிட்டு மறைகிற அம்மா. அந்தக் கிழட்டு முகத்தில் மின்னிய பெருமித ஒளி. பாச வெளிச்சம். அன்பு வாசத்தின் பிரகாசிப்பு.

"முழுத்த இளவட்டப் பய, கறின்னா... சின்னப்புள்ள மாதிரி கும்மாளம் போடுதான். கண்ணு மூக்குத் தெரியாம குதிக்கான். அப்பவும் ... கவுச்சி வாடைக்கு இப்படியா பறப்பாக?"

செல்ல மகனின் சுபாவம் பற்றிய பூரிப்பான முணு முணுப்போடு தெருவில் போகிற அம்மா.

அம்மாவையே பின்தொடர்ந்து போகிற அவனின் பார்வை, களி துள்ளும் பார்வை.

ஜாக்கெட் போடுகிற வயதை ரொம்ப முந்தியே தாண்டிவிட்ட அம்மா. அம்மா வயசுக்காரிகளெல்லாம் ஜாக்கெட் இல்லாமல் நூல் சேலையைப் பின் கொசுவம் வைத்துக் கட்டியிருப்பார்கள். அதுதான் பொருத்தமாகவும் இருக்கும். லட்சணமாகவும் இருக்கும்.

ஆனால், அம்மா மட்டும்...?

ஆண்பிள்ளை சட்டை மாதிரி, லொடலொடவென்று லூஸாக ஒரு ஜாக்கெட்டோடு... வித்தியாசமாக இருக்கிறது. நல்லாவே யில்லை. என்னவோ மாதிரி யிருக்கிறது. மனசுக்கு ஒவ்வ வில்லை. என்னமோ வடக்கத்திக்காரி மாதிரி...

ஆனா, அந்தச் சட்டை ஒரு காயம். காயத்தின் திசை. சமூகச் சோகம்.

... எப்போதோ நடந்த பஞ்சாயத்துத் தேர்தல். சுடுகாட்டுக்குப் பாதை கேட்டு வோட்டுப் போட மறுத்துவிட்ட சேரி ஜனம். அதனால் தோற்ற, கேவலப்பட்ட ஊர்க்காரர்களின் மூர்க்கம், ஆத்திர வெறி, ஆங்காரம்.

எளிய சாதி நாய்களுக்கு இம்புட்டுத் திமிரா? வைராக்கியமா? என்கிற கண்மூடித்தனமான வக்கிரம்.

ஒரு ஜாமம். ஆயுதங்களோடும் மிருகக் குணத்தோடும் சேரிக்குள் அத்துமீறலாகப் பாய்ந்த ஆதிக்கவெறி.

சேரியின் இளவட்டங்கள் ஓடிப்போக... கிழடு கட்டைகளுக்கும் மரண காயங்கள். ஏழு பெண்கள் நாசக்காடாகியிருந்தனர். அதில் ஒருத்தி முனியம்மா.

அவள் வலது மார்பகத்தில் ஆதிக்கப் பற்கள் பதிந்த ரத்தக் காயம். அழுந்தப் பதிந்த ரத்தச்சுவடு.

புண்ணாகி... வீங்கி... நீர் வைத்து...

பச்சிலை வைத்தியமும் கசாய வைத்தியமுமாக... புண் ஆறவே ஆறு மாதமாயிற்று.

மனசுக்குள் ஆறாத புண்.

வெளியே ஆறாத தழும்பு. ஆறாத சோகத்தின் அடையாளம். ஆறாத மானக்கேட்டின் கேவலம். ஆறாத உள் ரணம். ஆறாத உலைக் கொதிப்பு. மனசும் உடம்பும் சீரழிக்கப்பட்ட நாசக்காடு பண்ணப்பட்டதன் சின்னமாக அந்தத் தழும்பு.

இந்தச் சீரழிவு - கேவலம் காரணமாகவே முனியம்மாவுக்குத் தாலிகட்ட யாரும் தயாரில்லை. ரெண்டு மூணு வருஷம் கழித்து, எப்படியோ கல்யாணமாகி, அதற்குப் பிறகு தான் புளுகாண்டி பிறந்தான்...

அந்தத் தழும்பின் நிரந்தர இழிவான ரணத்தில், இன்றளவும் குன்றிக் கூசுகிற அம்மா. அதன் காரணமாகவே, கிழவியான பின்பும் லொட லொட ஜாக்கெட்டோடு...

ஆயிரம் தடவை அழுது அழுது புலம்பிப் புலம்பி அம்மா சொன்ன அந்தப் பாதகக் காட்சிகள், அம்மாவின் கண்ணீர் வரிகளில் அந்தக் கந்தகக் கொடுமை. சதை வெறியும் ரத்த வெறியுமாக சேரிப் பூக்களைச் சீரழித்த மிருக ராட்சஸம்.

நினைவின் நிழல்கள் மனசின் வலியாகப் படர்ந்தது. புளுகாண்டிக்கு கொழுக்கட்டை தின்ன மனசில்லை இப்போது. நாக்கெல்லாம் கசந்து வந்தது. பெருமூச்சோடு வெளியே வந்தான். மனசில் இனம் புரியாத வலி.

காலாற நடந்தான். தோப்புப் பக்கமாகப் போனான். கீழே கிடந்த பனை ஓலைகள்... காய்ந்த பனை மட்டைகள்... உலர்ந்த தென்னை மட்டைகள்.

ஒரு பெரிய கட்டாகக் கட்டிக் கொண்டு வந்தான். விடிந்தால்... இது வேணும். அடிக்கிற கட்டைக்காலை வாட்டி எடுக்கணும். அதற்கு இந்த மாதிரியான விறகுகள்தான் தோதுப்படும்.

விடியவில்லை இன்னும். இருள் பிரியவில்லை. நாலு மணி இருக்கும். கனத்த இருட்டு. கோட்டான் மாதிரி முழித்தே கிடந்தான். எப்படா விடியும்... எப்படா கறி திங்கலாம் என்று மனசு கிடந்து துடியாகத் துடித்துக் கொண்டிருந்தது.

"எலேய் புளுகாண்டி... எந்திலே. ஜோலியை இப்ப ஆரம்பிச்சாதானே... காலா காலத்துலே காரியத்தை முடிக்க முடியும்? எந்திடா..."

லேசாக்த் தொட்டு எழுப்பினர் நாலைந்து பேர். சேரிக்காரர்கள் தாம். லேசாகக் கண்ணயர்ந்திருந்த புளுகாண்டி, 'தடபுடா' வென்று துள்ளத் துடிக்க எழுந்தான்.

"என்ன... என்ன விடிஞ்சுபோச்சா ?" பதறியடித்து அலறிய அலறலில் தூக்கச்சடவு பயந்துபோய் உதிர்ந்து விட்டது."

"ஆமா... ஆமா... விடிஞ்சுபோச்சு. கறியாக்குகிற ஜோலியை ஆரம்பிப்போம் !"

சேரியின் மையத்தில் தெருவிளக்கு. ட்யூப்லைட்டின் வெள்ளை வெளிச்சம். அந்த நாலைந்து பேரோடு இளவட்டம் புளுகாண்டியும்.

குடிசைக்குப் பின்னால் கிடந்த கறுப்பு மலை. ஆள் நெருங்கவும் பதட்டமும் மிரட்டலுமாக உறுமியது.

'கா்ரு... புர்ர்ரு' என்று காட்டுத்தனமாகக் கத்தியது.

கட்டிக் கிடந்த கால்களுக்குள் உலக்கையைச் சொருகினர். அந்தப் பக்கம் மூணு பேர்... இந்தப் பக்கம் மூணு பேர். தக்கிமுக்கி தம்ம் பிடித்துத் தூக்கினர்.

மலையின் கனம். கறுத்த பாரம். மூச்சு முட்டுகிறது. தூக்குவது சுலபமாக இல்லை. " ம் தூக்கு... தூக்குங்கடா... விடாதீங்க... தம்ப் பிடியுங்க. விடாதீங்க... ம் தூக்கு... அம்புட்டுத் தான்" என்று ஆளாளுக்குக் கத்தி... உற்சாகப்படுத்தி... தைரியப்பட்டு... எப்படியோ தூக்கிக்கொண்டு வந்து சேர்ந்தனர்.

விளக்கு வெளிச்சத்தில் கறுப்பு மலை. உறுமுகிற மலை. கனத்த பன்றி, முன்னங்கால் ஒன்றையும் பின்னங்கால் ஒன்றையுமாகச் சேர்த்துக் கட்டப்பட்டிருந்தது. ரெண்டு கட்டு. ரெண்டு கட்டுகளையும் ரெண்டு பேர் பற்றிப் பிடித்து... விரித்து, திமிறவிடாமல் அழுத்திக்கொள்ள. . .

மல்லாக்கக் கிடந்த பன்றியின் நடு நெஞ்சில் ஓங்கி விழுந்த உலக்கையடிகள், தலைக்கு மேல் ஓங்கி விழுந்த அடிகள்.

“டொபா...ர், டொபா...ர்” உலக்கையடியிலும் பன்றியின் மரண அலறலிலும் தெருவே அதிர்ந்தது. ஒரு நடுக்கம் நடுங்கி நின்றது.

“இன்னும் உசுரு கெடக்கா... இல்லே, இன்னும் ரெண்டு போடு போடலாமா?”

“இல்லே... செத்துப்போச்சு.”

பனை மட்டை, ஓலைகளைப் போட்டுத் தெருவிலேயே தீயை மூட்டினான் புளுகாண்டி. ஓடி ஓடிப் பரபரத்தான். அந்த வைகறையிலும் வியர்த்துக்கொட்டியது அவனுக்கு. கவிச்சி மோகம் அவனை விசைப்படுத்திக்கொண்டே இருந்தது.

செத்த பன்றியைத் தீக்குள் உருட்டிவிட்டான். தீயை அணையவிடாமல் ஓலைகளையும் மட்டைகளையும் போட்டுப் பெருக்கினர். ஜ்வாலை விட்டெரிந்த பெருந்தீயில் பன்றியை உருட்டி உருட்டிப் புரட்டினான்.

ரோமம் கருகுகிற சுருசுரு சத்தம். பன்றியின் கருயாமையான மேல் தோல் உரிந்து... உரிந்து... சுருண்டு உதிர்கிறது. பன்றி மேலும் மேலும் விறைக்கிறது. ரோமமும் தோலும் கருகுகிற வாசம். நெடி. இந்த வாசம் எப்பவுமே புளுகாண்டிக்குப் பிடிக்கும். ஆசையோடு மூச்சிழுத்து உள் வாங்கினான்.

பன்றி தோலெல்லாம் உரிய... உரிய... வெண்பன்றியாக நிறம் மாறுகிற வித்தியாசம்.

நெருப்பிலிருந்து வெளியே புரட்டப்பட்ட பன்றி. உடைந்த செங்கற்களால் பன்றியின் உடம்பெல்லாம் “பர்ர்... பர்ர்ர்” ரென்று தேய்த்தான். அழுத்தமான தேய்ப்பு. முழுத்த இள வட்டத்தின் பலம் முழுவதையும் உள்ளங்கையில் இறக்கி... தேய்த்த தேய்ப்பு. சொச்சமிருந்த கருந்தோலை அகற்றுகிற யத்தனிப்பு.

அப்புறம்... பிளேடைக் கொண்டுவந்து நெருப்புக்கும் கருகாத ரோமக் கட்டைகளை ஒன்றுவிடாமல் வழித்தான். அரைத்த மஞ்சளால் பன்றியின் வெளுத்த உடம்பு முழுவதும் பூசப்பூச... மஞ்சள் பன்றியாக மாற...

இப்போது ... சாக்கடையில் புரண்ட பன்றிதானா என்பதை நம்பவே முடியவில்லை. அம்புட்டு லட்சணமாகிவிட்டது.

"வெள்ளக்காரிச்சி மஞ்சத் தேச்சிக் குளிச்ச மாதிரி" என்கிற வரி, மனசில் மின்னி மறைந்தது. வைத்த கண் எடுக்காமல்... இமை தட்டாமல் - பன்றியின் அழகையே பார்த்து ரசித்தான். அப்படியே பிய்ச்சுத் திங்கலாம் போலிருந்தது புளுகாண்டிக்கு.

"ம்... சரி, அந்தப் பலகைக் கதவை மலர்த்திப் போடு."

"அது மேலே ஓலைப் பாய்களை விரிங்க... கந்தல் பாயாயிருந்தாலும் பரவால்லே.

"அருவாமணைகளை எடுத்துப் போடுங்க. அறுத்துப் போடுகிற கறிச்சதையை, துண்டு துண்டா அறுத்துக் கூறு அடிக்கணும்லே?"

"மொதல்ல கத்தியைக் கொண்டா."

"ஆமா, கழுத்திலே வெட்டி, தலையைத் துண்டா எடுக்கணும்லே?"

"கறிக்குச் சேதாரமில்லாம... ஒட்டப் பிடிச்சு அறு."

"வவுத்தைக் கிழிச்சு... கொடலை எடுத்து ஒரு கூடையில போடணுமப்பா."

"தலையையும் கொடலையும் தனியா ஒதுக்குன பொறகுதானே... கறியிலே கத்தி வைக்க முடியும்?"

"அறுத்த தலையை மண்ணுலே படாம... ஓரமா வையுங்க. நாய்கீய் கவ்விக்கிட்டு போயிராமப் பாத்துக்கங்க."

"சரியப்பா.. கறிக்கு எம்புட்டுப் புள்ளிக சேர்த்துருக்கீக? கட்டைக்கால்னா... இப்புடி கொழுத்த உருப்படின்னா... கறி கேட்டு நா, நீன்னு ஓடியாருவாக. அவசரத்துலே வரவர போட்டுட்டா, நமக்கு இல்லாமப் போயிரப் போவுது. அதையும் கவனிச்சுக்கங்க."

"அதுவும் நெசந்தானப்பா. கவனமாயிருக்கணும். ரவ்வும் பகலுமா பாடுபட்டுட்டு, அறுத்து அறுத்து ஊருக்குப் போட்டுட்டு... நாம வெறும் ஓலைப் பாயை மோந்துபாக்கவா? நல்ல கூத்துதான்."

"சரிப்பா. எம்புட்டுப் புள்ளிக சேர்த்துருக்கீக?"

" நம்ம தெருவுலே, நம்ம ஆளுக மட்டும் நாப்பத்து ரெண்டு கிலோ. ஊர்க்காரச் சாமிமாருக பதினெட்டு கிலோ."

"ஆக... அறுபது ஆச்சா? உருப்படி தொண்ணுத்தஞ்சு வரைக்கும் வரும். முப்பது கிலோ மிச்சமிருக்கும். இனிமே கறி கேட்டு ஊர்க்காரச் சாமிமாருக வந்தா... அந்த முப்பதுக்குள்ளே போட்டுருவமா?"

புளுகாண்டி ஆத்திர அவரசமாகக் குறுக்கிட்டான்.

"அதெல்லாம் வேண்டாம். இருவது கிலோ மட்டும் போடுவோம்."

"மிச்சத்தை என்ன செய்யடா?"

"மிச்சம் இருக்கட்டும். நம்ம தெருவுலேயே கடைசி நேரத்துல வந்து தலையைச் சொறியற கேஸுக இருக்கும். அது போக மிச்சத்தை நாம் பவுந்துக்கிடுவோம். கூட ஒரு நாளைக்கு வைச்சிருந்து திம்பம்."

புளுகாண்டியை எல்லாரும் ஏளனமாகப் பார்த்தனர்.

"புளுகாண்டி இஷ்டம் போல விட்டா... யாருக்குமே கறியைப் போடவிடமாட்டான். தானே வெச்சிருந்து திங்கணும்பான்."

"குப்"பென்று எழுந்த பரிகாசச் சிரிப்பு. அதை அமுக்கிக் கொண்டு ஒரு குரல்.

"புளுகாண்டி சொல்றதும் ஞாயந்தானே? வருசத்துக் கொரு வாட்டிதான் இப்படிப்பட்ட நல்ல உருப்படி அமையும். ஆசை தீர வெச்சிருந்து, அதைத் திங்கணும்னு நம்மள மாதிரி ஏழை எளியதுக நெனைச்சா... அது என்ன தப்பு?"

சளசளவென்று பேச்சு. தகரக் கூரையில் மழை பெய்த மாதிரியான சளசளத்த மனிதக் குரல்கள். இடையிடையே சிரிப்புச் சத்தம். கேலி, கிண்டல், நையாண்டி என்று நீள்கிற கல கலப்பு.

ஆதாளி தாங்காமல் ஆனந்தக் கூத்தாடுகிற மனசுகள். அடிமனசின் சந்தோசப் பெருக்கு. உள்மன உல்லாச வெளிச்சம் எல்லாம் துள்ளலான பேச்சுகளில் துல்லியமாக முகம் காட்டுகிறது.

புளுகாண்டிக்கு அறுத்துப் போடுகிற கறிச்சதையைப் பார்க்கப் பார்க்க மனசே கிடந்து துள்ளுகிறது. மனசின் உள்வெளிச்சம், கண்ணில் மின்னலாகப் பளிச்சிடுகிறது. மஞ்சள் நிற வாரும்... கறிச்சதைத் துண்டுகளும் அதில் உறைந்து கறுப்பாகிவிட்ட ரத்தச் சொதசொதப்பும்...

அறுத்து அறுத்துக் கூறுபோட... ஒருத்தர் தராசில் அள்ளிப் போட்டு எடை போட... அலுமினியச் சட்டிகளிலும் தூக்குவாளிகளிலும் எடை போட்ட கறியைப் போட...

“ம்... சிட்டையிலே குறிச்சுக்கங்கடா... தவறவுட்டுராதீக.”

“சக்கையன் ரெண்டு கிலோ... முத்தாண்டி ஒன்றரை... சில்லாண்டி ரெண்டு... செந்தட்டி ரெண்டரை... காக்காயன் ஒன்றரை... தலை சொட்டையான் ரெண்டு... முத்தாச்சி ரெண்டு.”

ஊருக்காரர்களிடம் ஒப்புக்கொண்ட பதினெட்டு கிலோ கறிக்கு... வீடு வீடாக சட்டி வாங்க ஒருத்தன் போயிருந்தான். அந்தந்தச் சட்டியில்... அவரவர் கறி.

ஊரெல்லாம் ஒரே பேச்சு, வியப்பும் ஆச்சரியமான பேச்சு.

“கட்டைக்காலு... பெரிய உருப்படி போடுதாக.”

“கசாப்பா? எங்க?”

“ம்... சேரியிலதான். நல்ல கொழுப்பு. கறியும் மரச்சிறாய் கணக்கா... திண்ணக்கமாயிருக்கு.”

“அப்படியா? கிலோ வாங்கிக் காச்சலாம்.”

“ச்சேய்ய்க் ! பன்னிக்கறியையா? ஐயய்யே...”

“ஏன் மூஞ்சியைச் சுளிக்கே? நல்ல கறின்னா வாங்கி பக்குவமாக சாப்புட்டா நல்லாத்தானிருக்கும். மூலத்துக்கு நல்லது.”

ஊருக்குள் காற்றாகப் பரவுகிற இந்தப் பேச்சு. டீக்கடையில்... ஊர் மடத்தில் தெருத் தெருவாக எல்லா இடங்களிலும் இந்தப் பேச்சலைகள்.

தூக்குவாளிகளோடு சேரிக்கு வருகிற ஒன்றிரண்டு ஊர்ச் சம்சாரிகள். அதைத் தொடர்ந்து இன்னும்சில ஏழைச் சம்சாரிகள்.

சிரித்த முகத்துடன் வருகிற சம்சாரிகளுக்கு சேரி ஜனத்தின் உபசரிப்புகளும் மரியாதைகளும்...

கூறடிப்பும்... தராசு எடையும்... சிட்டைக்குறிப்பும் மள மளவென நடந்து கொண்டிருந்தது.

முடிகிற தருணம்.

புளுகாண்டி தன் பங்குக் கறியை ஒரு சட்டியில் அள்ளிக் கொடுத்தனுப்பிவிட்டான் தன் வீட்டுக்கு. அதே மாதிரி, பன்றியறுப்புப் பணியிலிருந்த நாலைந்து பேரும்.

இன்னும் ரெண்டு கூறுதான் மிச்சம். அதுக்கும் மூன்றாட்கள் சட்டிகளோடு நின்றனர்.

ஆக... வேலை முடியப்போகுது. வதக்குன கறியைத் திங்கப் போவோம் என்று ஆசுவாசமாக நினைத்தான் புளுகாண்டி. வதக்குன கறியின் வாசம் அவனைச் சுண்டியிழுத்தது. வா வா என்று ஆசைகாட்டியது. அவனுள் பரபரப்பு. "எப்படா வீட்டுக்குப் போவலாம்" என்ற தவிப்பு.

எல்லார் கைகளிலும் ஒட்டியிருந்த கறி இணுக்குகள். முழங்கை வரைக்கும் ரத்தப் பிசுக்கு. வெண் கொழுப்புத் துணுக்குகள்.

அப்போதுதான் –

பாலிதீன் பையோடு ஒருத்தன் வந்தான். அவனும் சேரிக்காரன்தான். வந்து குசுகுசுவென்று காதைக் கடித்தான். நாலைந்து பேரும் அதே போல, குசுகுசுவென்று காதுக்குள் வாயாகப் பேசிக்கொண்டனர்.

புளுகாண்டிக்கு ஒன்றும் புரியவில்லை. ஒவ்வொருவர் முகத்தையும் திகைப்பும் குறுகுறுப்புமாகப் பார்த்தான்.

"என்ன விஷயம்?" சொல்லித் தொலையுங்களேன்."

"பொறுடா புளுகாண்டி."

"இப்பச் சொல்லப் போறீகளா... இல்லியா?"

ரொம்பக் காட்டமாகக் கத்தினான் புளுகாண்டி. ஏறக்குறைய விடிந்துவிட்டது. தவிட்டு நிற வெளிச்சம், மேலும் முகம் வெளுத்து வந்தது.

“ஒண்ணுமில்லேடா” என்று இழுத்த ஒரு பெரிசு, பணிவும் பவ்யமுமாக சத்தம் குறைத்துக் குசுகுசுத்தார். பெரிய வீட்டு விஷயம் என்கிற பயம்.

“நம்ம மேலத்தெரு பெரிய வீட்டுக்காரச்சாமியவுக கறி மேலே ஆசைப்படுதாகளாம். அரை கிலோ வேணும்னு சிணுக்காண்டிகிட்ட சொல்லிவிட்டுருக்காரு. இந்த பேப்பர் பையிலே போட்டு அனுப்பணுமாம்.”

“ நீங்க என்ன செய்யப்போறீக?”

இறுகலான குரலில் புளுகாண்டி.

“போட்டுக் குடுத்துருவம்.”

“என்னத்துக்கு? ”

“அம்புட்டுப் பெரிய வீட்டுச் சாமியவுக... நாம கைபட்டு கால்பட்டு அறுத்துக் கூறு போட்ட கறியை வாங்கிச் சாப்புட சம்மதிச்சதே பெரிய விஷயம்டா.”

புளுகாண்டிக்குள் ஏனோ அம்மாவின் லொட லொட, ஜாக்கெட். கண்ணீர் வரிகளில் காட்சியான மிருகத்தன வெறியாட்டம். ஆறாத மனரணமாக.. ஆறாத தழும்பு... சாதி வெறிப்பற்களில் காமக்குரூரப் பதிவுகள்.

அவனுக்குள் ஏதோ ஒருவித கோபச் சிலிர்ப்பு.

“ஏன்... நாம எதுலே தாழ்ந்துட்டம்? கொழுப்பான வளர்ப்புப் பன்னின்னு ஆசைப்பட்டுத்தானே எல்லோரும் தேடி வந்து, நின்று வாங்கிட்டுப் போறாக? அப்படித்தானே இருவது கிலோ வித்துருக்கு? இவருக்கு மட்டும் என்னத்துக்குக் குடுத்தனுப்பணும்? ”

“இவ ஒரு கோட்டிப் பய... யாருக்குமே கறி குடுக்கச் சம்மதிக்கமாட்டான்” என்று ஒருவர் கேலியாகச் சொல்லிச் சிரிக்க.. மற்றவர்களும் ஆமோதித்துப் பரிகாசமாகச் சிரிக்க புளுகாண்டிக்குள் பொத்துக்கொண்டு வந்தது கோபம். சீறிச்சினந்த ரோஷாக்னி.

“நா அப்படிச் சொல்லலை” என்று காட்டுக் கத்தலாகக் கத்தினான். இவன் கத்திய உஷ்ணச் சீறலில், விளையாட்டுச் சிரிப்பும் வேடிக்கைப் பேச்சுமாக இருந்த அவர்கள், கப்சிப் ஆனார்கள். இவனைக் கூர்மையாக... யோசனையோடு பார்த்தனர்.

"என்னலே சொல்லுதே?"

"எளியசாதிப் பொம்பளைகளைத் தொட்டு நாசக்காடு பண்ணுறவுக... எளிய சாதி ஆம்பளைகளை மட்டும் என்னத்துக்காக தள்ளியே நிப்பாட்டணும்?"

"அதுக்கு?"

"நாம தொட்ட கறியைச் சாப்புடச் சம்மதிச்சதே பெரிய விஷயம்னு நீங்கள்லாம் குளுந்து குளுந்து குனிஞ்சே கெடந்ததாலேதான்... அவுக அம்புட்டு அக்குருமம் பண்ணியிருக்காக..."

"ஏலேய் புளுகாண்டி, நீ என்ன விஷயம் பேசுதே?" கறி விஷயத்தைப் பத்திப் பேசு?"

"நல்ல கறின்னு அறிஞ்சு வாங்கித் திங்க ஆசைப்பட்டா... நம்ம தெருவுல வந்து வாங்கிட்டுப் போகணும். மத்தவுக எல்லாம் வந்து வாங்கிட்டுப் போறாகள்லே? இவருக்கு மட்டும் என்னவாம்? நாம தொட்டு அறுத்த கறி மேலே ஆசை. நம்ம தெரு மட்டும் வீசுதாக்கும்? கால் வைக்கக் கூசுதாக்கும்? பெரிய வீடு, டக்கர் வெச்சிந்தா... அது அவருக்குத்தானே...? நாம எதுக்குப் பயப்படணும்?"

"நீ சொல்றது புதுசாயிருக்குடா புளுகாண்டி. கறி இல்லேன்னு வெறும் பையைக் குடுத்தனுப்பிச்சிரவா?"

"புதுசுதான். நாம மான ரோஷத்தோட நினைக்குறதே புதுசு தான். வெறும் பையைக் குடுத்தனுப்புங்க. பயப்பட வேண்டாம். என்னத்துக்குப் பயப்படணும்?"

மீசை முறுக்கின மதுரைவீரன் சாமி மாதிரி, உக்கிரகமாக விழிக்கிற புளுகாண்டி, உத்தரவு மாதிரி கட்டண ரைட்டாகப் பேசுகிறான்.

அடிமனசின் ரோஷாக்னி அவன் கண்ணில் சுடராகச் ஜொலிக்க... மற்றவர்கள் அவனை ஒரு புதிரைப் போலப் பார்த்தனர்.

*(இச்சிறுகதை இலக்கியச் சிந்தனை பரிசு பெற்றது. 1998ஆம் ஆண்டின் சிறந்த சிறுகதை என்ற பரிசையும் பெற்றது.)*

◆ ***12.04.98, ஆனந்த விகடன்***

# 4. என் கனா

சட்டென்று கண்ணை மூடிக் கொண்ட சாயங்கால வெயில். வெள்ளி நிற மேகமெல்லாம் கூடிக் குழைந்து கர்ப்ப வேதனையில் முகம் கறுத்தன. அதன் கோபத்தில் சூரியன் மறைந்துகொண்டது. தரையில் மேக நிழல்களாகக் கனத்த இருட்டு !

எனக்கு ஒரே புழுக்கம். நசநசப்பு. மூச்சே போகவில்லை. மயக்கப் படபடப்பில் மனத் திணறல். ஆனாலும், மனசின் ஒரு மூலையில் முகம் தெரியாத மகிழ்ச்சி ! ‘எனக்குப் பிரியமான மழைக் காதலன் வரப் போறானோ...?’

ஒரு மாயத் தோழி பிசாசாக வந்து மோதினாள். “அடியே, ஒன்னோட ஆள் ஆசையோட வாராண்டி” என்று கேலியும் கிண்டலுமாக உடம்பெல்லாம் கிச்சலம் காட்டினாள்! வெட்கத்திணறலோடு தவித்த என் திரேகத்துக்குள் அவளது விளையாட்டுச் சேட்டைகள் !

*நான் இல்லாவிட்டால், என் நாயகன் வரமாட்டானே... மழையில்லாவிட்டால் மண் என்னாகும்...? மனிதன் என்னாவான்..? மரங்கள் இல்லாத உலகத்தில் சுத்தமான காற்றே இருக்காதே... காற்று இல்லாமல் மனிதன் எதைச் சுவாசிக்க...? எப்படி உயிர் வாழ...?*

என் பச்சையாடைக்குள் புகுந்துகொண்டு செய்த அலைக் கழிப்புகள். அவளது மூர்க்க விளையாட்டில் எனது மஞ்சள் மேலாடைகள் நழுவி உதிர்ந்தன! பரவசம் தாளாமல் தோழியின் குதூகலத்தில் கூத்தாடினேன் !

"ச்சீ... போடி" என்ற என் போலிச் சிணுங்கல், "ஊய்ய்... ஊய்ய்..."யென்று பேரோசைகளாகச் சீறியது.

"வந்துட்டாண்டி" என்ற கூச்சலோடு விட்டு விலகிப்போன தோழி. அவளது சட்டென்ற விலகலில் திகைத்துப்போன நான். 'எங்க போய்ட்டா இந்தச் சிறுக்கி ?' என்ற திகைப்பில் ஸ்தம்பித்துப் போனேன். என்னைப் பிடித்துக்கொண்ட தனிமை... பரவசத் தனிமை... காதலன் முன்னால் தனித்து விடப் பட்டோமே என்கிற இன்பத்திணறல் !

ஒரு சுகச்சூன்யத்தில் திகைத்துக்கிடந்த என் மேல் பொட்டென்று விழுந்த முதற் துளி. என் மழை நாயகனின் ஈர ஸ்பரிசம்! என்னுள் புல்லரிப்பு. என் நரம்பெல்லாம் பாய்ந்து பரவிய இன்பச் சிலிர்ப்பு ! என் திரேகமே குழைந்து... விறைத்து... தடுமாறித் தத்தளித்து...

என் காதலனின் மழைத்துளி முத்தங்கள், முத்தங்கள். கிறு கிறுத்துப் போய்க் கண்ணை மூடிய என் உடம்பெல்லாம் ஈரமாக்கும் மேக முத்தங்கள்.

என் காதலனின் மோகக் கொஞ்சல்கள் ! ஆசை மிழற்றல்கள்! காதுக்குள் இறங்கிய முழக்கங்கள் ! குமுறிக் குமுறி முழக்கங்கள்! மூடிய கண்ணுக்குள்ளும் என் நாயகனின் மின்னல் புன்னகைக் குறும்புகள், ஒளிக்கோலமாக ஊடுருவிப் பாய்ந்தன. எனக்குள்ளும் மோக வெறி !

வெக்கரித்த வெயிலிலும்... அழுக்கான தூசியிலும் திணறிப் போய் விரகதாபப்பட்டுக் கிடந்த என் நெருப்பு முழுவதையும் அணைத்து, சாம்பல் தண்ணீராகக் கரைத்துக் கழுவிய என் நாயகனின் மூர்க்கத் தழுவல்கள் ! தரையெல்லாம் தண்ணீர்க் காடு. என் உடம்பெல்லாம் என் நாயகனின் நீர்க்கோடுகள் ! மழையின் முரட்டுக் காதல் !

இன்பச் சுமையின் ஈரத் ததும்பல். மூழ்கிக்களைத்த ஆசை மயக்கம். துவண்டு, கிறங்கிக் கிடந்த என்னை விட்டு விலகிய

என் காதலன். கண்ணைத் திறக்க முடியாமல் பரவசத்தில் கிடந்த என்னுடன் இன்னும் சரச விளையாட்டுப் பேச்சில் சிணு சிணுக்கிற சிறு தூறல்கள். பிரிய மனமில்லாமல், விட்டுவிட்டு ஓடிவந்து தழுவிக் கொள்கிற தூவானம் !

காதலன் போய்விட்டான். அவனது ஈரச்சுவடுகளை இழக்க விரும்பாமல் இன்னும் என் இலைகளில் ஏந்திக்கிடக்கிறேன். அவன் முத்து முத்தான முத்தங்கள், என் இலைகளில் ஈரஒளித்துளிகளாக இன்னும் தொங்கி நிற்கின்றன ! அசையக்கூட விரும்பாமல்... அப்படியே அடித்துப்போட்ட மாதிரி சலன மற்று மயங்கிக் கிடந்தேன்!

வந்து நின்ற தென்றல் தோழியின் குறும்புச் சீண்டல். அந்தக் குளிர்ச் சீண்டலின் மென்மையான கேலியில் அதிர்ந்து போனேன் ! அந்தத் திடுக்கிடலில் ஆடைகளைச் சுருட்டிக் கொண்டு பதறிப் பதைத்து எழ முயன்றபோது-

பொலபொலவென்று உதிர்ந்த என் நாயக ஈரச் சுமைகள்... ஒளித் துளிகள் !

என் காதலனின் வெறியாட்டத்தில் அரண்டு போய் வீடுகளுக்குள்ளும், தாழ்வாரங்களிலும் ஒதுங்கி நின்ற மனிதர்கள் வெளியே வந்தார்கள் !

பெய்த மழையில் திரண்டோடிய தெருத்தண்ணீர். ஊர்ப் புழுதியின் எல்லாச் சுவடுகளையும் கழுவித் துடைத்திருந்தது. ஈர நெகிழ்வில் குழைந்திருந்தது !

அழுக்கு உடைகளும் சவரம் செய்யாத முகமுமாகத் தலையில் துண்டைப் போட்டு மூடிக்கொண்டு வந்த கிராமத் தாட்கள் ! தெருவில் புதுத் தடங்கள். அவர்கள் பாதம் பதிய, விரலிடுக்குகளில் பிதுங்கி வழியும் சகதி !

உற்சாகமும் மகிழ்ச்சியுமாக அவர்கள் குரல், புதுமுகம் காட்டியது.

“கோடை மழைங்கற கொணத்தைக் காட்டிருச்சே. திடுதிப்புனு வந்து பெரும் போடாப் போட்டுருச்சே...!

“ஆமா.. சமயத்துக்கு கை குடுத்த மழை. தவிச்ச வாய்க்குத் தண்ணி ஊத்துன புண்ணிய மழை !”

"கோடை வெள்ளாமை குதிபோட்டு வரும் இனிமே. கெணத்துக் காட்டுகள்லேயும் நீர்க்கண் தெறக்கும்."

"ஆமா...வறட்டிமுப்பா இழுத்த கெணறுகள்லே இனிமே தண்ணி 'கெத்து, கெத்து' னு கெடக்கும்."

"அதைவிட முக்கியம்... வாயில்லாச் சீவனுக மாடு - கன்னுகளுக்குக் குடி தண்ணிப் பஞ்சம் இருக்காதே..."

"ஆமா, நமக்கும்தான்..."

– அந்தக் குரல்களின் புதிய உணர்வு முகம். அவர்கள் மனசுகளில் மகிழ்ச்சித் ததும்பல். எனக்குச் சந்தோஷமாக இருந்தது ! என்னைப் பார்க்க என் காதலன் வந்தால்... அந்த வருகை, எத்தனை உயிர்களுக்கு உற்சாகம் ! பூமிக்கே புதுமிருது! பயிர் பச்சைகளுக்குப் புதிய வெளிச்சம் !

எனக்குள் பெருமிதம்... பூரிப்பு...! அதிலும் மனுஷங்களுக்கு நன்மைன்னா... எனக்கு ரொம்பப் பெருமை. பிறந்த வீட்டுக்கு ஒரு நன்மை என்றால்... மகளுக்கு ரொம்பச் சந்தோஷமாகத் தானே இருக்கும்?

இன்னும் நாலைந்து பேர் என்னைக் கடந்தனர். அவர்களை எதிர்ப்பட்ட ஒருவன், வேகமும் பதைப்புமாக வந்தவன்...

"ஒங்களுக்கு வெஷயம் தெரியாதா?"

"என்ன வெசயம்?"

"நம்ம சின்னக்கனி நாடாரு மண்டையைப் போட்டுட்டாரு !"

"அடப் பாவமே... அதுவும் அப்புடியா? பத்து நாளா சட்டடியா படுத்துக் கெடந்தாரு, போய்ச் சேர்ந்துட்டாரா?"

"ஆமா..."

எனக்குள் அதிர்வு ! என் நாடிநரம்பு எல்லாம் அதிர்ந்து நடுங்கியது. அந்த நடுக்கத்தில் என் பச்சையாடைகளில் மிச்சம் மீதியாக ஒட்டியிருந்த நீர்த்துளிகள், கண்ணீர்ச் சிதறலாய் சோக மௌனமாய் உதிர்ந்தன !

அடப்பாதரவே... அவரு செத்துப் போய்ட்டாரா? – எனக்குள் நம்ப முடியாமல் ஓடிய ஒரு நினைவு. நம்பித்தான் ஆக வேண்டும்.

அவர்தான் என்னை இந்த இடத்தில் ஊன்றியவர். குழி தோண்டி... கரிசல் மண் போட்டு... சாணமும் போட்டு... என்னை நட்டார். என் பாதுகாப்புக்காக வட்டமாக முள் வேலி போட்டார். தினம் தினம் வந்து பார்ப்பார், பாசத்தோடு. என் வளர்ச்சியின் ஒவ்வொரு அணுவிலும் மகிழ்வார்! ஒரு ஆடு குட்டியை நெருங்க விட மாட்டார்!

என்னைக் கண்ணுக்குள் வைத்து, பிள்ளை மாதிரிக் காப்பாற்றினார். அவர் போய்ட்டாரா...? செத்துப் போய்ட்டாரா? இனி என்னைக் கார்ப்பாத்தறது யாரு? எனக்கு யாரு நாதி? நா நாதியத்துப் போய்ட்டேனா...?

எனக்கு அழுகை அழுகையாக வந்தது. தலைவிரி கோலமாக நெஞ்சில் அடித்துக்கொண்டு கதறணும் போலிருந்தது. துக்கம் துக்கமாக வந்தது.

ரூல் தடியளவுதான் அப்ப என் கால். ஒரு குடையளவுக்குத் தான் என் உடம்பு... அப்ப நான் பூக்கக்கூட செய்யவில்லை.

அப்ப வந்து ஒருவன் என் பிஞ்சு விரல்களை ஒடிக்க நினைத்து... என்னை வளைத்தான்.

“அது எவண்டா... மரத்தை வளைக்குறது?” - அதட்டலாக சின்னக்கனி நாடார். அவர் முகமெல்லாம் கோபக் கடுப்பு.

“சும்மாதான்... பல்குச்சி ஒடிக்கணும்...”

“பல்குச்சியா? மடையா... இந்தச் சின்னக்கன்னுலே போயா ஒடிக்கிறது? பச்சைப் புள்ளே விரலை ஒடிக்கிறதுக்கு ஒனக்கு எப்படிடா மனசு வர்றது?”

“என்ன மாமா... பல்குச்சி ஒடிக்கிற சின்ன விஷயத்துக்குப் பெரிய பெரிய வார்த்தைப் பேசுறீரு!”

“பெரிய வேப்ப மரத்துலே போய் ஒடி, யாரு வேண்டாம்னு சொன்னாக...? இதுலே ஒடிக்கக்கூடாது. சின்னக் கன்னு...”

சின்னக்கனி நாடார் எனக்கு அடிக்கடி தண்ணீர் ஊற்றுவார். அவ்வப்போது வந்து என்னைத் தடவிப் பார்ப்பார்! என் சொற சொறப்பான திரேகத்தில் அவரது மென்மையான ஸ்பரிசம். எனக்கு ஒரே குதூகலம்... சந்தோஷம்! தினம் தினம் வருடமாட்டாரா என்று ஏங்குகிற அளவுக்கு சுகமான தடவல்!

அவரது பார்வை பிடிக்கும்... பாசம் பிடிக்கும்... அன்பு பிடிக்கும்... அவரை மாதிரியான மனிதர்கள் எல்லோருமே எனக்குப் பிடிக்கும். மனிதர்கள்தான் என்னைப் பயன்படுத்தி, என் பிறவிப் பயனையே எனக்கு உணர்த்துகிறார்கள்!

அப்ப நான் கொஞ்சம் வளர்ந்துவிட்டேன். மார்கழி, தை மாசம் எனக்குக் குதூகலமான மாசங்கள். நிறையக் கொழுந்துகள் கண் விழிக்கும். பங்குனி பிறந்துவிட்டால், கொத்துக் கொத்தாகப் பூப்பேன்; என் பூ வாசம் கம்மென்று பரவும். பூப்பூத்துவிட்டால் போதும்... எங்கிருந்துதான் வருமோ... சிற்றெறும்பு, கூட்டம் கூட்டமாக வரும். அதுகளுக்கு என் பூ மேல் ஒரு மயக்கம்! என் காயைத்தான் யாரும் சீந்தமாட்டார்கள்! கசப்புக்கே என் காய் தான் உதாரணம். என் காயையும் சில சிறுமிகள் பறிப்பார்கள்! காயின் தோலை விரல் நகத்தால் கிழிப்பார்கள். உள்ளிருக்கும் திரவத்தில் ஊசி மாதிரியான குச்சியால் தொட்டுத் தொட்டு அவர்களது சின்னக் கைகளில் பெயர் எழுதுவார்கள்.

"அய்ய்... பச்சை குத்திக்கிட்டேன்" என்று சிறுமிகளின் குதூகலம் என்னையும் பற்றிக்கொள்ளும்!

இப்ப எனக்கு இருபது வயதாயிற்று. என் பிரமாண்டமே எனது அழகு. எல்லாமே அண்ணாந்து பார்ப்பார்கள்!

"பெரிய மரமாயிருக்கே... ஒரு கொழையோ குச்சியோ ஒடிக்கலே போலிருக்கு. படு லட்சணமா இருக்கே..."

"சின்னக்கனி நாடாரு கவனிப்பு. யாரும் கை வெச்சிர முடியாது."

"தூர் ரொம்ப அகலமாயிருக்கே. ஓர் ஆள் சேர்ந்து கட்டினாலும், கட்ட முடியாது போலிருக்கு."

"ஆமா... அவரு ஆள் முறுக்காயிருந்து வெவசாயம் பண்ணுன காலத்துலே வெச்ச மரம். இப்ப ஆள் தளர்ந்துட்டாரு. காடு - கரை, மாடு-கன்னு எல்லாத்தையும் மகன்கிட்டே ஒப்படைச்சுட்டு ஓய்ஞ்சி உக்காந்துட்டாரு. அந்தா, இந்தானு இருவது வருஷம் இருக்கும்லே?"

"ஒரு கோணல்மாணல் இல்லாம, நேரா நிமிர்ந்து நிக்குது... தூரு வெட்டி ஆறப்போட்டு... பலகையா அறுக்கறதுக்குத் தோதான மரம்..."

என் அழகே எனக்கு எமன். பார்க்கிறவர்களுக்கெல்லாம் வாயில் எச்சில் ஊறியது. "வெட்டணும், வெட்டிரணும்" என்று அலைபாய்ந்தார்கள். எனக்குள் நடுக்கம். மரண நிழலின் பயங்கரம்.

ரெண்டு தடவை எனக்கு விலை பேசிவிட்டார்கள். கோடாரி, கடப்பாரைகளோடு எமன், காலன், தூதன்களாக வந்து விட்டார்கள். நல்லவேளை ! சின்னக்கனி நாடார் வந்து என்னைச் சேர்த்துக் கட்டிக்கொண்டார்.

"என்னை வெட்டிட்டு இந்த மரத்தை வெட்டுங்க..." என்று வைராக்கியமாகப் போராடினார். அவர் மகனுக்கு, அய்யாமேல் எரிச்சல் என்றால்.. மகா எரிச்சல்.

"பாடுபட்டுச் சம்பாரிச்ச சொத்து பத்தெல்லாம் வுட்டுக் குடுத்தீரே... இந்த வேப்பமரத்தை மட்டும் தரமாட்டேங்கிறீரே... ஏன்ய்யா...?"

"ஏலேய்.. நாங்குடுத்த மாடு - கன்னு, காடு - கரை நல்லா இருக்கணும்னா... மழைத் தண்ணி வேணும்டா... மழைத் தண்ணி வேணும்னா... மரம், கன்னுக இருக்கணும். மாரித் தாய்க்குப் பிடிச்ச மரம்டா இது.. மாரித்தாய்ன்னா யாரு...? மழைதாண்டா..."

சோகமும் கொதிப்புமாக மல்லுக்கு நின்று ஜெயித்துவிட்டார். நான் உயிர் தப்பிவிட்டேன்.

மைனாக்கள், கிளிகள், காகங்களுக்கு நான்தான் புகலிடம். நானே அதன் உலகம். நிழலும் உணவும் தருகிற உலகம். மைனாக்களின் பொய்ச் சண்டைகள் எனக்கு ரொம்பப் பிடிக்கும். நல்ல கூத்து மாதிரியிருக்கும். அதன் கீச்சுமூச்சு என்ற கத்தல்... நல்ல சங்கீதம். கேட்கச் சுகமாக இருக்கும்.

என் காலடியில் குழந்தைகள் விளையாடும். கிழடுகட்டைகள் காலை நீட்டி உட்கார்ந்து, ஊர்ப் புரணிகள் பேசும். உழைத்துக் களைத்தவர்கள் துண்டை விரித்துக் குறட்டை போடுவார்கள்.

ஊரில் யாருக்காச்சும் ஜன்னிக் கோளாறு என்றால், என் பட்டைகளை உரித்துப் புகைபோடுவார்கள். குடல் புண் என்றால்... என் கொழுந்துகளை அரைத்துக் குடிப்பார்கள்.

படையே நடுங்கும் பாம்பைக் கண்டு... அந்தப் பாம்பின் விஷம் என்னைக் கண்டால் பயந்தோடும். வைசூரி, அம்மைக்கட்டு, பல்வலி என்றால்... நான்தான் மருந்து.

இதில் எனக்கு ஏகப்பெருமை. மாரியாத்தா கோயில் திருவிழா என்றால்... எனக்கு ஏகப்பட்ட மரியாதை. மஞ்சள், குங்குமம் வைத்து என்னைக் கும்பிடுவார்கள். ஆடு மேய்ப்பவர்களுக்கு நான்தான் குலதெய்வம் மாதிரி.

என் காலடி நிழலில் பொங்கல் வைத்து எனக்கு மரியாதை செய்வார்கள்.

எல்லாம் போய்விடும். இனி எனக்கு நாதியில்லை. என்னைப் பிள்ளை மாதிரி அணைத்துக்கொண்டு... "வெட்டாதீங்கடா" என்று மல்லுக்கட்ட சின்னக்கனி நாடார் இல்லை. என்னை உயிரென நினைத்துத் துடிக்கிற இதயம் நின்று போயிற்று. என்னைக் காப்பாற்ற ஆளில்லை.

என்னை விற்றுவிடுவார்கள். வெட்டி ஆறப்போட்டுப் பலகை பலகையாக அறுத்துப் போட ஆள் தயார். எமன் ரெடி. நான் என்ன செய்ய..?

நான் இல்லாவிட்டால், என் நாயகன் வரமாட்டானே... மழையில்லாவிட்டால் மண் என்னாகும்...? மனிதன் என்னாவான்..? மரங்கள் இல்லாத உலகத்தில் சுத்தமான காற்றே இருக்காதே... காற்று இல்லாமல் மனிதன் எதைச் சுவாசிக்க...? எப்படி உயிர் வாழ...?

எனக்குள் பயம். வேரின் நுனிவரை அச்சநடுக்கம். பயத்தின் படபடப்பில் என் பூக்களெல்லாம் உதிர்ந்தன. என் கண்ணீராக... துருத்தி நின்ற பிசின்.

...என்னைச் சுற்றி வட்டமாகக் குழி தோண்டுகிறார்கள். முழங்கால் உயரத்துக்கும் மேலான ஆழக்குழி. குழிக்குள் நின்று... எனது கணுக்காலைப் பார்க்கிறார்கள். ஆணிவேர் முடிச்சு. அதுதான் என் உயிர் முடிச்சு.

அங்கே கோடாரியால் போடுகிறார்கள், டங்... டங்... டங்... கென்று. அலறித் துடிக்கிற உயிர். என் ரத்தச் சதைகளாகத் தெறிக்கிற சந்தன நிறச் சிறாய். ஈர ரத்தம் மின்னுகிற சிராய்த்

துண்டுகள். உயிர்த்துளிகள். சதைச் சிதறல்கள். கூடார வீடு போன்ற என் திரேகமே நடுங்கிக் குலுங்குகிறது. என் மனம் மரண வேதனையில் தவிக்கிறது.

எனக்காக அல்ல... என்னைப் படைத்த மனிதர்களுக்காக. என் பிறவிப் பயனை எனக்கே உணர்த்திய என் ஞானத் தந்தைகளுக்காக. நீரும் பாதுகாப்பும் தந்து உயிர் வளர்த்த ஆத்மாவுக்காக. ஆசையும் பாசமுமாக என்னைப் பார்த்து, தொட்டு வருடிய இதயங்களுக்காக.

"மழையில்லாம நீங்க தவிக்கக் கூடாதே... என்னைப் பெத்த அய்யாமார்களே... நல்ல காத்து இல்லாம நீங்க நாசமாயிடக் கூடாதே... மரங்களை வெட்டி நாசமாக்கிட்டா, மரங்களுக்கு நட்டமில்லே... உங்களுக்குத்தான் நட்டம். உங்க உசுருக்கு நட்டம். உடம்புக்கு நட்டம். எதிர்கால வாழ்வுக்கு நட்டம். அய்யாமாரே... என்னைக் காப்பாத்துங்க. என் மூலமா உங்களையும் காப்பாத்திக்கோங்க... அய்யாமாரே... அப்பன்மாரே... என்னைப் பெத்த தங்கப் பெட்டிகளா..."

என் அலறல் யாருக்கும் கேட்கவில்லையே... ஐயோ... என் ஆத்ம துடிப்பு, காலத்தின் குரல் என்று புரியவில்லையே... ஐயையோ... கோடாரி வெட்டு மாறி மாறி விழுதே...

ஒரு சங்கு ஊதுகிற சத்தம்... திடுக்கிட்டு விழித்து விட்டேன். என்னைச் சுற்றிக் குழி வெட்டவில்லை. கோடாரி வெட்டும் விழவில்லை. 'சின்னக்கனி நாடார் செத்துப் போனாரே...' என்ற பயத்தில் வந்த கெட்ட கனா...

சங்குச்சத்தம் தொடர்ந்து, இளவட்டங்களின் ஆரவாரக் கூச்சல். அலங்கரிக்கப்பட்ட தேரில் சின்னக்கனி நாடாரை வைத்துத் தூக்கி வருகிறார்கள். அவரது கடைசிப் பயணம்.

என்னைக் கடக்கிற ஊர்வலம். நாடிக் கட்டோடு உட்கார்ந் திருக்கிற நாடார் - அழுது கதறுகிற என்னை ஏக்கமாகத் திரும்பிப் பார்ப்பதைப் போல ஒரு பிரமை.

என்னால் தாங்க முடியவில்லை. என் கிளைக்கைகளும் இலையாடைகளும் வாடைக் காற்றுக்குக் கூத்தாட... மாரடித்துக் கதறினேன். 'ஐயோ... என் ராசாவே... என் அய்யாவே...'

✦ ✦ ✦ ✦

ஒருவாரம் ஆயிற்று. மண்வெட்டி, கடப்பாரை, கோடாரியோடு நாலு பேர் வந்தனர் என்னிடம். என்னுள் படபடப்பு... பயப் படபடப்பு. என் கடைசி நேரம் நெருங்கி விட்டது. மரணதேவனின் சுவாச உஷ்ணம், என்னைத் தகித்தது.

என்னைக் காப்பாற்ற நாடார் இல்லை. கட்டிச் சோத்துப் போராட ஆத்மா இல்லாத சூன்யச் சூடு. வெறுமைப் பகீர்...

அப்போது –

மொட்டையடித்த தலையோடு அவரது மகன். அண்ணாந்து என்னைச் சோகம் ததும்பப் பார்த்தான். கண்ணில் ஒரு நீர்க் கசிவு. அய்யாவையே என்னில் பார்த்தானோ...

"மரத்தை வெட்ட வேணாம்..."

"எதுக்கு...?"

"காடுகரை குடுத்த எங்க அய்யாவைக் கடைசிக் காலத்துல நானும் புள்ளைகளும் நல்லபடியா நடத்தலே... புத்தியைக் கடன் குடுத்துட்டேன். அவரைத்தான் கௌரவமா காப்பாத்த முடியலே... அவரு உயிரா நெனைச்ச இந்த மரத்தையாச்சும் காப்பாத்தணும். ஏன்னா, இது அவரோட உயிர். இது, அவரேதான்..."

"நாங்க குடுத்த அட்வான்ஸ்..?"

"பத்து நாள்ல திருப்பித் தாரேன்..."

எனக்குள் பரவசம். மழை நாயகன் வந்து தழுவிய மாதிரி இன்பப் பரவசம். சின்னக்கனி சாகவில்லை; சாக மாட்டார்.

♦ ***20.04.97, ஆனந்த விகடன்***

# 5. கண்ணகி

அப்ப நான் ரொம்பச் சின்னப் பையன். பையன் என்று சொன்னால்... மூணாப்பு, நாலாப்புப் பையன் மாதிரி யில்லை. பதினைந்து பதினாறு வயது இருக்கும். நாலு முழவேட்டியும், கைப் பனியனும் தான் போட்டிருப்பேன்.

எங்க ஊர் பெரியாட்களுக் கெல்லாம் எவ்வளவு விபரம் தெரியும்? எனக்கு எவ்வளவு தெரியுமோ... அவ்வளவு தான். கிராமத்தாட்கள். எழுதப்படிக்கத் தெரியாத பாமர ஜனம். கையெழுத்தை இங்கிலீஷ்லே போடத் தெரிகிற அளவுக்குப் படிப்பு படித்திருந்தாலும்... இருந்த ஊரே முதலைக்கு வைகுந்தங்கிற மாதிரி... சுத்துப்பட்டி எங்கும் சுற்றிப் பார்க்காமல் அனுபவக்குறைவாக இருப்பார்கள். விபரக்குறைவுதான். அதனாலே பதினாறு வயசுப் பையன் மட்டத்துலேயே மொத்த ஊர்ஜனமும்.

*"ஏலேய்... சுப்ரமணியம் மகன் தீர்வை போட்டுட் டானா?"*

*"போட்டுட்டான், சாமி. ஆனா..."*

*"என்னலேய்... ஆனா?"*

*இரசீது போட்டுக் குடுத்துட் டோம் சாமி, ரூவா இன்னும் வரலே."*

*"எம்புட்டு?"*

*"மூணு ரூவாயும் பதினொன் றரையணாவும் சாமி."*

*"நாளைக்கு வசூல் பண்ணிரு... தரலேன்னா வீட்டுக் கதவைப் புடுங்கிட்டு வந்து ஊர் மடத்துலே போட்டுரு."*

எனக்கு அவ்வளவாக விபரம் தெரியாது. ஊருக்குள் சுற்று வதோடு சரி... எனக்கு சிவகாசி கூட எங்கோ இருக்கிற சீமைதான். பதினைந்து மைல் தூரத்தில் இருக்கிற இராச பாளையம் வட்டமா, சதுரமா என்பதுகூடத்தெரியாது எனக்கு அப்போது.

அப்ப எங்களுக்குத் தெரிந்த சர்க்கார் என்றால்... அது கர்ணம் தான். ஜில்லாக் கலெக்டருக்கும் மேலே அவருக்குப் பவர் என்று சொல்வார்கள். அவர் சொன்ன படிதான் சர்க்கார் நடக்கும். இவர் பார்த்து ஒரு கோடு கிழித்துவிட்டால்... அது பிரம்மன் எழுதிய தலையெழுத்தை விட கூடுதலான உத்தரவு என்று பெரிசுகள் பேசும் பிரமிப்பாய்.

அது நிஜம்தான் என்ற நம்புகிற மாதிரிதானிருந்தது. நடப்பு. வீட்டு வரி வசூல், நிலவரி வசூல் எல்லாம் அவர்தான். யாரும் குத்தம் செய்தால்... பிராது கொடுப்பதுவும் அவர்தான். கொடுக்காமலிருக்கவும் அவருக்குத்தான் முடியும்.

கிராமக் கர்ணம் என்றால்... ஆள் நல்ல சிவப்பு. நெடுநெடு வென்று வளர்ந்த உயரம். உயர்ந்த அளவுக்கு உடல் பருமன் கிடையாது. காய்ந்த வாளைக் கருவாடு மாதிரியிருப்பார்.

மஞ்சளப் பிளந்தால் ஒரு நிறம் இருக்குமே... அப்படியொரு பொன்னிறம். மழுங்கச் சிரைத்த முகம். தீத்துக் கல் வைத்துத் தேய்த்த மாதிரி வழுவழுப்பு. எந்நேரமும் வெத்தலைச் சிவப்பு. ரத்தக்கனிவான கீழுதடு. நெற்றியில் திருநீறு. சாக்பீஸ் துண்டு சைஸ். நடுவில் குங்குமம். குழைத்து வைத்த சின்ன வட்டம். நீர்த்துளியளவு.

ஊர் ஜனம் முழுவதும் துவைத்துத் துவைத்து நிழலில் காயப் போட்டு துவர் பழுப்பு நிறமாகிப் போன வேட்டியைத் தான் கட்டியிருக்கப் பார்த்திருக்கிறேன். ஒன்று, முழங்காலுக்குக் கீழே வரை தொங்குகிற மாதிரி உடுத்தியிருப்பார்கள். அல்லது தார்ப்பாய்ச்சி கட்டியிருப்பார்கள்.

ஆனால், கிராமக்கர்ணம் அப்படியில்லை. எதிலும் தனி மாதிரி. தேவலோகத்துலேயிருந்து இறங்கி வந்த அதிசய புருஷன் மாதிரி நீலம் முக்கின தும்பைப்பூ மாதிரியான ஒரு பளீர்

வெள்ளை வேட்டி. கண்ணை உறுத்துற வெள்ளி மின்னல். ராசாராணி வேட்டி. நாவில் பட்டால் நனைந்துபோகும். அத்தனை மெல்லுசு. அதையும் கணுக்கால் மறைகிறமாதிரி கட்டியிருப்பார். கட்டியிருக்கிற முறையிலும் ஒரு நேர்த்தி. ஓர் ஒழுங்கு. ஓர் அழகு. வேட்டியின் பார்டர் ஒரு ஓவியம் போலத் தெரியும். மடித்துக்கட்டினால் அதிலும் ஒரு புதுமை. முழங்கால் மட்டும் தெரிகிற மாதிரி மடித்துக் கட்டியிருப்பார். நேர்த்தியும், கச்சிதமுமான மடிப்பு.

அவரைவிட பத்துவயது மூத்தவர் தலையாரி. தலையாரி வயதுதான் வெட்டியானுக்கு.

ஆனா... கிராமக்கர்ணம் ரெண்டுபேரையும் 'டேய்' போட்டுத் தான் பேசுவார். இல்லையென்றால் 'ஏலேய்' என்பார். அவர் வரிவசூலுக்கு வருகிறார் என்றால்... ஒரே ராஜ தர்பார்தான். ராஜாவின் தர்பாரே தெருவில் நகர்ந்து வருகிற மாதிரிதான்.

ராஜா மாதிரி வருவார், கர்ணம். நிமிர்ந்த முகம். ஏந்திய நெஞ்சு, அதிகாரமிடுக்கான பார்வை. எண்ணெய் தேய்த்து வழு வழுவென்று சீவியிருப்பார். வெயிலுக்கு எண்ணெய் மின்னும். கிராமத்து ஜனம் பார்த்திருக்காத நவீன ரகச் செருப்பு. நடந்தால்... சிலுக்குச் சட்டை உரசுற மாதிரி சொரப், சொரப்பென்று ஒரு சத்தம் வரும்.

தலையாரி தலையில் கயறு போட்டு கட்டிய நாலைந்து பேரேடுகள் இருக்கும். கனத்த கனதத பேரேடுகள். வலது கையில் போலீஸ்காரர் வைத்திருக்கிற மாதிரியான லத்திக் கம்பு. நெஞ்சு மட்டத்துக் கம்பு. பயந்து பம்மிப் பதுங்கித்தான் பின் தொடர்வார்.

வெட்டியான் தலையில் வெள்ளைத்துணியில் பெரிய பொட்டலமாகக் கட்டிய சர்க்கார் கணக்கு. இடது கையில் சாக்குத்துணியில் தைத்த பெரிய பைக்கட்டு. அது நிறைய பேரேடு நோட்டு. தலையாரிக்குப் பயந்து பம்மிப்போய் வெட்டியான்.

தலையாரி சித்திரகுப்தன் மாதிரி. திறமையான கணக்கர். எல்லார் பெயரும் அத்துப்படி. அவரவர் புஞ்சைகளின் சர்வே

நம்பர், பசலி, தீர்வை, சர் சார்ஜ், புஞ்சைகளின் அத்துமால் (எல்லை) எல்லாமே மனப் பாடம் அவருக்கு. நுனி நாக்கில் ஊர் கணக்கே உட்கார்ந்திருக்கும்.

“ஏலேய்... சுப்ரமணியம் மகன் தீர்வை போட்டுட்டானா?”

“போட்டுட்டான், சாமி. ஆனா...”

“என்னலேய்... ஆனா?”

“ரசீது போட்டுக் குடுத்துட்டோம் சாமி, ரூவா இன்னும் வரலே.”

“எம்புட்டு?”

“மூணு ரூவாயும் பதினொன்றரையணாவும் சாமி.”

“நாளைக்கு வசூல் பண்ணிரு... தரலேன்னா வீட்டுக் கதவைப் புடுங்கிட்டு வந்து ஊர் மடத்துலே போட்டுரு.”

பயப்பதைப்பில் பவ்யமாகப் பேசி வந்த தலையாரி, இந்தக் கடைசி அதிரடி உத்தரவில் அரண்டேபோனார்.

செம்மறிக் கிடாய் கொம்பு மாதிரி திருகல் முறுகலாக நிமிர்ந்திருந்த மீசையே காற்றுக்கு அதிர்ந்து நடுங்கியது.

“கதவைப் புடுங்கிறவா சாமி?”

“காசு வரலேன்னா... கதவைப் புடுங்கு. அப்பத்தான் மத்தப் பயக பதறிக்கிட்டு ஒழுங்கா நடப்பான்ங்க. தாசில்தாரு சொன்ன டயத்துலே ஜமாபந்தி முடிச்சுக் காட்டணும்லே?”

கர்ணம் காரியம்பூராவும் இப்படித்தான் அதிரடியாக இருக்கும். தடாலடியாகச் செய்வார். தாட்டியமாகச் செய்வார். அவரைப் பார்த்தால், கொம்பாதி கொம்பன், வில்லாதி வில்லனெல்லாம் சொரூபத்தைச் சுருட்டிப் பம்மிப் பதுங்கிவிடுவான்கள். கில்லாடிகளெல்லாம் பயந்து ஒதுங்குவார்கள்.

“ஏலேய் தலையாரி...”

“என்னா... சாமி?”

“கண்ணப்பக் கோனாருக்கு என்னென்ன நம்பர் இருக்கு?”

“27/122 Aலே எழுவத்தேழு செண்ட்... 24 /228 Bலே ஒண்ணேமுக்கா ஏக்கர்... 12/132 சர்வே நம்பர்லே மூணு ஏக்கர் முப்பது செண்ட்...”

“தீர்வையை போட்டுறலாமா?”

“ம்... அவரு ஊர்லே இல்லே”

“எங்கே போயிருக்கான்?”

“பட்டாளத்துலே ஆபிசராயிருக்குற மகனைப் பாக்கப் போயிருக்காரு...”

“பட்டாளத்து ஆபிஸர்னா... பெரிய கொம்பா? அவரையே புடிச்சு, கேஸ்லே போட்டு உள்ளே தள்ள முடியும்... இந்தக் கர்ணம் நெனைச்சா.. தெரியுமா?”

கம்பீர பெருமிதமாகக் கேட்கிற கர்ணம். தலையாரிக்குக் குலை பதறி வந்தது. குடலைப் புரட்டுகிற மாதிரியோர் திகில்.

“ஆமா சாமி... ஆமா சாமி” என்று பயத்தில் ஒத்துப்பாடினார் தலையாரி. வேறு வழி தெரியவில்லை.”

“ஏலேய் வெட்டியான்...”

“என்ன சாமி...?”

“இந்தத் திண்ணையிலே பொட்டலத்தை எறக்கு. ஏய் தலையாரி, நீ கணக்குப் பொஸ்தகத்தை எடு... கண்ணப்பனுக்கு தீர்வையைப் போட்டு ரசீதை வீட்லே, குடுத்துருவம். ஜமா பந்திக்குள்ளே ரூவா வந்தாகணும்னு கண்டிஷனா சொல்லிரு...”

“ஆட்டும் சாமி...”

திண்ணை நுனியில் கர்ணம் சம்மணக்கால் போட்டு உட்கார்ந்தார். வெற்றிலைப் பெட்டியைத் திறந்தார். பித்தளைப் பெட்டி. கொட்டைப் பாக்கு. தளிர் வெற்றிலை. சிவப்புச் சுண்ணாம்பு. பன்னீர்ப் புகையிலை. வாசம் மணந்தது. வெற்றிலையைக் குதப்பினார். இரண்டு உதடுகளையும் இறுக அழுந்திக் கொண்டு எச்சிலைத் துப்பினார். அரை வட்டமாக எம்பி... தூரத்தில் விழுந்தது.

சம்மணக்கால் போட்டிருந்த கர்ணம் தொடையில் கணக்குப் பொஸ்தகத்தை விரித்தார். கார்பன் பேப்பரை பக்கம் மாற்றிச் சொருகினார். எழுதுகிற பென்சில் எழுத்து நீல நிறத்தில் அடியில் விழுவதை மாயமந்திரத்தைப் பார்க்கிற மிரட்சியான பிரமிப்போடு கிராமத்தாட்கள்.

கர்ணத்துக்கும்... அவருடைய அதிகாரத்துக்கும் பயப்படாத ஆட்களே கிடையாது. அண்ணன் தம்பி குடும்பத்துக்குள் அடிதடி. வெட்டுக்குத்து வரை போய்விட்டது. ரெண்டு பேருக்கும் ரத்தக்காயம்.

அண்ணன்காரன் பிராது கொடுத்தேயாக வேண்டும் என்று ஒற்றைக்காலில் நின்றான். "எத்தனை ஆயிரம் செலவா யிட்டாலும் சரி... இந்தப் பயலை ஒரு நா ஒரு பொழுதாச்சும் ஜெயில்லே வைக்கலேன்னா... நா எங்கப்பனுக்குப் பொறக்கலே" என்று வன்மம் கூறினான்.

பழி உணர்வின் வெறியில் 'தங்கு, புங்'கென்று குதித்தான். பயங்கரமாய் சாமியாடினான், ஆகாயத்துக்கும், பூமிக்குமாக.

கிராமத்தாட்கள் சொன்ன நல்ல வார்த்தைகள், கெஞ்சல் சமாதானம் எதையும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

கர்ணம் பிராது எழுதிவிட்டார். வாதி, பிரதிவாதி, சாட்சி என்று எல்லாரிடமும் கையெழுத்தும், கை நாட்டுகளும் வாங்கினார். பிராதை கிழித்துத் தலையாரியிடம் கொடுத்துக் காதுக்குள் மந்திரம் ஓதி அனுப்பிவிட்டு... அண்ணன்காரனிடம் கணிசமான ஒரு தொகையையும் வாங்கிக் கொண்டார்.

அப்போது கச்சேரி, பதிமூன்று மைல் தாண்டி ஓர் ஊரில். போலீஸ் இப்ப வந்துரும், பெறகு வந்துரும்னு ஊரே திகிலோடு காத்துக்கிடந்தது. போலீஸ் என்றால், எமதூதர் மாதிரிதான், ஜனங்களுக்கு. ரொம்பப் பயம். குடல் நடுங்கிப்போன சிலர், பதற்றத்தில் மாமா வீட்டுக்குப் போறேன், சித்தப்பா ஊருக்குப் போறேன் என்று புடுங்கிக்கொண்டார்கள்.

ஊருக்குள் கதை கதையாகப் பேச்சு. விதம்விதமாக விவாதம். கேஸில் சிக்கிச் சீரழிந்த கதைகள். கோர்ட் படியேறி குடிமுழுகிப் போன கதைகள். வழக்குகளில் நாசமாகிப் போன குடும்பக் கதைகள்.

கதை கேட்க, கதை கேட்க... அண்ணன்காரனுக்கு வயிற்றைக் கலக்கியது. நாலைந்து தடவை ஓடைக்குப் போய் வந்தான்.

'கேஸும் வேண்டாம், மண்ணும் வேண்டாம்... விட்டால் போதும்' என்ற மனநிலைக்கு வந்துவிட்டான். கர்ணம் வீட்டுக்கு நடையாய் நடந்தான்.

“ஏலே, பிராது குடுத்துட்டு, எப்படி வாபஸ் வாங்க முடியும்லே?”என்று ஏகப்பட்டு “லா பாயிண்டு”களைப் பேசி மிரட்ட மிரட்ட, அண்ணன்காரனுக்கு ஓடைக்கு ஓடணும் போலிருந்தது.

வியர்த்துக்கொட்டியது. தொடைச்சதைகள் கிடு கிடுவென்று நடுங்கின.

மறுபடியும் கணிசமான தொகையை வாங்கிக் கொண்டார். தலையாரிக்கு காதுக்குள் மந்திரம் ஓதி, அனுப்பி வைத்தார்.

பிராது வாபஸ் என்ற சேதி வந்த பிறகுதான்.. அண்ணன் காரனுக்கு மட்டுமல்ல... சிவப்புக்குல்லா தொப்பிக்குப் பதறிப் போய் கிடந்த ஊருக்கே... உயிர் திரும்ப வந்தது.

ஊரையே நடுங்க வைக்கவும், உயிர்கொடுக்கவும் கர்ணத்தால் முடியும் என்ற விஷயத்தில்... கர்ணம், விசுவரூபமாகத் தெரிந்தார். ஊராரின் பார்வையில். குதிரை ஏறிசாமத்தில் வேட்டை நடத்தும் அய்யனார் சாமி மாதிரி இவரை கும்பிட்டார்கள்.

‘சாமி... சாமி... சாமி..’ என்று ஒரே சரணாகதிதான். பயந்து செத்தார்கள். வெத்தலை என்று கர்ணம் சொல்வதற்குள், பாக்கு, சுண்ணாம்பு, வாசனைப் பன்னீர் புகையிலை என்று படையல் செய்யத் தயாராக இருந்தார்கள்.

ராஜ நடைதான் கர்ணத்துக்கு. அவரை நிமிர்ந்து பார்க்கவே எவருக்கும் பயம்தான். அவர் வாடை பட்டாலே... எல்லாரும் எழுந்து நின்று, “கும்புடுதேன் சாமி” என்று குழைந்தனர்.

புறம்போக்கு நிலங்களை யாருக்காவது ஜாரி பண்ணித் தருவார். ராஜா தானம் தருகிற மாதிரி... இந்தா... இதை வைச்சுப் பொழைச்சிட்டுப்போ என்பார். ஆனால், உளுந்து, நெல், எள், தட்டப்பயறு என்று அவனிடம் ஒரு வேட்டையும் நடத்தி விடுவார்.

நிலத்தையே பட்டாப் போட்டுத் தருகிற ராஜ அதிகாரம் இவருக்கு இருக்கிறது என்றான பிறகு... அவருடைய தர்பாருக்கு ஏகப்பட்ட மரியாதைகள். தடபுடல் உபசரிப்புகள் உள்ளூக்குள் ஏகப்பயம்.

கர்ணத்துக்கு ரெண்டு குடும்பம். பத்து ஒன்று அடங்கல் வாங்கப் போகிற போதெல்லாம்... கர்ணம் சின்ன வீட்டு சிங்காரியோடு இருப்பதைப் பார்ப்பார்கள், சம்சாரிகள். சிங்காரியின் அழகையும், சிரிப்பின் லட்சணத்தையும், தேவதைப் பிரகாசத்தையும் மாயலோகக் கதைபோலப் பேசுவார்களே தவிர... யாரும் குற்றமாகப் பேசத் துணிந்ததே யில்லை. கர்ணம் சாமி என்றாலே... எல்லோருக்கும் கடவுள் சாமி தான்.

கர்ணம், சங்கரலிங்க நாடார் திண்ணையில் உட்கார்ந் திருந்தார். தலையாரியும், வெட்டியானும் பக்கத்தில் பவ்ய பணிவோடு நின்றனர்.

கோனாக்கமார் தெரு, நாடாக்கமார் தெரு, நாயக்கமார் தெரு, தேவமார் தெருவுக்கெல்லாம் போய், திண்ணைகளில் கேம்ப் போட்டு தர்பார் நடத்துவார், கர்ணம். சக்கிலியக்குடிக்கும், பறைத்தெருவுக்கும் மட்டும் போகமாட்டார். வெட்டியானை அனுப்பி, ஒவ்வொருத்தராக அழைத்து வந்து... நிறுத்தி... அதட்டி மிரட்டி வசூல் பண்ணுவதுதான் வழக்கம். அவர்களும் தோள்த் துண்டை குடங்கையில் போட்டு கும்பிட்டுப் பணிவார்கள்.

அங்குப் போவதைப் பத்தி கர்ணம் எப்பவும் யோசித்ததே யில்லை. தலையாரிக்கும் அந்தத் தெருக்களுக்குப் போவதில் அசூயை உண்டு. முறுக்கும் மீசைக்குக் கீழே உதடுகள் அருவருப்பில் சுழிக்கும்.

"ஏலேய் வெட்டியான்..."

"என்ன சாமி?"

"கீழத்தெரு பூராவும் தண்டல் முடிஞ்சதா?"

"தீர்வையெல்லாம் முடிஞ்சது, சாமி."

"ம்?"

"வீட்டுவரியிலே ஒண்ணெ ஒண்ணுதான் பாக்கி"

"எவண்டா... அது?"

"தேவசகாயம்..."

"அது யார்லே... தலையாரி?"

ராஜாவின் அதிகாரத் தொனியிலான கர்ணத்தின் கேள்வி. வெற்றிலைச் சிவப்பான உதட்டின் கோபத்துடிப்பு.

வேதக்காரச் சாமியாரு சப்போர்ட்லே படிச்சுட்டு வாத்தியார் உத்தியோகத்துக்காகக் காத்துருக்கானே... அவன்தான்.

“வீட்டுவரி ரசீது போடலியா?”

“இல்லே சாமி...”

“கேட்டுப் பாத்தீயா?”

“ஒரு தரமில்லே... நூறுதரம் கேட்டுப் பாத்துட்டேன் சாமி...”

“என்ன சொல்லுதான்?”

“அதை நீங்கதான் போய்க் கேக்கணும்... சாமி”

“நானா? அந்தத் தெருவுக்கா?--ப்பயத் தெருவுக்கு நா... போகவா ?” ஏளனமும், கோபமுமாய்ச் சீறிய கர்ணம்.

“ஏலேய் வெட்டியான்... போய் அந்தப் --ப் பயலை நா சொன்னேன்னு சொல்லிக் கூட்டிட்டு வாலே...”

வெட்டியான் தயங்கினான். எதையோ மென்று விழுங்கினான். போக விருப்பமில்லாமல் மருகினான்.

அதைக் கவனித்த கர்ணம், அதட்டலாகக் கத்தினார்.

“போலே... போய் கூட்டிட்டு வா, அந்த நாயை”

வெட்டியான் மருகி மருகி... மனசில்லாமல் போனான். சற்று நேரத்திற்கெல்லாம் வெட்டியானோடு தேவசகாயம் வந்தான். நாலுமுழ வேட்டி, கட்டம் போட்ட அரைக்கைச் சட்டை, காலில் செருப்பு, கையில் ரிஸ்ட் வாட்ச், வாலிப வயது.

அவனது அந்த உடைநேர்த்தி - படிப்பு வாசம் - கர்ணத்துக்குள் தீயை வைத்தது. பற்றிக்கொண்டு எரிந்த கோபம். மனசுக்குள் தீயின் சீற்றம், ஆத்திரக் கனல்.

“-ப்பய மாதிரியா வாரான்? என்னமோ... பெரிய ஆபிசர் கணக்கா வாரானே... ! அவன் சட்டையும் ... வாட்சும்... !”

வந்துநின்ற தேவசகாயம். அவனது அடர்கறுப்பு நிறம்.

“என்ன... கூப்புட்டீகளா?”

“ம்...”

"எதுக்கு?"

"வீட்டு வரி தரல்லியா, நீ ?"

"தரல்லே"

"ஏன் தரல்லே ?"

"எல்லார் தெருவுலேயும் போய் வசூல் பண்றீக? எங்க தெருவு லேயும் வந்தா... பணம் தர்ரேன்..."

"உங்க தெருவுக்கு நா வரணுமா?"

மிரட்டலும், அதிர்வுமான ஒரு குரலில் கர்ணம்.

"எங்க தெருவுக்கு மட்டும் வரல்லேன்னா... அதுக்குப் பேரு, தீண்டாமை. தீண்டாமை சட்டப்படி குத்தம்ங்கறது, கவர்மெண்ட் எம்ப்ளாய் ஒங்களுக்குத் தெரிஞ்சுருக்கணும்"

"ஏலேய்...ய்ய்..."

பீறிட்ட மாதிரி ஆத்திரத்தில் கத்திய கர்ணம். இப்படி ஒரு எதிர்ப்பை - வெளிப்படையான மறுப்பை - எதிர்பார்க்க வேயில்லை, அவர். ராஜாவாக இருந்து தர்பார் நடத்துகிற அவரையே அரசாங்கக் குற்றவாளியாக விரல் நீட்டிச் சுட்டிக் காட்டுகிற இந்தத் துணிச்சல், ரொம்ப அத்துமீறலாகத் தோன்றியது.

இவரது கத்தலுக்குப் பிறகும் பயப்படாத தேவசகாயம் அதிராமல் - துணுக்குறாமல் - மென்னகை புரிகிற அவன்.

"ஏலே... ஓலேய்னெல்லாம் சொல்லவேண்டாம், சார், ஓலைபனை மரத்தோப்புலே கெடக்கும். போய் எடுத்துக்கங்க... அதுக்கு மேலே பேசுனா... சரிப்பட்டு வராது" ரோஷமாய் - அழுத்தமாய் - பேசிய தேவசகாயம்.

"சரிப்பட்டு வராதா? என்னடா செய்வே? தொலைச்சுரு வேண்டா --ப்பயலே"

"தீண்டாமை ஒழிப்புச் சட்டப்படி நீங்க செய்தது குத்தம். இப்ப சாதியைக் குறிச்சு இழிவாப் பேசியிருக்கீக. அதுவும் குத்தம். நா தீண்டாமை எதிர்ப்புக் கோர்ட்டுக்குப் போறேன்... மத்ததை கோர்ட்லே பாத்துக்கிடுவோம்..."

தேவசகாயம் திரும்பி நடந்தான். பதற்றமில்லாத துணிச்சலோடு நடந்தான்.

சுற்றி நின்ற கிராமத்தாட்கள் வியப்போடு தேவசகாயத்தின் முதுகையே பார்த்தனர். ஆச்சரியத்தில் திணறிப் போயினர். இப்படியும் நடக்குமா? இப்படியும் ஒரு மனுசனா?

"என்னடா இது... ராஜா மாதிரி கர்ணம் சாமி. அந்தச் சாமியையே ஒருத்தன் குத்தம் சொல்லிட முடியுமா? இவன் என்ன அம்புட்டுப் பெரிய கொம்பனா?"என்று முணுமுணுக்காத குறையாகப் பார்த்தனர்.

இத்தனை பேர் மத்தியில் ஒரு --ப்பயல் வந்து, அவமானப் படுத்திட்டானே என்கிற ஆத்திரம். தீண்டாமைக் கோர்ட்டைப் பற்றிய பயம் வேறு.

கர்ணம் தத்தளித்தார். தர்மசங்கடத்தில் நெளிந்தார். வீரன் ஜெம்புலிங்கம் மாதிரி... மலையூர் மம்பட்டியான் மாதிரி... நடந்து போன தேவசகாயத்தையே எல்லாரும் வியப்பும், மறைமுக மகிழ்ச்சியுமாக பார்த்தனர். நானும் பார்த்து நின்றேன்.

☼☼☼☼

***ஆசிரியர் தேவசகாயத்தின் மகன் இப்போது கேரளாவில் மாவட்ட ஆட்சியராக இருக்கிறார் என்பது எனக்குத் தெரியும்.***

***ஜனவரி 1999, செம்மலர்***

# 6. கள்வம்

ஆடி மாதமில்லை இது. கார்த்திகை மாதம். இடம் மாறி வந்து விட்ட செம்மறியாட்டுக் குட்டி போல, காலம் மாறி வந்த திகைப்பில் அற்றலைகிறது. காற்று. ஆடி மாதமாகத் தோன்றவைக்கிற காற்றின் வேகம். தென் மேற்குக் காற்று. ஆளையே அள்ளிக் கொண்டு போகிற உக்கிர வெறியில் வந்து மோதுகிற காற்று.

பழநிச்சாமிக்கு உயிர்வாதை. முக்கி முக்கிப் பெடலை மிதிக்கிறான். அப்பவும் மலைப் பாறையில் முட்டிக்கொண்ட மாதிரி யிருக்கிறது. சைக்கிள், நகர்வேனா என்று மல்லுக்கு நிற்கிறது.

இவனும் உயிரைக் கொடுத்து மிதிக்கிறான். ஸீட்டை விட்டு எழுந்து எம்பிஎம்பிக் குதிக்கிறான். மிதிக்கிற தொடர்வேகத்தில் நெஞ்சுக்கூடெல்லாம் காந்தல். உள்ளேபோய் அடைக்கிற சூறைக் காற்றில் உலர்ந்து போய்த் திணறுகிறது.

*என்னதான் நமக்குப் பாத்தியப்பட்ட ரூபாயாக இருந்தாலும்... அதையே திருடி, மொள்ளமாறித்தனம் செய்து கைப்பற்றியது அசிங்கமில்லையா? சாக்கடைக் குள்ளே கெடந்த தங்கத்தையே எடுத்திருந்தாலும்... எடுத்த கையிலே சாக்கடை வழியத்தானே செய்யும்?*

குறுக்கெலும்பெல்லாம் குத்திக் குடைகிற வலி. தொடையே உருவிக்கொண்டு போகிற மாதிரியோர் ரணம். களைத்துப்போய் ஸீட்டில் உட்கார்ந்தால் போதும்... சைக்கிளும் சக்கென்று நின்றுகொள்ளும். அடிக்கிற காற்றுக்குச் சேட்டை ஜாஸ்தி. முன் வீலையே எற்றி எற்றித் திசை நழுவச் செய்கிற குரூரக் குறும்பு.

பழநிச்சாமிக்கு உதடு, மூஞ்செல்லாம் உலர்ந்து வறண்டு போய்... முக வியர்வையில் படிந்த காற்றுப் புழுதியின் மொறு மொறுப்பு. இரு தோள்பட்டைகளும் முறுக்கிப் பிழிந்த மாதிரி வலிக்கிறது. குத்திக் குடைகிற உளைச்சல்.

... பழநி சின்ன வயசில் செம்மறியாடு மேய்த்தான். அப்புறம், இளவட்டமானதும் விறகு வெட்டக் கிளம்பினான். அதுவும் அவ்வளவாக நிரந்தரமாகத் தோன்றவில்லை. ஐஸ் வியாபாரம் செய்தான். மழைக்காலம், பனிக்காலம் என்றால் போதும்... ஐஸ்பெட்டித் தூக்க வேண்டிய அவசியமிருக்காது.

அப்படியே... இந்த வியாபாரத்துக்கு வந்துவிட்டான். ஊர் ஊராக அலைகிற வேலை. கடை கடையாகநின்று வியாபாரம் செய்யணும். ஒரு நாளைக்கு நாற்பது மைல் சைக்கிள் மிதித்துப் போய் வரணும். ஆனால், நிரந்தரத் தொழில் !

கல்யாணம் பண்ணுகிறபோது -

பழநிச்சாமிக்கு இதுதான் தொழில். அப்போது அவனுக்குள் ஒரு கணக்கு, ஓடைத்தண்ணீர் கொக்காக உட்கார்ந்திருந்தது.

பசையான இடத்தில் பெண் எடுக்கணும். அவர்கள் உதவியால் இதே தொழிலை ஒரு சின்ன நகரத்தில் கடையாகப் போட்டு உட்கார்ந்துவிடணும். நாலைந்து சைக்கிள்காரர்களுக் குச் சரக்குத் தந்து கமிஷன் பார்த்தால் போதும்.

அவனது கணக்கை... அவனது நல்லுணர்வே முறியடித்தது தான், விதிக்கொடுமை.

உள்ளூரில் தேவானை. கூலிக்காரி. மூக்குத்திக்குக்கூட வழி யில்லாதவள். திடுமென்று அவளது அம்மா மண்டையைப் போட்டாள். ஒரே ஒரு நாதியாக மிச்சமிருந்த ஓர் உயிர், அதுவும் போய்ச் சேர... நாதியற்று நின்ற குமரிப் பெண்ணாக தேவானை!

அவளை என்ன செய்ய... எப்படிப் பாதுகாக்க என்று மொத்தத் தெருவும் கூடி யோசித்து, ஊர்ச் சுமையைச் சுமக்க

இயலாமையில், எல்லோரும் கையைப் பிசைந்து விட்டு வெறும் புலம்பலும் அங்கலாய்ப்புமாகக் கூட்டம் கலைய இருந்தபோது –

அவளைப் பார்த்து 'ஐயோ பாவம்' என்று மனம் கலங்கிய இவனது கருணைதான், மலட்டுத் தனமற்ற கருணையாகச் செயல் வடிவம் பெற்றது.

"அவளை, நா வேணும்னா கல்யாணம் மூய்ச்சுக்கிருதேன். அவகிட்டே சம்மதம் கேளுங்க..."

– இவனது இளகிப்போன மனித மனசின் நெகிழ்விலிருந்து வெளிப்பட்ட கம்பீரச் சத்தம். அந்தச் சத்தமே, மங்கள இசையாக... கொட்டுமேள நாதஸ்வரமாக ஊரெல்லாம் பரவ...

கடைக் கனவு, கனவாகவே போய்விட... சைக்கிளில் கிடந்து உதைகிற விதி, அவனைத் தொடர...

இப்போது –

அவனது ரெண்டாவது பையன், அஞ்சாங்கிளாஸ் படிக்கிறான்.

...மேற்கு மலை முதுகுக்குள் முகம் மறைக்கிற பொழுதுக்கால். ஒளிச் சந்தனத் தகதகப்பு. சுற்றி நிற்கும் மேகக் கந்தல்களையும் சந்தன வெளிச்சமாக்குகிற அந்தி !

காற்றே சூரிய வெளிச்சமா? பொழுது அடைந்தவுடன், கப்சிப் என்றாகிவிட்ட காற்று.

தார் ரோட்டில்ல ப்ரீவீல் இரைச்சலோடு சுலபமாக நகர்கிற சைக்கிள். ஸீட்டில் உட்கார்ந்து மிதித்தான். கேரியரில் சதுரமான மரப்பெட்டி. கேக், கடலை மிட்டாய், பெப்பர் மிட்டாய், பிஸ்கட், ரொட்டி அயிட்டங்கள் இருந்த பெட்டி. எல்லாம் விற்றுத் தீர்ந்து விட்டன. வெறும் பெட்டிக்குள் நாலு பெரிய ராட்சதப் பைகள். அதுவும் வெறும் பைகள்.

எல்லா கடைகளிலும் வசூல் முடித்தாகி விட்டது. இனி, ஊர் போய்ச் சேர்வதற்குள் கறுகறுவென்று மயங்கிவிடும்.

தேவானை தங்கக் கட்டி! போய்ச் சேர்ந்தால், வெந்நீர் தயாராக இருக்கும். குளித்தவுடன் கைலி, பனியன் ரெடியாக இருக்கும். அப்படியே சாப்பாட்டில் உட்காரலாம். எள் என்பதற்குள் எண் ணெய்யாக வந்து நிற்பாள்.

அவளும் சும்மாயிருக்க மாட்டாள். வீட்டு வேலை முடிந்தால்... தீப்பெட்டி அடிப்பெட்டி ஒட்டுவதற்கு உட்கார்ந்து விடுவாள். தாள் கட்டும் அட்டைக் கட்டும் கிடக்கும். பசையுமிருக்கும்.

இவள் கை சுழலும். விரல்கள் விறுவிறுவென்று இயங்கும். மடிப்பும் அட்டையும் ஒட்டும் தாளும் பசையுமாக ஒரு மாயம் போல நிகழும். ஒரு நாளைக்கு இருபத்தைந்து ரூபாய்க்கு ஒட்டிவிடுவாள். சிக்கனக்காரி. வியர்வைச் செலவாளி.

இன்னும் ரெண்டு மைல்தான்.

மனசுக்குள் ஓர் ஆசுவாசம். சைக்கிள் மிதித்துக்கொண்டே அங்கும் இங்குமாக நகரும் பார்வை. நடந்த வியாபாரத்தில் அலைகிற நினைவு.

மூன்று கடையில் பணம் தரவில்லை. பாக்கி சொல்லி விட்டார்கள். இருக்கும் பணத்தில் ரொட்டிக் கடைக்கும் மிட்டாய்க் கடைக்கும் பணம் கட்டிவிடலாம்.

தோராயமாக என்ன லாபமிருக்கும் இன்றைய வியாபாரத்தில்? என்று நத்தையாக ஊர்கிற மனசு. மனக்கணக்கில் நீள்கிற நம்பர்கள்.

அவன் தலைக்கு மேல் பறந்து போகிற கொக்கு வரிசை, அறுத்தெறிந்த முத்து மாலையாக. 'விர்' ரென்று கர்ண கடூரமாகக் கத்திச் செல்கிற பனங்காடை. ரோட்டோர வேலி மரங்களுக்குள் சாவகாசமாக நடந்து இரை கொத்துகிற மயில்கள்!

இவை எதையும் பார்க்க முடியாமல் அவன் கவனத்தைப் போட்டு அமுக்குகிற நம்பர்கள்...

அப்போதுதான்...

அந்தக் கசப்பான சம்பவம், சுரீரென்று ஞாபகத்துக்குள் சுட்டது.

"இப்படியும் ஒரு கடைக்காரனா...? ச்சேய்... ஏவாரிகிட்டேயே களவா ? பத்து ரூபா போச்சே... ஏவாரிக்கு ஏவாரி களவு செஞ்சா... நாட்ல யாரைத்தான் நம்புறது? எப்படித்தான் வாழ்றது?"

அந்த ஊர்தான், இவன் போகிற லைனில் கடைசி ஊர். டவுன் பஸ் பாசையில் சொன்னால்... டெர்மினஸ்.

அதிலும் அந்த வேப்பமரக் கடைதான் கடைசிக் கடை. அவ்வளவாக சரக்கு வாங்க மாட்டார். ஊறுகாய் அட்டை, மசால் பொடியட்டை, பெப்பர் மிட்டாய் பாக்கெட் என்று அவ்வளவாக லாபம் கிடைக்காத சரக்குகள்தான் வாங்குவார்.

அதிலும் 'வளவளா'வென்று பேசுவார். படு பயங்கரமாகக் கசறுவார் ! அசல் விலை சொன்னாலும், அதற்கும் கீழே அரை ரூபாய் குறைக்க முடியுமா என்று நச்சரிக்கிற ஆள் !

பழநிச்சாமிக்கு இப்படிப் பிசினாறி ஆட்களைக் கண்டாலே பிடிக்காது. இவன், சுத்தமானவன். நாணயன். பொய் புரட்டு இருக்காது.

சரக்குகளைப் போட்டோமா... கணக்கைப் பார்த்தோமா... ரூபாயை வாங்கினோமா என்று எல்லாம் மின்னல் வேகத்தில் காரியம் நடக்கும். அதுதான் நாணயனுக்குப் பிடித்த நாணயம்.

கசறுவது... சந்தேகிப்பது... நச்சரிப்பது... ஒருவரையொருவர் கள்ளத்தனமாக அளக்க முயல்கிற பாசாங்குப் பசப்பு... இதெல்லாம் சுத்தமாகப் பிடிக்காது இவனுக்கு.

ஊறுகாய் அட்டை, பட்டை ஊறுகாய், மிட்டாய் பாக்கெட்டுகளை எடுத்துப் போட்டான்.

"தேன் மிட்டாய் இருக்கா?"

"இருக்கு."

"கால் ரூவா இருக்கா... அரை ரூவா இருக்கா?"

"ஒங்களுக்கு எது வேணும்?"

"கால் ரூவாயிலே ரெண்டு பாக்கெட் குடுங்க. பன் இருந்தா... ரெண்டு டஜன்."

"எது?"

"ஒரு ரூவா பன்."

"புதுசா கேக் பாக்கெட் வந்துருக்கு. வேணுமா?"

"எது?"

"அம்பது பைசா விக்கிறது. அதுகூட ஒரு பாக்கெட்தான் கெடக்கு."

"எங்கே எடுங்க... என்ன வெலை?"

"பத்து ரூவா, இருபத்தஞ்சு கேக் இருக்கும்"

"ஒம்பதுனு போடக்கூடாது?"

"கட்டாது."

"ஒம்பதரையாச்சும் போடுங்க..."

"இல்லே... பத்து ரூவாதான். வித்தா ஒங்களுக்கு ரெண்டரை ரூவா லாபம். எனக்கு பாக்கெட்டுக்கு முப்பது பைசாதான் கமிஷன்."

கேக் பாக்கெட்டை எடுத்துப் போட்டான் பழநிச்சாமி. கடைக்காரருக்கு வாங்கவும் ஆசை... அப்புறம் தயக்கம். மருகி மருகி யோசிக்கிறார்.

அப்புறமும் கடைக்காரர், அது என்ன வெலை, இது என்ன வெலை என்று, கொச கொசனு நச்சரித்தார். சங்கரன் கோவில் கடைகளில் என்ன விலை... ராஜபாளையம் கடையில் என்ன விலை... என்று சளசளத்தார். நேரமும் கவனமும் நழுவிக் கொண்டிருந்தது.

இவனுக்கு எதுவும் ஒவ்வவில்லை ! உயிரில்லாமல் உம்கொட்டினான். பொறுமையில் பல்லைக் கடித்தான்.

உள்ளங்கைக்குள் ஒரு வெள்ளைச் சிட்டை -

தேன் - 2
அட்டை - 2
மிட்டாய் - 2

என்ற தினுசில் சிட்டை போட்டு ரேட் போட்டு வந்தான்.

"கேக் சேக்கணுமா?"

"வேணாம்..."

கணக்கு முடித்துப் பணத்தை வாங்கினான். பெட்டிக்குள் மிச்சமாகக் கிடந்த சரக்குகளைப் பொறுக்கி, தூக்குப் பைக்குள் போட்டு முடிச்சுப் போட்டு... மரப்பெட்டிக்குள்ளேயே போட்டான்.

ஒத்தக் கடை என்ற ஊரோடு வசூல் முடியும். முடிந்த கையோடு புறப்பட்டான். ரோட்டுக்குத் தெற்கில் ஒரு பம்ப் ஷெட் ரூம். மோட்டார் ஓடியது. குழாயிலிருந்து உருக்கி ஊற்றிய வெள்ளிக் கற்றையாக அள்ளியூற்றிய நீர்.

வண்டியை நிறுத்தினான். வாய்க்கால் தண்ணீர் கண்ணாடியாகப் பளபளத்தது. முகம், கால், கை கழுத்தடி என்று நீரையள்ளிக் கழுவினான்.

துண்டை எடுத்துத் துடைத்தான். கணக்குச் சேர்க்காத கேக் பாக்கெட்டைத் திரும்ப வாங்கினோமா என்று ஒரு சந்தேகம். அவனுள் தேள் கொட்டின மாதிரியிருந்தது.

அவசர அவசரமாக மரப்பெட்டிக்குள் கிடந்த தூக்குப் பையை அவிழ்த்துத் துழாவினான். கேக் பாக்கெட் மட்டுமில்லை... அப்படீன்னா... அந்த பாக்கெட்டை ஒளிச்சிக்கிட்டாரா? வேண்டாம் என்று சொல்லிவிட்டு... தருவது போலப் பாவனை செய்துவிட்டு... அதை உள்ளே போட்டுக் கொண்டாரா... அடப்பாவி !

பத்து ரூபாய் போச்சே !

ரூபாய் நட்டத்தை விடவும், பழநிச்சாமியை இன்னொரு விஷயம்தான் ரொம்பக் குத்திக் குடைந்தது.

தான் ஏமாற்றப்பட்ட விதமும் மோசடிக்குள்ளாக்கப்பட்ட விதமும் தான் அவனை ரொம்ப பாதித்தது. அவமானமாக உணர்ந்தான்.

‘ச்சே... அற்பத்தனமான ஓர் ஆள்கிட்டே நாம இளிச்ச வாயனாயிட்டோமே’ என்கிற ஆத்திரம்.

மனசார ஒரு பாக்கெட்டை ஒளித்துக் கொள்கிற அளவுக்கு ஒரு மனிதனிடம் திருட்டுப் புத்தியா? ச்சேய்... என்ன கள்ளம். என்று நினைக்க நினைக்க அவனுக்குள் குமட்டிக் கொண்டு வருகிற அசூயை.

இதெல்லாம் நடந்து பத்து நாளாயிற்று.

ஒருநாள் விட்டு ஒருநாள் லைனுக்கு வருவான். மூன்றாம் நாள் வந்து கேட்டான்.

கேக் பாக்கெட்டைத் திரும்பத் தந்துவிட்டதாக ஒரேயடியாகச் சாதித்துவிட்டார் கடைக்காரர். அது மட்டுமில்லை.

“எம்மேல எப்படிச் சந்தேகப்படலாம்? என்னமாய்க் கேக்கலாம்?’ என்று ‘தங்கு, புங்கென்று’ ஆகாயத்துக்கும் பூமிக்குமாகக் குதித்தார். ஏகமாகச் சத்தம் போட்டார், கோபம் கோபமாக.

பழநிச்சாமிக்குக் கடுப்பு என்றால் கடுப்பு, அம்புட்டுக் கடுப்பு. கடித்துத் துப்பிவிடலாமா என்று கொப்பளித்த ஆத்திரம்.

'கழுதை ! களவாணிப் பயலாயிருப்பான் போலிருக்கே ! களவும் செஞ்சுட்டு... யோக்கிய வேஷம் வேறயா?'

– இவனுக்குள் ரௌத்ரம். சிறுமை கண்டு குமுறும் கோபம்.

சண்டை போட்டுவிடலாமா என்று துடியாகத் துடித்த மனசு... வாய்க்குள் வந்து முட்டிய கோப வார்த்தைகள்... பல்லைக் கடித்துச் சமாளித்துக் கொண்டான்.

ஏவாரம். தொடர வேண்டிய சங்காத்தம். கடைக்காரங்களைப் பகைச்சுக்கிட்டா... ஏவாரம் படுத்துரும். பொறு பழநி... பல்லைக் கடி... லகான் போடு... வார்த்தையைக் கட்டுப்படுத்து... உன்னை உன் வசப்படுத்து...

வசப்படுத்திக் கொண்டான். பொறுமையாக. அவரிடம் நல்ல வார்த்தை பேசினான். பேச்சு, பேச்சாக இருந்தாலும், மனசுக்குள் உஷ்ணமாக ஓடிய ஒரு நினைவு... தீ நினைவு...

இந்த அற்பனிடம் தோற்பது இழிவு. தோற்றதாகப் பேசி விட்டுப் போய் விடணும். ஆனா, ஏதாச்சும் செஞ்சு... அவன் களவாண்ட பத்து ரூபாயைக் கைப்பத்திரணும். ஏதாச்சும்னா...? கோல்மால் செய்யவா? கணக்குலே குண்டக்க மண்டக்க வென்று ஏதாச்சும் செய்யவா? அது, நம்ம பழக்கமில்லியே... நம்ம சுபாவமில்லையே... இவனுக்காக... நம்ம பிறவிச் சுபாவத்தை மாத்தவா? அசிங்கமாகவா ? இவன்கிட்டே மட்டும் மாத்திக்கிட்டா... என்ன தப்பு?

அவனுக்குள் குழப்பம்... அங்குமிங்குமாக அலைபாய்வு. அவன் நரம்புகளுக்குள் சிலிர்த்தோடுகிற நடுக்கம்... மனசுக்குள் புழுக்கம். முதன் முதலாகத் தப்புச் செய்கிற அச்ச வியர்வை.

அவனது உள்ளங்கைக்குள் வெள்ளைச் சிட்டை

| | | |
|---|---|---|
| தேன் | - | 3 |
| ஊறுகாய் | - | 2 |
| மசாலா | - | 3 |
| பன் | - | 12 |

என்று போட்டுக்கொண்டே வந்தான். கடைக்காரன் கவனிக்கிற முக்கியச் சரக்கை சரியான விலையில் போட்டான். மற்றதில்

எட்டணா, முக்கால் ரூபாய் கூடக் கூடப் போட்டான், கடைக் காரன் கவனிக்க முடியாத விதத்தில்.

கணக்கை முடித்து வாங்குகிற போது... பத்து ரூபாயில் ரெண்டே கால் ரூபாய் வசூல் பண்ணியிருந்தான் - ரகசியமாக. இப்படியே மூன்று தடவைகள். பத்து ரூபாய் வசூலாயிற்று. இன்றோடு முடிந்தது.

ஆனால்... மனசுக்குள் ஒரு முள் குத்தல். முடிந்தது என்ற திருப்திக்குப் பதிலாக நீயுமா இப்படி? என்கிற கேள்வி நமைச்சல்.

என்னதான் நமக்குப் பாத்தியப்பட்ட ரூபாயாக இருந்தாலும்... அதையே திருடி, மொள்ளமாறித்தனம் செய்து கைப்பற்றியது அசிங்கமில்லையா? சாக்கடைக் குள்ளே கெடந்த தங்கத்தையே எடுத்திருந்தாலும்... எடுத்த கையிலே சாக்கடை வழியத்தானே செய்யும் ?

அவனுக்குள் ரொம்ப உறுத்தல். குத்திக்கொண்ட முள்ளின் ரண அதிர்வு !

வீட்டுக்குப்போன பின்பும்கூட... இதே யோசனைக் குழப்பம்.

குளிக்கச் சொல்லி நச்சரித்த தேவானை.

“குளிச்சதாலே கழுவ முடியாது இந்த அழுக்கை...” என்றான் ஏதோ ஞாபகமாக. மனசின் உள் ரணம் எப்படியோ உதடுகளின் வழியே கசிந்துவிட்டது.

சம்பந்தா சம்பந்தமில்லாத அவனது பதில்... குழம்பி குழம்பி மருகிக் கிடக்கும் புருஷனின் முகம்.

தேவானை திகைத்துப் போனாள்.

‘என்ன, ஏது?’ என்று விடாமல் நச்சரித்தாள்.

சாப்பிட உட்கார்ந்தபோது, நடந்ததையெல்லாம் சொன்னான்.

“பத்து ரூவாயை நா வசூல் பண்ணி முடிச்ச கள்ளம் சரி தானா?”

- அடிபட்டு வந்த பிள்ளை, தாயிடம் சொல்லி ஆறுதல் பெற விரும்புவதைப் போல, தவிப்போடு கேட்டான்.

அவள், புருஷனின் ஈரத்தலையைப் பாசத்துடன் தடவிக் கொடுத்தாள்.

“சரி... செஞ்சுட்டீகள்லே ? அதை விடுங்க.”

“சரியா... தப்பா ? அதைச் சொல்லு...”

“நாய் நம்மளைக் கடிச்சா... நாமளும் திருப்பிக் கடிக்கறது ஞாயமா ?”

“அதெப்படி...? எந்த நாய் வேணும்னாலும் ஏமாத்திரலாம்ங்கற மாதிரி... நாம இருக்கலாமா?

ரெண்டு பேரும் சண்டை போடவில்லை. ஆனால், ரெண்டு கட்சியாக நின்று விவாதம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். முடிகிற மாதிரித் தெரியவில்லை. நீண்டு கொண்டே போயிற்று... வாழ்க்கையைப் போல.

◆ ***09.02.97, ஆனந்த விகடன்***

# 7. கைநாட்டு

அது நடந்தது, வெள்ளிக் கிழமையில்.

மகிழ்ச்சியாக இருந்தது. மனசே கிடந்து பெருமிதத்தில் ததும்பி வழிந்தது. பூந்தோட்டவாசம். ரொம்பப்பேர் பாராட்டினர். ஏகப்பட்ட பரிசுப் பொருள்கள்.

பார்க்கப் பார்க்க பரவசமாக இருந்தது. வாழ்ந்த வாழ்வும், செய்த தொழிலும் வீணாகிப்போய் விடவில்லை என்கிற திருப்தி. பெருமை. பூரிப்பு.

இந்தச் சந்தோஷமெல்லாம் ஞாபகத்தில் இருக்க முடியாத அளவுக்கு... சனியும், ஞாயிறும் வேலைகள். மனிதரை ஆட்டி அலைக்கழித்த சூறாவளி வேலைகள். ரெக்கைகட்டிக் கொண்டு பறந்தாக வேண்டிய வேலைகள். காலில் சக்கரம் கட்டிக் கொண்டு ஓடித்திரிய வேண்டிய பரபரப்பு... ஒன்றைத்தொட்டு ஒன்றாக... வாட்டியெடுத்த பிரச்சனை...

*இவருக்கு இது ஒரு லட்சியம். லட்சியப்போர். தனது முன்னோர்களும், தானும் பட்ட இழிவுகளை மண்ணில் இல்லாமல் செய்தாக வேண்டுமே என்கிற வெறி. மண்ணாகிப் போகிற விதியோடு பிறந்துவிட்ட "மக்கு மண்ணாங்கட்டி"களின் தலையெழுத்தையெல்லாம், ஒளியெழுத்தாக்கி விடவேண்டும் என்கிற தன்மானப்போர். மண்ணாங்கட்டிகளையெல்லாம் பொன் கட்டியாக்கிவிட வேண்டும் என்கிற வைராக்கியம்."*

பேரனுக்கு திடீரென்று ஜன்னிக்கோளாறு. வீடே பற்றிக் கொண்ட பதற்றத்தீ. ஓட்டமும் நடையுமாக துரித நிமிசங்கள். ஆஸ்பத்திரிக்கும், மெடிக்கல் ஷாப்புக்கும் ஓடித்திரிந்த பதைப்பு. ஆளும் பேருமாக அழுகை. வீடுநிறைய் சோகம். எல்லாருக் குள்ளம் வருத்தப்பிசைவு. யாருக்கு யார் ஆறுதல் சொல்வது என்றறியாத குழப்பம். வீடு நிறைய ஆட்களிருந்தும் நாதியற்ற வெறுமை.

இதிலிருந்து மீண்டு, பெருமூச்சுவிடுவதற்குள் - தெருவில் கலவரம். குழாயடியில் வழக்கமான சத்தக்களேபரம். கூச்சல். தண்ணீர் பிடிக்கிற சண்டை, சற்று கூடுதலாகி... தலைமுடி இழுப்புக்குக் கலவரமாகிவிட... தெருவே கூடி கம்பும், கத்தியுமாகக் கொந்தளித்த கலகம். கொதிநிலைப் பதற்றம். பயங்கரநிலவரம்

அதில் தலையிட்டு, ஒவ்வொருத்தர் தாடையைப் பிடித்து, கெஞ்சிக் கூத்தாடி... காலில் விழாத குறையாக ஒவ்வொருத் தரிடமும் மருகி மன்றாடி விவகாரம், காவல்நிலையம் போகாமல் தவிர்ப்பதற்குள்

'ஆத்தாடி அம்மாடி' என்றாகிப் போயிற்று, அவருக்கு.

வருஷக்கணக்காக வராமலிருந்து நெருக்கமான விருந்தாளிக் குடும்பம்...முன்னறிவிப்பில்லாமல் 'திடுதிப்'பென்று வந்து இறங்கிவிட அவர்களுக்கு சிரித்த முகம் காட்டி, பணியாரம் சுட்டுக்கொடுத்தனுப்பி... குளிர் முகம்காட்டி, புன்னகை வெளிச்சம் பரப்பி... ராத்திரி ஒம்பதரைப் பஸ்ஸுக்கு அனுப்பி வைத்துவிட்டு வீடு திரும்புகிற போது...

உயிரேபோன மாதிரி களைத்துப்போனார்.

அப்படியே கட்டிலில் சாய்ந்தவர்.... ராத்திரி மாத்திரைகூட சாப்பிடாமல்...அடித்துப்போட்ட மாதிரி அயர்ந்து உறங்கிப் போனார், கற்குவேல். அயற்சிக்கு முதுமையும் ஒரு காரணம்தான்.

விடிந்தால்... திங்கள். திங்கள் என்றாலே அவருக்குள் தீப்பிடித்த மாதிரியாகிவிடும். உடம்பும் , மனசும் கிடந்து பரபரத்துத் துடிக்கும். பள்ளிக் கூட நினைப்புத்தான், மனம் முழுக்க. ரத்த அணுக்கள் பூராவும் வகுப்புச் சிந்தனைதான்.

வகுப்பில் போய் 'என்ன, என்ன செய்யணும்' என்கிற யோசனை. நாலரைக்கெல்லாம் விழிப்பு தட்டிவிடும், கற்குவேலுக்கு. கட்டிலில் எழுந்து உட்கார்ந்தார். வாய்க்குள் ஒரு கெட்ட ருசி. நாக்கெல்லாம் அதன் மோசமான ருசிப்பரவல். சுற்றிலும் இருட்டு. காலடியில் கனியம்மாளின் குறட்டை. மகன் வழிப் பேரன், பேத்தி. மருகளும், மகனும் வேறு ஓர் அறையில் உறங்குவார்கள்.

சத்தமில்லாமல் எழுந்தார். பாத அரவமில்லாமல் பூனைபோல மெல்ல மெல்ல வந்தார். வாயை கொப்பளித்து, முகம் கழுவிக் கொண்டார். முகம் துடைத்தார். சுவரில் தொங்கிய சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டார். சட்டை பையில் சில்லறை.

துரும்பு நகர்கிற சத்தம் கூட இல்லாமல் ஜாக்கிரதையாக கதவைத் திறந்தார். வெளியே வந்து, கதவைச் சாத்தினார். தெருவின் இருட்டை பாதம் மிதித்தது.

இரவின் முதுமையாக வைகறை பிறக்கப்போகும் பகலின் கர்ப்பம் வயிற்றுக்குள் பிள்ளையின் உதையைப் போல... வைகறைப் பொழுதில் வாழ்க்கையின் சலனம்.

பசுமாடுகளின் கனைப்பு. வீடு வீடாகப் போய் பால்பீச்சுகிற டி.வி.எஸ் ஐம்பதின் சத்தம். பால்கேன்களின் வெறுங்குடக் கூத்தாட்டம்.

கற்குவேல் தெருவில் நடந்தார். சில வீடுகளின் மின் வெளிச்சம், வெளிச்சதுரமாய் ஜன்னல்கள். டீக்கடையில் ஆளேயில்லை. மின் வெளிச்சம். அடுப்பெரிகிற விஸ்ஸ் இரைச்சல். தண்ணீல் சூடேறுகிற 'ங்ங்ஙீய்ய்ய்ங்'

டீக்கடைக்காரர் பத்தியைப் பொருத்தி, சுவரின் இடுக்குகளில் சொருகினார். வளைவு வளைவாக நகர்ந்து, வாசமாக மறைகிற புகை.

"வாங்க சார்..."

"ம். பால் வரல்லியா?"

"பால் வர்ற நேரம் தான்"

"சீக்கிரம் ரெடி பண்ணுப்பா..."

கற்குவேலை வியப்பும் மரியாதையுமாகப் பார்த்த டீக்கடைக் காரர் பார்வையில் ஒரு வினோதம்.

“என்னப்பா....ஒரு மாதிரியா பாக்கே?”

“ஒண்ணுமில்லே சார்...”

“எப்பவும் போலவே..... இன்னிக்கும் டீக்கு அவசரப் படுத்துறீகளே.... நீங்க மாறவேயில்லியா?”

“என்னத்துக்கு மாறணும்? போப்பா... போய் பாலை வாங்கிட்டு வா. டீயை முடிச்சுட்டு ஓடணும். ஏகப்பட்ட வேலைக கெடக்குது. சீக்கிரமா டீப்போடு.”

மறுபடியும் வினோதமாகப் பார்க்கிற கடைக்காரர். புதிராகச் சிரிக்கிறார். புதிருக்கள் புதைந்திருக்கிற கேலியின் முகம். திரைக்குள் மறைந்த மங்கலாய்... அந்தக் கேலி.

மரியாதை காரணமாய் அந்தக் கேலிப் புன்னகை, முகம் மறைத்துக்கொள்கிறது. புதிர்ப் பார்வையும் கூட திசை நழுவிக் கொள்கிறது.

“ஒரு நிமிஷம் பொறுங்க சார்... டீ போட்டுடுறேன்.”

“ம்”

நேற்றைய பேப்பரின் கசங்கல் மடிப்புகளை நீவினார். வாசிக்க முடியவில்லை. எல்லா எழுத்துகளும் இழுவிவைத்த கறுப்புக்கோடுகளாக, அப்பிப்போய் தெரிகின்றன.

கண்ணாடியில்லாமல் வாசிக்க முடிவதில்லை. நாலாபுறமும் சிதறிக்கிடந்த பழைய நாளிதழ்களை எடுத்து... நீவிவிட்டு... சுருக்கங்கள் களைந்து... முறையாக மடித்துவைத்தார்.

டீக்கான ஒண்ணரை ரூபாயை எடுத்து மேஜையில் வைத்தார். முதல் டீ இவருக்கு வந்தது. அடார்த்தியான திரவம். உதட்டில் பிசுபிசுப்பாக ஒட்டியது. நாவில் டீயின் ருசி. துவர்ப்பும் இனிப்பும் சரிவிகிதக் கலவையாக கலந்ததால் வந்த ருசி. மனசுக்கு திருப்தியாக இருந்தது.

டீ வரும் வரை காத்திருந்த இந்த நிமிசங்கள் தான், அமைதி யானவை. இனி.... முழுவதும் பரபரப்புதான். முடுக்கிவிடப்பட்ட யந்திரகதி, விரித்த ரெக்கையின் தொடர்ச் சலனம். ஆகாயம் முழுவதையும் ஆக்கிரமிக்கிற சிறகின் அடிப்புகள். வேகவேகமான முன்னேற்றம். விரைவான ரெக்கையடிப்புகள்.

கற்குவேல் வேகமாக வெளியேறினார். ஓடைக்குப் போனார். இருட்டு வேலிமுள் விளார்கள், பாம்பு போன்ற எந்தப் பயமும் அவரது கால்களுக்கில்லை. தீயில் வெந்து கனிந்த தகரம்போல மேகங்கள். நீறு பூத்த நெருப்புத் தகரங்களின் ஒளிக்கண கணப்பு.

பனைமரத்து உச்சியில் அடைந்திருக்கும் மயில்களின் பீதியான கதறல். அழகில்லாத குரல். கிலியலறல். பனங்காடையின் கரைசல். வீச் வீச் சென்று பறக்கிற கரிச்சான் பறவை.

இருட்டுக்குள் கரைந்த இருட்டாக கற்குவேல். கரையாத இருட்டாக செருப்புச் சத்தம், "டடக், டடக்... டடக்"

அவருக்குள் வகுப்புச்சிந்தனை. எட்டாம் வகுப்பில் இன்றைக்கு மூன்றாம் பாடத்தை நடத்தணும். அண்ணல் அம்பேத்கார் பாடம். எப்படி நடத்தலாம்? என்ன... என்ன கதைகள் சொல்லலாம்? எப்படி வகுப்பறையை கலகலப் பாக்கலாம்? அம்பேத்கார் பாடத்தில், ஒரு சிறிய பாரா.

"அம்பேத்கார் கல்வியில் ஆர்வம் காட்டினார். நன்கு கற்று, உயர்ந்த மதிப்பெண்கள் பெற்றார். வயதாக ஆக, தம்மையொத்த தாழ்த்தப்பட்டவருக்கு இழைக்கப்படும் இன்னலை நேரில் கண்டார். பலமுறை தாமும் அத்தகைய இன்னலுக்கு ஆளானார்."

இந்த ஒரு பாராவுக்குள் கற்குவேல் எத்தனையோ விஷயங்களை உணர்ந்தார். ஒன்றுக்குள் ஒன்றாக உள் பொதிந்திருக்கிற விஷயங்கள். பூவிதழ்களைப் போல... பூவுக்குள் மகரந்தம் போல... அடுக்கடுக்கான விஷயங்கள்.

ஓடைக்குப் போனவர் வீட்டுக்கு வந்தார். கனியம்மாள் அப்போதுதான் முற்றம் தெளித்துக் கொண்டிருந்தாள்.. "சளப், சளப்" பென்று தெறித்து விழுகிற சாணிப்பால்.

மின்விளக்கு எரிந்தது, வீட்டுக்குள் போய் எட்டாம் வகுப்பு புத்தகத்தை எடுத்தார். பரீட்சைக்குப் படிக்கிற மாணவனைப் போல மூன்றாம் பாடத்தை அக்கறையோடு வாசித்தார். அண்ணல் அம்பேத்கார், ஒவ்வொரு வரிக்குள்ளும் உட்புகுந்து யோசிக்கிற மனத்தீவிரம். வரிக்குள் புகுந்து புகுந்து... உள் நீச்சலடித்து துளாவி....

இதுதான் கற்குவேல். கற்குவேலின் அன்றாடமே இப்படித் தான். அவருக்கு ஆசிரிய உத்யோகத்தில் சலிப்பே வந்ததில்லை. 'இந்தச் சனியனைக் கட்டிக்கொண்டு இன்னும் எத்தனை காலம் தான் மாரடிக்கணுமோ...' என்று அலுத்துக் கொண்டதேயில்லை.

இவரைப் பொறுத்த அளவில் இந்த உத்யோகத்தை உயிரை விட கூடுதலாக நேசித்தார். முன்னோர்பட்ட துன்பங்களை தனது பின்னோர் பட்டுவிடக் கூடாதே என்றகவலை. தான் பட்ட அவ மானங்களை, வரும் தலைமுறையினர் படக்கூடாதே என்கிற அக்கறை.

இந்த உத்யோகம், இவருக்கு ஒரு தொழில் இல்லை. மாதா மாதம் கனத்த தொகையை தருகிற வெறும் வாத்தியார் உத்யோகம் மட்டுமில்லை. நடத்தின பாடத்தையே திரும்பத் திரும்ப நடத்தி... குரங்குச்சேட்டைகள் பண்ணுகிற மக்கு மண்ணாங்கட்டிகளோடு மாரடிக்கிற ஒப்பாரியில்லை.

இவருக்கு இது ஒரு லட்சியம். லட்சியப்போர். தனது முன்னோர்களும், தானும் பட்ட இழிவுகளை மண்ணில் இல்லாமல் செய்தாக வேண்டுமே என்கிற வெறி. மண்ணாகிப் போகிற விதியோடு பிறந்துவிட்ட "மக்கு மண்ணாங் கட்டி"களின் தலையெழுத்தையெல்லாம், ஒளியெழுத்தாக்கி விடவேண்டும் என்கிற தன் மானப்போர். மண்ணாங்கட்டிகளை யெல்லாம் பொன்கட்டியாக்கிவிட வேண்டும் என்கிற வைராக்கியம். கற்குவேலின் தாத்தா தலாபோட்டு விவசாயம் செய்தவர். நாற்பது பாத்திகளில் கீரை, சீனியவரைக்காய் பயிர் செய்வார். அதை அவரே விற்க போவார்.

அக்கரைப்பட்டிக்குத்தான் கொண்டுபோவார். அய்யமார் தெரு. தெருவுக்குள் போய்விட முடியாது. நுழையக்கூடாது. தெருவிலிருந்து முப்பதடி தூரம் விலகி நின்று தான், சத்தம் கொடுக்க வேண்டும்.

"யம்...மோவ்...! கீடை நாடா...ர், வந்துருக்கேன்"

சொளகில் தான்யம் கொண்டு வருவார்கள். பதினைந்து அடி தூரம் வந்து சொளகை வைத்துவிட்டு, பின்பக்கமாகத் திரும்பிப் போன பின்பு தான்.., தாத்தா கீரையோடு முன் நகர வேண்டுமாம்.

முப்பதடித் தீண்டாமை கடைப்பிடித்துக் கொண்டேதான், கீரை ஏவாரம் நடக்குமாம்.

தண்ணீர் தாகமெடுத்தால்... கேட்பாராம்.

“யம்மோ...வ்! நாக்கு ஒலந்துபோச்சு, தண்ணி குடுங்கம்மா...”

“ஒழக்கை எடுத்து நடுவுலே வை”

இரும்பால் செய்த உழக்கு. துருப்பிடித்த உழக்கு. தான்யம் அளவைக்கான கருவி. அதில் தான் தண்ணீர் ஊற்றுவார்களாம்.

பதினைந்து அடி இடைவெளியில் அதை வைத்துவிட்டு பின்னால் வந்துவிடவேண்டுமாம். அதில் தண்ணீர் ஊற்றிய பின் இவர் போய் எடுத்து... நாக்கை நனைக்க வேண்டுமாம்.

தாத்தா கதைகதையாகச் சொல்வார். சொல்வதைக் கேட்கக் கேட்க மனசுக்குள் நெருப்புதீண்டும். தீண்டாமைக் கொடுமையில் அவமானப்பட்ட தாத்தாவின் கதை... இவன் நெஞ்சுக்குள் ஊசியாகத் தீண்டும், குத்தும். குத்திக் கிழிக்கும்.

“ஒழக்குலே தண்ணி வாங்கிக் குடிச்சவுகடா, நாம, செம்புலே தண்ணி தரமாட்டாக. கிட்டத்துலே அண்டவிடமாட்டாக. தள்ளி நிக்க வைச்சு... கத்திப்பேசுவாக. அப்படி சீப்பட்டு....சீரழிஞ்சு இழிவுபட்டு கேவலமாகி.... ம்ஹீம்... அப்படித்தான் எங்க தலைமுறை கழிஞ்சதுடா. படிப்புலேயும், தொழில்லேயும் மனசுவைத்து... ஒசர ஒசரத் தான்... நம்மளையும் மனுச மக்களா நாட்லே மதிக்க ஆரம்பிச்சாக”

கற்றையான சோக வரலாற்றை சிரித்துக்கொண்டே சொல்வார். கற்குவேலுக்குள் தகிக்கும். தானே செருப்படிபட்ட மாதிரி, அவமானத்தில் உயிர்துடிக்கும்.

கற்குவேலின் அய்யா சொல்வார்.

“ஒன்னோட படிப்புச் செலவுக்கு எறநூறு ரூவா கடன் கேட்டேன். ஒரு பத்தரத்துலே கையெழுத்து கேட்டாக. கைநாட்டு வைச்சிட்டேன். அதுலே என்ன எழுதியிருந்துச்சோ... யாருகண்டது? நாலெழுத்து படிக்காத குருட்டு ஜென்மம் நா.”

“பெறகு?”

“ம்ஹீம்... பெறகென்ன...! நம்ம புளியமரத்துப் புஞ்சை மூணு குறுக்கம். நல்ல இறவைப்புஞ்சை. கெணறும் உண்டு. அதைத்

தான் எழுதிவாங்கிட்டாகன்னு... நாலைஞ்சு வருசம் கழிச்சுத் தெரியும். என்ன செய்ய...! அந்தப் புஞ்சை, அப்படித்தான் பறி போச்சு.”

கதை சொல்கிற மாதிரி அய்யா சகஜமாகச் சொன்ன விஷயம். மலைமலையான சுரண்டலைக் கூட லகுவாக ஏற்றுக் கொண்டு பழகிப்போன வாழ்வின் கசப்பில்... புஞ்சையை பறிகொடுத்த சோகத்தைக் கூட சிரித்துக்கொண்டே கதையாகக் கதைத்த அய்யா.

அந்தப் புஞ்சையைப் பார்க்கிறபோதெல்லாம்... மை அப்பிய அய்யாவின் கட்டைவிரல் மனசுக்குள் குத்தும். நெஞ்சுச் சதைக்குள் கட்டை விரலின் நகம் பதியும். ரணமாகும்.

கற்குவேலுக்கு வாத்தியார் உத்யோகம், தன்மானப் போராகிப் போனது இப்படித்தான். லட்சியப் பயணமானது இப்படித்தான். இதனால்தான்

வகுப்பறையை கலகலப்பாகவே வைத்திருப்பார். பாடத்தை ஒட்டிய கதைகள் சொல்வார். சில சமயம் நாட்டுப்புறப் பாடல்களைக் கூட மெட்டோடு பாடுவார். மக்கு மாணவனைக் கூட அவரது வகுப்பறை, கல்வி வேட்கை உள்ளவனாக மாற்றிவிடும். முள்ச்சுமையாக அல்லாமல், கல்வியை... அவர் பூச்சுமையாக்கிவிடுவார்.

கதைகள்...பாடல்கள்... கலகலப்பு... சிரிப்பு... மிரட்டலாகத் தோன்றாத ஆசிரியர்... தோழமையை உணரவைக்கிற ஆசிரியர். வகுப்பறைக்குள் வந்து நிற்கிற மாணவ, மாணவியர் எல்லோருமே பழைய கற்குவேல்கள் தான். ஒடுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட விவசாயக் குடும்பத்துப் பிள்ளைகள்தான்.

பழைய கற்குவேல்கள் தான், என்ற உணர்வு, அவரது ரத்த அணுக்களின் உயிர்த்துடிப்பாக... ஒவ்வொரு கணத்திலும். அந்த உணர்வே, அவரை இயக்கும். வகுப்பறையை ஒளிமயமாக்கும். உயிர்ப்புள்ளதாக்கும்.

ஒவ்வொரு நாளும் முழுப்பரீட்சைக்குப் படிக்கிற மாணவனுக் குரிய சிரத்தையோடு, நடத்த வேண்டிய பாடத்தை வாசிப்பார். நிறைய யோசிப்பார். இன்றைக்கும் அப்படித்தான்–

அண்ணல் அம்பேத்கார், கல்வியின் வேட்கையை எடுத்துச் சொல்லணும். அம்பேத்காரை அண்ணலாக்கிய அறிவின் பெருமையைச் சொல்லணும். ஆடு மேய்த்தே வாலிபத்தை அடைந்தவன், படித்தவன் போன்ற பாவனையோடு புதுமாப் பிள்ளையாகி... கடிதத்தை வாசிக்கத் தெரியாமல் அழுது, வீட்டையே அழவைத்த நாட்டுப்புற வேடிக்கை கதையைச் சொல்லலாம். வெள்ளைப் பஸ், கலர்ப் பஸ் என்ற அடையாளத்தில், சொந்த ஊர் பஸ்ஸை தவறவிட்டு தவித்த பெரியவர் கூத்தைச் சொல்லலாம். கல்வியின்மையின் பயங்கரத்தை கதைகள் மூலமாகவே உணர்த்தலாம்.

கீரைவிற்ற தாத்தா கதையைச் சொல்லலாம். கைநாட்டு கதையைச் சொல்லலாம். படித்து ஆசிரியராகி பெருமைப்பட்ட தனது தலைமுறை உயர்வைச் சொல்லணும்.

கற்குவேலுக்குள் கிளைகிளையாக பிரிகிற யோசனைகள். நீண்டு விரிந்து படர்ந்து கற்பனைகள்.

ஏறக்குறைய விடிந்துவிட்டது. பிரஸ்ஸில் பேஸ்ட்டைக முழிக்கொண்டே....

"கனி"

"என்னங்க?"

"வெண்ணி வைச்சுட்டீயா?"

"என்னத்துக்கு?"

"என்ன இப்புடி கேக்கே? வெண்ணியை என்ன செய்வாக? குளிக்கத்தான்"

"அதுக்குள்ளேயா?"

"ஆமா...!!!"

"இன்னைக்குமா?"

கற்றுவேலுக்குள் எரிச்சலாக இருந்தது. கடுப்பும், சிடுசிடுப் புமாக மனைவியைப் பார்த்தார். அவளது வியப்பு இவரை ரொம் பக் கோபமூட்டியது.

"என்ன... ஒனக்கு? கிறுக்கு பிடிச்சிருச்சா? குளிக்கணும்னா... அதிசயமா பாக்கே. சீக்கிரம் வெண்ணியை வை."

சீற்றத்தில் உத்தரவிடுகிற கற்குவேல். அவரோடு குப்பை கொட்டிய பலவருஷ அனுபவத்தில், பயமில்லாமல் நின்றாள் கனியம்மா. எதிர்த்து சீற்றமாய் பார்த்தாள்.

"என்ன இது கொடுமை? வெண்ணி வெண்ணின்னு... கால்லே வெண்ணியை ஊத்திக்கிட்டு நிக்கீக....?"

"வளவள, தொளதொளன்னு வாயை விரிக்காதே. சொன்னதைச் செய்....."

எரிந்து விழுந்த கற்குவேலை ஒருமாதிரியாகப் பார்த்தாள். கோபமாகப் பார்த்தவள், இப்போது பரிதாபமாகப் பார்த்தாள். "ஐயோ பாவம்" என்பதைப் போலப் பார்த்தாள். அந்தப் பார்வையின் கருணை, இவருக்குள் சண்டாளமாய் ஆத்திரத்தை உண்டு பண்ணியது.

விரிகிற கண்ணில் எரிகிற தணல். மட்டியை கடித்த ஆத்திரம். மட்டுப்படுத்திக் கொண்டார். தன்னைத் தானே அடக்கிக் கொண்டார். வாயில் வைத்த பிரஸ்ஸுடன் சைக்கிளை எடுத்து வெளியே வைத்தார். சீட்டுக்கடியில் சொருகி வைத்திருந்த துணியை உருவினார்.

சைக்கிளின் பிரேம், ஹாண்டில் பார், மக்காடு எல்லாம் பரபர வென்று துடைத்தார். எல்லாம் நிமிஷ நேரம்.

நுரையைத் துப்பிவிட்டு வாயைக் கொப்பளித்தார். கழுவிய முகத்தை துடைத்தார்.

எட்டுமணிக்கு சைக்கிளை எடுத்துவிடவேண்டும். ரெண்டு கிலோ மீட்டர் தூரத்தில் பள்ளிக்கூடம். மேல்நிலைப் பள்ளி. எட்டரைக்குள் போய்விடலாம். ரிஜிஸ்டரில் கையெழுத்து போட்டுவிடலாம்.

அவருக்குள் ரெக்கையடிக்கிற நினைவுகள். அவரையும் முந்திக் கொண்டு பரபரத்து ஓடுகிற மனசு.

கனியம்மா கொண்டு வைத்த வெந்நீரை, அவரேதூக்கி வாளியில் ஊற்றிய அவசரம். குடத்துத் தண்ணீரை அதில் கவிழ்த்து விளாவிய வேகம். "அவக் தொவக்" கென்று குளித்த மின்னல் துடிப்பு.

தலையை துவட்டிய பரபரப்பில் கதர்வேட்டியை உடுத்தினார். பனியனுக்குள் நுழைந்தார். மடித்திருந்த

சட்டையை எடுத்து தயார் நிலையில் வைத்தார். ஈரத்தலை சட்டென்று உலர்ந்திருந்தது. வழுக்கையைச் சுற்றி ஐந்தாறு வெள்ளை ரோமங்கள், எண்ணெய் தேய்த்தார்.

"கனி..."

துரித கதியின் உற்சாகத்தில் துள்ளுகிற குரல்.

"என்னங்க...?"

"டிபன் ரெடியா? சாப்புடலாமா?"

"இப்பவே சாப்புடணுமா?"

"ம்"

அவரை எப்படியோ பார்த்த கனியம்மா மனநிலை சரியில்லாத கணவனைப் பார்க்கிற பரிதாபம். பாவம்... கிறுக்கு பிடிச்சிருச்சோ என்று பார்க்கிற கண்ணின் மிருது. பரிவின் வருடல்.

"என்ன இப்படிப் பாக்கே?"

"ஒண்ணுமில்லே"

"டிபன் எடுத்துவை""

வழக்கமான பரபரப்பு. அதே துரிதகதி. யந்திரத் துரிதம். முப்பத்தைந்து வருஷத்துப் பழக்கம் அதே வேகம். விறுவிறுப்பு. மின்னல் வேகம், அலுப்போ, சலிப்போ காணாத வைராக்கியப்போர். அவருக்காகக் காத்திருக்கிற கடமை. அவரையே நம்பிக் காத்துக்கிடக்கிற வகுப்பறை. அவரால் மட்டுமே இட்டு நிரப்பக்கூடிய வகுப்பறை. விழுந்தடித்துக் கொண்டு சாப்பிட்டு முடித்தார். கைகழுவுவதற்கு முன்பு பிரஷர் மாத்திரைகளைப் போட்டு விழுங்கிக் கொண்டார்.

முகத்தை அழுந்தத் துடைத்தார். பவுடரை அள்ளி அப்பினார். பரப்பினார். செவிமடலின் ரோமங்களுக்குள் சிக்கிய பவடரைத் துடைத்தார்.

அவருக்குள்ளிருந்து திருப்தியான பெருமூச்சு.

துண்டை மடித்து மஞ்சள் பைக்குள் வைத்தார். பேனாவை எடுத்தார். சட்டையை விரித்து கையை நுழைத்தார்.

"டிபன் பாக்ஸ் ரெடி பண்ணிட்டியா? கனி, கொண்டா"

அவருக்குள் துரிதம். அவரையே அவர் துரிதப்படுத்திக் கொள்கிறார். "என்ன இப்படி.. மசமசன்னு நிக்கே? கௌம்பு. ஒன்னை நம்பி எத்தனை புள்ளைக காத்துக் கெடக்கு? அதுக தலையெழுத்தை ஒளியெழுத்தாக்க வேண்டாமா?"

"என்ன கனி..."

"என்னங்க...?"

கைக்கடிகாரத்தை மணிக்கட்டில் கட்டினார்.

"மணி எட்டாகுதுல்லே? டிபன் பாக்ஸைக்கொண்டா. பெறப் படுணும்லே?"

"எங்கே?"

"ஸ்கூலுக்கு"

"என்னத்துக்கு?"

"இது என்ன கேள்வி? கூறுகெட்ட கேள்வி. படிக்கதுக்கா... போவாக, இந்த வயசுலே? சொல்லிக்கொடுக்கத்தான்."

கனியின் முகத்தில் சோக நிழலிருட்டு. கண்ணில் நீர் மின்னல். உடைந்த மனசின் துளிகள். கலங்கிப் போன உணர்வின் கனிவோடு, பரிவோடும் கேட்டாள். குரலில் அழுகைக் குழைவு.

"ஒங்களுக்கு அயத்து(மறந்து)ப் போச்சோ? நீங்க முந்தா நாளே ரிட்டையர்டாகிட்டீகளே...யாவுகமில்லியா? வெள்ளிக் கிழமை தான் பிரிவுபச்சாரம் நடந்துனாகளே.... இனிமே எதுக்குப் பள்ளிக்கூடம்?"

அவருக்குள் அரிவாள் வெட்டு விழுந்த மாதிரி இருந்தது .

அவரை நம்பி எதுவும் காத்திருக்கவில்லை. அவருக்காக எதுவும் காத்திருக்கவில்லை. அவரால் தான் முடியும் என்று எந்தப் பணியும் உலகில் இல்லை.

இந்த உண்மை அரிவாள் வெட்டாக விழுந்து, ஆணி வேரையே பிளக்கிற உண்மை. அவரது உலகத்தையே தட்டிப் பறித்துக் கொண்டு, தன் போக்கில் சுழன்றோடுகிற உலக உண்மை.

அவரது இருப்பையே கேள்விக்குள்ளாக்குகிற மிகக் கொடிய கேள்வி:" இனிமே எதுக்குப் பள்ளிக்கூடம் ?"

வெலவலத்துப் போனார். உற்சாக நதியாக தத் தளித்துக் கொண்டிருந்த அவரது முகம், சட்டென்று நிறம் மாறியது. வெட்டுண்ட பூங்கொடியாக வாடிப்போன முகம்.

குழம்பித் திகைத்த மாதிரி பறவையாடிய விழிகள்.

"ஆமா... நெசந்தான்...! நாந்தான் ரிட்டையர்டாகிட்டேன்லே? மறந்தே போச்சு..., கேணப்பய மாதிரி ஸ்கூலுக்குக் கௌம்பிக் கிட்டிருக்கேன்... நல்லகூத்து."

சுயபரிகாசமாக அவர் பேசிய விதம், குரலின் உடைவு, சிரித்துக் கொண்ட சிரிப்பிலிருந்து தெறித்த கற்றைச் சோகம். கசந்த சிரிப்பு.

ஆணிவேரறுந்தவரைப் போல அப்படியே ஈஸிச் சேரில் சாய்ந்தார். துவண்டு சரிகிற புருஷனின் கோலத்தைக் கண்டு, குலைநடுங்கி கதறியழுதாள், கனியம்மா.

"என்னத்துக்கு அழுகுதே? அழாதே.. போனாப் போகட்டும். ஏழைபாழை வீட்டுப் புள்ளைகளுக்காக ஓசியா ட்யூசன் நடத்துவம்... நடத்தணும்... இனிமே.... கீரைத்தாத்தா, கைநாட்டு எல்லாம் பழங்கதையாகணும்."

மனைவிக்கு ஆறுதல் சொல்கிறாரா? அவருக்கே அவர் ஆறுதல் சொல்லிக்கொள்கிறாரா? முடிவற்ற லட்சியப் போருக்கான பயணத்தைத் திட்டமிடுகிறாரா?

தெரியவில்லை.

♦ *1999, இதயம் பேசுகிறது முத்திரைச் சிறுகதை*

# 8. உறவின் நிஜம்

கடை திறந்து கொஞ்ச நேரம் தான் வியாபாரம் நடந்தது. வழக்கத்துக்கு மாறாக, கடையை சாத்திவிட்டு வீட்டுக்கு வந்தான் காமராஜ். வந்தவுடன்,

"இந்து, வெந்நி போடு" என்று மனைவியைத் துரிதப்படுத்தினான். வியாபாரம் நடக்க வேண்டிய நேரத்தில் வீடு வந்து வெந்நீர் கேட்கிற கணவனை வியப்போடு பார்த்தாள். அதிசயிப்பில் விழிகள் மலர்ந்து விரிந்தன.

"என்ன இது, இந்நேரம்?"

"ஒரு கல்யாணத்துக்குப் போகணும்" சட்டையைக் கழற்றி, ஹாங்கரில் மாட்டினான். வேஷ்டியை உருவி எறிந்துவிட்டு, டிராயர் மேல் ஒரு துண்டைச் சுற்றிக் கொண்டான்.

"கடை?"

"சாத்திட்டு வந்துட்டேன்."

"ஏவாரம் என்னாவுறது?"

*"என்ன, என்ன சொன்னே? அவசரமாகக் கேட்டான்.*

*"ரொம்ப நெருக்கமான சொந்தக்காரங்க கல்யாணமான்னு மூணு தடவை கேட்டேன்."*

*"நேசமான சொந்தக்காரங்க கல்யாணம்."*

“ஒரு பொழுது ஏவாரமில்லேன்னா... ஒன்னும் குடி முழுகிப் போகாது.”

பேச்சு பேச்சோடு, அடுப்பில் வென்னீர்ப்பானையைத் தூக்கி வைத்தாள். மினுக்கி முடித்திருந்த எவர்சில்வர் பாத்திரங்களை எடுத்து, ஸ்டாண்டில் அடுக்கினாள். நடையில் ஒட்டுவதற்காகக் குவிக்கப்பட்டிருந்த கட்டுகளையும், பேப்பர்களையும் ஒதுக்கி வைத்தாள். ஓய்ந்த வேளையில் தீப்பெட்டி ஒட்டுவாள்.

“ரொம்ப முக்கியமான கல்யாணமா?”

“ஆமாம்.”

இந்துவுக்கு அவனைப் பார்க்கப் பார்க்கவே ஆச்சரியமாக இருந்தது. என்ன தலை போகிற காரியமாயிருந்தாலும், கடையைச் சாத்தவே மாட்டான். “கடைக்காரன் கால் மொளைச்சு அலைஞ்சா, கடை சிறகு முளைச்சு ஓடிப் போயிடும்” என்று கிழவரைப் போல சொலவடை சொல்லுவான்.

போன மாசம்கூட சித்தப்பா மகன் கல்யாணம் வந்தது. கடையை அடைக்கவும்மில்லை, போகவுமில்லை. இவள்கூட சொன்னாள்:

“நல்லது பொல்லதுன்னா... நாளைப் பின்னே நாலு சொந்தம் வேண்டாம்? ஒதுங்கிக்கிட்டே போனா... உறவு விட்டுப் போகுமே.”

“ஆமா... மகா உறவு... மண்ணாங்கட்டி உறவு” என்று அலட்சியமாகச் சொல்லி தள்ளிவிட்டு, கடைக்குப் போய்விட்டான்.

அப்பேர்ப்பட்டவன்... இந்நேரம் கடையை அடைத்து கல்யாணத்துக்கு என்றால்...

அவ்வளவு சொந்தமா, நெருக்கமான பந்தமா? அப்படியாரு, நமக்குத் தெரியாம...

காமராஜ் பேசிக்கொண்டே அங்குமிங்குமாய் அலைந்து வேலை செய்யும் இந்துவைப் பார்த்தான். காலையில் மஞ்சள் தேய்த்துக் குளித்திருக்கிறாள். முகத்தில் அதன் பசுந்திட்டுகள். பளிச்சிடுகிற முகம்... மை தடவாமலேயே கருப்பாக இருந்த கண்கள்... சீரமைந்த உதடுகள்... உதடுகளுக்கு மேல் வியர்வைப் பொடி மணிகள்...

ரவிக்கைக்குக் கீழ் இடுப்பில் வியர்வை மினுமினுப்பு, கல்யாணம் முடிந்த இந்த ஆறு மாதத்தில்... இந்து தனக்கு அறிமுகம் செய்து வைத்த புதிய அனுபவங்கள் புதிய உலகம், புதிய வாழ்க்கை எல்லாமே புதுமைதான். அவனுக்குள் ஒரு பரவச உணர்வும், பெருமிதமும் ததும்பி வழிந்தது.

"முழிச்சுக்கிட்டே ஒறங்குதிகளா? சொன்னது காதுலேவுழலே?" சிரிப்பும் பளீரிட்ட வெண்மைப் பளபளப்பும், காமராஜை பிரக்ஞைக்குக் கொண்டு வந்தது. அசடு வழிய சிரித்தான்.

"என்ன, என்ன சொன்னே? அவசரமாகக் கேட்டான்.

"ரொம்ப நெருக்கமான சொந்தக்காரங்க கல்யாணமான்னு மூணு தடவை கேட்டேன்."

"நெசமான சொந்தக்காரங்க கல்யாணம்."

அவனது பதிலில் ஒரு புதிரும் கேள்வியும் பதுங்கியிருப்பதை உணர்ந்து, இந்து பிரமிப்புடன் நிமிர்ந்தாள். அவன் அர்த்த பாவத்துடன் அழுத்தமாகச் சிரித்தான். சட்டென்று அந்தச் சிரிப்பு மறைந்து, ஏதோ கசப்பான நினைவில் ஆழ்ந்து போனவனைப் போல, அமைதியாகிப் போனான்.

"நெசமான சொந்தமா... அப்படீன்னா... பொய்ச் சொந்தம்னு ஒண்ணு இருக்கா?"

"பின்னே, இல்லியா?" என்றவன் மறுபடியும் ஏதோ நினைவில் ஆழ்ந்து போய்விட்டான். கண்கள் விட்டத்தில் நங்கூரமிட்டிருந்தன.

கடந்தகால வாழ்வின் ஒரு கசப்பான பகுதியைச் சொல்லப் போகிறான். அதற்கான வார்த்தைகளை யோசிக்கிறான் என்பதைப் புரிந்து, இந்துவும் காத்திருந்தாள். இது போல, இந்த ஆறு மாசத்தில் கசப்பான - இனிப்பான - பகுதிகளை அடிக்கடி சொல்லியிருக்கிறான். இதோ இப்போதும் ஒரு அனுபவத்தைக் கூறப்போகிறான்.

இந்து அதற்குத் தயாராகிக் கொண்டே, வென்னீராகி விட்டதா என்று தொட்டுப் பார்த்துக்கொண்டாள்.

... சென்னையில் 15 வயதுவரை கடையில் சம்பளத்துக்கு இருந்துவிட்டு, மிச்சமாக ஒரே சொந்தமாயிருந்த அம்மா சாவுக்கு கிராமத்துக்கு வந்தான் காமராஜ்.

மொட்டைத் தலையுடன் கொஞ்சநாள் கிராமத்தை நோக்கின்றி சுற்றிவந்தான். அப்போதுதான்.

சிவகாசியிலிருந்து சாமி கும்பிட ராஜசேகர் வந்திருந்தார். காமராஜைப் பார்த்தார். விசாரித்தார்.

"அடடே... நீ எனக்கு ரொம்பச் சொந்தக்காரனாச்சே. உங்க அம்மா எனக்கு சித்தப்பா மகள். அக்கா வேணும். ரொம்ப நாளா உறவுவிட்டுப் போச்சு" என்று உறவைக் காட்டி, உண்மையுடன் வருத்தப்பட்டார். சிவகாசியில் பிரஸ் வைத்திருக்கிறாராம். நல்ல முன்னேற்றமாம். நல்ல பசையாம்.

தாயையிழந்தபின் சூழ்ந்த அனாதை மைச்சூட்டைத் தாங்கிக் கொள்ள முடியாமல் அந்த இளம் மனசு துவண்டு கிடக்கையில், இந்த புதிய உறவு பெருத்த நம்பிக்கையை உற்சாகத்தை ஏற்படுத்தியது.

தன் உறவுக்காரர் சிவகாசியில் பேரும் புகழுமாக, பணமும் செழுமையுமாக இருக்கிறார் என்பதே அவனுக்குப் பெருமையாக இருந்தது. நெஞ்சை நிமிர்த்திக் கொண்டான்.

அவருடனேயே திரிந்தான். சாமி கும்பிட்டு விட்டுத் திரும்பும்போது, "ஊருக்கு வாரீயா?" என்று கேட்டார்.

காமராஜ் பதில் சொல்லத் தோன்றாமல் யோசித்தான்.

"பிரஸ்லே வேலை பழகு... பழகுன பிறகு நல்ல வேலை போட்டுத்தாரேன். நானே கல்யாணமும் முடிச்சு வைச்சு உன்னை உயர்ந்த நிலைமைக்குக் கொண்ணாந்திடுறேன்... வாரீயா...?"

இந்த வார்த்தைகள் ஒரு தேவமந்திரமாய் செயல்பட்டு அவனை உசுப்பிவிட்டது. பற்றிக்கொண்ட ஒரே பற்றுக்கோலான இவரையும் இழந்துவிடக் கூடாதே என்கிற பதைப்பும், அவரது வார்த்தைகளும் இவனை இளக்கி பதமாக்கி இயங்க வைத்தது.

"சரி மாமா..." என்றான்.

சிவகாசி வந்து சேர்ந்தான். ஒரு வருஷமா, ரெண்டு வருஷமா - பத்து வருஷங்கள் ! அச்சாபீஸிலும், வீட்டிலும் மாறி மாறி பேதமின்றி உழைத்தான். ஓடி ஓடிப் பாடுபட்டான். உஸ்ஸூன்னு உட்காராமல், என்ன சம்பளம், ஏது சம்பளம் என்று கேட்காமல்

மாடாய், மெஷினாய் உழைத்தான். விசுவாசமான நாயாக ஓடி ஓடி அலைந்தான்.

காலால் உதைக்கும் பிரஸாக இருந்து, எந்திரஅச்சகமாக வளர்ந்து, இன்று நகரத்தில் பிரபலமான வண்ண அச்சகமாகி விட்டது.

ஒருநாள் -

பிரஸுக்குள் டைப்ஸ் ஸ்டாண்ட் முன் நின்று, அச்சுக் கோர்த்துக் கொண்டிருந்தான். ஒரு மாநாட்டுச் சிறப்பு மலர் வேலை. காமராஜ், ஸ்டாண்டில் ஒரு காலும், கீழே ஒரு காலும் ஊன்றிய வண்ணம், பார்வை இடது கையிலுள்ள பத்திரிகையில் நிலைத்திருக்க. வலதுகை ஒவ்வொரு டைப்பாக பொறுக்கி அடுக்கியது. அவன் கையும், மனதும் சுவிட்சு போட்டு முடுக்கிக விடப்பட்டதைப் போல துரித கதியில் இயங்கிக் கொண்டிருந்தன.

"மேனேஜர் கூப்பிடுறாருப்பா..."

காமராஜ் திரும்பிப் பார்த்தான்.

"சரி, இதோ வாரேன்" என்றவன், கையிலுள்ள மேட்டரைப் பார்த்தான். முடியும் தறுவாயிலிருந்தது. மூன்றே வரிதான். அத்துடன் அப்பக்கம் முடிகிறது. மூன்று வரிதானே. முடித்து வைத்துவிட்டால், மேனேஜரிடமிருந்து திரும்பியவுடன் நூலைப் போட்டுக்கட்டி, அச்சுக்குக் கொடுத்துவிடலாம்.

மேலும் அவசரமானான். கை எந்திரகதியில்,மனசு காற்று வேகத்தில் செயல்பட்டு, அந்த மூன்று வரிகளை முடித்துவிட்டு அழுக்குத் துணியால் கைமசியைத் துடைத்த வண்ணம் மேனேஜர் முன் நிற்கும்போது -

பத்து நிமிடம் ஓடியிருந்தது.

மேனேஜரின் கறுத்த முகம் கடுகடுத்து இறுகிப்போய், மேலும் கறுத்திருந்தது. கோபம், அந்தச் சிறிய கண்களில் எரிந்தது.

கொஞ்ச நாளாக இப்படித்தான். இரண்டு மாதத்துக்கு முன்பு, மேனேஜர் செய்த ஒரு பில், மோசடியை மாமா முன்னால் அம்பலமாக்கியதிலிருந்து, இதே கடுகடுப்புத்தான். எப்பப் பார்த்தாலும் ஆங்கார இரைச்சல்தான்.

“கூப்டீகளாமே.”

“கூப்ட்டா... உடனே வரமாட்டீயோ...? நெஞ்சுலே திமிர் ஜாஸ்தியோ?”

கடைசி வார்த்தைகள் அவனுள் நெருப்புச் சாட்டைகளாய் விழுந்தன. சுரீரென வலித்தது. ஆயினும், மனசைக் கடிந்து அடக்கிக் கொண்டான். மௌனத்திற்குள் கனன்றான்.

“ஏன், இவ்வளவு நேரம்?”

“கொஞ்சம் வேலையிருந்துச்சு...”

“கூப்பிட்டா, உடனே வர்ரதைவிட... வேலையென்ன, வேலை பெரிய கலெக்டர் வேலையா?”

“மரியாதை குடுத்தாத்தான் மரியாதை வரும் சார்... எதுக்கு இப்படிப் பேசுறீக?”

“நா பேசுனதுதான் குத்தமாப் போச்சோ? வேலை ஒழுங்காச் செய்ய வேண்டாம்? கூப்ட்டா வரவேண்டாம்? திங்கிற சோத்துக்கு முழுசா வேலை செய்ய வேண்டாம்? தின்னு போட்டு நிமித்திக்கிட்டு திரிஞ்சா எப்படி? சோத்தைத் திங்கிறீகளா, வேறெ என்னத்தையும் திங்கிறீகளா?”

“நீங்க என்னத்தை திங்குறீகளோ... அதைத்தானே நாங்களும் திங்குறோம். ஆனா, நாங்க தின்னதுக்கு விசுவாசமாக இருப்போம். தில்லுமுல்லு பண்ணமாட்டோம்.”

மேனேஜருக்கு சுருக்கென்று தைத்துவிட்டது. வார்த்தைகள் தடித்து... உணர்ச்சிகள் குழம்பிச் சீறி, சூழலே பயங்கரமாகிவிட... பிறத்தியார் தலையீட்டில் விவகாரம் சூடு தணிந்தது.

மறுநாள்–

ராஜசேகர் வீட்டுக்குள் காமராஜ் நுழைந்தான். அவன் மனசுக்குள் நேற்றைய நிகழ்ச்சி கொதித்துக் கொண்டிருந்தது.

வரச்சொல்லியிருக்கிற மாமா, விசாரிக்கப் போகிறார்... மேனேஜரைப் பற்றி சொல்லப் போகிறோம்... ஆயிரம் தானிருந்தாலும் உறவைவிட்டுக் கொடுத்திடுவாரா? எனக்கு வந்த அவமானம், அவருக்கும் தானே! கட்டாயமாக மேனேஜர்ப் பயலை கணக்குப் பார்த்து கண்டு கழிச்சிடுவாரு. குறைந்த பட்சமா... திட்டவாவது செய்வாரு...

காமராஜ் மனசுக்குள் நம்பிக்கை வலுப்பட்டிருந்தது. அந்தப் பாதுகாப்பு உணர்வுடன் உள்ளே நுழைந்தான்.

சோபாவில் உட்கார்ந்து காலைப் பேப்பரில் மூழ்கியிருந்த ராஜசேகர், இவன் காலடியோசையில் நிமிர்ந்தார். பார்வையில் உஷ்ணமிருந்தது.

இவன் மனசுக்குள் அதிர்ந்து, கலங்கி...

"என்ன மாமா..."

"மாமா, மயிரு... "வார்த்தைகள் அனல் துண்டுகளாகச் சிதறியது. காமராஜ் வெலவெலத்துப் போனான்.

"நாளையிலேயிருந்து நீ வேலைக்கு வர வேண்டாம். போகலாம்."

"மாமா... நா ஒண்ணும்... மாமா... என் மேலே... தப்பு.." ஜீரணித்துக் கொள்ள முடியாத அதிர்ச்சி, அவனை திகைக்கச் செய்து, உளறச் செய்தது.

"பேச்சு வேண்டாம்... போயிடு... என் கண்ணுலே முழிக்காதே. ஆமாம், சொல்லிப்போட்டேன்..."

கொஞ்சநேரம் தேங்கினான். உடலெல்லாம் வியர்த்துக் கொட்டியது. மனசுக்குள் நிலைகுலைந்து போய்த்தவித்தான். மேலும் ஏதேதோ சமாதானம் சொல்ல முயன்றான். ஊஹூம், பலனளிக்கவில்லை.

உள்ளுக்குள் உடைந்து, சுக்கல் சுக்கலாகிப் போன காமராஜ் நோக்கின்றி அலைந்தான். ஒரு வாரம் சிறகு கட்டிப் பறந்து விட்டது.

நினைக்க நினைக்க அவனுள் துக்கம் பொங்கியது.

பத்து வருஷமா உழைச்சேனே... மாமா, மாமான்னு எம்புட்டு உறுத்தோட, விசுவாசத்தோட வேலை செஞ்சேன்... கடைசியிலே, மூஞ்சியிலே கரியைப் பூசிட்டாரே...

நொந்துபோன மனசில் நினைவு ஈக்கள் மொய்த்துப் பிடுங்கின. சம்பளத்தையாவது வாங்கலாம் என்று வீட்டுக்குப் போனால், ஆபீஸில் இருக்கார் என்று சொல்ல, ஆபீஸுக்குப் போனால், பாம்பே போயிருக்கார் என்று சொல்ல... மேலும் ஒரு வாரம் பசியும், பட்டினியுமாய் நகர –

ஒரு நாள் -

வீட்டில் ராஜசேகரைப் பார்த்துக்கொண்டான். அவன் ஆசை ஆசையாக தூக்கிவளர்த்த பிள்ளைகள் சூழ்ந்து நிற்க, அத்தை அத்தை என்று ஓடி ஓடி பணிவிடைகள் செய்தானே, அந்த அத்தையும் இருக்க... ராஜசேகர் முன்னிலையில் நின்றான்.

யாரும் ஏனென்றுகூட கேட்காமல், இவன் மனசை நொறுக்கிக்கொண்டு நேரம் ஊர்ந்தது.

"மாமா..."

ராஜசேகர் நிமிர்ந்தார்... வெற்றுப் பார்வை.

"பத்து வருசமா உழைச்சிருக்கேனே... எனக்குக் கணக்குப் பாத்து, குடுக்குறதை குடுத்துடுங்க..."

"என்னலே கணக்கு? அனாதைப் பயலா திரிஞ்சவனை, இம்புட்டு உயரத்துக்கு சோத்தைப் போட்டு வளர்த்து விட்டிருக்கே அதுக்கா, கணக்கு? அஞ்சும் பத்துமா ஓயாமெ செலவுக்கு தூக்கித் தூக்கிக் கொடுத்தேனே அதுக்கா கணக்கு? கணக்குப் பாத்தா... நீ தான் தரவேண்டியிருக்கும்... போடா."

இவன் முகத்தில் ஓங்கி அறை விழுந்ததைப் போலிருந்தது. மனசு விதிர் விதிர்த்துப் போய்விட்டது. வஞ்சிக்கப்படுகிறோம் என்ற உணர்வே அவனுள் ஆவேசத்தைக் கிளப்பியது. மனசை அடக்கிக் கொண்டான்.

"கெஞ்சிப் பார்த்தான். நா எங்கே போவேன், எனக்கு இருக்கிற ஒரே உறவு நீங்கதானே..." என்றெல்லாம் கதறிப் பார்த்தான்.

"கையிலே துட்டு இருந்தா ஆயிரம் உறவு வரும்டா... ஒன்னை மாதிரி மரியாதை கெட்ட பயலுக்குச் சோறு போட்டதே பாவம்."

இந்த அவமதிப்பு அவனை சுரீரெனச் சுட்டது. அவனது தன்மான உணர்வு விழித்துக்கொண்டது. வெகுண்டான் :

"மாமா... ஏங் கணக்கை தீர்க்கப்போறீகளா, இல்லியா?"

ராஜசேகர் விருட்டென்று எழுந்தார்.

"என்னாலே, பூச்சாண்டி காட்டுறே? மிரட்டிப் பாக்குறீயா? தொலைச்சுப் போடுவேன், தொலைச்சு. போடா நாயே... வெளியே."

இவனுக்கு உடம்பெல்லாம் எரிந்தது. பாய்ந்து மல்லுக்கட்டி விடலாமா என்று மனசு துடித்தது. பிரயத்தனப்பட்டு தன்னைக் கட்டுக்குள் வைத்துக்கொண்டான்.

தன்னந்தனியன்... அவரோ பணக்காரர்... பணத்தாலேயே தொலைச்சுப் போடுவார்...

ஆயினும், இந்த அநியாயம் அவனுள் எரிந்து கொண்டிருந்த நெருப்பை உக்ரப்படுத்தியது. ஆவேசமாக வெளியேறினான்.

எங்கே போவது? யாரிடம் உதவி கேட்பது? யார் செய்வார்? மாமாவே இப்படிப் பண்ணற போது, மத்தவன் எப்படி உதவி செய்வான்? மாமா... மாமா... பாவி.

குருட்டுக் கோபத்தில் தவித்தான். என்ன செய்றது?

அப்போதுதான், சக தொழிலாளி யோசனை சொன்னான் : "சங்கத்துக்குப் போ."

போனான். அங்கே தலைவரைப் பார்த்தவுடன் அதிர்ந்தான். மாமா பேச்சைக்கேட்டு, இவரை திட்டியிருக்கிறேன். வாய்க்கு வராத வார்த்தைகளால் அர்ச்சித்திருக்கிறேன்...

மனசுக்குள் வெட்கிப் போய் குறுகினான். என்ன என்று அன்புடன் விசாரித்தார்...

உள்ளங்கைக்குள் அடக்கிவிடலாம். அவ்வளவு ஒல்லி. கத்தி முகம். முன்னால் இரண்டு பற்கள் மட்டும் நீட்டிக்கொண்டு, கறைபடிந்து முகத்தை மேலும் விகாரமாக்கியது. கண்கள் மட்டும் ஒரு அழகாய் ஜொலித்தது.

காமராஜ் மனசின் அழுக்குகளை - வேதனைகளை யெல்லாம் கொட்டினான். பொறுமையாகக் கேட்ட அவர்,

"மாசா மாசம் உங்ககிட்டே கையெழுத்து வாங்கியிருக்காங்களா ?" என்றார்.

"ஆமாம்... கேப்பாங்க. போடுவேன்."

தன் உதவியாளரைப் பார்த்து... "தோழர், இவருக்கு ஒரு கேஸை எழுதுங்க" என்றவர் இவனைப் பார்த்து சங்கத்தில் மெம்பராகிக்கோங்க என்றார். தலையை ஆட்டினான்.

கொஞ்சநேரம் நகர்ந்தது. இவன் அலுவலகத்தை பார்வையால் சுற்றினான். சுவர் முழுவதும் தலைவர்கள்

படங்கள். பீரோவில் நிறைய கேஸ்கட்டுகள். பலகையில் கட்டுக்கட்டாக புத்தகங்கள்... மேஜையில் பல்வேறு துண்டுப் பிரசுரங்கள்... மூலையில் கொடியுடன் கூடிய கம்புகள்...

தலைவரின் சப்தம் கேட்டது.

"இதுலே ஒரு பேப்பர் லேபர் கோர்ட்டுக்குப் போகும். ஒன்று ராஜசேகருக்குப் போகும். ரெண்டொரு நாள்லே பேச்சு வார்த்தைக்குக் கூப்பிடுவாங்க. பேசுவோம்... அவர் உங்களை நல்லா சுரண்டியிருக்காரு... மோசடியும் செய்திருக்காரு... பரவாலே பாக்கலாம். சம்பளமும், கிராஜூட்டியும், நஷ்டஈடும் வாங்கிடலாம். கையெழுத்துப் போடுங்க..."

போட்டான்.

பேச்சு வார்த்தையில் பிடிவாதம் பண்ணின ராஜ சேகர் போராட்டத்தைச் சந்திக்க வேண்டிவரும் என்ற தலைவரின் எச்சரிப்பையும் அலட்சியப்படுத்திய அவர், அச்சகத் தொழிலாளிகளும் சங்க அறைகூவலுக்கு இணங்கி போராட்டத்தில் ஈடுபட்டுவிடுவார்கள் என்றளவுக்கு நிலைமை வளர்ந்த பிறகுதான் பணிந்தார்.

சங்கம், கணிசமான தொகையைப் பெற்றுக் கொடுத்தது. கடை வைத்தான். மறுவருஷம் கல்யாணம் முடித்து, இதோ... அனாதை என்ற உணர்விலிருந்து விடுபட்டு, ஒரு வாழ்வை அமைத்துக்கொண்டான்.

குளித்து முடித்து துவட்டிக்கொண்டே இந்துவிடம் சொன்னான்: " இதுதான் நெசமான சொந்தம், இந்து ! மாமா, மச்சான், மத்ததெல்லாத்தையும்விட எனக்கு இந்த உறவுதான் உசத்தி... இதைவிட ஏவாரமா பெரிசு? கடையே இந்த உறவாலே வந்ததுதானே..."

இந்து அவனைப் பார்த்தாள். பார்வையில் கருணையும் பரிவும் கனிந்திருந்தன. பாவம், இந்த மனுஷர் எம்புட்டுக் கஷ்டப்பட்டிருக்கார்... !

காமராஜ் பரபரத்துக் கொண்டிருந்தான். சரிசரி... அந்தப் பேக்கை எடு என்றவன், அவசர அவசரமாக செருப்பை மாட்டிக் கொண்டான்.

◆ *ஜூன் 1982, செம்மலர்*

# 9. மண்

கடாமறிகளுக்கு அகத்திக் கொழையைக் கட்டிவிட்டு, எருமைக்கு ஒரு ‘குடங்கை’ புல்லை யள்ளிப்போட்டுவிட்டு... டீக்கடைப் பக்கம் போய்ட்டு வருவோம்னு புறப்பட்டான், குருசாமி.

ஒரு கடவுக்குள்ளே நுழைந்து, கடந்து, தெருவுக்கு வந்து பத்து வீடுகள் தாண்டியிருப்பான். குப்பென்று ஒரு மணம், நாசிக்குள் புகுந்து, நெஞ்சுக்குள் உட்கார்ந்து கொண்டது. மனசைக் கட்டி யிழுக்கிற ருசியான மணம்.

‘யார் வீட்டிலேயோ கோழிக் கறி கொதிக்குது,’ வாசம் ‘கம்ம்’முன்னு அடிக்குது... நின்னு மோந்துபாக்க மனது சபலப்பட... அரை மனசோடு நடையைத் தொடர்ந்தான்.

‘திருவேங்கடம் சந்தையிலே முன்னூறு ரூவாய்க்கு ரெண்டு குட்டிக வாங்குனது. நல்ல அகத்திக் கொலையும் கருவேலங்காய்யும் தின்னு... வீட்லே வளருது.

*“கருசக்காடுன்னு பஞ்சக் காடுன்னு நெனைச்சுக் கிட்டிருந்தேன்... இப்படியோர் பெருமை இருக்குன்னு... நீங்க சொல்லித்தானே, இப்பப் புரியுது?”*

*“போடா... மண்ணுக்குப் பெருமை இருந்து என்ன செய்ய? நாக்கு வழிக்கவா? உனக்கும் எனக்கும் இந்த மண்ணு உரிமையாயில்லியே ... என்று சொல்லிவிட்டு துண்டை உதறி தோளில் போட்டுப் புறப்பட்ட பெரியவர், ஒரு பெருமூச்சு விட்டார்...”*

நல்ல பின் பார்வை. கடைசி ஆடிக்கு அறுத்துப் போட்டுட வேண்டியதுதான்... ஐநூறு ரூவாய்க்கு முதலாகிப் போகும் நாமளும் புள்ள குட்டிகளோட நல்லா - மனம் செழிக்க - கறி தின்னுக்கிடலாம்...' கோழிக்கறி குழம்பு வாடை... கடைசி ஆடிக் கனவுகளை உசுப்பி விட்டது. கடாக்கறி ருசி மனசுக்குள் வந்து நின்றது.

கோதைநாச்சி கறிக்குழம்பு வைச்சா... தனி ருசியாயிருக்கும். அவா கைப்பக்குவத்துலே அப்படியோர் நேர்த்தி. பொடிப் பொடியாக அறுத்து... அளவோட மசாலா சேர்த்து... தேங்காய் தட்டிப் போட்டு கொதிக்க வைச்சு, நல்லெண்ணை ஊத்தி ஏறக்கி வைச்சுட்டாள்னா... வாசம் எட்டு வீட்டுக்கு எட்டும். குழம்பு ருசியிலே கூடுதலாக கொஞ்சம் சோறு இழுக்கும்...

டீக்கடை வந்துவிட்டது. குருசாமி ஒருகல்லில் உட்கார்ந்தான்.

'ஏய் தமிழ்மணி, இங்கே ஒரு டீ குடப்பா'

'கொஞ்சநேரமாகும்...'

'ஏன் தண்ணீசூடேறலியா?'

'ஆமா...'

'சரி... போடுறபோது எனக்கும் ஒரு டீயைப் போடு'

கடையில் உட்கார்ந்தவர்கள் ஏற்கெனவே பேசிக்கொண்டிருந்த விஷயத்தை நிதானித்துக்கொண்டு, கலந்துகொள்ளலாம் என்று கவனிக்க ஆரம்பித்தான்.

இந்த டீக்கடை இருக்கிறதே... இது ஒருமாதிரியான ஒலி பரப்பு நிலையம். இங்கு பேசப்படாத விஷயங்களே இருக்காது.. ஊர் ரகசியம் முழுதும் தெரிந்துகொள்ள ஒருவன் ஆசைப் பட்டால்... இங்க தினம் வந்து போகிற வாடிக்கையை வைத்துக் கொண்டால் போதும்...

அடிக்கடி அரசியல் விவாதத்தைக் கேட்டுக் கொள்ளலாம்... சினிமாக்களைப் பற்றிய சர்ச்சைகளைக் கேட்கலாம்.

இன்றைக்குக்கூட... புல்லுக்கு போற சாக்கில் பெண்ணும், குளிக்கிற சாக்கில் வாலிபனும் போய்... ஜோடிசேர ஆசைப்பட்டு ஏமாந்த கதையை பேசி முடித்துவிட்டு...

எங்கோ ஒரு கிராமத்தில் நடந்த ஜாதிக் கலவரத்தில் சாவு எத்தனை, காயம் எத்தனை, என்ற விஷயத்தைப் பேசிக் கொண்டிருந்தனர்.

கடைசியில், கடாயைப் பற்றிய பேச்சு தற்செயலாக வந்தது.

“நேரந்தவறாம தின்னுப்புட்டு, வேலை ஜோலி இல்லாம கீகாட்டுகடாய் கணக்கா அலையுதீயே,'' என்று ஒருவன், மற்றொருவனைத் திட்ட... “அதென்ன கீகாட்டுக் கடா?'' என்று வசவுக்கு விளக்கம் கேட்க...

பேச்சு, கடாப்பக்கம் திரும்பிவிட்டது.

குருசாமி கூடுதல் அக்கறையுடன் பேச்சைக் கவனித்தான். இடை இடையே இவனும் பேச்சு கொடுத்தான். ஒரு பெரியவர், மேல் காட்டுக் கடா ; கீழ் காட்டுக்கடா, இவற்றுக்கிடையேயுள்ள வித்தியாசத்தை விளக்கிக் கொண்டிருந்தார்.

குருசாமி பீடியைப் பற்ற வைத்துக்கொண்டான். உற்சாகமாகி விட்டான். பொதுவாக குருசாமிக்கு கறி என்றால் ரொம்பப் பிரியம். வாரத்தில் ஆறுநாட்களுக்குப் போட்டாலும்... மனம் சலிக்காமல் ஆசையோடு பிடித்து மாட்டுவான். கிராமத்தில் எல்லோருக்குமே கறி என்றால் கொண்டாட்டம் தான். என்றாலும்... இவனுக்கு சற்று கூடுதலான ஆசை.

கோதைநாச்சி கூட குறுஞ்சிரிப்போடு கூறுவாள்,“கறிக் கொழம்பு காய்ச்சிட்டா... அதுக்குன்னு ஒரு வவுறு வைச்சிருப்பீக...”

“நெசந்தான்னு” இவனும் சிரித்துக்கொள்வான். வயிறும் மனசும் நிறைந்த திருப்தியோடு கை துடைத்துக்கொள்வான்,

“நானும் எம்புட்டோ இடங்கள்லே கறி சாப்பிட்டிருக்கேன்... ஆனா, ஓங் கைப்பக்குவம் - இந்த ருசி- எங்கயும் பாக்க முடியலே” மனசில் வஞ்சகமில்லாமல் பாராட்டி விடுவான்.

புகையோடு மல்லுக்கட்டி மூச்சுத்திணறி, அடுப்பங் கரைக்குள் பட்ட கஷ்டமெல்லாம், புருஷனின் இந்த ஒரு வார்த்தையில் மறந்தே போகும், கோதை நாச்சிக்கு !

கோதை நாச்சி கையில் மந்திரம் கிந்திரம் வைத்திருக் கிறாளோ... என்ன மாயமோ !

திருப்பரங்குன்றத்துக்குப் பக்கத்திலே ஒரு காட்டுக்கோவில். அங்கு கடாவெட்டி பொங்கல் வைத்து. மொட்டையடிக்க ஒரு உறவினர் குடும்பத்தோடு புறப்பட்டார். குருசாமியையும் வற்புறுத்தி அழைத்தார். சரியென்று குருசாமியும் போயிருந்தான்.

மதுரையிலேயே பிரபலமான சமையல்காரர் வரவழைக்கப் பட்டிருந்தார். கடாயும் நல்ல வளர்ப்புக்கடா. பின் வரிசை ரொம்ப அழகா - அகலமாக - இருந்தது. நிறைய கொழுப்பு.

கறிக்குழம்பு நல்ல ருசியாகத்தானிருந்தது. ஆனாலும் கோதை நாச்சி சமைக்கிற குழம்பு இருக்கிறதே, அந்த ருசி வரவில்லை ; அது ஒரு தனி ருசி; இது ஒரு ருசி... என்னதான் மாயமோ... மந்திர ஜாலமோ !

குருசாமி வீட்டிலே ஒரு பூனை இருந்தது. எலிகளைப் பிடித்துத் தின்னு, வீட்டுச் சோற்றைத் தின்னு அந்தப் பூனை கொழுப்பேறியிருந்தது. ஒட்டுக்கம்பு நிறத்துப் பூனை. கடுவன் பூனை, அதற்கு என்ன சனியன் பிடித்ததோ, தெரியவில்லை குணம் மாறிவிட்டது. குழம்புச் சட்டியை உருட்டத் துவங்கியது. செல்லப்பிராணியாக இருந்த பூனை தொல்லைப் பிராணியாக மாறிவிட்டது.

பூனையை குத்துவதில் கெட்டிக்காரன் என்று பெயர் பெற்ற மயிலேறியை வரச் சொல்லி, குத்தச் சொல்லியாகிவிட்டது. குத்திவிட்டான், கொழுத்த - கடுவன் பூனைக் கறி எவ்வளவு ருசியாயிருக்கும்னு மயிலேறி கதை கதையாகச் சொல்ல... குரு சாமிக்கு நாக்கில் எச்சில் ஊற ஆரம்பித்து விட்டது.

மயிலேறியையே சமைக்கச் சொன்னான். பக்கத்து வீடுகளிலே உள்ளவர்களை கறி சாப்பிடக் கூப்பிட்டான்...

"பூனைக் கறியா ! ஐய்யஹ்யே... ச்சே" என்று முகத்தைச் சுளித்துவிட்டனர்; சில பெண்கள், பொல்லாப் பாவம் என்று பயமுறுத்தினர்.

அருவருக்காமல் - பயப்படாமல் நாலைந்து பேர்தான் தேறினர். அவர்களுடன் குருசாமியும் ஆவலோடு ருசி பார்த்தான்.

ஒரு கவுச்சி வாடை, குடலைக் குமட்டியது. மூணு நாலு துண்டுகளுக்கு மேல் சாப்பிட முடியவில்லை.

அந்தக் கவுச்சி வாடை ரெண்டு மூணு நாளைக்கு மூஞ்சியிலே அடித்துக்கொண்டிருந்தது. குமட்டல் எடுத்துக்கொண்டே யிருந்தது. வரப் போவதாக வாந்தி மிரட்டிக்கொண்டே யிருந்தது. ரொம்பவே அவஸ்தைப்பட்டுவிட்டான்...

கோதை நாச்சி அதைச் சொல்லி கேலி பண்ணி,ஒரே சிரிப்பாணியாய் சிரிப்பாள்...

ஏதோ ஒரு ஜோலியாய் ஒரு சமயம் கொச்சிக்குப் போயிருந்தான். ஒரு சின்ன - ஓட்டலுக்குள் நுழைந்தான். சப்ளையர் குருமா கொண்டுவந்து வைத்தான்.

"ஆட்டிறைச்சியா, மாட்டிறைச்சியா?" என்று கேட்டான்.

"கடாக்கறிதான் எப்பவும் சாப்பிடுதோமே... மாட்டுக்கறியை இங்க ருசி பார்க்கலாமா!" என்ற யோசனையில், மாட்டிறைச்சியைக் கேட்டான்.

"நம்ம ஊர்கள்லே இது, ஒரு ஜாதி மட்டும் திங்கிற மாமிசம். நம்ம கூட்டாளிக சாப்பிட்டா... அம்புட்டுத்தான். ஊரை விட்டே ஒதுக்கி வைச்சாலும் வைச்சுப் போடுவாங்க..." என்று நினைத்துக்கொண்டான். அவன் நினைத்த அளவுக்கு மாட்டிறைச்சி மோசமாக இல்லை. பொடி பொடி துண்டுகள். நல்ல மசாலா. நல்லா வேக்காடு. நன்றாக ருசியாகத் தானிருந்தது.

குருசாமி புறாக்கறி சாப்பிட்டிருக்கிறான் ; மயில் கறி சாப்பிட்டுப் பார்த்திருக்கிறான்; முயல் கறி ருசி பார்த்திருக் கிறான். பன்றிக் கறியும் வழக்கமாய் சாப்பிடுவான். மூலத்துக்கு நல்லதாமே ! கோழிக்கறியும் அவனுக்குப் பிரியம்தான். ஒரு சமயம் நரிக்கறிகூட தின்றிருக்கிறான்.

கொய்யாத் தோப்பில் தொல்லை பண்ணிய நரிகளுக்கு வேட்டு வைத்திருக்கிறார்கள். தோட்டத்தின் கரைகளில் புதைத்து வைத்துவிடுவார்கள். மிதித்தால், வெடித்துவிடும். ஒரே ராத்திரியிலே மூன்று நரிகள் மல்லாந்து கிடந்தன.

"இளைப்பு, தகை"க்கு நல்லதுன்னு கேள்விப்பட்டு, நரிக் கறியையும் சமைத்துத் தின்றான். கறியில் ருசியில்லை. சக்கை சக்கையாக இருந்தது.

கறி என்றாலேயே அவனுக்கு பிரியம் என்பதால்... எந்த மாமிசமாக இருந்தாலும், ருசி பார்த்துவிட ஆசைப்படுவான்; ஆனால், கடாக்கறி என்றால், கதையே வேறு; குடியிருந்து தின்பான்; சலிக்கவே சலிக்காது. அதிலும், கோதை நாச்சி கைபட்ட கறி என்றால்... கேட்கவே வேண்டாம். பிடித்து வளைத்து விடுவான். மூச்சு முட்ட பிடித்து விடுவான்.

இத்தனையிலும் குருசாமிக்கு ஒரு விஷயம் மர்மமாகவே இருந்தது. கோதைநாச்சி சமைக்கிற கறிக்கு மட்டும், ஏனிப்படி ருசி ? என்ன மாயம்?

இவளைவிட ராஜபாளையம் சித்தி சமையல்லே ரொம்பத் தேர்ச்சி. அவங்க வீட்டிலேயும் கறிக்குழம்பு பல தடவைகள் சாப்பிட்டுப் பார்த்திருக்கிறான். ஊஹூம், இந்த ருசி வந்ததில்லை ! என்ன காரணம்.....? மனசுக்குள் முட்டிக் கொண்டு நின்ற கேள்வி.

அதை கோதைநாச்சியிடமே கேட்டான்... "என்னதான் சொல்லு... கறிக்குழம்பு விஷயத்துலே ஒன்னை ஜெயிக்க இந்த நாட்லேயே ஆளில்லை... ஆமா"

கோதை நாச்சி பெருமிதத்துடன் சிரித்துக்கொண்டாள்.

"நீங்க எப்பவும் இப்படித்தான் சொல்றீங்க... நமக்கு தெனம் கறி திங்கிற மாதிரியாயிருக்கு? நம்மளை மாதிரி ஏழை பாழைகளுக்கு எப்பவாவது.... நல்லது பொல்லதுக்குத் தானே கறியை கண்ணுலே பாக்கமுடியுது... அதனாலே அப்படி அதிசய ருசியா இருக்கும்..."

"நீ சொல்றதும் வாஸ்தவம் தான்.... ஆனா ருசி விஷயத்துலே கதையே வேறு, நீ தான்... தெரியுமா? ஆ...ங்.. கோதை போன பங்குனியிலே விளாத்தி குளம் போயிருந்தேனில்லே அங்க ஒரு வீட்டிலே கறிக்குழம்பு சாப்பிட்டேன்... ரொம்ப ருசியா யிருந்துச்சு. அன்னைக்குத்தான் நெனைச்சுக்கிட்டேன். கோதை நாச்சிக்கும் மிஞ்சின ஒரு நாச்சியாள் இங்க இருக்காள்னு."

"... இந்தாங்க டீ"

டீ இப்போதுதான் வந்தது. குடித்தான். காத்திருந்தாலும் நஷ்டமில்லை. டீ ருசியாக இருந்தது. இந்த அடார்த்தியிலே ருசியிலே - வேறு எங்கும் எதிர்பார்க்க முடியாது.

பெரியவர் இன்னும் கீழ்காட்டுக்கடா, மேல் காட்டு கடா பற்றி விவரித்துக் கொண்டிருந்தார்.

"இராஜபாளையத்திலிருந்து சங்கரன்கோவில் போற ரோடு இருக்குதில்லே, அதுக்கு மேற்கே உள்ளது மேகாடு. கெழக்கே உள்ளது கீகாடு. கீக்காட்டுக் கிடாய்க ராஜபாளையம் சந்தைக்குப் போனா, ரொம்பக் கிராக்கியா விலைபோகும். மேகாட்டுக் கடாய்களைவிட, கீகாட்டுக் கடாக்களுக்கு முப்பதுரூவா, நாப்பது ரூவா விலை கூடுதலா கிடைக்கும்..."

குருசாமிக்குப் பொறுக்கவில்லை. குறுக்கிட்டான்.

"என்ன காரணம், மாமா...?"

பெரியவருக்கும் ரசிகர் கிடைத்த உற்சாகத்தில் மீசையை தடவிவிட்டுக்கொண்டார்.

"காரணமென்ன, காரணம்! கீகாட்டுக்கிடாக்கள்லே கறி ரொம்ப ருசியாக இருக்கும்..."

இவனுக்கு ஏதோ சூட்சுமம் பிடிபடுவது போலிருந்தது. ஆர்வம் அதிகரிக்க... அப்படி ஒரு சங்கதி இருக்கா? என்று வியந்தான்.

"ஆமா.. கீக்காடுங்கிறது கரிசல்காடு. வேற மண்லே வளர்ற கொழைதழைகளைவிட... கரிசல் மண்லே வளர்ற கொழை தழைக ரொம்பச் சத்தானது. மேகாட்டுலே இருக்கிற அகத்தி கருவேலங்காய்களைவிட சத்து கூடுதல். இந்தக் கொழை தழைகளை கருசக்காட்டுக்கடா மேய்றதாலே... கறி ரொம்ப ருசியாயிருக்கும். இந்த ருசிக்காகத்தான் விலை தூக்கலாகக் கிடைக்கும்."

"நீங்க சொல்றது ரொம்பப் புதுசா இருக்கே. மாமா...?"

குருசாமிக்கு மலைப்பாக இருந்தது.

"இதென்ன அதிசயம்? நம்ம காட்டுக் கடாவை விட... விளாத்திகுளம் ஏரியா கடாக்கறி இன்னும் ருசியாயிருக்கும். என்ன காரணம்னு நெனைச்சே? நம்ம கருசலை விட... அந்தக் காட்டுக் கருசல் ரொம்ப உசத்தி. அதை நெய்கருசல்னு சொல்வாக. அதுலே வளர்ற கொழைதழைக ரொம்பச் சத்து...."

இவனுக்கு ரொம்ப நாளாக திகைப்பாக இருந்த விஷயம் இன்று விளங்கிவிட்டது. மந்திரமும் மாயமும் கோதை நாச்சியின் கையில் இல்லை, இந்தக் கரிசல் மண்ணிலல்லவா, இருந்திருக்கிறது...!

அடடே.. கரிசல் மண்ணிற்கு இப்படியோர் மகிமை இருக்கிறதே! அந்தப் பெருமிதம் நெஞ்சில் பொங்கி வழிய... பெரியவரைப் பார்த்தான் குருசாமி...

"கருசக்காடுன்னு பஞ்சக்காடுன்னு நெனைச்சுக் கிட்டிருந்தேன்... இப்படியோர் பெருமை இருக்குன்னு... நீங்க சொல்லித்தானே, இப்பப் புரியுது?"

"போடா... மண்ணுக்குப் பெருமை இருந்து என்ன செய்ய? நாக்கு வழிக்கவா ? உனக்கும் எனக்கும் இந்த மண்ணு உரிமையாயில்லியே.... என்று சொல்லிவிட்டு துண்டை உதறி தோளில் போட்டுப் புறப்பட்ட பெரியவர், ஒரு பெருமூச்சு விட்டார்..."

பெருமிதக் கனவுகளில் மிதந்து கொண்டிருந்த அவன் மனசில் சட்டென்று வாழ்க்கை நிஜம் உறுத்தியது. சோகத்தில் கனந்தது.

பெரியவர் முதுகையே பார்த்தான், குருசாமி...

◆ *1985, தாமரை*

# 10. இந்தக் காலத்துத் தாய் !

அன்னம்மா, கனவு கண்டு திடுக்கிட்டவள் போல விசுக்கென விழித்துக் கொண்டாள். கண்கள் வலித்தன. தூக்கமின்மையால் சிரமப்பட்டு எழுந்த அவள் மேனி முழுவதும் சோர்வும், அசதியுமாய் ஒரேயடியாய் மந்தித்துப் போய்க் கிடந்தது. இருட்டுக்குள்ளே சற்று நேரம் அர்த்தமில்லாத சிந்தனையுடனிருந்தவள், எழ மனமில்லாமல் தன்னை மறந்து உட்கார்ந்தேயிருந்தாள். நேற்று மாலையில் கூலிக்கு ஆள் கூப்பிட வந்த பெரிய வீட்டுக்காரம்மா.

"அன்னம், 'கங்கமங்கலா' வேலைத்தளத்துலே நிக்கணும். இள மதியத்துக்கெல்லாம் கருதறுத்து முடிச்சுடணும்" என்று சொல்லி விட்டுப் போனது நினைவில் திடீரென உறைக்கவே... விசுக்கென எழுந்தாள். கூந்தலை அள்ளிச் செருகிக்கொண்டாள்.

> *அப்பேர்ப்பட்ட மிருகங்களைப் பற்றி அந்தோணி அலட்சியமாக கூறுகிறான்... அதெல்லாம் அந்தக் காலம்... என்று*
>
> *ஒருவேளை, அவன் சொல்வதுவும் நிஜம்தானோ? உண்மையிலேயே இந்தக் காலம்... விழிப்பும் ரோஷமுமான காலம்தானோ? இருக்கலாம்.*

இருட்டுக் காடாய் வளர்ந்து கிடக்கும் அந்த கூந்தல் அவளது வாழ்க்கையைப் போலவே உதிர்ந்து... கட்டை குட்டையாகி எண்ணைப் பசையற்று போய்விட்டது.

வாயில் ஊறிய அசிங்கமான எச்சிலைத் துப்பி விட்டு, இடுப்பில் செருகி வைத்திருந்த சிங்க மார்க் பொடி மட்டையை எடுத்து விரித்து ஒரு சிமிட்டா அள்ளி பல்லில் இழுவிக் கொண்டவுடன்... ஒரு சுறுசுறுப்பு வந்துவிட்டதுபோல் அவளே உணர்ந்தாள்.

தட்டித்தடவித் தேடி தீப்பெட்டியை எடுத்து, காடா விளக்கை உயிரூட்டினாள். அதன் மங்கலான ஒளியில் அவளது மகன் அந்தோணி வேட்டி நழுவ விட்டு விட்டு, அண்டர்வேருடன் கோணல் மாணலாகப் படுத்துக் கிடப்பதைக் கண்டாள்.

ஏனோ, அவள் மனசில் ஒரு அர்த்தமில்லாத அங்கலாய்ப்பு ஏற்பட்டது. ‘ ஊம்...ஸ்ட்ரைக் பண்றானாம் ... ஸ்ட்ரைக் ! விடிய விடிய ரோட்டுக்காட்டுல காவல் காத்துட்டு... இப்போ வந்து சவமா தூங்குகிறான்... இவனுக்கெல்லாம் எதுக்கு இந்த எடுப்பு...?’

இருதய அடிவாரத்திலிருந்து பீறிட்டெழுந்த பெருமூச்சு... ஸ்ஸ்ஸ் ஸென்ற இரைச்சலுடன் வெளியேறியது.

வெளியே இன்னும் இருள் அடர்த்தியாக இருந்தது. ஊருக்குத் தலைமாட்டிலிருந்த சிமிண்டாலையைச் சுற்றி நெருக்கமான ட்யூப் லைட்கள் தனது வெண்ணிற ஒளியைத் தாராளமாய் அள்ளித்தெளித்தன.

வானத்தை நோக்கி நிமிர்ந்து நின்ற சிமிண்டாலை புகை போக்கி, வழக்கத்திற்கு விரோதமாக, புகை போகாமல் வெறுமையாக - தாலியிழந்த கைம்பெண் போல சோகமாகக் காட்சியளித்தது.

“ஹூம்... ராவும் பகலுமா குபுகுபுன்னு எந்நேரமும் புகை போய்கிட்டிருக்குமே - இந்த நீசப்பயலுகளுக்கு என்ன எழவு விழுந்ததோ, ஸ்ட்ரைக் பண்றானுங்களாம் - இந்தப் பத்து நாளா இப்படிச் சும்மா கிடக்குதே... வெறுங்குழாயாய்.”

கிணற்றடியில் தண்ணீரெடுத்து வைத்துவிட்டு சாணமெடுத்து, முற்றம் தெளித்து முடித்தவள்... செம்பு,

பாத்திரங்களை சாம்பலால் விளக்கியவாறு ... ஏதோ நினைவில்லயித்துப் போய்க்கிடந்தாள்...

... அன்று காலை ஏழு மணியிருக்கும். மகன் அந்தோணி பின்னும் தூங்கிக் கொண்டிருந்தான் எய்ட்டு ஃபோருக்கு போயிடணும்னு அடிக்கடி சொல்வானே என்ற எண்ணத்தில் எழுப்பினாள்.

“ஏலே... ஏலே... அந்தணி... எந்திலே... பொழுது உசக்க வந்தாச்சு. நீ இன்னும் மூசுமூசுன்று ஒறங்கிக்கிட்டிருக்கே. வேலைக்குப் போவலியா?”

‘ம்...ஹும்...ம்ஹும்... ’ விழிக்க மனமில்லாமல் தறிய முறிய அசைந்த அவன் அலுப்புடன் தூக்க அசதியுடன் சொன்னான்.

“போவலே”

“ஏன்லே? காலை வேலைதானே...?”

“ஷிப்டு எயிட்டுப் போருதான். ஆனா... நா போகலே...”

“அதான் தெரியுதே ஏண்டா?”

“ஸ்டிரைக்.”

அன்னம்மா மனம் ‘திக்’கென்றது. மனதில் பெரிய கல்லைத் தூக்கி வைத்துவிட்டது போல இருந்தது. அவளுக்கு மூச்சே ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றுதான் வெளியேறியது. அதிர்ச்சியில் அப்படியே மலைத்துப் போனாள்.

பதறிப் போய் அவனை அவசர அவசரமாக எழுப்பினாள். அவனும் எரிச்சலுடன் சள்ளென்று விழுந்தான்.

“அடச் சீ... என்னம்மா இது... உசுரை வாங்குறே? போம்மா அங்குட்டு...”

“ஏண்டா... ஸ்ட்ரைக் பண்ணவா போறீங்க?” திகிலுடன் கேட்டாள்.

“ஆமாம்... அதுக்கென்ன? நாமட்டுமா ஸ்ட்ரைக் பண்றேன்? எல்லோருந்தான் பண்றோம்...”

“ஏதாச்சும் உனக்கு ஆயிப்போச்சுன்னா...?” அவள் குரல், ரகசியமாக கசிவது போலிருந்தது. ஏனெனில் அவளது திகிலுக்கும் அச்சத்துக்கும் மையக் காரணமாயிருந்தது இதுதான்.

ஆனால் அந்தோணி விசுக்கென நிமிர்ந்து ஏறிட்டுப் பார்த்தான். அவனது பார்வையில் இகழ்ச்சியும் அலட்சியமும் ததும்பி நின்றது.

“ஏம்மா இப்புடி பயந்து சாவுறே? எனக்கு மட்டும் என்ன ஆயிப்போகும்னு நினைக்கிறே? ஞாயத்துக்காக ஞாயத்தோடு போராடுறோம். இதுலே ஒண்ணும் வராது நீ.... வீணா மனசை போட்டுக் குழப்பிக்கிடாதே...”

“ஏண்டா நீ இதுலே நிக்கணும்? வேலைக்குப் போறவங்களோட நீயும் போகவேண்டியதுதானே... என்ன பெரிய... ஞாயத்தை கண்டு கிழிச்சுட்டே....”

“நம்ம கோரிக்கைகாக நாமெதானே போராடணும்? வேறயாரு போராடுவாங்க?”

“போலீஸ், வருவாங்களே...”பீதியும் திகிலும் அவளது குரலில் பிரதிபலித்தது.

“வரத்தான் செய்யும்... வந்துருச்சு... ரெண்டு, மூணு லாரியிலே இரும்புத் தொப்பிக்காரங்க வந்து எறங்கிட்டாங்க...”

“அவங்க ஏதாவது செய்வாங்களோ? மிருகப் பிறவிகளாச்சே?”

“அதெல்லாம் அந்தக் காலம்... நாங்க ஆயிரக்கணக்கிலே நிக்கிறோம். எங்கிட்டே வாலாட்டினா... ஒட்ட நறுக்கிப் பூடுவோம்... தெரியுமா?”

தன்னம்பிக்கை நிறைந்த கர்வத்துடன் சொன்னான் அந்தோணி. அன்னம்மா ஒரேயடியாக கதிகலங்கி நடுங்கிப் போனாள்.

மகன் இன்று பேசுகிற பேச்சு... புதுமையாகத் தோன்றியது. அவனை வியப்புடன் நோக்கினாள். அவன் திடீரென அந்நிய மனுஷனாக - தூரத்தூர ஒதுங்கிப் போய்விட்டது போன்ற ஒரு பிரமை ஏற்பட்டது. கவலையுடன் அங்கலாய்த்துக்கொண்டு... அன்னம்மா நகன்று விட்டாள்....

அவள் கை எந்திரம் போல... தன்னிச்சையாக பாத்திரங்களில் ஈரச்சாம்பலைத் தேய்த்துக் கொண்டேயிருந்தது. அவளது நெஞ்சிலும் ஏதேதோ அர்த்தமில்லாத - பிடிபடாத எண்ணங்கள் சூழ்ந்துகொண்டன.

ஸ்ட்ரைக் தவறானது என்றோ அநியாயம் என்றோ தர்க்க ரீதியாக அவள் புரிந்துகொள்ளாவிட்டாலும், ஆபத்தானது என்பதை தெட்டத் தெளிவாய் தெரிந்துகொண்டிருந்தாள். அதிலும் தனது மகனுக்கு மட்டும் ஆபத்து வந்து விடுமோ என்ற அச்சம் அவளை ஒரேயடியாய் அலைக்கழித்தது. ஆனாலும் மகனை அதட்ட முடியவில்லை.

அவனென்ன பச்சை மழலையா? தோளுக்குமேல் வளர்ந்து நிக்கிறானே ! அவள் மனம் எதை எதையோ எண்ணியெண்ணி மருகுகிறது. அவனோ இவளை... விபரம் தெரியாதவள் என அலட்சியமாய் சிறு பிள்ளையைப் பார்ப்பதுபோல நோக்குகிறான். ம்....அவன்.... ஆள்தான் அகத்தி மரம்போல வளர்ந்துட்டான். மனசைப் பொறுத்தளவுலே குழந்தைதான். இந்த சிமிண்டாலை வேலை கெடைக்குறதுக்கு முந்தி எம்புட்டு கஷ்டப்பட்டோம்....

அன்றாடம் வேலைக்குப்போனாதான் கஞ்சி. இல்லேன்னா இல்லே. இந்த லட்சணத்துலே வருஷத்துக்கு மூணுமாசம் வேலையே கெடைக்காது. அடுப்புலே பூனை தூங்கும்.... இப்படி அன்றாடக் கஞ்சிக்கு மல்லாடித்திரிய... இதுலே ஒரு நல்ல நாள், பொல்ல நாள் வந்தா... வெறும் வூட்டுலே உக்காந்துகிட்டு விசாரப்பட்டு அழுகவேண்டியதுதான்...

ஏதோ... நம்ம தெய்வம், கர்த்தர் ஏசு புண்யத்துலே இந்த வேலைகெடைச்ச பிறகுதானே... வயிறார கஞ்சி குடிக்கிறோம்... ஏதோ ஒண்ணு ரெண்டு துணிமணியெ கண்ணுலே பாத்துக்கிறோம். ஊர்லேயிருக்கிறவனும் நம்மளை மனுஷியாய் மதிக்கிறான்... இந்தப்பாவி பயல்... எடுக்காத எடுப்பெடுத்து இந்த வேலையையும் தொலைத்துவிடுவானோ...

அன்னம்மா மனம் நடுங்கியது. நெஞ்சுக்குள் நிரந்தரமாக சில்லிட்டுக்கொண்டேயிருந்தது. மனதிற்குள் அச்சம், விதம் விதமான அர்த்தமில்லாத கற்பனைகளை சிருஷ்டித்துக் கொண்டேயிருந்தது. அறியாமை இருட்டில்... அச்சம் எனும் பேய்கள் ஆர்ப்பாட்டம் போடுகின்றன.

ஏதோ சப்தம் கேட்டு நிமிர்ந்தாள். குவாரியிலிருந்து போலீஸ் லாரிகள் வெள்ளைப் பிசாசுகள் போல வந்து கொண்டிருந்தன. அந்த லாரியின் ஹெட்லைட்டுகளையே உற்றுப் பார்த்தவள் ஏதோ புலியின் கண்களைக் கண்டவள் போல பயந்து சிலிர்த்தும் போனாள்.

இதே போலத்தான்... பத்து, பன்னிரண்டு வருஷத்துக்கு முன்பு ஒருநாள், இரவில் இரண்டு போலீஸ் லாரிகள் கரும் பூதங்களாய் வந்தன. அந்தக் கிராமத்தில், அப்போது ஏதோ சிறுஜாதிக் கலகம். அதிலே சில பேருக்குக் காயம், அவ்வளவுதான்.

இப்படித்தான் வந்து நின்ற லாரிகளிலிருந்து திடும் திடுமென்று பூட்ஸ் கால்களோடு இறங்கிய காக்கி உடுப்புகள், காரண காரியம் எதுவுமின்றி யுத்தத்தைத் தொடுத்துவிட்டன. கண் மூக்கு பாராமல் அடி... வெறித்தனமான பாய்ச்சல்.... கால்களின் ஓங்கிய உதைகள்... லத்திக் கம்புகள்... ரத்தத்தைச் சுவைத்தன. சில மிருகங்கள் ... இளம் பெண்களின் சேலையை உறிந்து... பூவைக் கசக்குவது போல... ஐயோ...

அந்தக் கொடூரமான – பயங்கரமான நாளில்தான் ஒரு போலீஸ் வெறித்தனத்தால் அன்னம்மாவின் வலது மார்பு பல்பட்டு ரத்தக் காயமே ஏற்பட்டது. எத்தனை எத்தனை பெண்களுக்கு இப்படிப்பட்ட அவமானங்கள் ! சே !

ஜாதிக் கலகத்தை ஒடுக்குவதன் பேரில்... ஜனங்களின் இதயங்களையே கிழித்து நார்நாராக ஆக்கிவிட்டார்களே...!

அந்தக் கொடுமையைத் தட்டிக் கேட்க – ஞாயத்தை எடுத்துப் பேச – அன்னைக்கு யாரு இருந்தாங்க ...? ... ஊஹூம்!

அன்னமாவுக்கு இப்போதும் அதை நினைத்தாலே உடம்பெல்லாம் கூனிக்குறுகிப்போகிறது. அச்சத்தாலும், அவமானத்தாலும் நெஞ்செல்லாம் கசந்துவிடுகிறது. தனக்குத் தானே அருவருப்பான பொருளாகக் காட்சியளித்தாள். களங்கப் பட்ட, கறைபட்ட இந்த உடம்பு நீண்ட வாழ்க்கையின் பெருந் தன்மையால் மன்னிக்கப்பட்டது. ஆனால் மறந்துவிட முடியாதே... அப்பேர்ப்பட்ட மிருகங்களைப் பற்றி அந்தோணி அலட்சியமாக கூறுகிறான். .. அதெல்லாம் அந்தக் காலம்... என்று.

ஒருவேளை, அவன் சொல்வதுவும் நிஜம்தானோ? உண்மை யிலேயே இந்தக்காலம்... விழிப்பும் ரோஷமுமான காலம் தானோ? இருக்கலாம்.

அந்தக் காலத்தில் பொழுது பூராவும் உழைத்துவிட்டு, மாடு வைக்கோலை தின்பது போல கூழைக் குடித்துவிட்டு கொட்டடியில் முடங்கிக்கொள்வோம். ஆனா, இந்தக் காலத்துலே கோலமே வேறானதாக இருக்கிறதே !

எட்டு மணிநேரம்தான் உழைப்புன்னு... வரையறுத்து வேலை செய்கிறானே... ஒண்ணும் தெரியாத இந்தப்பயல்கூட சட்டம் பேசுறான். உரிமைங்கிறான்...! சங்கம்ங்கிறான்... போராட்டம்ங்கிறான்...

இதெல்லாம் அப்போது ஏது? அது ஒரு மூடத்தனமான பயந்த காலம். நிஜமாகவே இந்தக்காலம் புதுத் தினுசாகத் தானிருக்குது. புதுப்புது வார்த்தைகளும், புதுப்புது போக்குகளுமாகத் தானிருக்குது...

ஸ்ட்ரைக் ஆரம்பிச்சதுலேயிருந்து காலையிலும், மாலையிலும் ஊர்வலம் போறாங்க...என்னென்னவோ கோஷம் போடுறாங்க...

அன்னம்மாள் வீட்டுவேலையை முடித்துவிடவும் வெளிச்சம் வரவும் சரியாக இருந்தது. தூக்குச் சட்டியில் சோறெடுத்து வைத்துக் கொண்டபின், மகனை எழுப்பினாள்.

"ஏலே அந்தணி எந்திடா...."

அவன் பலமுறை கத்தியபிறகுதான் மனமில்லாமல் எழுந்தான்.

"என்னம்மா இது... இந்நேரம் எழுப்பிக்கிட்டு... ச் சேய்...."

"ஏலே... நா பெரியவீட்டுக்காரம்மா புஞ்சைக்குக் கேப்பைக் கதிரு அறுக்கப்போறேன்... விடிஞ்சுபோச்சு... சோறு வைச்சிருக்கேன்... எடுத்துப் போட்டு சாப்பிட்டுக்கோ..." என்று அக்கறையுடனும், பரிவுடனும் கூறிவிட்டு கருக்கரிவாளை இடுப்பில் செருகிக்கொண்டு புறப்பட்ட அன்னம்மா... மகன், திடுதிப்பென்று அவசரமாக எழுவதைக்கண்டு திரும்பப் பார்த்தாள்.

"என்னது... விடிஞ்சுபோச்சா...?" அதிர்ச்சியுடன் கேட்டான், தூக்கக் கலக்கத்தில் அவனால் அதை நம்பமுடியவில்லை...

"ஐயய்யோ நா குவாரிக்குப் போவணுமே... !" என்று அவசரமும் பதற்றமுமாய் பரபரத்தான்.

"என்னடா... இன்னைக்கு...?" திகைப்புடன் கேட்டாள் அன்னம்மா.

"இந்த பேரவைக்காரங்க இன்னைக்கு வேலையிலே இறங்கப்போறாங்க அவங்களைத் தடுத்தாகணும்..."

“பேரவையா... யாரு, அந்த ஆட்சிக்காரங்களா?”

“ஆமா, அந்த ஆளுங் கட்சிக்காரங்கதா... ஆள்களை ஏமாத்தி ... புளியோதரை, சோறுபோட்டு ஒரு ஐம்பது பேரை தயார் பண்ணியிருக்காங்க. அந்தப் புளியோதரைப் பிண்டங்களை வச்சு... எங்க போராட்டத்தை ஒடைக்கப் போறாங்களாம்...”

“அவங்க வேலைதானே பாக்கப்போறாங்க? ஒங்களுக்கென்ன வந்தது?”

“அதென்னம்மா... அப்படிச் சொல்றே? நாலு பேரு, ஒரு நாயமான காரியத்துலே எறங்குறப்போ... ஒருத்தன் மட்டும் இடையிலே உருவுனா, அது சரியா?”

“சரி அதுக்காக என்ன செய்யப்போறீங்க....?” - திகில் அவள் நெஞ்சைப் பற்றிக்கொண்டது. அவனோ, துணிவுடன், அலட்சியமாகச் சொன்னான்,

“தடுத்தாகணும், தொள்ளாழிகளோட நாயமான கோரிக்கைகள் ஜெயிக்கணும்னா - கருங்காலிப் பயல்களை எதுத்து சண்டை போட்டுத்தானே தீரணும்.”

“அய்யய்யோ... கலகமா செய்யப்போறீங்க?” பதறிப்போய் கேட்டாள். அவள் நெஞ்சில் கிலிபிடித்துக்கொண்டது அவன், சாதாரணமாக சிரித்தான்.

“அதெல்லாம் ஒண்ணுமில்லே... நல்லவார்த்தை சொல்லித்தான் தடுக்கப்போறோம்.”

“என்னமோடா... ஏதாச்சும் வம்புலே நீ போய்சிக்கிக்கிடாதே” என்று... ‘நீ’ என்பதில் சற்று அழுத்தி... கூறிவிட்டு கேப்பைக் கதிரறுக்க அன்னம்மா புறப்பட்டாள். கங்கமங்கல்லே புஞ்சையிலே நிக்கணுமே நடையை எட்டிப் போட்டு விரைந்தாள். அவள் நெஞ்சில் இனம் புரியாத திகிலும் பீதியும் கவ்விப் பிடித்தன. மகனுக்கு என்ன ஆகுமோ... என்ற கவலை, அவளைத் தொடர்ந்து உலுக்கிக்கொண்டேயிருந்தது.

அந்தக் கேப்பைக் கதிர் புஞ்சை, குவாரி(கற சுரங்கம்)க்குப் பக்கத்தில் தானிருந்தது. குவாரிரோட்டில் கூட்டமாக தொழிலாளர்கள்...ஒருவிதப் பரபரப்புடன் நின்று கொண்டிருப்பது தெரிந்தது. கூட்டம், இன்று சற்று அதிகமாகத் தெரிந்தது. ஐந்நூறு பேரிருக்கும் போலும் !

கருங்காலிகளை முறியடிக்கும் ஆவேசத்தில்... அவர்கள் மனதில் ஒரு புதிய கிளர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

சூரியன், அடிவாரத்தில் கிளம்பி... மெல்ல மெல்ல மேலெழுந்து கொண்டிருந்தான். போலீஸ் லாரிகள், குறுக்கும் மறுக்குமாய் போய்வந்து கொண்டிருந்தன. அங்கு கூடியிருந்த தொழிலாளர்களைச் சுற்றி சுவர் எழுப்பியது போல... போலீஸ் படைகள், துப்பாக்கிகள், கண்ணீர் புகைப்பெட்டி சகிதமாய் அணிவகுத்து நின்றன.

அங்கே கூடியிருந்த தொழிலாளர்கள்... கோபாவேசத்தில் கூச்சல் போட்டுக் கொண்டிருந்தனர். கருங்காலிகளைப் பற்றி ஒருசில தொழிலாளிகள் ஆத்திரத்துடன் திட்டிக்கொண்டனர், அசிங்கமான வசவுகள், காற்றில் கலந்தன... ஒவ்வொருத்தரும் நடக்கப்போகும் ஏதோ ஒரு பயங்கரத்தை எதிர்பார்த்து... மனக் கிளர்ச்சியுற்று... நிலையின்றி அலைந்தனர்... அவர்கள் மட்டுமல்ல... சுற்றியுள்ள காடுகளில் வேலைசெய்து கொண்டிருந்த பெண்களும் அப்படித்தான்! அவர்களும் ஏதோ திகிலுடன் எதையோ எதிர்பார்த்து வேதனையுடனும், குமுறலுடனும் காத்திருந்தனர்...

அவர்களும் இந்த தொழிலாளிகளுக்கு உறவினர்கள் தானே...! அத்தை, அம்மா... அக்காள்... சித்தி... இப்படி உறவினர்கள்தானே...!

கூச்சலிட்டுக் கொண்டிருக்கும் கூட்டத்தில் அந்தோணியின் தலை தெரிகிறதா எனத் தேடிப்பார்த்த அன்னம்மாவுக்கு திடீரென ஓர் உணர்வு ஏற்பட்டது. ஆபத்து வாரப்போ... அதை எதுக்கிறதுலே, எல்லாரும் ஐக்கியமாயிருக்காங்க... லாபமோ நஷ்டமே இது எல்லாருக்கும் தானே ? நாமட்டும் ஏன் என் மகனை மட்டும் தேடணும்?

இந்த கேள்வி நெஞ்சில் உறுத்தியது. அவள் நெஞ்சத்தில் புதுமையான அன்புணர்ச்சி பொங்கியது... இப்போது கூட்டத்தை பார்க்கிறாள்... அந்தக் கூட்டம் பூராவுமே தனது மகன்களாக... ஒரு தோற்றம். ஓர் உணர்ச்சி...

அதோ... பேக்டரியிலிருந்து ஒருசிறு கும்பல் வருகிறது. அதிகமாய்ப் போனால் அறுபதுபேர்களிருக்கும், அவர்கள்தான் கருங்காலிகளோ !

அந்தக் கும்பலின் வருகை... அந்தப் பகுதி பூராவையும் ஒருவித உணர்ச்சிமிக்க பரபரப்புக்குள்ளாக்கி விட்டது. சுற்றுக் காடுகளில் வேலைசெய்த பெண்கள் எல்லோரும் வேலையை அப்படி அப்படியே போட்டுவிட்டு ரோட்டுக்கு வந்துவிட்டனர். அன்னம்மாளும் கருக்கரிவாளுடன் ரோட்டுக்கு வந்துவிட்டாள்.

போலீஸ் உஷாரானது. தொழிலாளர்களின் ஆவேசமும் மனக் கிளர்ச்சியும் உச்சக்கட்டத்தையடைந்துவிட்டது. கூச்சலும் வசவும்... பிரம்மாண்டமான சப்த அலையாக காற்றில் தவழ்கிறது.

“வாங்கடா... புளியோதரைப் பயல்களா... வேலைக்குப் போறீங்களா போங்க... நாங்க உங்க வீட்டுக்குப் போறோம்...”

“வாராம் பாரு சோத்துமுண்டம்... துரோகிப்பயல்க...”

“நாங்க ஜெயிச்ச கோரிக்கையை அனுபவிக்க நீயும் வருவே யில்லே... அன்னிக்கு உங்களைக் கவனிச்சுக்கிறோம்...”

“கருங்காலி நாய்கள்... ஒழிக”

“சோத்துமுண்டங்கள் ஒழிக”

அந்தச் சாதாரண உழைப்பாளிகளின் மனக்கொதிப்பு, இப்படி வசவுகளாக அச்சுததலாக வெளிப்பட்டது. அந்தக் கும்பலை எதிர்நோக்கித் தாக்க ஒவ்வொரு தொழிலாளியும் துடித்தான். சங்க லீடர்கள்... அங்குமிங்கும் கூடி அவர்களைக் கட்டுப் படுத்தினர். களைப்பினால் வரண்டு போன தொண்டை யிலிருந்து கரகரப்பான வார்த்தைகள் பலத்த ஒலிகளுடன் சிதறின..

“தோழர்களே, நாம் தொழிலாளர்கள்... பண்புக் கேடாக நாம் நடந்துகொள்ளக் கூடாது. உலகத்துக்கெல்லாம் ஒழுக்கத்தைக் கற்றுக் கொடுப்பவர்கள் நாம்... நாமே ஒழுங்கீனமாக நடந்து கொள்ளக் கூடாது.... தோழர்களே உங்களை அடங்கிக் கிடக்கச் சொல்லவில்லை. அடிமையாயிருங்கள் என்றும் சொல்ல வில்லை... நாம் வீரஞ்செறிந்த போராட்டத்தின் பத்தாவது நாளில் நிற்கிறோம்... இந்தக் கருங்காலிகளை நாம் முறியடிக்கத் தான் போகிறோம். நமது ஒற்றுமைக்கும் போர்க்குணத்துக்கும் முன்னே... இவர்கள் ஒரு தூசி ! இந்த தூசிகள் தொழிலாளர்களை தோற்கடித்ததாக சரித்திரமேயில்லை...”

கருங்காலிகள் வருகின்றனர். தொழிலாளர் வீட்டுப் பெண்களும், காட்டு வேலைசெய்த பெண்களும் அவர்களைத் தடுப்பதற்காக ரோட்டுக்கு வந்துவிட்டனர். அவர்கள்... பெருங் கூச்சலில் வசவுகளை வீசியெறிந்தனர்... அதில் துஷ்ணமான வார்த்தைகளும் வரத்தான் செய்தது.

"அடப்பாவிப் பயல்களா... எங்க நிலத்துலே ஆலையைக் கட்டிக்கிட்டு எங்க புள்ளைக வயித்துலே மண்ணடிக்கவா வந்தீங்க? ஒருநாள் பேதியிலே ஒருமிக்கப் போயிடுவீக !"

"எங்க மனசை கொதிக்க வைக்காதீங்க... அந்த நெருப்பு உங்களைச் சும்மா விடாதுடா..." பெண்கள் ஆக்ரோஷத்துடன் சாபமிடுகின்றனர்.

... கருங்காலிகளுக்குப் பயத்தால் உடல் சில்லிட்டது. ஆனாலும் தைரியமாயிருப்பது போல பாவனை செய்து கொண்டனர். தூரத்தில் கூடியிருக்கும் தொழிலாளிகளையும், இதோ இடையில் ரோட்டில் வரிசையாக நிற்கும் பெண்களையும் பார்க்கும்போது... ஏனோ மனமெல்லாம் நடுங்குகிறது... ஏதோ பூதத்தின் வாய்க்குள் நுழையப் போவது போன்றதொரு பீதியும், திகிலும் அவர்களைச் சூழ்ந்து கொண்டது.

அன்னம்மா... அலையக் குலைய நின்றாள்... கையில் கருக்கரிவாளை பிடித்து நீட்டி ஆட்டியவாறு உணர்ச்சியுடன் கத்தினாள். அவள் முகம் பூராவும் வோ்த்துக் கிடந்தது. வெறிபிடித்தவள் போன்று ஆவேசமும், ஆக்ரோஷமுமாய் எரிமலையாய்ச் சீறினாள்,

"அடே வாங்கடா (ஒரு கெட்ட வசவு) எங்க புள்ளைகளோட நெஞ்சுலே நெருப்பு வைக்க... பார்த்துக்கிட்டா இருப்போம்...? வாங்க... இந்த அருவாளை வைச்சே உங்க இதையெல்லாம் அறுத்தெறியுறேன்."

அச்சுறுத்தி அறைகூவல் விடுபவள் போல கத்தினாள்... கருங்காலிக் கூட்டம் பெண்களை நெருங்கிவிட்டது. சில பெண்கள் மண்ணைவாரி "நாசமாய் போங்கடா" என்று மனக் குமுறலுடன் வாரியிறைத்து தூற்றினார்கள். ஆனால் அன்னம்மா தலைமையில் பெண்கள்... திடீரென மறியலுக்குத் தயராகிவிட்டனர். அந்தப் பெண்கள் எல்லோரும் கண்ணகிகளாக சீறி நின்றனர்.

ஏதோ ரசாபாசம் நடக்கப் போவதை உணர்ந்து- தொழிலாளர்களை சுற்றிநின்ற போலீசின் ஒருபகுதி இந்தப் பெண்கள் கூட்டத்தை நோக்கி ஓடிவந்தது. அதற்கு முன்பாக ஜீப்பில் ஏறி சப்-இன்ஸ்பெக்டர் விரைந்து வந்து இறங்கினார்.

அந்த ஜீப்... அன்னம்மாவை மோதித் தள்ளுவது போல் உரிசக் கொண்டு உறுமலுடன் நின்றது. சப்-இன்ஸ்பெக்டர் ஆத்திரத்துடன் இறங்கினார்.

பெண்கள் யாரும் இவர்களைக் கவனித்ததாகத் தெரியவில்லை. அவர்கள் திட்டுவதிலும், கருங்காலிகளை மறிப்பதிலுமே முனைப்பாயிருந்தனர்.

சப்-இன்ஸ்பெக்டர் கத்தினார்.

“ஊம்...ம்... போங்க.... பொம்பளைகளுக்கு இங்கென்ன வேலை? போங்க போங்க... ஊம்... போங்க.”

தடியை வீசிக்கொண்டே பெண்களை நெருங்கிய சப்-இன்ஸ் பெக்டரை எரிச்சலுடனும், ஆவேசத்துடனும் ஏறிட்டு நோக்கினாள் அன்னம்மா.

“நாங்க எதுக்குப் போகணும்? எங்க புள்ளைக போராடிக் கிட்டிருக்கு... நாங்க எங்கே போறது?”

ஒருபெண் - அதிலும் பாமரப் பெண் - தன்னை எதிர்த்துப் பேசியவுடன் அந்த அதிகார மமதைக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

“அதெல்லாம் நாங்க பாத்துக்கிடுவோம்... நீங்க போங்க... போங்க... பொட்டைக் கழுதைகளுக்கெல்லாம் போராட்டம் என்ன வேண்டிக்கிடக்கு? போங்க...”

“ஓவ்... என்னய்யா...? ஒழுங்கா பேசு... பொட்டைக்கழுதை அது இதுன்னு பேசுனீயானா... நாங்களும் அது இதுன்னு பேசு வோம்.”

“அடி பொட்டைச் சிறுக்கி... என்னையே அரட்டுறீயா? இப்போ போறீகளா... இல்லே... தலைமுடியைப் புடிச்சு அறுத்துப் பூடுவேன்...”

அவ்வளவுதான் ! அன்னம்மாவுக்கு அடிவயிறே, பற்றி எரிவது போலிருந்தது. அடிபட்ட பெண் புலிபோல

வெகுண்டெழுந்தாள். அவளது நெஞ்சில் கோபாவேச நெருப்பலை... மோதி எழுந்தது... மார்பகத்தில் பல் போட்ட ஆதிக்கோபம்...

சப்-இன்ஸ்பெக்டரின் நெஞ்சுச்சட்டையைக் கையில் பற்றிக் கொண்டு அருவாளை ஆட்டிக்கொண்டே ஆக்ரோஷத்தை வார்த்தை நெருப்புத் துண்டுகளாக சிதறினாள்.

"ஏந் தலை முடியை அறுக்க நீ யாருடா? எடுபட்ட பயலே... நீ என்ன.. என் புருஷனா...?"

பெண்கள் ஆவேசத்திலும் ஆத்திரத்திலும் கூச்சலிட... அங்கே கூடியிருந்த தொழிலாளர் பட்டாளம் ... என்னவோ ஏதோவென்று பாய்ந்துவர... கருங்காலிகள் மிரண்டு... குலைபதறி... சிதறியோட, சப்-இன்ஸ்பெக்டர் செய்வதறியாமல் காலொடிந்த கிழட்டு வேங்கையாய் உறும....

அன்னம்மாள்... அக்கினிப்பிழம்பாக நின்றாள்... வீரத்தின் உருவமுமாய்... எழுச்சியின் வடிவமாய் கருக்கரிவாள் கையிலும், கனல் பார்வை கண்ணிலுமாய் நின்றாள்....

பத்து வருஷத்துக்கு முன்பு போலீஸாரால் வதைபட்டு அவமானப்பட்டு பயந்தோடிய அவள், இப்போது என்ன துணிச்சலில் இப்படி சிலிர்த்து நிற்கின்றாள்...! இதெல்லாம் காலத்தின் மாற்றமா? ஸ்தாபனமாய் திரண்டுள்ள தொழிலாளர்களின் போராட்ட அக்கினியில் வெடிக்கும் நெருப்புச் சிதறல்களா? அந்த நெருப்புத் துண்டுகள் முன்னால் யாரும் நிறக முடியவில்லை.

அந்த நீண்ட நெடும் போராட்டம் முடிந்து, சங்கத் தலைவர் வெற்றி விழாக் கூட்டத்தில் பேசுகையில், நமது வெற்றிக்குப் பேருதவிபுரிந்த நமது தாய்க்குலத்துக்கு - போலீசின் காட்டு மிராண்டித்தனத்தை எதிர்த்து முறியடித்த நமது வீராங்கனை களுக்கு - நமது புரட்சி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறினார்.

ஆம் ; இந்த வீரத்தாய் - இந்தக் காலத்து தாய் தான் !

◆ *மே 1975, செம்மலர்*

குறுநாவல்

# அதீதம்

"ஐயோ...என் தெய்வமே... என்ராசாவே... பக்தியோட இருந்தாலும் புத்தியோட இருக்கணும்னு படிச்சுப் படிச்சு சொன்னீகளே... பாவிநான் கேக்கலையே... புத்தியைக் கடன் கொடுத்துட்டேனே... ஐயோ...ஐய்யயோ...என் ராசாவே..."

அங்கலாய்ப்பான ஒப்பாரி. அடிமனசின் இறுக்கமெல்லாம் பாசப் பிரவாகத்தில் உடைந்து நொறுங்கி... அழுகையாக வெளிப்படுகிற துயரம். துக்கப் பெரும் பிரவாகம்.

## 1

அந்திப் பொழுது, சந்தன வெயில், மிளகாய்ச் செடிகளின் பசுமையை நிறம் மாற்றியிருந்தது. எல்லாச் செடிகளின் தலையிலும் சந்தனக் கரைசலின் ஒளிப் பரவல். பார்க்க அழகாயிருந்தது.

ஆனால் கூதலடிக்கிறது. வெயிலை விழுங்கி விட்டுக் கைநீட்டுகிற பனிக்கூதல். விஷப்பனி. மாாகழி நேற்றுதான் பிறந்திருக்கிறது. இதற்குள் இம்புட்டுப் பனியா? இந்த வருஷப் பருவமே சரியாயில்லை. ஏட்டிக்குப் போட்டியாக இருக்கிறது. என்ன கூத்து கட்ட இருக்கிறதோ...

சோம்பலான யோசனையில் மம்பட்டியோடு அடுத்த பாத்திக்கு நகர்ந்தான் யோகேந்திரன். வாய்க்காலில் தண்ணீர். மண் கரைசலும் நுரைத் துகள்களுமாய் கலங்கலாய் வந்தது. மிளகாய்ச் செடிக்கு முதல் தண்ணீர். ஐப்பசி முதலில் மழைத் தண்ணீரில் மிளகாய் நடுவை. கார்த்திகையில் இரண்டு களைவெட்டு. மூன்று மருந்தடிப்புகள். இப்போது வாய்க்கால் வரப்புகளை எடுத்துக்கட்டி சீர் செய்து, முதல் தண்ணீர். சிரமமில்லை. உடையவில்லை. ஒரு சீராய்ப் பாய்கிறது.

விதைத்த யூரியா முத்துச் சிதறலாக செடிகளின் நிழலுக்குள் சிரிக்கின்றன. அந்தச் சிரிப்பைப் பொறுக்காது, போட்டு அமுக்கித் தின்றுவிட்டுப் படர்ந்து நிறைகிற தண்ணீர்.

குமரிப்பிள்ளைகளாய் கொத்தும் கொழையுமா இருக்க வேண்டிய மிளகாய்ச் செடிகள். மாறி மாறி சுருட்டை நோயடித்து, குழைவில்லாத விறைப்பில் நிற்கின்றன. படர்ந்து அகலமாய் நிற்கா மல் ஒடுக்கிப் பிடித்த விளக்குமாறுகளாக - உலர்ந்த கொக்குகளாக -

யோகேந்திரனுக்குள்ளிருந்து பெருமூச்சு. அடுத்த பாத்திக்காக வாய் மடையைக் கொத்தினான். இன்னும் அவனுக்குள் வாடாத துளிர்களாக நம்பிக்கை.

'தண்ணி பாய்ஞ்சுட்டா செடிக உசர்புடுச்சிரும். புதுத்தளிர் எடுத்துப் படர்ந்துரும். பூ பிஞ்சு எடுக்க ஆரம்பிச்சிரும்'

அவனுக்குள் கால் முளைக்கும் நம்பிக்கைகள். சட்டையில்லாத திரேகத்தில் பனியின் குளிர்ப் பரவல். கூடுதல் வெயிலைப் பொருட் படுத்தாத பனி. 'ச்சே' என்றிருந்தது.

'பனிக்கண்ணு தொறந்தா.... மழைக் கண்ணு மூடிக்கிடும்னு பெரியாளுக சொல்லுவாகளே.. பனி இப்படி விஷப் பனியா எறங்குதே... அப்ப தைமாச மழை இல்லாமப் போயிருமோ....'

சூழ்கிற கவலை நினைப்புகள், மிளகாய் புஞ்சைக்கு அடுத்த புஞ்சை தரிசாகக் கிடக்கிறது. கலப்பை முனை பார்க்காத விதவையாக.

ஆண் மயில் ஒன்று நீளத் தோகையோடு நடந்து இரை பொறுக்குகிறது. சற்றுத் தள்ளி ஒரு பெண் மயிலும், மூன்று குஞ்சுகளும்.

ஒரு பனங்காடை 'கார்ர்' ரென்று நாராசமாகக் கத்திக் கொண்டு பறந்து போகிறது. மைனாவை விட சற்றுப் பெரிசு. நீலமும் பச்சையும் கலந்த ஒரு நிறம். பார்க்க அழகாயிருக்கும் பனங்காடை.

செம்போத்து எங்கோ ஒரு வேலிக்குள் இருந்துகொண்டு சோகமாய்க் கூவுகிறது. கரிசல்காட்டுக்குயில். குயிலை விட இனிமையான கூவல். நெஞ்சுக்குள் ஊடுருவி உரசுகிற உணர்ச்சிக் கூவல்.

'எப்படா... கரண்டு நிற்கும், வீட்டுக்குப் போகலாம்' என்று மனசு கிடந்த பரபரத்தது. அவனுக்கு மகனைப் பார்க்கணும் என்கிற ஆசை, முளைத்துவிட்டது. முளைத்த கணத்தில் விருட்சமாகி விடுகிற ஆசை, விருட்சமாகி அவனை அலைக்கழிக்கிற ஆசை.

போன மார்கழி மாசம் இருபத்தி ஒன்றாம் தேதி பிறந்த பயல். ஒரு வருஷம் ஆகப் போகிறது. ஏழு வருஷகாலம் மாய்மாலம் காட்டி, கண்ணாமூச்சி விளையாட்டு நடத்தி... பிறந்த பயல். கல்யாணமாகி, ஏழு வருஷம் கடந்த பின்பு பிறந்த தலைக் குழந்தை.

அடே...யப்பா, ஏழு வருஷ காலத்தில் எத்தனை எத்தனை மாற்றங்கள்... நாசகரமான மோசமாற்றங்கள். சீரழிவுகள். அவஸ்தைகள்.

ய......ம்மா! பயங்கரம்.

இப்ப நினைத்தாலும்கூட மனசு கிடந்து நடுங்குகிறது, யோகுவுக்கு. நடந்தவற்றையெல்லாம் நினைக்கவே தயங்கினான். நரக நாள்கள். மனசைப் பிள்ளைப் பக்கம் திருப்பி, அந்த நரக நினைப்பு களிலிருந்து தப்பிவிட முயன்றான்.

சந்தன மின்னலாய் வந்து பிறந்த பயல். பார்த்த கண் கூசும். அப்படி ஒரு நிறம். தங்கக் குழைவு. 'ததுக் பொதுக்'கென்று இருப்பான். வெண்ணைக் கட்டியாகக் குழைகிற அந்திச் சூரிய ஜொலிப்பு. சுருள் சுருளாய் முடி. ஆனாலும் மெல்லிய ரோமம். கோதிய விரல்களுக்குள் பூவின் மென் உரசல். அவன் சிரித்து எச்சில் வடிந்தால்.. அதன் அழகே தனி. அள்ளிக் குடிக்கலாம் போலிருக்கும்.

அவனுக்குள் சகலமும் மறந்து போக... முழுவதும் நிறைந்து போன பிள்ளை. அவன் சிரிப்புச் சிணுங்கல். உருண்ட பிஞ்சுக்கைகளின் பூந்தட்டுகள். மிருதுவான அவன் பிஞ்சுப்பாதம் வயிற்றில் பதித்தால்... அதன் சுகமே தேவபோகம்.

'ட...டக்'

பம்ப் ஷெட் குழாயின் அதிர்வுச்சத்தம், கரண்டு நின்று போயிற்று. யோகுவுக்குச் சந்தோஷம். வரத்துத் தண்ணீருக்கு இரண்டு பாத்திகளைக் கொத்திவிட்டு... மம்பட்டியோடு பம்ப்ஷெட் ரூமுக்கு வந்தான். தொட்டித் தண்ணீரில் முங்கி எழுந்தான். அவசரத்தில் காக்கா குளிப்பு. ஈரவேட்டியை நான்காக மடித்து இடுப்பில் கட்டிக் கொண்டு, துண்டைத் தோளை மூடிப் போட்டுக்கொண்டான். இப்போது விஷப்பனி ரொம்பக் கூடுதலாயிருந்தது. உதடுகள் நடுங்கி யதிர்ந்தன. நரம்புகள் முழுக்க விறைத்து விறைத்து திரேகம் சிலிர்த்தது.

பொழுது சுத்தமாக அடைந்து விட்டது. ஆகாய வெளிச்சம் தவிட்டு நிற மங்கலாய் மிச்சமிருந்தது. அதையும் விழுங்கித் தீர்க்க இருட்டு, பனியின் உக்கிரத்தோடு சூழ்ந்து வந்தது. யோகு நடையை எட்டிப் போட்டான். மனசுக்குள்... தனது ரத்த நிழல்.

## 2

''பய இருக்கானா? முழிச்சிருக்கானா, ஒறங்குதானா?'' ஆவல் துடிப்பின் கேள்வியோடு உள்ளே நுழைந்த யோகுவை எதிர் கொண்டாள் சரசு.

அப்போதுதான் குளித்திருந்தாள். மஞ்சள் பூசிய சுடர்முகத்தில் மாரி யம்மா கோயில் திருநீறு. செஞ்சாயத்திருநீறு. நடுவில் சிறிசாக ஒரு

குங்குமப் புள்ளி. ஈரக் கூந்தலைத் துவளவிட்டு நுனியில் முடிந் திருந்தால் அதிலும் சொட்டடிக்கிற நீர்த்துளி. சரசு உதடுகளின் பூ மலர்வு. பெருமிதமான புன்னகை. புன் சிரிப்புப் பிரகாசம்.

“என்ன சிரிக்கே? தவமணி எங்கே?”

“அவருக்கு ஏககிராக்கி. பவுடர் போட்டு, கறுப்புப் பொட்டு வைக்கிறதுக்குள்ளே அவனைத் தூக்கிட்டுப்போக ரெண்டு மூணு புள்ளைக வந்துட்டுப் போய்ட்டாக....”

“ம்”

“மேலத்தெரு வேலக்கா மகா... தூக்கிட்டுப் போய்ருக்கா.”

“எங்கே... அவுக வீட்டுக்கா?”

“இல்லை. களத்துக்கு”

கைலியைக் கட்டினான். ஈரவேட்டி, துண்டை கொடியில் காயப் போட்டான். உச்சித் தலையில் தேங்காய் எண்ணைத் தேய்த்துக் கொண்டான். தலைசீவிக்கொண்டான். காரியங்களில் தெரிந்த துல்லியமான துரிதம். செயல்களில் ரெக்கையடிப்பு. எங்கோ புறப்பட யத்தனிக்கிற பரபரப்பு.

“என்ன... தூரமா?”

“இல்லை..... கிட்டத்துலேதான்”

“அதான்...... எங்கே?”

“பயலைத் தேடித்தான்”

அவள் முகத்தில் சிரிப்பு. சிரிப்பில் ஒரு பரிகாசம். பெருமிதமான பரி காசம்.

“பத்துமாசப் புள்ளையைத் தேடிக்கிட்டு... முழுத்த ஆம்பளை தெருக்காட்லே திரிஞ்சா... என்ன நெனைப்பாக?”

“நெனைக்கிறவுகளுக்கெல்லாம் பயப்பட்டா.... முடியுமா?”

“சரி... காட்லே தண்ணி பாய்ச்சிட்டு வந்திருக்கீக. காப்பி குடுச்சிக்கிருதீகளா....?”

“பயலைத் தூக்கிட்டு வந்து குடிச்சிருதேன்...”

“இந்தப்பறப்பா.... பறப்பாக? நல்ல தகப்பன் வந்து வாய்ச்சீக. நம்ப பயலுக்கு...”

அவனைக்கடந்து செல்கிற வாசனைச் சோப்பின் நறுமணம். வெறும் குடத்தை இடுப்பில் வைத்து வாசலைக் கடக்கிற சரசுவைப் பார்த்தான்.

தவமணியைக் கருத்தரிப்பதற்கு முன் அவள் தவித்த தவிப்புகள், போட்ட சண்டைகள்..... அழுத அழுகைகள்.... தன்னைத்தானே அவள்

மாற்றிக்கொண்ட தலைகீழ் விகிதம்.... அவள் சொல்கிறாள். இவன் பறக்கிற ஆவல் பறப்பு பற்றி. நல்ல கூத்துதான். பெண்ணின் சாகசம். சூழலைத் தலைகீழாகப் புரட்டிப் போடுகிற அவளது சாகசம்.

முற்றத்தைத் தாண்டிய சரசு. தன் முதுகு பார்க்கப் படுவதை பார்வையின் உள் அர்த்தத்தில் மோதிக் கொண்டவள், கண்ணின் கேள்விக்குறி கலைந்து மங்கியது.

அப்பவும்.... வார்த்தையில் மட்டும் கேள்வியை நிறுத்தினாள். "என்னவாம்....?"

"ஒண்ணுமில்லே...."

"அட... சொல்லுங்க"

"தவமணியைக் கொஞ்சுறதுக்கு நான் மட்டும் தவிக்கேன் இல்லையா? அதைத்தான் நெனச்சேன்"

"ஏன்... நீங்க பறக்கலியா?"

"ஆமா. நான் மட்டுமா?"

"நானுந்தான். அதுக்கென்ன?"

"அம்புட்டுத்தான்."

அவள் பூரித்துப் போன சிரிப்பில் முகமே பூவாக மலர்ந்தது. பீர்க்கைப் பூவின் மார்கழிக்குளிர்ச்சி. பசிய மஞ்சள் ஒளிச்சிலிர்ப்பு. அவனுள் மோகத்தீயைப் பற்றவைக்கிற ஒளி.

யோகுவுக்குள் வந்து திரண்ட கிறக்கம். அடிவயிறே சூன்யமாகிப் போன ஓர் உணர்வு. மூர்க்கமோகத்தில் முறுக்கேறித் திணறிய மனசு. தடக் தடக்.. கென்று அடித்துக் கொள்கிற நெஞ்சுத் தீவிரம்.

சரசு நாலெட்டுத் திரும்பி வந்தாள்.

"ஐயா..... ராசா, நான் தவமிருந்து பெத்த ஒங்க புள்ளையைத் தேடித் தூக்கிட்டு வாங்க ராசா.... போதுமா, ராசா?"

"ஒங்க புள்ளை" என்ற வார்த்தையில் அவள் தந்த அழுத்தம்.

கேலியும் குழைவும் பரிகாசப் பணிவுமாகக் கனிந்த பேச்சில் மிழற்றிய சரசு, அவனது கன்னத்தை, குவித்த விரல்களால் ஒத்தி முத்தமிட்டாள்.

அவள் விரல்களின் சிலிர்ப்பான குளிர்ச்சி, மென்மையான ஸ்பரிச உணர்ச்சி, அவனுக்குள் பிரளயம். அதையெல்லாம் கடந்து, சிரித்துவிட யத்தனித்தான். முடியவில்லை. அசட்டுச் சிரிப்பாக முடிந்தது.

அவள் எதையும் கவனிக்காதவள் போல அவனது உள்நிகழ்வை உணராத அப்பாவி போல குடத்துடன் போய்விட்டாள்.

யோகு தெருவில் இறங்கினான். மேல வீட்டு வேலக்கா மகளைத் தேடினான்.

வேலக்கா மகளை வீட்டுவேலை கூப்பிட்டது. பிள்ளையை சரசுவிடம் ஒப்படைத்துவிட எழுந்தாள். பக்கத்திலிருந்த சிறுமி.... "தவம் டேய் தவம்....இங்கே பாரு....." என்று தூக்குவதற்குக் கைநீட்டினாள்.

"ம்ஹீம்.... நான் தரமாட்டேன்... சரசக்காகிட்டே குடுக்கணும்".

"நான் குடுத்துருதேன்..."

"அதெல்லாம் மாட்டேன்.... நீ அழுக வைச்சிருவே".

அதற்குள் அந்தச்சிறுமி அவனைத் தூக்கிவிட்டாள். அவனும் எச்சில் சிரிப்போடு தாவினான்.

"நான் சரசக்காகிட்டே பத்திரமா குடுத்துருதேன்".

இப்படியே கைமாறி... கைமாறி.... கைகள் மாறி தவமணி அழகு அப்படி, சகலரையும் ஈர்க்கிற அழகு.

யோகு விசாரித்து விசாரித்து... நூல் பிடித்துத் திரிந்தான். தெருவில் வீடு வீடாக அலைந்தான்.

கடைசியில் மடம், மடத்துச் சிமெண்டுத் திண்ணை. சுற்றிலும் நாலு சிறுமிகள், கைதட்டுகிற சத்தத்தில் கவனத்தை ஈர்க்கிற முயற்சி.

"கோழி பாரு... குஞ்சைப் பாரு... சைக்கிளைப் பாரு... டக்கரைப் பாரு" என்று ஆள் ஆளுக்குக் கத்த... நடுவில் தங்கப்பழமாகத் தவமணி. திகைப்பும் குழப்பமுமாகத் திணறித் தவித்தான். வந்து வந்து கலைகிற அழுகை. அவனுக்கு ஓவ்வவில்லை. ஆனால் சிறுமிகளுக்கு, தங்க வெண்ணெய்க்கட்டியைவிட மனசில்லை. ஆள் ஆளுக்கு விளையாட்டுக் காட்டினர்.

இவனைத் தூ....ரத்தில் பார்த்தவுடன் -

இவனை நோக்கி பிஞ்சுக்கைகளை அகல விரித்துக் கொண்டு வீறிட்டான். ஓட்டமாய் ஓடிப் போய் தூக்கிக் கொண்டான். மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டான்.

"என்னப்பா... என்னப்பா... ஏண்டா கண்ணு... அழாதேடா ... அழாதேடா."

விநோதமான வகையில் குரலை மாற்றிக்கொண்டு, அவனை நெஞ்சில் வைத்துக் குலுக்கினான்.

"ரோரோ....ரோ...ட்ட்ட்ர்ரு...ட்ட்ரரு...ரோ ரோ ரோ..." என்று இசையலமாய்க் குரல் கொடுத்துக் கொண்டே அவனைக் குலுக்க.. குலுக்க..

முளைத்திருந்த இரண்டு பல் தெரிய அழுத தவமணியின் அழுகை, சிணுங்கலாகக் குறைந்தது. புறங்கையால் கண்ணைக் கசக்கினான்.

"என்னடா.... ஒறக்கம் வருதா? வாடா.... அம்மாகிட்டே போவோம்"

தவமணி அந்தச் சிறுமிகளைப் பார்த்தான். இப்போது கை தட்டிச் சிரித்தான்.

## 3

மல்லாக்கப் படுத்திருந்தான், யோகு. அவன் வயிற்றில் குதிரை ஏறியிருந்த தவமணி தலையைத் தூக்கிக் கொண்டே தவமணி, முகத்தைக் கவிழ்த்தி... "முட்டு....முட்டு, முட்டு....முட்டட்டு" என்று ராகம் பாட, நெற்றிகள் தொட்டவுடன் தவமணி "கெக்கெக்கே" வென்று சிரிக்க......

கொஞ்ச நேரம்தான். அதற்குள் அந்த விளையாட்டு அவனுக்கு சலித்துப் போயிற்று. நெஞ்சு ரோமத்தைப் பற்றியிழுத்து இறங்கப் போனான். யோகுவுக்கு விளையாட்டாசை குறையவில்லை. படுத்த நிலையில் கால்களை உயர்த்தி...கால்களில் அவனைப் போட்டுக் கொண்டு...... ஏற்றவும் இறக்கவுமாய்.... கொஞ்ச நேரம். அதுக்கும் ஒரே சிரிப்பாணி. அதுவும் சலித்துப் போயி ருந்தது. அப்புறம் இவன் விளையாட்டை மாற்றினான்.

"ஏங்க... நீங்களும் பச்சைப் புள்ளை கணக்கா இப்படியே விளையாண்டா எப்படி?"

"ஏன்..... புள்ளையைக் கொஞ்சக் கூடாதா?"

"அதுக்கும் ஒரு அளவு கிளவு கெடையாதா?"

"என்ன அளவு வேண்டிக்கிடக்கு? நீ ஒஞ்சோலியைப் பாரு. எங்களுக்குத் தெரியும்."

"சரி....சரி கொண்டாங்க. அமர்த்தணும்."

பயலும் அவளிடம் ஆவலாய்ப் பறந்தான். அரிசிப் பல் தெரியச் சிரித்தான். அவள் திரேகத்தில் பட்டதும் ஆதாளி தாளாமல் அவள் கைக்குள்ளேயே குதித்தான்.

"அவனுக்குப் பசிச்சிருக்கு."

"ஆமா..... நாலுமணிக்கு அமர்த்துனது. பசிக்காது? ஏங்கண்ணு... ஏ...ராசா... என்னடா செல்லம்...! வவுறு பசிக்குதாப்பா ? வயக்காடு வெட்டுனியாக்கும்? நாலுகுறுக்கம் வெட்டியிருப்பியா? சீமை ராசாவுக்கு பாலு வேணுமாக்கும்?"

முகத்துக்கு நேராகத் தூக்கிப்பிடித்திருந்தாள். அவள் பாவனையும் நடிப்புமாய் முகத்தை ஆட்டி ஆட்டிக் கொஞ்ச.... அவனும் பிஞ்சுக் கால்களை உதறி உதறிச்சிரித்தான். அகல அகலமாய் அசைகிற சரசுவின் உதடுகளைப் பிடிக்க கையைக் கையை நீட்டினான்.

காலை நீட்டினாள். மடியில் கிடத்தினாள். அதற்குள் புரிந்து கொண்டு சந்தோஷம் தாளாமல் தத்தளித்தான். ஆவல் ஆவலாய் சரசுவின் நெஞ்சில் அறைந்தான்.

ஜாக்கட் ஊக்கைத் திறந்து, மாராப்புச் சேலையை நன்கு இழுத்துவிட்டு, மகனை அணைத்துக் கொண்டாள். ஆசையும் மகிழ்ச்சியும் அவன் கால்களும் கைகளும் ஆட....

மகனின் உள்நாக்கின் அழுத்தமான ஸ்பரிசத்தில் மனம் கிறங்கிப் போய், கண்களைச் செருகினாள் சரசு. அந்தச் சுகமயக்கத்தில் கை பர பரத்தது. மகனின் பஞ்சு ரோமத்தை வருடினாள்.

சரசுவின் முகம், தாய்மையில் கனிந்து, விம்மி, தெய்வீக நிலையடைகிற முகம். கிறங்கிய கண்களும் பரவச உணர்வுகளுமாய், சுகபோதையில் தத்தளிக்கிற சரசு. தேவசுகம்.

ஒருக்களித்துப் படுத்திருந்த யோகு, சரசுவைப் பார்த்தான். அவள் முகம் கனிந்த உணர்வுகளில் முகக்குழைவு. புருவ அசைவு. பரவசமாய் மலர்கிற மனைவி முகத்தை நோக்கினான். அவனுள் நீள்கிற நினைவோட்டம். "பெத்த புள்ளைக்குத் தாய்ப்பால் குடுக்குறது எம்புட்டோ நல்லது. புள்ளையை நோய் அண்டாது. நோய் எதிர்ப்புச் சக்தியை வளர்க்கும். வம்சம் வைரத் தொடர்ச்சியா வலுவாத் தழைக்கும் புள்ளைக்கிட்டே பாச உணர்வை வளர்க்கும், உடம்பையும் பண்பையும் ஆரோக்கியமாக்கும். அது மட்டுமில்லை.... தாய்ப் பால் குடுக்கிறது, தாய்க்கே ஒரு சுகம். இன்பப் போதை. பரவசம். தெய்விகமா மாறுகிற மனக்கனிவு. இந்தச் சுகத்தை வேண்டான்னு தள்ள ஒரு பெண்ணாலே முடியுமா? முடியுதே... தாய்ப்பால் தந்தா, கவர்ச்சி கலையுமேன்னு பயப்படுதுகளே... பெத்த புள்ளையை விட கவர்ச்சி முக்கியமா? தாய்ப்பாசத்தைவிட திரேகக் கவர்ச்சி முக்கியமா? தாய்பாசத்தை விட திரேகக் கவர்ச்சி அழகா? தாய்ப்பால் குடுக்கத் தயங்குகிற கலாச்சாரம் தொடங்கிருச்சு. ராட்சஸத் தொடக்கம். இந்தக் கலாச்சாரம்... எய்ட்ஸ் கலாச்சாரத்துலேதான் போய் முடியும்."

யோகுவுக்குள் யோசனைகள், நேற்று நாளிதழில் தலையங்கத்தைப் படித்த ஞாபகத்தின் விளைவு. தாய்ப்பால் வாரம் அனுஷ்டிக்கப் படுவதைப் பற்றிய தலையங்கம்.

தவமணி தூங்கிப் போனான். மடியிலேயே தூக்கி தொட்டிலில் போட்டாள். லேசாய் சிணுங்கித் திமிறினான். தொட்டிலை ஆட்ட ஆட்ட உறங்கிப் போனான். உறங்கிய பின்னும் கூட, அந்தச் சின்ன உதடுகளில் பால் குடிக்கிற பாவனை. சலனம். ஒரு சின்னத் தூசியை எடுத்து அவன் தலை முடியில் வைத்தாள்.

"எதுக்கு இந்தத் துரும்பு?"

“ஒறக்கத்துலே பேய்க்கனா வராம இருக்கணும்னா.... நாம தலை மாட்டுலே வெளக்கமாறு வைச்சுப் படுக்குறோம்லே?”

“ஆமா...”

“அப்படித்தான் இதுவும், பயப்படாம நிம்மதியா ஒறங்கறத்துக்கு...”

சரசுவைப் பார்த்தான். மோகப் பார்வை. அள்ளி விழுங்கிவிட யத்தனிக்கிற பார்வைத் தீவிரம். அவளைத் தொட்டு ஒன்றரை வருஷமாகப் போகிறது.

சரசு இன்றைக்கு ரொம்ப அழகாய்த் தெரிந்தாள். சுடரொளிப் பிரகாசம். முக வசீகரம். கட்டுவிடாத கனிக்குழைவு. இடுப்புச் சதையின் மினுமினுப்பு. தொட்டுத் தழுவத் தூண்டுகிற சதை மின்னல்.

பெருமூச்சோடு எழுந்தான். தொட்டிலையாட்டிக் கொண்டிருக்கிற சரசு பக்கத்தில் போய் நின்றான். இன்னும் நெருக்கமாய். காது மடலில் அவனது உஷ்ணச் சுவாசம். மனஉஷ்ணம். திரேக உஷ்ணம்.

அவளும் திக்....திக்....திக்....

திரும்பாமல், அசிரத்தைப் பாவனையில் அவள். அவளுக்குள் முரண்பாடு. புருஷனின் நியாயமான பசி. மனசறிந்து இங்கிதமாய் நடந்து கொள்கிற அன்புப் புருஷன். இவள் அழுது புலம்பி ஆர்ப்பரித்து அடம் பிடித்த போதெல்லாம்.... கோபப்படாமல் குளிர்முகம் காட்டிய ஆத்ம தோழன். அவனது காலடியில் சரணடைந்து கிடக்கிற இவளது ஆத்மா.

அப்பேர்ப்பட்ட அருமை மனிதனின் இயல்பான பசி. நியாயமான பசி. தன்னையே பரிமாறி, பரவசப்பட வேண்டிய நியாயம்.

ஆனால்.... விரதம்....! சாமியிடம் போட்டிருக்கிற நேர்த்திக்கடன். தவமிருந்து பெற்ற தவமணியின் ஆயுள் வலிமைக்காக, அவள் போட்டிருக்கிற தெய்வக் கடன்.

என்ன செய்ய....?

அவள் உள்ளுக்குள் மருகித் தவித்தாள். மறுக்கவும் முடியாமல், உடன்படவும் முடியாமல் அவள் துடிக்கிற துடிப்பு....

உரசுகிற அவன், யோகுவின் தீ, அடிவயிற்றில் பரவுகிற அவனது வலக்கை. அந்தக் கையின் நடுக்கம். தகிப்பு. பரவுகிற கை, மலைப் பாம்பாக மேல் ஏறுகிறது. திரும்பினாள்.

திடுக்கிட்டான் யோகு. அவள் கண்ணிமைகளில் முத்துப் புல்லாக்காகத் தொங்குகிற கண்ணீர்த்துளி. “என்ன...?”

“நம்ம புள்ளைக்காக நான் போட்ட வெரதம் தெரியாதா... ஒங்களுக்கு?”

“ச்சேய்....” வெறுப்போடு விலகினான்.

# 4

யோகுவுக்குள் எரிமலைத் தகிப்பு. வெளிப்படுத்த முடியாத ஊமைக் குமுறல். எரித்துவிடுவதைப் போல சரசுவைப் பார்த்து விட்டு..... வெளியே திண்ணைக்குப் போய்படுத்துவிட்டான்.

துண்டை விரித்துப் படுத்துவிட்டான். விஷப்பனி, நாய் கூட தெருவில் படுக்க முடியாத பனி. திண்ணைச் சிமிண்டு, துண்டை மீறிக்கொண்டு சுரீரென்று குளிர்ந்தது. உடல் நடுங்கியதிர்ந்தது. ஊதல் காற்று வேறு.

எலும்புகளும் உறைந்துவிடுகிற கூதல். நரம்புகள் விறைப்பது போல ஒரு பிரமை. கன்னக்கதுப்புகளிலும் செவிமடல்களிலும் பனியின் உக்கிரத் தீண்டல். எதையும் உணர முடியாத கோப உக்கிரம். மனசு முழுக்க கசந்து வந்தது. அடிமனசு வரைக்கும் கசப்பின் பரவல்.

“ச்சேய்...” என்று வெறுத்துக் கொண்டான். சரசு மீதா... தன் மீதா... இருவரையும் கட்டுப்படுத்தி கசப்பைத் திணிக்கிற சூழல் மீதா? எதன் மீது வெறுப்பு? அவனுக்கே புரியவில்லை.

தினம் தினம் விரதம்....நிமிஷத்திற்கு நிமிஷம் சாமி கும்பிடல்...

வீட்டுச்சுவர் முழுக்க சாமி போட்டோக்கள், திருப்பதியிலிருந்து உள்ளூர்ச்சாமி போட்டோக்கள் ... வரை வீட்டுச்சுவரே தெரியாது. பூராவும் கண்ணாடியடைப்பு போட்ட கடவுள் படங்கள்.

சரசு... குமரி மாதிரியிருக்கிறாள். ஆனால் நடைமுறையில் ஆசார அனுஷ்டானம். சாமியிரிணி மாதிரி. காவி உடுத்தாத குறை ஒன்று தான்.

அப்பவும் இப்படியா? ச்சேய்!

...கல்யாணமான வருஷம். ஏழெட்டு மாதம் தான் ஆகியிருந்தது.

அப்போது நெருங்கிய உறவுக்காரன் ஒருத்தன், தன் குழந்தைக்கு மொட்டையடித்து, காது குத்த ஏற்பாடு. தூரம் தொலைவிலுள்ள அருஞ்சுனைகாத்த அய்யனார் கோவில். திருச்செந்தூர் பக்கம். அம்மன் புரம் அருகில். வேன் பிடித்துப் பயணம். யோகுவையும் கூப்பிட்டான். சரசுவிடம் கேட்டான்.

“போவமா....?”

“நானுமா?”

“ம்”

“நான் வந்து என்ன செய்யப் போறேன்?”

“சும்மா போவம். போயி சாமி கும்பிடு...”

“சாமி மனசுக்குள்ளேயே இருந்தா போதும். நாலு பேரு பாக்க கும்பிடணும்னு தேவையில்லை.”

"சாமி கும்பிடறது... கேவலமா?"

"கேவலமில்ல... ஆனா அதுக்காக.... ஊரறியக் கும்பிடணுமா? பெருமைக்கா? நானும் கும்புடுதேன்னு காட்டிக்கிடவா?"

"அட..... அதுதான் வேண்டாம். சும்மா சுற்றுலா மாதிரி இருக்கட்டுமே, கோயிலுக்குப் போயிட்டு... ஒறவுக்காரனுக்கு மொய் செய்ஞ்சுட்டு வந்துருவமே..."

"அப்பச் சரி..."

பெரிய பெரிய மருதமரங்கள். ரொம்ப ரொம்ப உயரம். பந்தல் போட்ட மாதிரி மரங்களின் அடர்த்தி. வெயில் தரையில் படாது. செம் மணல். ஜில்லென்று குளிர்ச்சியாக இருக்கும். அருஞ்சுனை வேறு. குளம், படிக்கட்டுகள் உள்ள குளம். ஆனால் எந்நேரமும் சுனை யிலிருந்து வரும் புதுத்தண்ணீர் மாதிரி.... வெதுவெதுப்பு. குளிக்க குளிக்க ஆசையாக இருக்கும்.

பெண்களெல்லாம் குளித்துவிட்டு ஈரச்சேலையோடு கோயிலை மூன்று முறை சுற்றி வந்தனர். ஆனால் சரசு போகவில்லை. குளித்து விட்டுத் துணி மாற்ற வேனுக்குள் போய்விட்டாள்.

பகல், மணி ஒன்றரையாகிவிட்டது. பூசாரி, பூஜையைத் தொடங்கினார். மணி அதிர்ந்தது. காடெல்லாம் மணியின் வெண்கல நாதம்.

பெண்கள் பக்தி பூர்வமாகக் கும்பிட்டனர். அய்யனாரைத் தரிசித்தனர். பரவசப்பட்டனர். நெக்குருகிக் கசிந்தனர். சொந்த துன்பங்களைச் சொல்லி சொல்லி மனசுக்குள் ஆறுதலைத் தேடினர்.

"ஆளோடு ஆளுகளாச் சேர்ந்து நீயும் கும்பிடு. ஒதுங்கி நின்னா... ஒன்னை ஒரு மாதிரி நெனைக்கப் போறாக...." என்று சரசுவிடம் கிசு கிசுத்தான்.

அவள் கூச்சப்பட்டாள். பிணங்கினாள். ரகசியமாக மறுத்தாள். "சும்மாயிருங்க" என்று பதற்றத்துடன் கிசுகிசுத்தாள்.

"ஆனால்.... அதற்குள் ஒரு பெண்–"

"சரசு.... இங்கே வா .... சாமி கும்பிடு."

அதற்குமேல் மறுக்க முடியவில்லை. கூட்டத்தோடு கூட்டமாய் நின்று கொண்டாள். கையைக் குவித்திருக்காளா.. இல்லையா என்று தெரியவில்லை. தர்மசங்கடமாய் நெளிந்தாள். வயிற்றுக்கு நேர் கைகளைக் கோத்திருந்தாள். சும்மா நின்றாள்.

கும்பிடுகிற மாதிரியும் தோன்றும், இல்லாதமாதிரியும் தோன்றும் கூச்சப்பட்டு நெளிகிற அவளையே பார்த்தான் யோகு குறும்பாகச் சிரித்தான். அவனது சிரிப்பில் வாடிப் போன அவள், கோபப்பட முடியாமல் திணறிய சரசு. கண்களில் மட்டும் தீ.

“ச்சேய்... உங்க பேச்சைக் கேட்டு வந்தது தவறாப் போச்சு” என்று சொல்கிற கண்கள்.

அப்படி இருந்தவள் தானே..... சரசு.

இப்போது -

சாமியிரிணி மாதிரியாகிவிட்டாளே...காவி உடுத்தாத துறவி மாதிரி மாறிப்போனாளே.....

நாளுக்கொரு விரதம்..... கிழமைக்கொரு பூஜையென்று.... வீட்டையே கோயில்மடம் மாதிரியாக்கி விட்டாளே... இப்படி மாறிப் போனதை நினைக்கிற போது.... யோகுவுக்குக் கோபம் குறைந்தது, கோபத்தின் உக்கிரம் தணிந்தது

அவள் ஆசைப்பட்டா மாறினாள்? மாறவேண்டும் என்று திட்டமிட்டா மாறினாள்? அவமானமும் துன்பமும் இயலாமையும் சேர்ந்து, அவள் ஆத்மாவை வதைத்த கொடுமையாலல்லவா... இப்படி மாறினாள் ?

அதை நினைக்க நினைக்க... யோகுவுக்குப் பரிதாபமாக இருந்தது.

# 5

திருமணமாகி இரண்டு வருஷம் ஆகிவிட்டது. அச்சு குலையாம லிருந்தாள், சரசு கல்மாவு போட்டு தீட்டிய வீச்சரிவாள் மாதிரி யிருந்தாள், புதுசு மங்காமல். வாட்டமில்லை. காறித்துப்பவில்லை. ஓங்கரிக்கவில்லை. ஊண் ஒவ்வாமலில்லை.

அதை அவனோ அவளோ பொருட்படுத்தியதேயில்லை. நல்லது பொல்லது வீடுகளுக்குப் போகிற போது, நெருக்கமான உறவுக்காரப் பெண்கள் காதுக்குள் சத்தமாய் கிசுகிசுப்பார்கள்.

“கஞ்சி தண்ணி தள்ளலியா?” என்று உள் அர்த்தம் பொதிந்து கேட்பார்கள். மனக்காயம் எதுவுமில்லாமல் “இன்னுமில்லை” என்று வெட்கச் சிணுங்கலாக முணுமுணுப்பாள், சரசு.

“இருக்கட்டும்..... இருக்கட்டும், இப்பத்தானே கல்யாணமாச்சு. சின்னஞ்சிறிசுக... சந்தோஷமா இருங்க. காலமா போயிருச்சு? எப்ப வேணும்னாலும் பெத்துக்கலாம் என்று ஆறுதலாகவும், ஆசீர்வாதமாகவும் கூறுவார்கள்.

யோகேந்திரனும் சரசுவும் ஜோடி சேர்ந்த முதல் வருஷம், ஒரு கல்யாணத்துக்குப் போயிருந்தார்கள். அந்தத் தம்பதிக்கு இரண்டாவது பெண் குழந்தை பிறந்த செய்தி வந்தபோது -

சரசுக்குள் ஒரு சூனயம். சட்டென்று இருதயமே கழன்ற மாதிரியோர் உணர்வு. எதையோ இழந்து போன மாதிரி ஒரு வெறுமை. ஏன்... தன் வயிற்றில் மட்டும் ஒன்றும் தட்டுப்படவில்லை?

நெருஞ்சி முள்ளாய் ஒரு குத்தல். உள்ளிறங்குகிற வலி. வலியின் அதிர்வு திரேகம் பூராவும் படர்கிற மாதிரி ஒரு வேதனை.

யோகுவிடம் புலம்புவாள்.

“ஏங்க.... நான் மலடியாகத்தான் இருப்பேனா?”

“அதெல்லாம் இருக்காது... கல்யாணமாயி பதினைஞ்சு வருஷம் கழிச்சுக்கூட கொழந்தை பெத்தவுக இருக்காக. நீ ஏன் வீணா மனசைப் புண்ணாக்கிக்கிடுதே?”

“இல்லைங்க...... எனக்குப் பயமாயிருக்கு.”

“நீ ஏன் பயப்படணும். வம்சம் தழைக்கணும்னு நான் இல்லே கவலைப்படணும்? நச்சரிக்கணும்? நானே சும்மாயிருக்கேன்....”

ஒருக்களித்துப் படுத்திருப்பாள். அவனும்தான். அவன் கை மேல் தலை வைத்திருப்பாள். அலைபாயும் மனசு. ஆறுதல் பெறாமல் அற்றலைகிற மனசு. அவனது கையில் வெதுவெதுப்பான நீரின் ஸ்பரிசம். அதில் முகம் காட்டுகிற அவளது மனக்கலக்கம்.

“ஏய்ய்... இந்தா, ஒனக்கென்ன கிறுக்கா? என்னத்துக்கு இப்ப அழணும்?”

“வம்சம் தழைக்கணும்னு நீங்க கவலைப்பட ஆரம்பிச்சுட்டா...? என் கதி?”

ஒன்னை ஒதுக்கி வைச்சிருவேனா? வேற கல்யாணம் பண்ணிக்கிடுவேனா? அம்புட்டு கல்நெஞ்சா... எனக்கு? ஈரமத்தவனா? ஈரமத்த வம்சம் இருந்தா என்ன, முடிஞ்சா என்ன?

“இல்லைங்க –”

அவளைப் பேசவிடமாட்டான். உதடுகளை உதடுகளால் அடைத்துக் கொள்வான். அள்ளி நெருங்கிக் கொள்வான். பூவின் மிருது. சுடரின் ஒளி. கன்னத்தில் வழிந்திருந்த கண்ணீர்ச்சுவடுகளை நாவால் அழிப்பான். விம்மி வெடிக்கும் விசும்பலை தன் திரேகக் கதகதப்புக்குள் அமுக்கி விடுவான்.

ஒவ்வொரு மாதவிலக்கின் போதும்... வீடேதுக்க மயமாகிவிடும். அழுகையும் புலம்பலுமாய்த் தவிப்பாள். வீடெங்கிலும் துக்கநிழல். துயரவாசம் நெஞ்சையடைக்கும். அறுத்துப்போட்ட கீரைத்தண்டாக வாடிக்கிடப்பாள். இவன் சொல்கிற ஆறுதல் வார்த்தைகளெல்லாம் முகமழிந்து காற்றில் பறந்துவிடும்.

உறவுக்காரப் பெண்ணின் வீட்டில் ஒரு நல்ல காரியம் தம்பதி சகித மாய்ப் போயிருந்தனர். சரசுவும் மகிழ்ச்சியாகத்தான் இருந்தாள். மறு நாள், பகல் பஸ்ஸில் திரும்புவதாகத் திட்டம்.

யோகுவுக்கு ஒன்று விட்ட தங்கையும் வந்திருந்தாள். தங்கையின் மகள் இரண்டு வயசிருக்கும். கறுத்த குழந்தைகள் தான். குழந்தை என்றாலே லட்சணம்தானே......

அந்தக் குழந்தைக்கு என்ன ஈர்ப்போ... யோகுவிடம் ஒட்டிக் கொண்டது. காலை முதல் அவன் மேல் தான் ஏறிவிளையாடினாள். யோகுவும் அந்த மழலையிடம் ஒரே விளையாட்டுதான். கொஞ்சலும் கும்மாளமும்தான். குழந்தையுடன் விளையாட விளையாட ... அவனும் ஒரு குழந்தையாகி... மனமே பூவாகி... ஒளியும் வாசமுமாகி அவன் முகம் பிரகாசமாகி...

சரசுவை சுத்தமாய் ஏறிட்டே பார்க்கவில்லை. ஆனால் சரசு அவனையே வைத்த கண் எடுக்காமல் பார்த்தாள். மனசுக்குள் பிரளயம். அச்ச நடுக்கம். தன் புருஷனே தன்னை விட்டு விலகுவதாய்.... தூரம் தூரமாய் நகர்வதாய்... அவளைத் தொலைத்து விட்டு, மறந்து போன துஷ்யந்தனாய்...

அவளுக்குள் ஏக இருட்டு. கரியரேகைப் பின்னல்கள். பின்னிப் பின்னி முறுக்கேறி, தாறுமாறாகிற நினைவுகள். வன்மமாய்.... வக்ரமாய் நிறம்மாறுகிற உணர்வுகள்.

அவனுடன் பேசவில்லை. சரசு, விறைத்துப்போன முகமாய்த் திரும்பிக் கொண்டாள். யோகுவுக்கு ஒன்றும் புரியவில்லை. என்னத்துக்குக் கோபம் இவளுக்கு?

யோகுவுக்குள் ஒரே திகைப்பு. பஸ்ஸில் வரும் போது, முழுக்க மௌனம். இறுக்கமான மௌனம். மனசு முழுக்க கனத்துப் போகிற மௌனம்.

வீடுவந்துவிட்ட பின்னாலும்.... அதே கோபம், விறைப்பு, மௌன இறுக்கம்.

என்ன என்ன என்று கேட்டு மன்றாடினான். காரணம் தேடி கெஞ்சிக் கூத்தாடினான். காலில் விழாத குறைதான்.

ம்ஹீம்..... அவள் அசைவதாக இல்லை.

இவனும் அயர்ந்து போனான். சலித்துப் போய் முயற்சியைக் கை விட்டபோது - "எப்படியும் போ" என்று ஒதுங்கிய கணத்தில்-

வெடித்துச் சிதறி அழுதாள்....சரசு. அவலச் சோகமாய் கசிந்து, அவன் காலடியில் வழிந்தாள்.

# 6

அன்றைக்கு-

மேலக்காட்டில் ஆட்டுக்கிடை. செம்மறியாடுகள் உழுதுகிடக்கிற புஞ்சையில் வந்து அடையும். அதன் உடல் வெக்கையும், மூத்திரமும், புழுக்கையும் மண்ணை வளப்படுத்தும். சாண உரம். மண்ணின் உயிரணுக்களை பெருக்கும்.

முன்னிரவுக் காவல் புஞ்சைகாரன்பொறுப்பு. கிடைக்காவல்காரர் அந்திமயங்க வந்துவிட்டார். கம்பளி, சாக்கு, காப்பிச்சட்டி, கம்பு வகையறாக்களோடு.

"தம்பி..... ஆடுகளைப் பார்த்துக்கோ. ஒரு மணிக்கொரு தடவை பேர்வையடி. பன்னெண்டு மணிக்கு மேல் என்னை உசுப்பி விட்டுட்டு, நீ வீட்டுக்குப் போ......"

"ஆட்டும்ண்ணாச்சி."

"சுத்துலே வெள்ளாமைக் காடுக. கள்ள ஆடுக நைஸா நழுவிப் போய்விழும், கவனமாப் பாத்துக்க."

"சரிண்ணாச்சி."

அவர் விரித்துப்படுத்துவிட்டார். உழவுக் கட்டிளைக் காலால் தள்ளி.... தூசி மண்ணில் சாக்கை விரித்து, கம்பளியைத் தலைக்கு அண்டக் கொடுத்து சாய்த்துவிட்டார்.

காடுகளில் அலைந்து மேய்ந்த செம்மறியாடுகள். ஓய்வும் உறக்கமும் அதுகளுக்கு வேண்டும். சில ஆடுகள் சுற்றி நடந்து உலவ, பல ஆடுகள் படுத்துவிட்டன.

ஆடிமாதக் காற்று. நெருஞ்சி பூக்களாய் ஆகாய நட்சத்திரங்கள். பனந்தோப்பில் மயில் சத்தம். கரிச்சான்களின் "கிரீச், கிரீச்" என்கிற வீறிடல். சுகமான இரவின் இதமான இருட்டு.

சில்வண்டுகளின் சத்தம். "ங்ங்ஙீய்ய்ய்" என்கிற இரைச்சல். அவ் வப்போது ஆடுகளின் கத்தல். அதுகளுக்குள் ஏதோ பேசிக்கொள்கிற மாதிரியான மிதமான கத்தல்கள்.

யோகு ஆட்டுக் கம்போடு காலார பொழியில் நடந்தான். ஆடுகளைக் கவனித்துக் கொண்டான். எங்கோ.... பஸ்ஸின் என்ஜின் இரைச்சல். லாரிகளின் "லொட, லொட" சத்தம். ஆலைச் சங்கின் தொலை தூரக் கூவல்.

இவனுக்குள் சோம்பலான நினைவுகள். செத்தவர்களைப் பற்றிய ஞாபகங்கள். சிறு வயசில் கேட்ட பேய்க்கதைகள். உள்ளே வெகு ஆழத்தில் புதைந்து மறைந்து கிடந்த ஞாபகப் பிரதேசங்கள். உயிர் பெற்று மேலெழும்பி வருகிற ராட்சஸப் பயங்கரம்.

இவனுக்குள் இரவுப் பயம். உதறல் எடுக்கிற உள் மனசு. சமாளித்துப் பார்த்தான், நேரம் நகர்ந்தது.

பேர்வையடித்தான். படுத்துக்கிடற ஆடுகளை எழுப்பி விட்டு... மூத்தரம் பெயய அவகாசம் தந்து.... அப்புறம் சற்றுத் தள்ளி அதுகளைப் பத்தி... மடக்கி... படுக்கவைப்பதுதான் பேர்வையடிப்பு. பெயர்வு அடிப்போ? இருக்கலாம்.

ஊருக்குப் பக்கத்தில் தான்... இவனது புஞ்சை இங்கிருந்து பார்த்தால்... கைக்கெட்டும் தூரம் தான் வீடு. அவன் வீட்டைப் பார்த்தான். சின்ன ஜன்னலில் மின்வெளிச்சச் சதுரம்.

"இன்னும் சரசு படுக்கலையோ..."

தேய்பிறை நிலா. பத்து மணிக்கு மேலே மெல்ல வந்து முகம் காட்டுகிற குறை நிலா. நிலா வெளிச்சத்தில் துல்லியமாய்த் தெரிகிற ஊர். தன் வீட்டின், புகைக்கூண்டு மங்கலாகத் தெரிகிறது.

ஊர் அடங்கிவிட்டது. நாய்ச்சத்தம்கூட இல்லாத அசுர அமைதி. அச்சுறுத்தலான அமைதி.

ஊர் அமைதியைக் கிழித்துக் கொண்டு ஒரு குரல். குடுகுடுப்பைச் சத்தம் போன்ற ஒரு சத்தம்.

சாமக் கோடாங்கியோ...?

கம்பளத்தார் இப்படி சாமக்காட்டில் வருவார்கள். பூட்டிக் கிடக்கிற வீடுகளைப் பார்த்து குறிசொல்வது போல ராகப்பாட்டோடு சத்தம் கொடுப்பார்கள்.

கம்பளத்தார்களுக்கு அருள்நாக்கு. சொல்லும் குறி பலிக்கும் என்று கிராமத்து ஜனங்களுக்கு ஒரு நம்பிக்கை. பகலில் வீடுவீடாக வருவார்கள். பெண்கள் தானியமோ, துட்டோ... படி தருவார்கள்.

அவர் சத்தத்தைக் கவனித்தான். கூர்ந்து கேட்டான். வார்த்தைகள் சிந்திச் சிதறினாலும்... சொச்சமிச்சமாகக் கேட்டது.

"மசங்க வேண்டாம், மருகவேண்டாம்
மழலை வரும் தாயீ...
சாமியை நம்பணும், சந்தானம் வந்து சேரும்
சஞ்சலம் வேண்டாம் தாயீ...
காலம் சேர்ந்து வரும், நேரம் கூடி வரும்
கடவுளை வணங்கு தாயீ...
கலக்கம் வேண்டாம், கையெடுத்துக் கும்பிடு
ஐக்கம்மா சொல்றா... தாயீ..."

இந்தச் சத்தம்.... தன் வீட்டுக்கு அருகில் கேட்பது போல ஓர் உணர்வு. மனசுக்கள் தத்தளிப்பு. சந்தோஷக் கொந்தளிப்பு. சந்தோஷக் கொந்தளிப்பு.

யோகு நாத்திகனுமில்லை. ஆத்திகனுமில்லை. கடவுள் இருக்கு. இல்லை என்கிற தர்க்க நியாயம் எல்லாம் தெரியாது, அவனுக்கு.

காடே கதியென்று கிடக்கிற சம்சாரி. பத்துவரை படித்துவிட்டு மண்ணை நம்பிப் பாடுபடுகிறவன். வியர்வையையும் பூமியையும் நேசிக்கிறவன்.

சாமியே கதியென்றும் கிடக்கமாட்டான். இல்லவே இல்லை என்று கட்சி கட்டி சாதிக்கவும் மாட்டான். ஆனால்.... இந்தக் குறியை நம்புவதற்கு ரொம்ப ஆசைப்பட்டான். இந்தக் குறி தன் வீட்டுக்கான அருள்வாக்காக இருக்க வேண்டுமே என்று ஆசைப்பட்டான்.

காவல்காரரிடம் கிடையை ஒப்படைத்துவிட்டு.... ஆசையும், ஆவல் பரபரப்புமாய் வீடு வந்தான்.

சரசு விழித்திருந்தாள். இவனைக் கண்டதும் ஓடிவந்து சேர்ந்து கட்டிக் கொண்டாள். ஆவிசேரப் பின்னிக் கொண்டு.... கோவென்று கதறியழுதாள். கேவிக் கேவியழுதாள்.

“நான் மலடியில்லை... மலடியில்லே... ஜக்கம்மா சொல்லிச்சு... நான் மலடியில்லே...”என்று ஆவேச மகிழ்ச்சியில் அழுது கரைந்தாள். ஆனந்தக் கூத்தாடினாள். கையெடுத்து சாமி கும்பிடவே கூச்சப்பட்ட சரசு, அதற்குப் பிறகு தலைகீழாக மாறிப் போனாள். அனுதினமும் பூஜைதான். வீடு முழுக்க சாமி படங்கள். பெரிய பெரிய கண்ணாடி போட்ட படங்கள். எந்நேரமும் பத்திவாசம், சாம்பிராணிப் புகையின் நறுமணம். கற்பூரச் சுடர்கள்.

## 7

சங்கரன் கோவில் கமிஷன்கடை திண்ணையில் உட்கார்ந்திருந்தான் யோகு. இவனது புஞ்சைகளில் விளைந்திருந்த மிளகாய் வற்றல் விற்பனைக்கு வந்திருக்கிறது. டக்கரில் கொண்டு வந்து இறக்கினார்கள்.

கடைக்குள் வரிசைக் குவியல்களாக வற்றல் அம்பாரம், சிவப்புக் குன்றுகளாக, ரத்தமலைகள்.

குவியல்களுக்கிடையே தாட்டுக் கட்டுகள் எல்லைக் கோடுகளாக இவனது அம்பாரத்தில் பார்த்தான்.

பெரிய குமி. குமியின் உச்சந்தலையில் ஒரு மூங்கில் குச்சியில் செருகிய துண்டுப் பேப்பர்.

யோகேந்திரன், மிளகாய் வற்றல். தாட்டு 6 சாக்கு 2 என்று எழுதப்பட்ட விவரம்.

இரண்டு மணிக்குத்தான் மார்க்கெட் வரும். விலை திகையும். எடை நடக்கும். வற்றல் பணமாகும்.

கமிஷன் கடைக்கு வெளிப்புறத் திண்ணை. பெரிய திண்ணை. சம்சாரிகள் வெள்ளையும் சொள்ளையுமாய்... எண்ணெய் வழியும் முகங்களோடு உட்காந்திருந்தனர்.

நாளிதழ் கிடந்தது. முதல்பக்கத்தில் பிள்ளையாருக்கு பாலூட்டுகிற ஒரு கிராமத்துப் பெண்ணின் புகைப்படம். இன்றைய சூடான செய்தியே.... பால் குடிக்கிற பிள்ளையார்தான்.

அற்புதம் குறித்த வியப்பும் மறுப்புமாக நடந்த தர்க்கம். அதில் ஒருத்தர் விபரமானவர் போலத் தோற்றமளித்தார். அவர்கையில் ஒரு நாளிதழ். பிரபலமில்லாத நாளிதழ். அதை விரித்துக் காட்டினார். அதிலும் ஒரு படம்.

அறிவியல் இயக்க விஞ்ஞானி வெங்கடேஸ்வரன் காந்தி சிலைக்கு பாலூட்டிக்கொண்டிருந்தார். "உலர்ந்த சிலை பாலை உறிஞ்சுவது தெய்வீக அற்புதமல்ல. இயல்பானதுதான்" என்று நிரூபித்துக் கொண்டிருக்கிற விஞ்ஞானி. அவரைப்பற்றியும், அது பற்றிய செய்தியையும் பேசுகிற அந்த ஆள்.

அவர் பேசுவதையே உன்னிப்பாகக் கேட்டான், யோகு. சாமியை நம்புகிற மனித மனங்களைக் காயப்படுத்தி விடக்கூடாதே என்கிற நாகரீகக் கனிவோடு பேசுகிற அந்த ஆள். வாழ்க்கையைப் பேசுகிறார். நடப்புகளை இயல்பாகப் பேசுகிறார். இனிமையான பேச்சு. நல்ல மனசின் அன்பான பேச்சு.

யோகுவுக்கு அந்த ஆள்மீது நம்பிக்கை வந்தது. நம்பிக்கை வசப்பட்ட யோகுவுக்குள் வந்த சரசு. தீவிரபக்தையாக மாறிய பின்பு - இரண்டு வருஷம் கழித்து விட்ட பிறகும் - மாதா மாதம் விலக்காகிற சரசு.

பக்தி என்றால் சாதாரண பக்தியில்லை. வெறிபிடித்த பக்தி. சாமியை ஒரு வரி கூட கேலி செய்ய அனுமதிக்க மாட்டாள். சண்டைக்கு வருவாள். தலைவலி, காய்ச்சலுக்குக் கூட மருந்து சாப்பிட மாட்டாள். திருநீறும், தீர்த்தமும்தான் மருந்து.

போகாத கோயிலில்லை. செய்யாத பூஜையில்லை. பார்க்காத ஜோஸ்யரில்லை. சொல்லாத மந்திரமில்லை. யாரோ ஒரு வேற்றுப் பெண்ணின் மன நிலையைச் சொல்வது போல.... யோகு அவரிடம் சொன்னான்.

"பேய்க்கும் பாரு, நோய்க்கும் பாருன்னுதான் பெரியாளுக சொல்றாக. அவுக சாமிகளையும் கும்புடட்டும், ஆஸ்பத்திரியிலேயும் வைத்தியம் பாக்கட்டும். எதனாலே காரியம் ஆனாலும் சரி... குழந்தை பெறந்துட்டா... நல்லது தானே?" என்று தீர்வு சொன்னார். அந்த சாமான்ய மனிதர். அசாதாரணமான தீர்வு. தீர்வுக்கான யுக்திகளையும் கூடச் சொன்னார். அவர் யுக்திப்படியே -

சரசுவை ஒரு சாமியாரிடம் அழைத்துப் போனான். சாமியார் சாந்த சொரூபி. காவியும் தாடியுமாக ஞானப் பழமாயிருந்தார். பக்திபூர்வமாக பவ்யமாக வணங்கி நின்ற சரசுவைப் பரிவும் கனிவுமாக நோக்கினார்.

புராணக்கதைகள்லே வர்ற மாதிரி பகவான் கிரீடமும் ஒளி வட்டமுமாய் இப்போ காட்சியளிக்கமாட்டாரு. இப்பவும் காட்சி யளிக்காரு. ரூபவித்யாசங்களோட அவதாரம் எடுக்காரு....

அவரது கனிந்த உதடுகளின் அலுங்காத அசைவுகள். கருணையே மனசாக - மனசே மொழியாக - மொழியே -ஓர் உணர்வாக அவளுள் ஒளிபரப்பியது. சரசு மெய்மறந்து, ஆத்ம சரணமாகி போயிருந்தாள்.

“உயிர்களைப் படைக்கிற பெற்றோர் கடவுளோட ரூபங்கள் தான். கல்விக் கண்ணைத் திறந்து ஞான வாசலை அகலத் திறந்துவிடுகிற ஆசான்கள். ஆசிரியர்கள் ஆண்டவனோட அவதாரம் தான். வந்த நோய்களுக்கு வைத்தியம் செய்து உயிரைக் காப்பாற்றுகிற டாக்டர்களும் தெய்வ ரூபங்கள்தாம். கடவுள் வெவ்வேறு அவதாரங்களில் வந்து நமக்குள் உலவி லீலைகள் செய்கிறார். நாம கண்டுக்கிடாம ஒதுங்கிட்டு கண்மூடித்தனமா இருந்தா... நட்டம் நமக்குத்தான், அந்த நாயகனுக்கில்லே. ஆண்டவன், ஆத்மாவுக்குத் தான் வைத்தியர். தேகத்துக்கில்லை. தேகத்துக்கத் தேவையான மாற்றத்தை நாமதான் உருவாக்கிக்கணும். தேகத்துக்குமான வைத்தியரா ஆண்டவனை நினைக்கிறது, பாவம். சாம்பாரை கொதிக்கவைக்கறதுக்கு சந்தனக்கட்டையைப் பயன்படுத்தலாமா?”

சாமியார் வாக்குக்கு அப்பீல் உண்டா... சரசுவிடம்?

அதற்குப் பிறகுதான் சரசு மருத்துவமனைக்கு வரச் சம்மதித்தாள். பரிசோதனை நடந்தது. கருப்பைக்கான பாதையில் சதை வளர்ச்சி இருப்பதையும், ஆபரேஷன் இல்லாமலேயே ஊசி, மாத்திரை மூலமாகவே அந்தச் சதையைக் கரைத்துவிட முடியும் என்பதையும் டாக்டர் சொன்னார்.

வைத்தியம் தொடர்ந்தது. விரதம், பூஜையும் தொடர்ந்திருந்தன. மிகக்கூடுதலான நம்பிக்கை ஏற்பட.. சரசுவின் ஆசார அனுஷ்டம் மேலும் இறுகியது. அடர்ந்தது. வெறிமிக்க அடர்த்தி.

மாதவிலக்கு நின்றது. சோறு ஒவ்வவில்லை. அறுத்துப் போட்ட கொடியாகத் துவண்டாள். காறிக் காறித்துப்பினாள். ஓங்கரித்தாள். சரசுவின் சந்தோஷத்துக்கு அளவேயில்லை.

தவமணி வந்து பிறந்தான். தவமிருந்து பிறந்தவன் என்பதாலோ... என்னவோ, பூக்களின் அழகுகளையெல்லாம் அள்ளிக்கலந்த பேரழகில் ஜொலித்தான். ஆனால்-

அவன் பிறப்பதற்கு முன்பே.... ஒரு புயலை உருவாக்கிவிட்டான்.

# 8

நிறைமாச கர்ப்பத்தில், தை மாச மிளகாய்ச் செடியாக காயும் பூவுமாக தளதளவென்றிருந்தாள், சரசு. முகத்தில் ஒரு அமானுஷ்ய பொலிவு. சுடரின் ஒளிர்வு. குளிர்வான ஒளிர்வு.

வயிறு, மிகவும் சின்ன வயிறாகத் தோன்றியது. நிறைமாசம் போலவே தெரியவில்லை. ஏதோ ஆறுமாசம் போலத் தோன்றியது.

"ஏன் இப்படி"

குழந்தைத்தனமாக நச்சரிக்கிற யோகு. சாந்தமாக ஒரு புன்னகை, சரசு முகத்தில் பூக்கும்.

"எனக்கென்ன தெரியும்?" என்றாள். ஆனால் அவளுக்குத் தெரியும் என்பது புன்னகையின் நாணப் பூடகத்தில் புதைந்திருந்தது.

"சொல்லு..." அறிந்துகொள்ள ஆசைப்படுகிற ஒரு மழலை. மீசை முளைத்த மழலை.

"ஆம்பளப் புள்ளையாயிருந்தா... வவுறு சிறுசா இருக்குமாம். பெரியாளுக சொல்றாக."

"அடி சக்கை."

அவளைச் சுற்றிச்சுற்றிக் குதித்து வந்தான்.

"அய்ய்...அய்ய்க...அய்ய்... அய்ய்க"

அவனது உல்லாசக் கூவல்களில் மனசின் விசிலடிப்பு. பூவெடித்து இதழ் விரித்த மாதிரி ஒளியும் வாசமுமாய் அவன் முகம்.

அவனது ஆனந்தக் கூத்தாட்டத்தில் நிறைந்து ததும்புகிற சரசு.

அவளுக்குள் மெல்லிய பயம். அடி மனசுக்குள் அவ்வப்போது எறும்புக்கடியாகத் தோன்றுகிற வலி.... சில சமயம் தேள்கடியாக ரணமாகிற உணர்வு. காதில் விழுகிற பிரசவச் செய்திகள் சிசேரியன் களாகவே நடந்து கொண்டிருக்கிற பெரும்பான்மையான பிரவசங்கள்.

இவளுக்குத் தலைப்பிரவசம், பிரவசம் குறித்த பய உணர்வு. ஆயுதக் கேஸாகிவிடுமோ... பெரிய உயிரைக் காப்பாற்றுகிற விளிம்பில், சின்ன உயிர் பறிபோய்விடுமோ....

ஐயய்யோ... அதுதானே அவளுக்கு உயிர். ஆத்மா. ஜீவாதாரம்.

ஒரு நேர்த்திக்கடன் போடணும். குலம் தழைக்க குலதெய்வத்திடம் வேண்டணும்னா.... யோகுவிடம் கேட்கணும். நேர்த்திக் கடன் நிறைவேற்ற... அவனும் வரணுமே... அவன் இல்லாமல் எப்படி?

அவனிடம் எப்படிக் கேட்க? கேட்டால்... பயப்படுவானே...பதறித் துடிப்பானே... மெல்லத் தொடங்கணும். பேச்சைத் தொடங்க, இதுதான் தருணம். கனிந்த தருணம்.

"ஏங்க?"

"ம்"

"நல்லபடியாக பெத்தெடுத்து, நானும் புள்ளையுமா வீடு வந்து சேரணுமில்லையா?"

சட்டென்று வாடிய அவனது முகம், தீக்குள் விழுந்த மொட்டாக மகிழ்ச்சி போன இடம் மாயமாயிற்று. வேதனைத் துடிப்பில் துடிக்கிற கண்ணிமைகள், வெட்டுப்பட்ட பல்லிவாலாக.

"ஏன் இப்படிக் கேக்கே?"

"பதறாதீங்க. நெருப்புன்னா வாய் வெந்தாபோகும்?"

"அப்படியில்லை..... இருந்தாலும்..."

"இருங்க. நம்ம குலதெய்வத்துக்கு ஒரு நேர்த்திக்கடன் போடலாம்னு.... ஒரு நெனைப்பு."

"என்னன்னு... நேந்துக்கிடப்போறே?"

"நல்லபடியாக பிரசவம் முடிஞ்சு... தாயும்புள்ளயும் ஆயுசு பலத்தோட வீடு வந்துட்டா...."

"ம்?"

"புள்ளையோட முதல் பிறந்தநாள் அன்னைக்கு குலதெய்வம் சந்நிதிக்கு வந்திருந்து... மொட்டை போடுதோம்னு."

"நேர்த்திக்கடன் போடணுமா?"

"போட்டா ..... நல்லது?"

"பாரத்தை சாமிக்கிட்டே ஒப்படைச்சிட்டு... பயமில்லாம இருக்கலாம். பயம் இல்லாட்டா... மனசுலே ஒரு தெம்பு வரும். நம்பிக்கை வரும். நம்பிக்கையோட பலத்துலே... மலைகூட பனியாப் போயிரும்."

யோகுவுக்கு இது சரியாகத் தெரிந்தது. மனவியல் நுட்பத்தின்படி இது நல்லதுதான் என்று தோன்றியது. சரியென்றான்.

"ஒனக்கு எது சரின்னுபடுதோ.... அப்படியே செய்...."

"இன்னைக்கு வெள்ளிக்கெழமைதானே?"

"ம்."

"அப்ப ..... இப்பவே செய்ஞ்சிருவம்...."

ஒரு வெள்ளத் துணியை எடுத்தாள். முனை முறியாத மஞ்சள் வைத்து முடிச்சுப் போட்டாள். மூன்று முடிச்சு, உள்ளங்கையில் வைத்துக் கொண்டு சாமி படத்தின் முன் போய் நின்றாள்.

சுவரில்...

முன்பெல்லாம் இவர்களது கல்யாணப்போட்டோ ஒன்று மட்டும் தான் இருக்கும். இப்போது சுவர் முழுக்க போட்டோக்கள். தெய்வப் படங்கள். எல்லாத் தெய்வங்களின் படங்கள்.

குலதெய்வம் முன்பு நின்றாள்.

கையெடுத்து வணங்கினாள். கையில் மனசின் நடுக்க அதிர்வு, கண்களை இறுக மூடினாள், இமை ரோமங்களில் ஈரக்கனம்.

இவன் மனைவியின் முகத்தில் பரவும் உணர்வுகளையே கவனித்தான். சரணடையும் ஆத்மாவே முகத்தில் வந்து நின்ற மாதிரி ஒரு நடுக்கம், உணர்வுக்கிரம். அசையும் சிறு உதடுகள்.

அந்த நேர்த்திக்கடனே... அவர்கள் வாழ்வில் ஒரு பெரும்புயலாக வீசி.... சர்வநாசம் செய்யும் என்று நினைக்கவேயில்லை... யோகு.

## 9

சாமக்காட்டில் யோகுவுக்கு முழிப்புத் தட்டியது. வீட்டுக்குள் தவமணியின் உறக்கச்சடவான சிணுங்கல். தொட்டிலை நனைத்து விட்டானே... அந்த ஈரச் சிலிர்ப்பில் அழுகிறானே... உயிரில் கலந்துவிட்ட உயிரின் சிறு சலனம், இவளை உசுப்பி விட்டுவிட்டது.

சரசு எழுகிற சத்தம். மகனைத் தூக்கிக் கொண்டு “ரோ...ரோ...ரோ.... என்னடா கண்ணு... ஒன்னுக்கிருந் திட் டீயா...? வாடா ராசா... வா” என்று கொஞ்சலாய் ராகமிடுகிற சத்தம்.

ஆசுவாசப்பட்டான். யோகு, மார்கழிப் பனி விஷமாய்த் தாக்குகிற பனியின் உக்கிரம். வெறும் துண்டை விரித்துப் படுத்த ஞாபகம், சரசுவின் மீது கொண்ட கோபத்தில்.

“இந்தப் பனியிலா... ஒறங்கிட்டோம்” என்று யோசித்த போது தான் கவனித்தான். தலையணை வைக்கப்பட்டிருந்தது, தலைக்கு. கனத்த கம்பளி தன் மேல் மூடப்பட்டருந்தது.

சரசுவை நினைத்துச் சிரித்துக் கொண்டான். பக்திப் பிடிவாதத்தில் கோபமாய்ச் சீறிய சரசு, தொட்டு உரசியவுடன் முத்துமுத்தாய்க் கண்ணீர் வடித்த சரசு, கண்ணீரிலேயே கோபத்தையும், வேதனையையும் உஷ்ணமாய் உணர்த்திய சரசு.

இவனும் கோபித்துக் கொண்டு வெளியே வந்து கொட்டும் பனியில் வெற்றுடம்போடு படுத்தவுடன்-

உள்ளிருந்து வெடித்த விசும்பல் சத்தம்.

அதெல்லாம்... கோபத் தளதளப்பிற்கு அடியில், ஈரமனசின் நீரோட்டம் ஓடுவதற்கான அறிகுறி. அதுதான் சரசு.

அதனால்தான்.... உறக்கம் கலையாமல் தலையணையைத் தலைக்கடியில் செருகியிருக்கிறாள். கம்பளியை மூடியிருக்கிறாள்.

கம்பளியே பனியில் 'தொப், தொப்'பென்று நனைந்து விட்டது. ஈரச்சிலிர்ப்பு. தலையணையும் தண்ணீர் தெளித்த மாதிரி சொத சொதப்பாகிவிட்டது.

இனியும்..... பனியில் படுத்திருக்க முடியுமா? கஷ்டம் தான். உள்ளே போகக் கதவைத் தட்டினால்..... சரசு சந்தேகப்படுவாள். தான் உன் மத்தம் கொண்டு மூர்க்கமாய் பிரவேசிப்பதாகப் பதறுவாள். பாவம்... சரசு.

இவனுள் ஓடுகிற நீரோட்ட மனசின் ஈரம் ஆத்மதோழியின் மன அவஸ்தையை உணர்ந்து இவன் தவித்தான். ஆனாலும்....

பனியில் படுத்திருக்க முடியுமா? நாய்கூட படுக்க முடியாத பனி, உடம்பின் புல்லரிப்பை அலை அலையாக எழுப்புகிற பனி.

கதவு திறக்கப்படுகிற சத்தம்.

"ஏங்க."

தொட்டு உசுப்பினாள்.

"ம்."

"முழிச்சுத்தான் இருக்கீகளா?"

"பய அழுதானா? அந்தச் சத்தத்துலே முழிச்சிட்டேன்."

"அப்ப... கட்டைதான் வெளியே படுத்திருக்கு. உசுர் பூராவும் தவமணி மேலதான். ம்?"

"ஆமா. அதுலே என்ன தவறு? சரி... இப்ப எதுக்கு நீ வெளியே வந்தே?"

"நீங்க பனியிலே கெடந்தா... எப்படி? எம் மனசு இரும்புலே அடிச்ச அரிவாளா? ஈரமில்லாம கிடக்க முடியுமா?"

"சரி..சரி.. இரும்பு மனசுக்காரின்னு யாரு சொன்னது? இரும்புப் பக்திக்காரின்னுதான் சொன்னேன்."

"எனக்காகவா வெரதம் இருக்கேன்? நம்ம புள்ளைக்காகத் தானே....?"

"ரைட், ரைட் பொலம்பாதே, இப்ப என்ன.... வம்பு தும்பு பண்ணாம நான் உள்ளே வந்து படுக்கணும். அம்புட்டுதானே?"

"ஆமா, ராசா...!"

"உத்தரவு ராணி."

சமனப்பட்ட சந்தோஷ மனசின் பூக்களின் வெடிப்பாக அவளது சிரிப்பு. கலகலக்கிற சரசுவின் மனசு, குழந்தையின் குதூகலத்தோடு இவனை ஒட்டி உரசிக் கொண்டு நடக்கிற சரசு. அவள் தேகக் கதகதப் பான ஸ்பரிசத்தில் உன்மத்தம் கொள்கிற மனசைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

கதவைப்பூட்டினாள். விடிவிளக்கின் மங்கலான பச்சை நிற வெள்ளம். தொட்டிலில் பார்த்தாள். உறங்காத உணர்வுகளுடன் உறங்குகிற தவமணி. இன்னும் சப்பிக்கொண்டிருக்கிற சின்ன உதடுகளின் மெல்லிய சலனம். உதட்டின் ஓரத்தில் அமிர்தப் பாலின் துளிச்சுவடு.

மேல்துண்டால் அதைத் துடைத்து விட்டான். தொட்டிலுக்குப் பக்கத்தில் விரித்துக் கிடந்த பாயில் படுக்கப்போனான் யோகு.

"கட்டில்லே படுங்க."

"ஏன்?"

"சிமிண்டுத்தரை ஜில்லுன்னு, குளுருது."

"நீ மட்டும்...?"

"புள்ள முழிச்சா... நானும் முழிக்கணுமே. அதுக்குத்தான் நான் கீழே படுத்திருக்கேன்..."

இரும்புக்கட்டிலில் துணிவிரிப்பு. தலையணை. நீட்டி நிமிர்ந்து படுத்தான். பனியில் நனைந்துகிடந்தற்கு மாறாக.. துணி விரிப்பின் கத கதப்பு. வித்தியாசத்தை உணர்ந்த மனசின் சுகலயிப்பு.

பக்கத்தில் வந்து உட்கார்ந்த சரசு. அவனது வயிற்றில் உள்ளங் கையை வைத்து... ரோமங்களுக்குள் விளையாடுகிற சரசு. நெஞ்சோடு ரோமங்களுக்குள் அவளது கை. அதன் மீது நாடியைப் பதித்து... இவன் முகத்துக்குப் பக்கமாக அவள் முகம். கண்ணுக்குள் கண்ணாகப் பார்க்கிற பார்வையின் கனிவு, குழைவு.

ஏதோ கெஞ்சிக் கேட்க முயல்கிற அவளின் யத்தனிப்பு. சரசு சாகசம்.

"என்னம்மா...?" மனசின் குழைவோடு கேட்கிற யோகு.

"ஒண்ணுமில்லே..."

"மனசுல இருக்குறதைக் கேளுடா... கண்ணு"

"மனசுல இருக்குதுன்னு ஒங்களுக்கு எப்படித் தெரியும்... ராசா?"

"கண்ணுல்லே வந்துதான்... மனசே நிக்குதே.... சொல்லுடா.. கண்ணு, என்ன?"

"ஒண்ணுமில்லே... மாங்கழி பெறந்து தேதி பத்தாச்சு"

"ம் அதுக்கென்ன?"

"நாம போட்ட நேத்திக்கடன் இருக்கே. அவனோட மொதப் பொறந்தநாளுக்கு குல தெய்வத்தோட சந்நிதிக்குப் போய் மொட்டை போடணும்லே?"

"ஆனா..?"

"என்ன ஆனா?"

"கடுமையான பனியாருக்கே. இந்தப் பனிக்காலத்துலே கோயிலுக்குப் போனா... ஒடம்புக்கு ஒத்துக்குமா? தை பொறக்கட்டும், போகலாம்."

"இல்லைங்க, தெய்வகாரியம். பிசகு இருக்கக் கூடாது. சொன்னா சொன்னபடி நடக்கணும். தெய்வ குத்தம் ஆயிட்டா... அதுவே புள்ளைக்கு ஏதாச்சும் ஆயிருமே..."

"சும்மாயிரு. நீ நம்புற குல தெய்வம் உன்னைப் புரிஞ்சுக்கிடும். பத்து இருவது நாள் பிந்தினதுக்காக... அதைக் குத்தமா எடுத்துக்காது. பனியிலே போய் பாழாகக் கூடாதும்மா, நாமளும் கொஞ்சமாச்சும் அறிவோட நடந்துக்க வேண்டாமா?"

"பனியோ.... மழையோ..... நாம சொன்னபடி நாம நடந்துக் கிடுவோம். பனி மழையிலிருந்து நம்ம குல தெய்வம் நம்மளைக் காப் பாத்திடும்."

"எப்படி?"

"எப்படியோ..... காப்பாத்தும். நம்புனா.... நல்லதாவே இருக்கும்."

"நம்புறதுக்கும் ஓர் அளவு வேண்டாமா? அளவுக்கு மிஞ்சிட்டா... அமிர்தமும் நஞ்சாயிரும். பக்தியோடயும் இருக்கணும். புத்தியோடயும் இருக்கணும் சரசு."

"புத்தி எதுக்குங்க? நம்மாலே. நம்ம புத்தியாலே என்ன நடந்துரும்? எல்லாம் ... குல தெய்வத்தோட மகிமை. நம்ம குலக்கொழுந்தைத் தந் ததும் சாமிதான். காப்பாத்தப்போறதும் சாமிதான்."

இப்படித்தான் தொடங்கியது.... அந்தப் புயல். பத்து நாளாக அடை மழையாய் நச்சரித்த தர்க்கம், விவாதம், அழுகை. அடம்பிடித்த விசும் பல், விசும்பல்கள்.

"முழுத்த ஆம்பளைக்கே இந்தப் பனியைத்தாங்க முடியலே... பூ மழலை எப்படித்தாங்கும்? என்று யோகுவின் பயம்."

பயத்திற்கே இடமில்லாமல் பக்தி வசப்பட்ட முரட்டு நம்பிக்கையில் சரசுவின் அடம், பிடிவாதம்.

பத்து நாள்களாக - வீடு வீடாக இல்லை. சண்டையும் சச்சரவுமாய் நரகமாகிவிட்டது. தாங்க முடியவில்லை யோகுவால். வேறு வழியும் தெரியவில்லை. எப்படியும் நடந்து தொலைக்கட்டும் என்ற வெறுப்பில் சம்மதித்துத் தொலைந்தான்.

இருபதாம் தேதி இரவு. வேன் வந்து சேர்ந்தது. யாருக்கும் எந்தக் தாக்கலும் சொல்லவில்லை. சாமான் செட்டுகளோடு அந்தச் சின்னக் குடும்பம். பனியின் உக்கிரத் தாக்குதலில் நடுங்கியவாறு.... நேர்த்திக் கடன் செலுத்தப் புறப்பட்டது.

# 10

ஆயிற்று. எல்லாமே சுலபமாய் முடிந்துவிட்டது. யோகுவுக்கே ஆச்சரியமாக இருந்தது. ரொம்ப நிம்மதியாகவும் இருந்தது.

மொட்டை எடுப்பதற்குள் தவமணி எப்படியெல்லாம் அடம் பிடிப்பானோ.. திமிறி, அழுது, ஆர்ப்பாட்டம் செய்வானோ என்றெல்லாம் பயந்து கிடந்தான், யோகு.

ஆனால்..... ரொம்பச் சாந்தம். தவமணி அமைதியின் சொரூபமாய், கத்தியோடு நெருங்கி வந்த நாவிதர் முகம் பார்த்துக் கைதட்டிச் சிரித்தான்.

தலைமுடியைக் கோதி தண்ணீர் தெளித்தபோது கூட.... பனியின் குளிரினால் அவனது உடல் சிலிர்த்ததே தவிர... அவன் பயந்து அலறவில்லை. மாறாக.... கை தட்டிக் குதூகலித்தான்.

வெயில் முகமே தெரியவில்லை. மார்கழிப் பனியின் உக்கிரம். ஏற்கெனவே.... சிலிர்ப்பான குளிர்பூமி. குளத்து நீரின் குளுமை. பனிக் காலத்தில் ரொம்ப பொங்கல் வைத்து முடித்துவிட்டு... இவர்கள் குளித்தபோது, தாள முடியவில்லை. பல்லோடு பல்லாக மோதிக் கிடுகிடுத்தது. நடுங்கிக் கொண்டு வந்தது. சாமிவந்த மாதிரி உடம்பு தானாக ஆடியது.

மொட்டையடிப்பு முடிந்தது. சரசுவும் யோகுவும் தவமணியைச் சுனைக்கு அழைத்துப் போய்க் குளிப்பாட்டினர். புதுச்சட்டை போட்டனர். மொட்டைத் தலை தங்க நிற உருண்டையாகப் பளபளத்தது. சந்தனக் கரைசலைத் தலையில் பூசினர். சந்தனம் பூசிய போது தலையில் ஒரு கூச்சம் வந்ததோ.... என்னவோ..... அந்நேரம் தான் மெல்லச் சிணுங்கினான்.

அப்படியே... வேனுக்குள் உறங்கிவிட்டான்.

யோகுவும், சரசுவும் மறுபடியும் குளித்து சாமி கும்பிட்டுவிட்டு... பொங்கல் சோறு சாப்பிட்டுவிட்டு....

எல்லாம் ஆயிற்று.

சாயங்காலம்.... வேன் திருச்செந்தூர் வந்தது. டிரைவரிடம் பிள்ளையைப் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டு.... இருவரும் நாழிக் கிணற்றில் குளித்து விட்டு.... முருகனைத் தரிசனம் செய்துவிட்டு... வேனுக்குத் திரும்பினர்.

வேனுக்குள்......

தவமணி இரண்டு காலையும் அகலமாக விரித்து உறங்கிக் கொண்டு இருந்தான். லேசாக மூச்சுத்திணறல். சுவாசிக்க முடியாமல் சற்றே திணறல். நெஞ்சு திக்திக்திக்... கென்று விம்மி விம்மித் துடித்தது. தொண்டைக்குள் என்றைக்குமில்லாத ஒரு விநோத சத்தம் “கொரட்.. கொரட்” டென்று.

யோகுவுக்கு வித்தியாசம் துல்லியமாகத் தெரிந்தது. சட்டென்று நெஞ்சுக்குள் நெருடிய பயத்தின் அதிர்வு, ஆத்மாவின் ஆணிவேர் வரை பரவியது.

“என்னங்க... என்னங்க...” பதறித்தவித்த சரசு. அழுகையும் புலம் பலுமாய் அவளது அதிர்ச்சி.

“என்னன்னு தெரியலை..... மூச்சுத் திணறல்தான்...”

“ஏங்க?”

“சளியாயிருக்கும் போலிருக்கு”

“நேத்து ராத்திரி வரைக்கும் தடுமன் எதுவும் பிடிக்கலையே...”

“வேத்துச் சூழல்... அதிகமான பனி... மொட்டையெடுப்பு... பச்சைத் தண்ணிக் குளிப்பு... பாவம்... சின்னப்புள்ள எப்படித் தாங்குவான்?”

சரசு, வேனுக்குள் ஏறினாள். பிள்ளையை வெறி கொண்டவளைப் போல தூக்கினாள்.

கடுமையான தலைவலி போலும்... கண்ணை அரைக் கண்ணாகத் திறந்துவிட்டுமூடிக்கொண்ட தவமணி.

தொட்டுப் பார்த்தாள். காய்ச்சல் எள்ளாய்ப் பொரிந்த து.“ஐயய்யோ... இப்ப நான் என்ன செய்ய? என்னதான் செய்யப் போறனோ...? அடக் கடவுளே.”

“வீணா... அழுது பொலம்பாதே... சரசு. இப்போதைக்கு ஒரு டாக்டர்கிட்டே பாப்போம், அப்புறமா... ஊருக்குப்போவம்.”

டிரைவரும் வெலவெலத்துப் போயிருந்தான். பூமழலையான ஓர் அரும்புக்கு நோய் என்றால்... எல்லார் மனசுக்குள்ளும் ஒரு பதற்றம் தொற்றிக் கொள்கிறது. வண்டியை அவசர அவசரமாக ஸ்டார்ட் செய்தான். அவனே வண்டியை நிறுத்தி எதிரில் பட்ட ஆட்களிடம் விசாரித்தான்.

“குழந்தை ஸ்பெஷலிஸ்ட் இந்தப் பக்கம் யாரு? எங்க கிளினிக்?”

ஒரு ஆஸ்பத்திரி முன் வண்டி நின்றது. மாலை நேரம். வரிசையில் நிறைய ஆட்கள். ஆனால் டிரைவர் இவனையும் சரசுவை யும் அழைத்துக் கொண்டு பரபரப்பாக டாக்டரின் தள்ளு கதவைத் தள்ளினான். அவனது பரபரப்பின் வேகம், சகலரையும் அப்பிக் கொள்ள... யாரும் எதுவுமே ஆட்சேபிக்கவில்லை. முணுமுணுக்க வில்லை. மாறாக.. எல்லாருமே பதற்றத்துடன் என்ன, என்ன என்று விசாரித்தனர். ஈரமனசுகளின் துடிப்புகள்.

கிளீனர்தான் எல்லாருக்கும் பதில் சொன்னான்.

டாக்டர் இளமையானவர். நாற்பதுக்கும் கீழே வயது. ஆனால் கிழவரின் நிதானம். பதற்றமில்லாத அமைதி. ஞானத் தெளிவு தந்த அமைதி.

மடியில் போட்டுக் கொண்டு யோகு பதற்றப் பரபரப்பில் பேசினான். பேச்சைக் கேட்காமலேயே அல்லது கேட்கும் பாவனையிலேயே... ஸ்டெதஸ்கோப்பால் குழந்தையைப் பரிசோதித்தார்.

குழந்தையின் முதுகு...நெஞ்சு... சோதித்தார். கண்ணிமைகளை விலக்கி, உதடுகளை விலக்கிப் பார்த்தார்.

“என்ன சார்..... செய்யுது?”

“பொறுங்க. இஞ்ஜெக்ஷன் போடுறேன்.”

அதற்குள் தவமணிக்குள் சில நுட்பமாற்றங்கள் ஜன்னி மாதிரி வெட்டி வெட்டி இழுக்கிற கோரம்.

சரசு இந்தக் கொடுமையைக் காணச் சகியாதவளாக... குற்ற உணர்வின் முள்குத்தலைத் தாங்க இயலாதவளாக... வெளியே வந்து விட்டாள். வேனுக்குள் ஏறி உட்கார்ந்து சாய்ந்து கொண்டாள். கண்ணை மூடிக்கொண்டாள்.

பாதகத்தி நான், எம்புள்ளைக்கு நானே எமகாதகியாகிட்டேனே... பனியிலே போட்டுப் பாழாக்கிட்டேனே... “மலடியில்லை, நீ மாதா”ன்னு சொல்லிக் கண்ணீர் துடைக்க வந்த மழலையை மண்ணாக்கிட்டேனே. அரும்பை எடுத்து அக்கினியிலே வீசிட்டேனே... ஐயய்யோ... ஐயயய்யோ... ஐயய்யோ...

யந்திரகதியிலான புலம்பல். மனச் சிதைவுக்களாகிப் போன ஒரு கிறுக்கியின் உளறலைப் போல... உணர்வற்ற புலம்பல். உலர்ந்த உதடுகளின் மெல்லிய துடிப்பு.

ஆனால் அழவில்லை. கதறவில்லை. உறைந்து போன சோகத்தின் வடிவமாற்றாக... அவள், புற உலகின் சலனங்களிலிருந்து முற்றாக அறுபட்டு... உள் உலக உணர்வுகளில் உறைந்து மூழ்கிப் போனவளாக ... சரசு.

டாக்டர் இன்ஜெக்ஷன் போட்டார். அப்புறம் ஓர் இன்ஜெக்ஷன்.

“பனியும் குளிரும் தாங்கலை. சின்னக் குழந்தை. டிப்தீரியான்னு நோய் அட்டாக் பண்ணியிருச்சு. ரொம்ப காம்ப்ளிக்கேட்டா இருக்கு. வேன் இருக்கில்லே? நீங்க பாளையங்கோட்டை பெரியாஸ் பத்திரிக்குப் போனா.... நல்லது.”

“போறவரைக்கும் தாங்குமா... சார்? நீங்களே முயற்சி பண்ணுங்களேன்...”

“என்னய்யா ஆளுக நீங்க? பச்சைப் புள்ளைக்கு இந்தப் பனிக்காலத்துலேயா மொட்டை போடுவாக?”

டாக்டரின் மெல்லிய சிடுசிடுப்பு. யோகுவுக்கு அழுகை அழுகையாக வந்தது.

தவமணி... நெஞ்சிலும் முதுகிலும் விளையாடிய பிஞ்சு. ஆறு வருஷ தவத்திற்குப் பிறகு பிறந்த பூ. தனது அழகால் தெருவையே கவர்ந்திருந்த தங்கக்கனி. ஆசை ஆசையாகச் சகலரையும் தூக்கிக் கொஞ்ச வைத்த பூ மழலை.

பூவுக்கு ஒரு நாள் ஆயுள் இந்த மழலைக்கு ஒரு வருஷம்தானா? பிறந்தநாளிலேயே அவனது ஆயுளும் முடிந்துவிடுமா?

யோகுவுக்கு யோசிக்கவே முடியவில்லை. கேவிக் கேவி அழுதான். டாக்டர் எவ்வளவோ ஆனமட்டும் முயன்றார். எல்லாவிதமான சிகிச்சைகளையும் அவசர அவசரமாகச் செய்தார்.

இரவு எட்டு மணி இருக்கும்.

யோகு" ஐயய்யோ எம்மகனே " என்ற கதறலில், அந்த மருத்துவ மனையே நடுநடுங்கியது.

வேனுக்குள்ளும், வந்து கேட்ட அந்தக் கதறல், வேனும் ஒரு நடுக்கம் நடுங்கி அதிர்ந்து அடங்கியது.

யோகு வெறிபிடித்தவனைப் போல புறப்பட்டான்.

"எங்கே அவள்? எம்புள்ளையை எமனைப் போல வந்து கொன்ன அந்தச் சண்டாளி எங்கே? அவளையும் கொல்லணும்.

ஆவேசமாய்ப் புறப்பட்டவனை டாக்டர் பிடித்து நிறுத்தினார். சற்றுக் கோபமாகவே அதட்டினார்.

"என்ன செய்யப்போறீக? ஊம் ? நடந்தது நடந்து போச்சு, இனிமே நீங்க மனைவியை நல்லபடியாப் பாத்துக்கணும்."

"என்ன சொல்றீங்க?""

"இந்தக் கொழந்தைக்கு இப்படியானதுனாலே ரொம்பப் பாதிக்கப்படப் போறது உங்க மனைவிதான். அவங்களுக்கு எதுவும் ஆயிராம ஜாக்கிரதையா பாத்துக்கணும். அவங்க நல்லபடியா இருந்தா... இன்னும் ரெண்டுபுள்ள கூடப் பெத்துக்கலாம்..."

அவனது ஆவேசம் அடங்கியது. அடங்கிய ஆவேசம் அழுகையாக வெளிப்பட... நெஞ்சுமுட்டியது.

டிரைவர் நல்ல மனிதர். அதற்குள் ஊருக்குப் போன் செய்து தகவலைச் சொன்னார். வேனுக்குள் வந்து பார்த்தால் உயிருள்ள பிரேதமாக சரசு.

# 11

சுற்றிலும் இருட்டு, வாழ்க்கையைப் போல கனத்த இருட்டு. கொலைகாரப் பனி வேறு, வேன் இருட்டைக் கிழித்துக்கொண்டு பாய்ந்தது.

நடுச்சீட்டில்... உயிருள்ள பிரேதமாகக் கிடக்கிற சரசு குளித்துக் காய்ந்த கூந்தல் காற்றின் சீற்றத்தில் அற்றலைய... கண்ணை மூடிச் சாய்ந்து கிடக்கிறாள். உதடுகள் மட்டுமே உயிராகத் துடிக்கின்றன. "நான் கொன்னுட்டேன்...நான் கொன்னுட்டேனே" என்கிற ஒரே முனகல், ஒற்றைவரி முனகல், முடிவில்லாமல் தொடர...

நடுவில் -

புதுச்சட்டையோடு உதிர்ந்துலர்ந்த ஒரு வருடப் பூவாக.. அது. அதுவாகிப் போன தவமணி.

இந்தப்பக்கம் யோகு. அவனுக்குள் குத்திப்பிடுங்குகிற சோகம். அடிவயிறே சூன்யமாகிப் போனமாதிரி ஓர் பகீர். நெஞ்சுக்குள் "கபகப"வென எரிகிறது. மனசின் ஆழத்திலிருந்து திரண்டு வருகிற துயரக்கற்றையை... அவ்வப்போது அழுது அழுது அரற்றுகிற யோகு.

சரசு அழவுமில்லை..ஆழ்ந்து உறைந்த சவமாக ?

யோகுவுக்குப் பயமாக இருந்தது.

சரசு ஏன் அழலை? ஏன் அழ மாட்டேங்குறா? நெஞ்சுக்குள்ளே விழுந்த தீயிலே உள்ளேயே கருகிப் போறாளா? நெஞ்சடைச்சு இவளும் செத்துப் போவாளா? ஐயய்யோ...

சரசுவை எப்படியாவது அழவைத்துவிட வேண்டும். அழுது விட்டால் நெஞ்சுப்பாரம் குறையும். உயிர் வாழ்ந்து விடுவாள். இன்னோர் உயிரைக்கூட அவளால் படைத்துவிட முடியும்.

"சரசு... ஏய் சரசு... இங்கபாரு... நம்ம புள்ளையைப் பாரு. செத்துக் கெடக்குற புள்ளையைப் பாரு ஊரு பூரா நம்ம புள்ளையை தூக்கிட்டுப் போய்க் கொஞ்சுவாகளே... தெருத்தெருவா தேடித்தேடிப் போய் புள்ளையை வாங்கிட்டு வருவேனே... இப்பப் பாரு எமன் தூக்கிட்டுப் போயிட் டானே... இனிமே எத்தனை தெரு சுத்துனாலும் எம் புள்ளையை எப்படி வாங்க? ஐயய்யோ..."

இவளை அழவைப்பதற்காக இவன் புலம்புகிற புலம்பலில், இவன் தான் கதறியழுதான். அவள் அசையவேயில்லை. உயிரே உறைந்து இறுகிப் போனவளாக. ஐம்புலனும் அறுந்து போன அசைவற்ற பிணமாக - வேனின் குலுங்கலுக்கேற்ப ஆடுகிறவளாக....

“நான் கொன்னுட்டேனே....நான் கொன்னுட் டேனே...” என்ற ஒற்றை வரிப்புலம்பலின் உணர்வற்ற முனகலாக...

இவனுக்கு பயம் கூடிற்று. உள்ளுக்குள் பகீர் பகீரென்று வருகிற பயங்கரக் கற்பனை. அவளும் நெஞ்சடைத்துப் போய் விட்டாளா? மகனோடு சேர்ந்து மாதாவும் பயணமா? நாம் மட்டும் ஒற்றை மரமா... பட்டமரமாகத் தனித்து நிற்கப் போகிறேனா...?

சரசுவின் ஒற்றை வரிப்புலம்பலின் உணர்வற்ற உலர்ந்த தன்மை, உடைந்த ரிக்கார்டின் ஈனமுனகலாய் அது.

அவனுக்குள் வேறொரு பயம்.

சரசு நிதானமிழந்து விட்டாளோ... சித்தப்பிரமை பிடித்து விட்டதோ... மூளை குழம்பிக் கலங்கிவிட்டதோ... அதிர்ச்சியைத் தாள முடியாத தாயுள்ளத்தின் மெல்லிய ஜவ்வு கிழிந்துவிட்டதோ....

ஐயய்யோ.... அப்படீன்னா... சரசுவுக்கு கிறுக்கு பிடிச்சிருச்சா? பைத்தியமாகிவிட்டாளா?

அவனுக்குள் நிறைய பிசாசுகள், அச்சப் பிசாசுகள். அவனது உள் நரம்புகளைப் பற்றித் தொங்குகிற ஆர்ப்பாட்டப் பிசாசுகள். அவனை அவனுக்குள் அலைக்கழிக்கிற மூர்க்கப் பிசாசுகள்.

தவமணியையும் சரசுவையும் மாறிமாறிப் பார்த்தான் யோகு. அவனுக்குள் பொங்கியெழும் அழுகை.

ஊரே திரண்டு நின்றது. யோகுவின் வீட்டுக்கு முன்னால், தவமணியைத்தூக்கிக் கொஞ்சிய ஊர். தங்கக் குழைவான அவன் உடலின் பூவிதழ் ஸ்பரிசத்தில் பரவசப்பட்ட ஊர். குழிவிழுந்த அந்தச் சிறுகன்னங்களில் முத்தமிடப் போட்டிபோட்ட ஊர். அவனது சிரிப்புச் சங்கீதத்தில் மனசை இழந்து மயங்கிய ஊர்.

“தவமணி செத்துப் போனான்” என்ற தீயில் விழுந்து துடிக்கிற ஊர். வந்து நின்ற வேனைச் சுற்றி மொய்த்த அவலக் கதறல்கள் ஜனங்களின் ஒப்பாரிக் கூவல்கள், விசும்பி விசும்பி கண்ணைக் கசக்குகிற பாவா டைச் சிறுமிகள்..

யோகு குழப்பமாய் உணர்ந்தான். வந்து மொய்க்கிற ஒப்பாரியின முற்றுகை, எப்படி வெளியேற? ஐய்யோ...ஐய்யோ... என்ற கதறல்களின் முற்றுகை.

வேன் வந்து நின்றவுடன் -

யோகுவே திகைத்து ஸ்தம்பித்து நிற்க - உயிர் பெற்ற ஆவேசமாய் எழுந்த சரசு, இவனையும் கடந்து கொண்டு, வேன் கதவைத் திறந்து

கொண்டு, சுற்றி மொய்த்த மனிதக்கற்றையை மூர்க்கமாய் நெட்டித் தள்ளிப் பிளந்து கொண்டு - வெறிபிடித்தவளாக வீட்டுக்குள் பாய்ந்தாள்.

யோகு திகைத்துப் போய், பதற்றமும் பரபரப்புமாய் பின் தொடர்ந்தான்.

இறந்துபோன மழலையை யோரோ ஒரு பெண் தூக்கிக்கொண்டு வந்தாள்.

யோகு பதறிப் பதைத்தான். "சரசு எதுக்காக இப்படிப் போறா....? சாகவா?"

## 12

மொத்தக் கிராமமும் வாசலையடைக்க - கசபுசா வென்ற பலவிதப் பதற்றப் புலம்பல்கள்.

பின் தொடர்ந்தான் சரசுவை. கொப்பளிக்கும் பகைமை உணர்ச்சியோடு கொதிப்போடு உள்ளே போன சரசு, சுவரிலிருக்கும் சாமி போட்டோக்களையெல்லாம் வன்ம உக்கிரமமாய்ப் பார்த்தாள். பத்ரகாளியின் பார்வை. பத்ரகாளியின் ருத்ரப் பார்வை.

"அடப்பாவிகளா... கும்புட்ட கையை வெட்டிட்டீகளே... நீங்க உருப்படுவீகளா? உங்களைச் சுமந்து நெனச்ச நெஞ்சை நொறுக்கிட்டீகளே... வெளங்குவிகளா? உங்களுக்கெல்லாம் ஒரு சுவரு... ஓர் ஆணி... ஊதுபத்தி வாசம்... த்தூ !"

ஒரு பெரிய கண்ணாடிப் போட்டோவைப் பற்றி விருட்டென்று இழுத்தாள். பேய்பிடித்தவளைப் போல டமார் என்று கீழே போட்டாள்.

சலீர் என்று உடைந்து சிதறுகிறகண்ணாடிச் சிதறல்கள், சிமிண்டுத் தரையில் விழுந்து அதிர்கிற தகரச்சத்தம். கண்ணாடிச்சில்லுகள் கையைக் கிழிக்க... மூர்க்கமாய்ப் பாய்ந்து கடவுள் படத்தை பற்றி, கிழித்து... கசக்கி...

அவளைப் பிடித்து நிறுத்தப் பாய்ந்த இரண்டு பெண்களைக் கைநீட்டித் தடுத்தான், யோகு.

"விட்டுருங்க... அவமனம் போல விட்டுருங்க. மனசுலே இருக்கிற பாரம் பூராத்தையும் கொட்டிடட்டும். விட்டுருங்க...."

பதற்றமும் பரபரப்பும் உள்ளே தளதளக்க... அசையாமல் நின்றான், யோகு. நிதானமாக அவளையே பார்த்தான்.

"சலீர்.....சலீர்" என்று சிதறுகிற கண்ணாடிகள் டமார்...டமார் என்று விழுந்து நெளிகிற தகரங்கள். கண்ணாடிச்சில்லுகள் மேலே வெறி

பிடித்தவளாக பாய்ந்து... பாய்ந்து, படங்களைக் கிழிக்கிற தீவிரம், தீக் குழிக்குள் இறங்குகிற பக்தர்களின் அதே உணர்வுக்கிரமம்.

சரசுவின் உள்ளங்கையிரண்டிலும் ரத்தக் கசிவுகள், கண்ணாடிச் சில்லுகளின் கிழிப்புகள், பாதங்களிலும் ரத்தக்கசிவுகள். சிமிண்டுத் தரையெல்லாம் அவள் பாதங்களின் ரத்தத்தடங்கள். சின்னச்சின்ன மண் சிலைகளையெல்லாம் உடைத்தாள். அறைமுழுக்க அவளது ருத்ரதாண்டவ அடையாளங்கள். குப்பைக் குமியாக கண்ணாடிச் சில்லுகள், காகிதக் கசக்கல்கள். தகரநெளிவுகள். வாய்பிளந்த மரச் சட்டங்கள்.

பேய்பிடித்த அவளது மூர்க்க நர்த்தனத்தைக் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தான், யோகு. எதில் போய் முடியுமோ...? என்கிற மனப்படபடப்பு.

எல்லாமே... அதீதம், நம்பிக்கும்பிட்ட விதத்துலேயும் அதீதம். வெம்பி வெடிச்சு உடைக்கிற வேகத்துலேயும் அதீதம். அமிர்தத்தையும் நஞ்சாக்குகிற அதீதம். அறிவுக்குப் பொருந்தாத அதீதம். அறிவைக் குருடாக்குகிற அதீதம்... அளவையும் நிதானத்தையும் இழந்த அதீதம்.

அதீதத்தின் விளிம்பைத் தாண்டினால்...ஆபத்து. சித்தபிரம்மை. மனச்சிதைவு. துணியைக் கிழித்துக் கொண்டு... பிரக்ஞையைக் குழப்பிக்கொண்டு உள் உலகத்துக்குள் முகம் புதைத்துக் கொள்கிற பைத்தியம்... கிறுக்கு....

“ஐயோ... சரசு... சரசு...”

யோகுவின் ஆத்ம அலறல், மொழி உருவம் பெறாத உணர்வின் கதறல். பயத்திலும் பதைப்பிலும் துடிக்கிற நெஞ்சு.

எல்லாப் போட்டோக்களையும் உடைத்துவிட்டாள். கழுவித் துடைத்த முகமாய்...சுவர். சுவரில் ஒரே நெற்றித் திலகமாய்... ஒற்றைப் போட்டோ. இவர்களின் கல்யாணப்போட்டோ. மாலையும் கழுத்துமாய் யோகுவும், சரசுவும், கனவுகள் சுமக்கிற கனிந்த இளமைத் தோற்றம்.

வெறிபிடித்த பேய் வேகத்தில் அதையும் கழற்றப் போன சரசு. நடுங்குகிற அவளது கைகள். தாண்டவிடாமல் தடுக்கிற விளிம்பு, அவளைக் கட்டுப்படுத்துகிற விளிம்பு. உணர்வுச்சீற்றத்தை லகான் போட்டுச் சுண்டியிழுக்கிற விளிம்பு.

நடுங்குகிற கைகள், அந்தப் போட்டோவிலும் அவளது உள்ளங் கைகளின் ரத்தத்தடம். அதை எடுக்கவில்லை. அதையே உற்றுப் பார்த்தாள். யோகுவை மட்டுமே உற்றுப் பார்த்தாள் ஒருகணம்.

“பக்தியோடயும் இருக்கனும். புத்தியோடயும் இருக்கனும்மா..” ஆத்மாவுக்குள் கிசுகிசுத்த யோகுவின் இங்கிதக் குரல். அவளது ஆரவாரம் - அடம் - அழுகை ஆர்ப்பாட்டம், கோப தாபங்கள் எல்லா வற்றையும் பொறுத்துக்கொண்டு அன்பு செலுத்திய ஆத்மதோழன்.

“நீ ஒரு மலடி” என்று ஆறுவருஷ தாம்பத்யத்தில் ஒரு நாள்கூட உணராத உண்மையான மனிதன். மனித புருஷன்.

இந்நேரம் வரைக்கும் -

இறுகிக்கிடந்த அவளது மன உறைவுக்குள் சிறுகசிவு. கசிந்த கணத்தில் கரையைப் பிளக்கிற உணர்வுப் பீரிடல், ஆத்மபுருஷனை ஆவிசேரத் துடிக்கிற வாழ்வின் வேட்கை. உயிரை நினைத்த உயிரின் ஓங்கார வெடிப்பு.

“கோ”வென்று வெடித்துக் கதறியழுதாள். போட்டோ யோகுவையே பார்த்துக் கதறினாள். தலையில் மடேர் மடேரென அடித்துக் கொண்டு அழுது புலம்பினாள்.

“ஐயோ...என்தெய்வமே... என்ராசாவே... பக்தியோட இருந்தாலும் புத்தியோட இருக்கனும்னு படிச்சு படிச்சு சொன்னீகளே.... பாவிநான் கேக்கலையே.... புத்தியைக் கடன் கொடுத்துட்டேனே... ஐயோ...ஐய்யயோ... என் ராசாவே...”

அங்கலாய்ப்பான ஒப்பாரி. அடிமனசின் இறுக்க மெல்லாம் பாசப் பிரவாகத்தில் உடைந்து நொறுங்கி... அழுகையாக வெளிப்படுகிற துயரம். துக்கப் பெரும் பிரவாகம்.

தலையிலும் மார்பிலும் அடித்துக்கொண்டு கதறியழுத சரசுவை ஓடிப் போய் ஏந்திக்கொண்டான் யோகு. அவனுக்குள் ஒரு சின்ன ஒளி. இருட்டுத் துக்க முற்றுகைக்குள்ளும் ஒரு நட்சத்திர ஒளிப் புள்ளி.

சரசு ... சாகமாட்டா... சரசு உசுரோட இருப்பா... சரசுக்கு சித்த பிரம்மை பிடிக்கலை... அழுதுட்டா... கரைஞ்சுட்டா... மனப்பாரத்தை நழுவ விட்டுவிட்டுட்டா...

ஏந்திப்பிடித்த புருஷனின் முகத்தை ஒரு வெறிப் பாசமாய்ப் பார்த்தாள். முகத்தின் வியர்வையும் கண்ணீரும் உதடுகளில் நிறக... கோணித்துக் கொண்டு கதறுகிற வாய்.

“ஐயோ... ராசா... உங்க பேச்சைக் கேட்காம ... உங்க புள்ளையைக் கொன்னுட்டேன்... நான் கொலைகாரி... கொன்னுட்டேனே... நான்...கொலைகாரி...கொலைகாரி...”

“இல்லை சரசு... நீ பெத்தபுள்ளைதான். ஒம்புள்ளைதான். ஒன்னோட வவுறு சுமந்த நம்ம புள்ளைதான். நீ இன்னும் ஒரு

தவமணியைச் சுமப்பே. இன்னும் ஒரு பூமழலை ஒன்னோட வவுத்துலே பூக்கும்மா..."

அழுகையில் கலங்கி, உடைந்த குரலில் அவன். அவனது ஆத்ம தழுவல், அவனது அன்பு மனசு. தாயின் இறக்கைக்குள் ஒடுங்கும் குஞ்சாக...அவள்.

அவளை அப்படியே அள்ளியணைத்துக் கொண்டான். கட்கத்தில் கை கொடுத்து ஒரு பூச்செண்டைப் போல தூக்கி, கண்ணாடிச் சிதறல்களைத் தாண்டிக் கொண்டு வந்தான்.

இறந்து போன நிமிஷங்களில் கரிய நிழல்களாய்... அவன் உடம்பெல்லாம் உலர்ந்து கறுத்துப்போன ரத்தப் பிசுக்கு.

அவனது நெஞ்சில் முகம் புதைத்துக் கொண்ட சரசு. விம்மி விம்மி வெடித்து அழுகிற அவளது மனச்சோகம்.

அவனது நெஞ்சு ரோமங்களுக்குள் வாழ்வின் புதிய அழைப்பு குரலாக ..... அவளது விசும்பல்.

இப்போதுதான்-

தன்னிலைக்கு வந்த சரசு. தாயாக மாறிய சரசு. யோகுவிடமிருந்து பிய்த்துக்கொண்டு... பெற்ற பிள்ளையின் பிரேதத்தைப் பார்த்து... அழுகையும் புலம்பலுமாய்ப் பாய்கிற உயிருள்ள தாய்மை.

தவமணியின் இறுதிச் சடங்குக்கான ஏற்பாடுகளை அழுகைக் கதறலோடு ஊர் செய்ய.... தனது ஆத்ம தோழியை அரவணைத்துக் கொண்டு நிற்கிற யோகு. அவர்களை ஒரு சேர அரவணைத்துக் கொண்ட வாழ்க்கை.

◆ *1996 நவம்பர், அமுதசுரபி*

# என் கனா



வைகறை வெளியீடு

மேலாண்மை பொன்னுச்சாமி